# ளந்தமிழன்

ஆசிரியர்: கவிஞர் நாரா நாச்சியப்பன்



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# இளந்தமிழன்

# பொங்கல் வாழ்த்து

அன்பு ததும்ப ஆர்வம் ததும்ப
இளந்தமிழன் ஏட்டினை
ஈர்த்துக் கொள்ளும்
உண்மைத் தமிழரே
ஊக்க முடையோரே
என்றும் உங்கட்கு
ஏழிசை இன்பினை
ஒன்றச் செய்திட
ஓயா துழைப்பதே
ஔவை வழியென
அஃதைத் தேர்ந்தோம்
தமிழர்க் கினிய தைத்திரு நாளில்
அமுதம் அனைய மலர்படைத் துள்ளோம்
[illegible] சுவையினை
[illegible] வைத்து
நலக்களிப் பெய்தி
நாளும் வாழியவே!

அன்புள்ள,

**நாரா நாச்சியப்பன்**

## செட்டி நாட்டரசர்
## டாக்டர் ராஜாசர் முத்தய்யா செட்டியார்
## அவர்களின் வாழ்த்துரை

இளந்தமிழன் பொங்கல் மலர் வெளியிடுவது தெரிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தங்கள் இதழ் பல்வேறு இலக்கியச் சுவை நிறைந்த நன்மலராக அமைந்து படிப்பவர்களுக்குப் பெரும்பயன் தந்து சிறக்க பிரார்த்திக்கின்றேன்.

**மு. அ. முத்தய்யா செட்டியார்**

## குடிசை மாற்று வாரியத் தலைவர்
## இராம அரங்கண்ணல், எம். எல். ஏ.,
## அவர்களின் வாழ்த்துரை

அன்புள்ள கவிஞர் அவர்களுக்கு,

வணக்கம்

தங்களது இளந்தமிழன் ஏடு கண்டேன்.
இலக்கிய மணம் பெற்றேன்.
பொய்ப்பறை தட்டினால்தான் உருளும் என்கிற நிலையில்
ஏடுகள் வளரும் தமிழகத்தில்
துணிச்சலோடு நல்லமுதம் பாய்ச்ச முன்வந்துள்ளீர்கள்.
மனமார,
தங்கள் முயற்சி வெல்லவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்பு,

**அரங்கண்ணல்**

# இளந்தமிழன்

ஆசிரியர் : கவிஞர் நாரா நாச்சியப்பன்

மலர் 1. ஜனவரி 1973 இதழ் 4


## தமிழ்த்தாய் வணக்கம்

பொங்கல் படைத்துப்
புதுமகிழ்ச்சி வெள்ளத்தில்
எங்கும் தமிழர்
இனிதிருக்கத்—தங்கத்தாய்ச்
செந்தமிழே கன்னித்
திருவேஉன் சீர்பரப்பிச்
சிந்தை மகிழ்வோம்
சிரித்து!

மஞ்சள் முகமலர்ந்து
மாதர் கரும்புமொழி
கொஞ்சி வழங்கக்
குதுகலிக்கும்—நெஞ்சுடனே
சங்கொலித்துப் பால்பொங்கும்
தைத்திருநாள் இன்றுனது
பங்கயத்தாள் சார்ந்தோம்
பணிந்து!


## தனியிதழ் விலை ஒரு ரூபாய்

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 12/ |
| 6 மாதக் கட்டணம் | ரூ. 6/ |

முகவரி :

**202, ஜானி ஜான் கான் தெரு,**
**சென்னை-14.**


## விருந்து படைப்போர் :

கவிஞர். ஆனந்தம்
ஷாகுல் அமீது
முகிலன்
கா. வேழவேந்தன்
கவிஞர். கண்ணதாசன்
த. நாகராசன்
புலவர். தமிழ்ப்பித்தன்
சேரன்
கே. ஜி. ராதாமணாளன்
தி. வ. மெய்கண்டார்
குழ. கதிரேசன்
இராமவே சேதுராமன்
அறிஞர் அண்ணா
இ. சு. முத்துசாமி
எழில்முதல்வன்
ப. குணசேகர்
பகவான் இராமகிருஷ்ணர்
இலக்குமி
தங்கவயல் லோகிதாசன்
புலவர் தி. நா. அறிவுஒளி
வேதாமணாளன்
பூவை ஆறுமுகம்
மின்னூர் சீனிவாசன்
நாரா நாச்சியப்பன்

**பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக**



*எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!*
*—பாவேந்தர் பாரதிதாசன்*

# பொறுப்பு வேண்டும்

செந்தமிழ் என்றோ தூய தமிழ் என்றோ குறிப்பிடுவது பற் நாட்டிலே ஒரு தவறான கருத்து நிலவி வருகிறது. இத்தவறா கருத்து ஏற்படுவதற்கு தமிழ்ப் புலவர்களும் ஒரு காரணமாக இருந் வந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் வேதனையுடன் குறிப்பிட கடமைப்பட்டுள்ளோம். எளிமையற்ற முறையில் சில புலவர்களி பேச்சுக்களும் எழுத்துக்களும் அமைவதே இதற்குக் காரணமாகு செந்தமிழ் என்றால் எளிமையற்ற கடுமையான தமிழ் என்ற எண்ண பரவலாக ஏற்பட்டிருக்கிறது. இது தவறான எண்ணமாகும். செ தமிழ் எளிமையான தமிழாகவும் இருக்க முடியும்.

நாம் வீட்டிலேயோ நண்பர்களுடனோ உரையாடும்போ கொச்சையாகப் பேசுவது பற்றிக் கவலையில்லை. அதைத் தவிர்க்கவும் முடியாது. ஆனால், பொதுத் தொடர்பு கொள்ளும்போது—எழுதும் போது அல்லது பேசும்போது—நாம் நல்ல தமிழ் பேசவும் எழுதவும் வேண்டுவது கடமையாகும். இது தொன்று தொட்டுத் தமிழ்ப் பெரியோர்கள் கையாண்டு வருகிற வழக்கமும் ஆகும்.

பொதுத் தொடர்பு கொள்ளும்போது நல்ல தமிழைக் கையாள வேண்டுவதன் இன்றியமையாமையைப் பலர் புரிந்து கொள்ளாமல் இருப்பதே இந்தத் தவறான கருத்துக்கு அடிப்படையாகும்.

யாழ்ப்பாணத்திலே வாழும் தமிழர் ஒருவர் சென்னையிலே வந்து யாழ்ப்பாணத்துக் கொச்சை மொழி பேசுவாரேயானால் அப்பகுதியில் வழங்கி வரும் பல கொச்சை வழக்குகள் சென்னையில் இருப்பவருக்குப் புரியாது. அதுபோலவே, சென்னைக் கொச்சை மொழி திருநெல்வேலி

Regd. No. M. 9158. January,

# பணி புரிவதே எமது கடன்

* ஏழைகள் இன்பமாக வாழ . . .
* பணிபுரியும் இடத்துக்கருகே வசிக்க . . .
* எல்லோருக்கும் இடம் கிடைக்க . . .

பூங்கா * விளையாட்டுத்திடல் * மாட்டுக்கொட்டில் * தண்ணீரேற்றுத்தொட்டி * நூல் நிலையம்.

* ஆகிய வசதிகளும் உண்டாக்க . . .
* மாடிவீடுகள் * கூட்டுறவுத்திட்ட வீடுகள் *



குடிசை வாழ்வோர் விருப்பம் கேட்டு!
வல்லுநர்கள் கருத்து அறிந்து!
பல் நாடுகளின் திட்டம் உணர்ந்து!
பம்பரம் போலச்சுழன்று!

## பணிபுரிவதே எமது கடன்

எல்லோரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்குட

தலைவர் — பொறியாளர்கள் — அலுவலாளர்கள்,

## குடிசை மாற்றுத் திட்ட வாரியம்

''சிக்கனம், சீக்கிரம்'' எமது குறிக்கோள் *
ஆலோசனைகள் வரவேற்கப்படும் * முடிவுகள் நடத்தப்படும்.

யில் இருப்பவர்க்குப் புரியாது. திருநெல்வேலிக்காரரின் கொச்சைப் பேச்சுக் கோவைக்காரருக்கு விளங்காது. எனவேதான், தமிழர்கள் அனைவருக்கும் புரியக் கூடியதாக ஒரு பொது வழக்கு இருக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. இந்தப் பொது வழக்குத் தான் ''செந்தமிழ்'' ஆக விளங்குகிறது.

நல்ல தமிழ், உலகெங்கும் வாழுகின்ற தமிழ் மக்கள் எல்லோருக் கும் புரியக் கூடிய பொது வழக்காகத் தொன்று தொட்டு வழங்கி வரு கிறது. எனவேதான், எழுத்திலும் மேடைப் பேச்சிலும் நாம் நல்ல தமிழைப் பயன்படுத்தி வருகிறோம். பொது வாழ்வுக்கு வருகிறவர்கள் —பொது மக்களோடு தொடர்பு கொள்ளுகிறவர்கள்—பொது வழக் காகிய செந்தமிழைக் கையாள வேண்டியது பற்றி, இந்த விளக்கம் போதுமானதென்றே கருதுகிறோம்.

ஆனால் ஒரு சிலர் தாம் பொது வழக்காகிய செந்தமிழைக் கையாளுகின்ற தகுதி பெறாத காரணத்தாலும்—அத் தகுதிக்குத் தம்மை உயர்த்திக் கொள்ளுகின்ற முயற்சியோ, திறமையோ இல்லாத காரணத்தாலும், தத்தம் கொச்சை மொழியிலேயே பேசியும் எழுதியும் வருகிறார்கள். தம்மிடம் உள்ள இக் குறைபாட்டின் ரணமாக அவர்கள் எத்துணை சிறந்த கருத்துக்களை வழங்க முற் ட்டாலும், அவை பரவாமல் போகின்றன. எதிர்பார்த்த பலனை வை நல்குவதில்லை. இதை உணராமலே அவர்கள் தம் வாழ்நாளை ணுக்கிக் கொள்ளுவதோடு, தாம் கொண்ட குறிக்கோளை நிறை வற்றிக் கொள்ளாதவர்களாகவும்—பிறருக்குப் பயனற்றவர்களாகவும் ருக்கின்றார்கள்.

கொச்சை மொழித் தீமையைப் போலவே, இன்னொரு தீமையும் நாட்டிலே பல ஆண்டுகளாகப் பரவி வருகிறது. அது பிறமொழி கலந்து பேசுவதாகும். இன்று பெருவாரியாக நாட்டிலே இருந்து வரும் இத்தீமை ஆங்கிலத்தை இடை யிடையே கலந்து பேசும் தீமை யாகும். இத்தீமை ஆங்கிலம் கற்றவர்களால் கையாளப்படும் தீமை யாகும்.

தாம் ஆங்கிலம் தெரிந்தவர் என்று காட்டிக் கொள்ளுவதற்காகப் பலர் இடையிடையே ஆங்கிலச் சொற்களைக் கலந்து பேசுகிறார்கள். பல நேரங்களில் ஆங்கிலத் தொடர்களையே கலந்து பேசுகிறார்கள். இரண்டு தனிப்பட்ட மனிதர்கள் பேசிக் கொள்ளும்போது எப்படிப் பசிக் கொண்டாலும் கவலையில்லை. ஆனால், பொதுத் தொடர்பு கொள்ளும்போது இச் செயல் பழிக்கத் தக்கதாகவும் பயனற்றதாகவும் ஆகிவிடுகிறது.

சென்னை வானொலியில் இத்தீய செயல் அடிக்கடி நிகழுவதை நாம் காணுகின்றோம். கலைத் துறை அறிவுத் துறை தொடர்பான அறிஞர்களை அல்லது வல்லுநர்களை அழைத்துப் பேட்டி நடத்துகிறார்கள், அத்துறை பற்றிய பொது அறிவை மக்களிடையே பரப்புவதுதான் இப்பேட்டி நிகழ்ச்சிகளின் குறிக்கோளாகும்.

இக் குறிக்கோள் பாராட்டத் தக்கதேயாகும். ஆனால் இப்பேட்டி நிகழ்த்துவோர்கள் பெரும்பாலும் கொச்சை மொழியிலேயே பேசுகிறார்கள். இது ஒரு குறிப்பிட்ட கூட்டத்தார்க்கு மட்டுமே புரியக் கூடிய பேச்சாகிறது. அது மட்டுமல்லாமல், இக் கொச்சை மொழியோடு ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் அளவில்லாமல் பேசுகிறார்கள். வல்லுநர்கள் அல்லது அறிஞர்கள் எனப்படுவோர் தம் பேட்டியின் பயன் என்ன என்பதை உணராத பொறுப்பற்றவர்களாய் இருப்பதாலேயே இப்பேட்டிகள் பயனற்றுப் போகின்றன. பேட்டி அமைப்பாளர்களுக்கும் பொறுப்பில்லை; பேட்டியில் கலந்து கொள்ள வருவோர்க்கும் பொறுப்பில்லை என்றாகி விடுகிறது.

பொதுமக்கள் வரிப் பணத்தில், பொது மக்களுக்காக நடத்தப்படுகிற ஒரு நிகழ்ச்சி, பொது மக்களுக்குப் பல்துறை அறிவும் வளர வேண்டும் என்ற சிறந்த நோக்கத்தில் நடத்தப்படுகின்ற நிகழ்ச்சி வெறும் கேலிக் கூத்தாகி விடுகின்றது. வானொலி நிகழ்ச்சியில் ஒரு குறிப்பிட்ட நேரம் கழிகின்றது என்பதைத் தவிர இப்பேட்டி நிகழ்ச்சியால் எவ்விதப் பயனும் ஏற்படுவதில்லை. பேட்டி கொடுப்பவர் தாம் குறிப்பிட்ட துறையில் வல்லவர் என்பதை மட்டுமல்லாமல் ஆங்கிலத்திலும் வல்லவர் என்று விளம்பரப்படுத்திக் கொள்ள மட்டுமே இது பயன்படுகிறது; பொதுமக்களுக்குப் பயன்படுவதில்லை

வானொலிப் பேட்டிகளில் மட்டுமின்றி, வானொலி நாடகங்களிலும் சென்னை மாநகரில் நடைபெறும் பல்வேறு 'சபா' நாடகங்களிலும் இத் தீமையைப் பரவலாகக் காணுகின்றோம்.

இந்த அமைப்பாளர்களும், பேட்டிகளில் கலந்து கொள்ளும் வல்லுநர்களும், பிறரும் இந்நிகழ்ச்சிகளெல்லாம் தமிழ் நாட்டுப் பொது மக்களுக்காக நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகள் என்பதை உணர்ந்து, ஆங்கிலம் கற்றவர்கள் கல்லாதவர்கள் ஆகிய எல்லா மக்களுக்கும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதியில் வாழுகின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் பயன்படுவதற்காக நடத்தப்படுகின்றவை என்பதை உணர்ந்து பொறுப்புடன் நடந்து கொள்ளுவார்களா? பொறுப்பில் உள்ளவர்களுக்காவது பொறுப்புணர்ச்சி வருமா?

கயிலையே மயிலை !

தந்தி: கபாலீச்சரம் தொலைபேசி : 71670

# திருமயிலை கபாலீச்சரர் ஆலயம்

## கருங்கல் தளவரிசை திருப்பணி

## நிதி உதவ வேண்டுகோள்

தொண்டை நாட்டுத் திருப்பதியாகிய திருமயிலைக் கபாலீச்சரம் மிகத் தொன்மை வாய்ந்த சிவத்தலம். நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் என்பை எழிலுருக் கொண்ட ஏந்திழையாகச் செய்த அற்புதத் திருத்தலம். அருணகிரியாரால் பாடப்பெற்ற சிங்காரவேலர் கோயில் கொண்டுள்ள திருத்தலமும் இதுவே! அம்பிகை மயிலுருவில் வழிபட்ட அரிய திருத்தலம். அப்பரால் பாடப்பெற்ற அழகொழுகும் ஆலயம். இத்துணை புகழ் மலிந்த மயிலையம்பதியில் உள்ள கற்றோர்கள் ஏத்தும் கபாலீச்சரர் ஆலய பிரகாரத்தில் கருங்கல் தளவரிசை அமைக்கும் திருப்பணி அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களால் 22-8-71ல் துவக்கப்பட்டுள்ளது.

இத்தகைய திருப்பணிக்கு ஆகும் செலவு ஏறக்குறைய இரண்டு லட்சம். நூறு சதுர அடிக்கு ஆகும் செலவோ ரூ. 400 தான்!

தமிழகத்தின் தலைநகராம் சிங்காரச் சென்னையிலே உலகோர் அனைவரையும் தன் கலையழகால் ஈர்க்கும் இவ்வாலயத்தின் அரிய திருப்பணிக்கு அன்பர்கள் இருநிதியினை வாரி வழங்கி இறை பணியினை இனிதே முடித்துத் தருமாறு வேண்டுகிறோம்.

நன்கொடை வழங்குபவர்கள் "நிர்வாக அதிகாரி, திரு கபாலீச்சரர் ஆலயம், மயிலாப்பூர், சென்னை-4" என்னும் முகவரிக்கு அனுப்பி அச்சு ரசீதுப் பெற்றுக்கொண்டு திரு. கற்பகாம்பாள் உடனுறை கபாலீசுவரரின் திருவருள்பெற்று வாழ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

சி. செல்வ நடராஜ முதலியார்,
டி. பாலகிருஷ்ணன்,
ஆர். கோதண்டராமன்,
எஸ். ஜெயராமன்.
அறங்காவலர்கள்.

கு. அய்யா சுப்ரமணிய முதலியார்,
தலைமை அறங்காவலர்.

த. நாகராசன், பி.எஸ்ஸி.,
உதவி ஆணையர்,
நிர்வாக அதிகாரி.

# எழுந்தும்பம் வாழும்

வள்ளியம்மை வளமான மண்ணில் ஊன்றி
வகையாக வளர்த்துவரும் கிழங்கு போலக்
கள்ளமின்றி நாடோறும் மெல்ல மெல்லக்
காண்பவரின் கருத்தினையே கவரும் வண்ணம்
புள்ளிமயில் சாயலுடன் உயர்ந்து வந்தாள்!
பொன்னூரின் மாணவர்கள் குறும்புப் பார்வை
பள்ளிக்குச் செல்வதையே தடுக்க நேர்ந்து,
பாவையவள் வீட்டோடே முடங்கிப் போனாள்!
கலைபயிலுங் காலத்தை வீண டித்துக்
கலவரத்தை நாடுகின்ற உள்ளப் பாங்கும்,
தலைமுடியும் கன்னத்தில் நீண்ட தூணும்
தடையின்றி வளர்ப்பதிலே விருப்புங் கொண்டு
நிலைகுலையும் சிலர்மட்டும் அலுவல் இன்றி,
நிமிர்உடலில் இறுக்கமான ஆடை பூண்டு
சிலையனையாள் சிறையிருக்கும் வீட்டின் முன்பு
தினந்தோறும் நடைபயிலும் வழக்கம் கற்றார்!
யாரையுமே ஏறெடுத்துப் பார்க்க வில்லை!
ஏழையான முத்தப்பன் இளைஞன்; உள்ளூர்;
கூரையிட்ட வீட்டினிலே குடியிருக்கும்
குணக்குன்று; மருந்தகத்தில் நோயா ளர்க்கு
நீரையிட்டுத் தந்தாலும்
நீங்கு மென்று
நீடியநற் புகழ்பெற்றான்;
எளியன்; தூ யோன்;
பேரை யெவர் கேட்டாலும்
பெருமை கொள்வார்;
பேதையவள் நெஞ்சத்தில்
இடத்தைப் பெற்றான்!





வீட்டார்கள் சம்மதித்தார்!
சீர்கள் செய்து
மிகச் சிறப்பாய்த் திருமணமும்
முடித்தார்! பின்னர்
நாட்டோரின் வழக்கத்தை
மீறி டாமல்
நல்லதொரு வீடமைத்து
வாழ வைத்தார்!
கூட்டாளி நற்பண்பின் பயனும், ஊரார்
கூட்டத்தில், முத்தப்பன் திறமை மெச்சி
நாட்டாண்மைப் பொறுப்பினையே நல்கி னார்கள்!
நல்வகையில் பொதுப்பணிகள் ஆற்றி வந்தான்!
ஆற்றுமை மிகுதியினால் ஊரில் உள்ள
அழுக்காறு நிறைந்தசிலர் புழுக்க முற்று
'மாற்றானின் மனையாளாய் ஆனாள் வள்ளி;
வாழ்க்கையிலே சுகமடைய வீடோம்!' என்று
தூற்றாத நாளில்லை; "தூய்மை கெட்டாள்;
துணைவன்மேல் அவளுக்குக் காதல் இல்லை;
வேற்றானை விழைகின்றாள்; எம்மைக் கண்டு
மென்னகையும் விழியசைவும் செய்தாள்!" என்றார்.
"ஒற்றுமையாய் வாழ்கின்றோம்; உழைத்து நாளும்
உயர்கின்றோம்; ஊர்நன்மை நாடு கின்றோம்;
கற்றவர்கள் போற்றுகின்றார்; பயனைப் பெற்றார்
கண்கண்ட கடவுளென மிகையாய்க் கூறி
மற்றவர்க்கும் புரியுமாறு விளக்கு கின்றார்;
மக்களுக்குத் தொண்டாற்றும் கடமை எண்ணி
உற்றபெருந் துயர்களையும் ஒதுக்கித் தள்ளி
உண்மையுடன் தழைக்கின்றோம்! வேண்டாம் என்றால்
யார்க்கென்ன? யாம் உண்டு; தொண்டு செய்யும்
ஈரமனம் என்றுமுண்டு; நீங்கள் தந்த
ஊர்க்கேற்ற நலஞ்செய்யும் பதவி போனால்
உழைப்பதற்குத் தயங்குகின்ற உள்ள மில்லை!
பேர்க்காகப் பொறுப்பேற்க
வில்லை; மக்கள்
பெருந்தன்மை யால்தந்தார்!
கயவர் கூடிச்
சீர்குலைத்தால் வருவதெல்லாம்
அனுப விப்பீர்!
சிறப்பாக எம்குடும்பம்
வாழும்" என்றான்.

# இன்பத் தமிழில் இஸ்லாமிய இலக்கியங்கள்

இன்பத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சமயங்கள் ஆற்றிய பெரும் பணி போற்றுதற்குரியது. அவற்றில், சைவமும் வைணவமும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டு இலக்கியங்களை ஆக்கித் தந்தன. சமணர்தம் தமிழ்ப்பணி தமிழ் உள்ளளவும் நின்றிலங்கும் பெற்றியுடையது. பௌத்தரும் சிறப்பான சில நூல்களை விட்டுச் சென்றனர். தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்குக் கிறிஸ்தவர் செய்த தொண்டு என்றுமே மறக்க முடியாதது. இந்தச் சமயங்கள் அத்தனைக்கும் ஈடாக, தரத்திலும் நிறையிலும், வகையிலும், தொகையிலும், எடுப்பான இலக்கியக் கருவூலங்கள் பலவற்றை இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் படைத்தளித்தனர்; படைத்து வருகின்றனர்.

எனினும், தமிழ் இலக்கியப் பூங்காவில் உலாவிவரும், தமிழறிஞர்கள் பலரும், மாறாத இன்பம் தரும் சீறாவும், பக்திச் சுவைநனி சொட்டச் சொட்ட, இன்பம் தரும் மஸ்தான் சாகிப் பாடலும்தாம் இஸ்லாமி இலக்கிய மலர்களாக நுகர்கின்றனர். இந்நிலைக்குக் காரணம் யாது? பல முஸ்லிம் இலக்கியங்கள் எளிதாகக் கிடைப்பதில்லை. கிடைப்பினும், இவற்றில் காணப்படும் வேதமொழியாகிய அரபி சொற்றொடர்களையும் அவற்றின் வழிவரும் இஸ்லாமியப் பண்பாட்டு மதாச்சார உணர்வுகளையும் எல்லாராலும் நுணுக்கமாக விளங்கிக்கொள்ள முடிவதில்லை. இக்குறையைப் போக்கி, தமிழறிந்தோர் அனைவரும் இவ்விலக்கிய நயங்களை நுகர வகை செய்வதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கமாகும்.

பெருமானார் திருநபிகள் (ஸல்) அவர்கள் காலத்திலேயே, இஸ்லாத்தின் தீன் சுடர், நம் நாட்டில் கீழைக்கடற்கரையோரங்களிலும், மேற்குக் கடற்கரை தீரங்களிலும், ஒளிரத் தொடங்கியது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயிர்ப் பண்பாட்டில் வளர்ந்த தமிழர் நெஞ்சங்களை அவ்வொளி விரைந்து கவர்ந்தது. அதன் பயனாக, தமிழகத்தில் இஸ்லாம் பரவியது.

இஸ்லாமிய நெறியைப் பின்பற்றிய தமிழ்ப் புலவர்கள், ஏகத்துவத்துவ நெறியையும் இறைத்தூதர் வாழ்வியலையும், தம் இலக்கியப்படைப்புக்கு நிலைக்களனாகக் கொண்டனர். மூலக்கரு முழுவதும் அரபி மொழியிலிருந்தமையால், தமிழோடு அரபியும் கலந்தது. அதோடு அரபி எழுத்தில் தமிழ் எழுதும் ஒரு புதுமுறையும் தோன்றியது. அதற்கு அரபி தமிழ் என்று பெயர்.

பன்னிரண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்குள் நூற்றுக்கணக்கான முஸ்லிம்புலவர்களால் முன்னூற்றுக்கு மேற்பட்ட நூற்கள் எழுதப்பட்டன. இவற்றில் சில அரபி தமிழில் எழுதப்


பெற்றன. முஸ்லிம் புலவர்கள் தொடாத இலக்கிய வகையே இல்லை எனக் கூறலாம். காப்பிய இலக்கணங்களைக்கொண்ட பேரிலக்கியங்களையும், ஆற்றுப்படை அந்தாதி, பிள்ளைத் தமிழ், அம்மானை, போன்ற சிற்றிலக்கியங்களையும், மாலை, ஏசல், திருப்புகழ், கீர்த்தனை, சிந்து, கும்மி, ஆனந்தக்களிப்பு போன்ற மக்கள் இலக்கியங்களையும் தொட்டுத் துலக்கியிருக்கின்றனர். இவை அனைத்தும் தமிழுணர்வில் இஸ்லாமியப் பண்பாட்டைக் கலந்து செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றோடு 'அரபி', 'பார்ஸி' இலக்கிய மரபினைத் தழுவி படைப்போர், முனாஜாத்து, கிஸ்ஸா, மசாலா, நாமா என்னும் புதுவகை இலக்கியப்படைப்புக்களையும் தமிழுக்கு தந்துள்ளனர். மேலும், மெய்ந்நெறி விளக்கப் பாடல்களும் மார்க்கப் பாடல்களும் ஏராளமாகப் பாடியுள்ளனர்.

இஸ்லாமியப் பேரிலக்கியங்களில் சீறாப்புராணம் தலையாய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இது, அண்ணல் எம் பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவர்கள் வரலாற்றை விவரிக்கும் ஒரு காப்பியமாகும். 'வாழ்க்கை வரலாறு' என்னும் பொருளபடும் 'சீறத்' என்னும், அரபிச் சொல்லின் தமிழ் திரிபே 'சீறா' வாகும். அதோடு, 'புனித கதை' என்னும் பொருள்தரும் 'புராணம்' சேர்ந்து 'சீறாப் புராணம்' என நூலுக்குப் பெயர் அமைந்ததாக அறிகின்றோம்.

சீறாப்புராணம் உமறுப்புலவரால் எழுதப் பெற்றது. உமறுப்புலவர், நெல்லை மாவட்டம் எட்டையபுரம் மன்னர் வெங்கடேச பூபதியின் அவைக்களப் புலவராகிய கடிகை முத்துப் புலவரின் மாணவராகும். இவர் தம் ஆசிரியரிடம் வாதிடுவதற்கு வந்த வடநாட்டுப் புலவராகிய வாலைவாருதியை வாதில் வென்று அவன் கொட்டத்தை அடக்கி வெற்றிக் கொடி நாட்டினார். அதன் பயனாக அவைக் களப்புலவரானார். உமறு, வள்ளல் சீதக்காதியின் வேண்டுகோளுக்கிணங்க, சீறாவைப் பாடத் தொடங்கினார். ஷேக் சதக்கத்துல்லாஅப்பா என்னும் மாமேதை அரபி நூல்களிலிருந்து நூலுக்கான கருத்துக்களைத் திரட்டிக் கொடுத்தார். வள்ளல் அபூகாஸிம் அவையில் சீறா அரங்கேறியது.

பெருங்காப்பியம், அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் விளக்குதல் வேண்டும் என்பர். இவற்றில், ஏதேனும் ஒன்று குறைந்தால் அது சிறு காப்பியம் எனப்படும். சீறா வீடு பற்றிக் கூறவில்லை. எனவே அது சிறு காப்பிய வகையில் சேரும். இந்நூலில் முஹம்மது நபி (ஸல்) அவர்களின், பிறப்பு, இளமை, திருமணம், ஆற்றல், வெற்றி போன்ற செய்திகள் விரிக்கப்படுகின்றன.

இந்நூல் விலாதத்துக்காண்டம் நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத் காண்டம், என்னும் மூன்று காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. காண்டங்கள் படலங்களாக வகுப்பட்டுள்ளன.



சீருவில் 92 படலங்களும், 5027 பாடல்களும் காணப்படுகின்றன.

காண்டங்களின் பெயர்கள் அரபிச்சொற்களின் அடிப்படையில் அமைந்திருப்பதைப் பார்த்தால். 'விலாதத்து' என்னும் அரபிச் சொல் பிறப்பு என்னும் பொருளைத் தரும். எனவே, பெருமானார் (ஸல்) அவர்கள் பிறப்பையும் இளமையையும் வருணிக்கும் காண்டம் விலாதத்துக்காண்டம் எனப்பெயர்பெறுகிறது. இக்காண்டம், நாடு, நகர், ஆறு, ஆகிய வருணனைகளில் கம்பராமாயணத்தின் பால காண்டத்தை ஒத்திருப்பதைக் காணுகின்றோம்.

'ஆற்றுப்படலம்' எனத் தனியாகக்கூறவில்லை என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

'நுஃபா' என்னும் அரபிச் சொல்லின் அடியாக நுபுவ்வத்துக் காண்டம் வந்தது. 'நுஃபா' 'தூதுத்துவம்' என்னும் பொருள் கொண்டது. எனவே, இக்காண்டத்தில், நபிகள் நாயகருக்கு வானவர் தூதர் ஜிப்ரீல் வழி தூதுத்துவம் வந்த நிகழ்ச்சிகள் பேசப்படுகின்றன. ஹிஜ்ரத்துக் காண்டத்தில், மக்காவிலிருந்து நாயகதிருமேனி (ஸல்) அவர்கள், மதினாவிற்குப் பெயர்ந்து சென்ற நிகழ்ச்சியை விரிக்கிறது. 2680 பாடல்களைக் கொண்ட பெரும் காண்டமாகும். இக்காண்டம், இஸ்லாத்திற்காக 'பத்று', 'உஹது' என்னும் இடங்களில் நிகழ்ந்த அறப்போர்களைச் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

இந்நூல்கள், எல்லாக் காவியச் சுவையும், உவமைநயமும், அகப்பொருள் விளக்கமும், புறப்பொருள் தெளிவும்கொண்டு, படிப்போர்க்குக் களிபேரின்பம் ஊட்டுகின்றன.

சீருவிற்கு அடுத்த படியாக "குத்புநாயகம்," 'இராசநாயகம்' போன்ற காப்பியங்களைக் குறிப்பிடலாம். 'குத்புநாயகம்' மெய்ந்நிலைகண்டதை ஞானி, மெய்ஞ்ஞான மேதை ஹஸரத் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீவானி(ரலி) அவர்களைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்ட காவியமாகும். இதனைக் காயல்பதி சேகனாப்புலவர் பாடினார். சுலைமான் நபியின் வரலாற்றைக் கூறும் நூல் 'இராசநாயகம்' எனப்படுகிறது. இதன் ஆசிரியர் வண்ணக் களஞ்சியப் புலவராகும். இவ்விரு நூல்களும் எல்லா இலக்கிய அணி நலமும் பெற்றுச் சிறந்தொளிர்கின்றன.

சிற்றிலக்கிய வகையில் ஆற்றுப்படையும் ஒன்று. வறுமையால் வாடும் கலைஞர் ஒருவர், வள்ளல் ஒருவரிடம் தம் கலைத்திறனைக் காட்டிப் பெருவளம்பெற்றுத்திரும்பும்வழியில் எதிர்வந்த தம்மொத்த கலைஞர்களுக்குத் தாம் பெற்ற செல்வத்தை அறிவுறுத்தி அவரையும் அவ்வள்ளலிடம் சென்று தாம் பெற்றவற்றைப் பெறுமாறு வழிப்படுத்துதல் ஆற்றுப்படையாகும். ஆற்றுப்படைப் பாடல்கள் பல சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. இஸ்லாமிய இலக்கியங்களைப் பொறுத்தவரை ஒரே ஒரு ஆற்றுப்படை காணப்படுகிறது. அது, 'மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை' என்ற பெயரைப் பெற்றுள்ளது

நாகூர்தர்கா "மகாவித்துவான் குலாம் காதிறு நாவலர், இந்தப் புலவராற்றுப்படையை எழுதினார். இந்நூல், பாண்டித்துரைத் தேவரால் நிறுவப்பட்ட நான்காம் தமிழ்ச்சங்கத்தைக் குறிப்பிடுகின்றது. மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்குச் சென்று சிறப்புப்பெயரும், பரிசிலும் பெற்றுவரும் புலவர் ஒருவர் அவற்றைப் பெறாத மற்றொரு புலவரைக்கண்டு, சங்கப்புலவரிடத்து

வழிப்படுத்துகின்றார். இதனாலே யே இந்நூல் புலவராற்றுப்படை எனப்படுகிறது. இது இஸ்லாமிய கருத்து ஒன்றும் கூறவில்லையெனி னும், ஆசிரியரைக்கருதி, இஸ்லா மியத் தமிழ் இலக்கிய வகையில் சேர்க்கப்படுகிறது.

புலவராற்றுப்படையில், சங்க காலக் கவி மரபுகளைக் காணுகின் றோம் தமிழ் பற்றிக் குறிப்பிடுகை யில். "தனிமையென் பெயர்த் தாயின்மை யென்பொருட்டாய்" எனக்குறிப்பிடுகிறார் ஆசிரியர். கண்ணைக் கவரும் இயல்புடைய பல அழகுகாட்சிகள் மிகவும் நயம் பட வருணிக்கப் படுகின்றன. சங்ககாலத்து ஆற்றுப்படை நூல் களில் இல்லாத பல கருத்துக்களைப் புலவராற்றுப் படையில் பார்க்க லாம். பண்டைக் காலப் புலவர்கள் கால்நடையாகவே சென்றனர்! ஆனால் இலாம் காதிறு நாவலர் காலத்துப் புலவர்கள் ஊர்திக ளில் சென்றனர். எனவே ஆசிரி யர், ஆற்றுப்படுத்தும் புலவரைப் புகை வண்டியில் போகுமாறு கூறுகின்றார். அவர் புகைவண்டி யைப் 'மரவட்டைச் செலவொப் பச்செல் பாண்டில் பல கோத்த நெடுந்தொடரி' எனப் படம்பிடித் துக்காட்டுவது படித்து மகிழ்வதற் குரியது.

இவ்வாற்றுப்படை, பத்தொன் பதாம் நூற்றாண்டில் இறுதியில் இயற்றப்பட்டது. ஆயினும் பழங் கால ஆற்றுப்படைகளைப் போல், சொல்நயம், பொருள்நயம் அமைந்து காணப்படுகிறது.

சிற்றிலக்கியங்களில் அந்தாதி பற்றிப் பார்க்கலாம். ஒவ் வொரு பாடலிலு முள்ள இறுதி எழுத்தோ, அசை யோ, சீரோ, அடியோ, அதற்கு அடுத்த பாடலின் முதலாகவரும் படி அமைத்துப்பாடுவது அந்தாதி யாகும். பொதுவாக அந்தாதி நூறு பாடல்களைக் கொண்டதாகும். முஸ்லிம் புலவர்களான குலாம் காதிறு நாவலர், பிச்சை இபுருகீம் புலவர், செய்கப்துல் காதிறு, நயி னார் லெப்பை ஆகியோர்முறையே திருமக்கத் திரிபந்தாதி, 'திருமதீனத்தந்தாதி' 'நாகையந்தாதி' என்னும் அந்தாதிநூல்களைப்பாடி யுள்ளனர் இவை மாநபி பிறந்த நகராகிய மக்கா, மறைந்த நகரா கிய மதீனா, தென்னாட்டுத் திருத் தலமாகிய நாகூர் ஆகிய பதிக ளைப் பாடுகின்றன.

இவ்வந்தாதி நூல்களில் திரு மதீனத்தந்தாதி முழுவதும் மடக் கந்தாதியாக வந்திருப்பதைக் காணுகின்றோம். இயற்கை வருணனைகளில் ஆசிரியர் கற்பனைத் திறன் புலனாகிறது.

'புரியவன மலரைம் பொழுதின் றேன் பொழியு மதீனம்' என்னும் தொடரில் மதீனாவில் சோலை மலர் நாளெல்லாம் இன்தேன் சொரிவதாகச் சொல்ல வந்த ஆசிரியர், 'நாளெல்லாம்' என் பதை 'ஐம்பொழுது' என்னும் சொல்லால் உணர்த்துவதைக் காணலாம். 'ஐம்பொழுது' நம்பி அகப்பொருள் சொல்லும் ஐஞ்சிறு பொழுதையும், முஸ்லிம்களின் ஐவேளை தொழுகையையும் குறிப் பதாகவும் கொள்ளலாம்.

நாகையந்தாதி நாகூர் ஆண்டவர் எனப்படும் ஷாகுல் ஹமீது ஒலியுல்லாவை அடங்கி யுள்ள நாகூரைப் போற்றுகிறது. இது முதல் முற்று மடக்கோடு நான்கடி மடக்கு; ஈரெழுத்தால் மடக்கு' போன்ற பாடல்களைக் கொண்டது. இதில்,

சிந்தாமணி நிழனீர் நிலையாம்
பல் செந்தாமரைத்தேன்
சிந்தாமணி நிழற்சஞ்சல்
வோசையிற் றெங்கியுள்ளே

சிந்தாமணி நிழற்றுஞ்சு
நன்னுகைய செங்கணில்
சிந்தாமணி நிழலென்
பிணி தீர்தற்குச் செய்திமன்னே.

போன்ற இயற்கை வருணனைப் பாடல்களைக் காணுகின்ருேம்.

சிற்றிலக்கியங்கள் வரிசையில் பிள்ளைத் தமிழ் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. கவிஞர் ஒருவர் தாம் விரும்பும் கடவுளரையோ தலைவரையோ குழந்தையாக வைத்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்களை அமைத்துப் பாராட்டுவது பிள்ளைத் தமிழாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் நபி நாயகப் பிள்ளைத் தமிழ் முகியித்தீன் ஆண்டவர் பிள்ளைத் தமிழ், நாகூர் பிள்ளைத் தமிழ் என்னும் நூல்கள் காணப்படுகின்றன. நபிநாயகப் பிள்ளைத் தமிழ் செய்யிது அனபியாசாகிப் என்னும் புலவரால் எழுதப் பெற்றது. இந்நூல் பெருமானுர் திரு நபிகள் (ஸல்) அவர்கள் இளம் பருவத்தை வர்ணிக்கிறது.

இந்நூல் பாடலொன்ருல், திருநெல்வேலி பேட்டையைச் சேர்ந்த மேத்தர் முகியித்தீன் ருவுத்தர், முகமது நயினுர் ருவுத்தர் என்போர், இதன் ஆசிரியருக்குப் புரவலர்களாக விருந்ததாக அறிய முடிகின்றது.

முகியித்தீன் பிள்ளைத் தமிழ், ஹஸரத்முஹித்தீன் (ரலி) அவர்களைப் பற்றியது. இதனை செய்யிது முகியித்தீன் கவிராயர் பாடினுர். நாகூர் பிள்ளைத் தமிழ் ஆரிபு நாவலரால் எழுதப் பெற்றது.

பொதுவாக, காப்புப் பருவத்தில் பாட்டுடைத் தலைவராகிய குழந்தையை வாழ்த்திக் காத்தருளுமாறு திருமால், அரன், பிரமன், பிள்ளையார், முருகன் முதலான தெய்வங்களை வேண்டப்படும். இம் மரபு இஸ்லாமிய ஏகத்துவக் கொள்கைக்கு மாறுபட்டது. எனவே, முஸ்லிம் புலவர்கள் இம்மரபை மாற்றியமைத்தனர்.

நபிநாயகப் பிள்ளைத் தமிழில் குழந்தை முஹம்மதைக் காத்தருளும்படி அல்லாஹ் ஒருவனை மட்டுமே வேண்டப்படுவதைப் பார்க்கின்ருேம். மற்ருெரு வகையில், முஹியித்தீன் பிள்ளைத் தமிழில் குழந்தை முகியித்தீனை வாழ்த்தியருளும்படி அல்லாஹ், வானவர், நபிகள் பெருமானுர், கலிபா போன்ருேரை வேண்டப்படுவதையும் பார்க்கின்ருேம். காப்புப் பருவத்தில் ஒன்பது அல்லது பதினுெரு பாடல் வர வேண்டுமென்ற மரபும் நபிநாயகப் பிள்ளைத் தமிழில் வேறுபடுகிறது. இதில் காப்புப் பருவத்தில் பத்துப் பாடல்களே உள்ளன.

இஸ்லாமிய பிள்ளைத் தமிழில் இயற்கை வர்ணனைகள் எழில்பெற அமைந்துள்ளன நபி நாயகப் பிள்ளைத் தமிழின் மக்கா நகர வருணனையைப் பாருங்கள்:

''மாலியொழுகுஞ் செங்கமல
மலரின் பொகுட்டில்
வீற்றிருந்த மணிசேரன்னந்
துயில் கொள்ள
வளையின் மணிகள்
கொழித்தெறிய
நீலமலர்கள் விரிந்திலங்க
நிமிறினங்களிசை பாட
நெளிந்தே வாளை
விண் பாயுந்து
நீகமலைக்கு மின்னிடிப்பாயப்
போல வுழக்கி மழை பொழியப்
புணரிருளங்
காற்றடாக மொடு
பொங்கிக் கலக்கப்
போதினங்கள் பூத்துச்
சொரியத் தேனெழுகுஞ்

சோலை செறிந்த மக்க நகர்த்
தோன்றல் வருக வருகவே'

மேலும், 'நபியவதார அம்மானை', 'பப்பாத்தியாரம்மானை' போன்ற அம்மானை நூல்களையும் முஸ்லிம் புலவர்கள் ஆக்கியுள்ளனர். இவற்றில் முதல் அம்மானை சீறாப்புராண நபியவதாரப் படலத்தின் அடிப்படையில் திருநபி (ஸல்) அவர்கள் பிறப்புப் பற்றிப் பாடுகிறது. இதனை உமறுப் புலவரின் மகனார் கவி களஞ்சியப் புலவர் பாடியுள்ளார். 'பப்பாத்தியாரம்மானை' நான்காம் கலிபா ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் போரில் வெற்றி பெற்று யவன நாட்டு மன்னன் மகள் பப்பாத்தியாரை மணம் முடித்த நிகழ்ச்சியைப் பாடுகிறது. இதனைப் பாடியவர் செய்யிது மீறாப் புலவர். இவர் தம் நூலுக்கான கருவைச் சீறாப் புராணத்திலிருந்து எடுத்ததாகச் சொல்கிறார்.

அடுத்து, இஸ்லாமியப் புலவர்கள்; தமிழுக்கே புதுமையாகப் படைத்துத் தந்த புது மரபு இலக்கியங்களைப் பார்க்கலாம். இப்புது மரபு இலக்கியப் பெயர்களில் ஒன்றைத் தவிர மற்றவை அனைத்தும் அரபியும் பார்ஸியும் கலந்தவை. தமிழ்ப் பெயராக அமைந்த புது இலக்கியம் 'படைப்போர்' எனப்பட்டது. இது ஒரு வகை போர்ப்பாட்டாகும். 'படைப் போர்' இலக்கியங்களில் முதலிடம் பெறுவது 'ஐந்து படைப்போர்' எனலாம், இது ஆரம்ப கால இஸ்லாமிய வரலாற்றில் முஸ்லிமகளுக்கும் முஸ்லிமல்லாருக்கும் நிகழ்ந்த போரினை விளக்கும் ஐந்து போர்ப் பாட்டின் தொகையாகும். இப் பாட்டுக்கள் முஸ்லிம்களுக்கெதிராக எழுந்த படைத் தளபதிகள் ஐவர் பேரால் அமைந்ததாகும். அத் தளபதிகளை இபுனியன் உச்சி, வடோச்சிசி, தாகி, இந்திராவன் என்போராகும். எனவே ஐந்து படைப்போர் முறையே, இபுனியன் படைப்போர், உச்சிப் படைப் போர், வாடோச்சிப் படைப் போர், தாகி படைப் போர், இந்திராயன் படைப் போர் எனத் தனித் தனியாகவும் வழங்கப்படுகின்றன. இவ் வைந்து படைப்போரில் ஹஜ்ரத் அலி (ரலி) தலைவராகக் காட்டப்படுகிறார். இப் படைப் போர்களை அசன் அலிப் புலவர் எழுதினார். இவர் தம் புரவலர் இராவுத்தப் பிள்ளையை ஐந்து படைப் போரிலும் குறிப்பிடுகின்றார். இந்நூல்களின் கதை ஒன்றோடொன்று தொடர்புடையதாகத் தெரிகிறது. குஞ்சு மூஸாப் புலவர் 'செய்தத்துப் படைப் போரில்' 'செய்தத்து' என்னும் இளவரசி முதல் கலீபா ஹஜ்ரத் அபூபக்கர் மகனார் அப்துல் ரகுமான் என்பவரோடு சேர்ந்து ஒரு போரில் செய்த தீரச் செயல்களை விளக்குகிறது. மேலும் 'காசீம் படைப் போர்' 'ஹுஸைன் படைப் போர்' போன்ற நூல்களும் போர்ச் செய்திகள் பாராட்டுகின்றன.

புதுமரபு இலக்கியங்களில் அடுத்ததாக 'முனாஜாத்து'களைக் குறிப்பிடலாம். 'முனாஜாத்து என்னும் அரபிச் சொல்லுக்கு 'இரகசியமாகச் சொல்லுதல்' என்பது பொருளாகும். அது நாளடைவில் அல்லாஹ்வுக்கும் அவன் அருள் பெற்றோர்க்கும் சமர்ப்பிக்கும் விண்ணப்பம் என்றும் பொருள் கொடுக்கத் தொடங்கிவிட்டது. எனவே, முனாஜாத்து என்பது வாழ்த்துதல் வேண்டி வல்லவனைப் பரவும் ஒரு வகைப் பனுவலாகும் இதற்குப் பாட்டளவு வேண்டியதில்லை. பல புலவர்கள் முனாஜாத்து எழுதி

யிருப்பினும், கீழக்கரை செய்யித் முகம்மது ஆலிம் எழுதிய 'முனுஜாத்து மாளிகை' சிறப்பாக விளங்குகின்றது இது அரபி தமிழில் எழுதப் பெற்றது. பன்னிரண்டு முனுஜாத்துகளில் முதலிரண்டு முனுஜாத்துகளும் அல்லாஹ்வின் பண்பு நலனைப் போற்றுகின்றன. மூன்ருவது முனுஜாத்து நபிகள் நாதர் வாழ்த்துதலை வேண்டுகிறது. நான்காம் கலீபா ஹஜரத் அலி, அவர் மனைவி ஹஜரத் பாத்திமா, மகன்கள் ஹஸன், ஹுஸைன், ஹஜ்ரத் முஹ்யித்தீன் போன்ருரின் அருளும் வேண்டப் படுகின்றன.

கிஸ்ஸா என்பது மற்ருெரு புது மரபு இலக்கியமாகும். இது கதைப் பாட்டு போன்றது எனலாம். கிஸ்ஸா இலக்கியத்தில் சிறந்து விளங்குவன யூசுபுநபி கிஸ்ஸா, சைத்தூன் கிஸ்ஸா என்பவை யாகும். இவை முறையே மதாறு சாகிபுப் புலவர், அப்துல்காதர் சாகிபு என்னும் புலவர்களால் எழுதப்பெற்றவை. இவை எளிய நடையில் இடையிடையே உரை யிட்டு எழுதப்பெற்றுள்ளன. இவற்ருல், யூசப்நபி, வீராங்கனை சைத்தூன் ஆகியோர்வரலாற்றை அறிய முடிகின்றது.

புதுமரபு இலக்கியங்களில் மசலா என்பதும் ஒன்ருகும் இது அரபிச் சொல்லின் தமிழ் வடிவமாகும். இதற்கு வினு அல்லது புதிர் எனப் பொருள். இவ்வகை இலக்கியங்களில் வினு விடை முறையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன. மதுரை வண்ணப் பரிமளப்புலவர் எழுதிய 'ஆயிரம் மசலா' என்னும் நூலில் பெருமாஞர் நபிகள் பிரான் (ஸல்) அவர்களிடம், அவர் தம் தோழர்கள் இஸ்லாம் மார்க்கத் தெளிவிற்கான வினுக்கள் கேட்பதும், அதற்குப் பெருமாஞர் விடையளிப்பதுமாகப் பாக்கள் அமைந்திருக்கின்றன. 'நூறு மசலா' என்னும் நூலில் நூறு வினுக்களும் விடையும் காணப்படுகின்றன. இதில், தம் வினுக்களுக்கு விடையளிக்காத பல இளவரசர்களைக் கொன்ற பெண் ஒருத்தியின் வினுக்களும் செருக்கினை அடக்கி அவளை மணம் முடித்த ஒரு இளவரசனின் விடைகளும் அமைந்திருக்கின்றன.

'நாமே' என்னும் பாரசீகச் சொல்லின் தமிழுருவம் நாமா எனப்படும். இது கதை அல்லது நூல் என்னும் பொருளுடையது. மதாறு சாகிபுப்புலவரின் மிஃருஜு நாமா பெருமாஞர் நபிகளாரின் விண்ணகப்பயணத்தை விளக்குகிறது. செய்யிது அகுமது மரைக்காயரின் 'நூறுநாமா' அண்டங்களின் படைப்பினைவிளக்குகிறது. இது அல்கஸ்ஸாலி எழுதிய நூலின் வழிநூலாகும். இந்நூல் காயற்பட்டினத்தை 'காயிறு நாட்டு வளம்' என்றும் தலைப்பில் வருணிக்கிறது.

மக்கள் இலக்கியங்களில் பெருஞ்செல்வாக்குடையது மாலையாகும்; பல மலர்களைக் கொண்டு, மாலை தொடுப்பதுபோல பல செய்யுள்களைக்கொண்டு ஒரு பொருளைப் பாடுவது மாலையாகும். இஸ்லாமியத்தமிழ்ப்புலவர்கள் நூற்றுக்கணக்கான மாலைகளைப் பாடித்தந்துள்ளனர் இன்றும் பல புலவர்கள் பாடிவருகின்றனர். இவற்றுள் ஆலிப்புலவரின் மிஃருஜ் மாலை, உமறுப்புலவரின் முதுமொழி மாலை மக்கீலுமதாறுப்புலவரின் ஞகியித்தீன் மாலை' இராஜமணி மாலை, மின்ஞநூருத்தீன் புலவரின் பொன்னரியா மாலை போன்றவை, இஸ்லாமியப் பெருங்குடிமக்களின நெஞ்சக்கழனிகளில் நிலை பெற்ற

வை எனக்கூறலாம். இக்காலத்து, இறையருள் கவிஞர், பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ; அவர்கள் எழுதிய 'இறையருள்மாலை, மும்மணிமாலை, நபிமணிமாலை, 'திருமறைமாலை' என்பன இரண்டு அடிக்கண்ணிகளால், அமைந்து இரட்டுறமொழிதல் அணி நலம் பெற்று, தமிழ்வழங்கு நிலமெங்குமுள்ள முஸ்லிம்களைக் கவர்ந்துவரக் காணுகின்றோம்.

இன்னும், ஏசல், திருப்புகழ், கீர்த்தனை, சிந்து, கும்மி, தாலாட்டு, ஆனந்தகளிப்புபோன்ற பலவகை மக்கள் இலக்கியங்களையும் முஸ்லிம் தமிழ்ப்புலவர்கள் தந்துள்ளனர். இவற்றில் காசீம் புலவரின் திருப்புகழ், அருணகிரிநாதரின் திருப்புகழுக்கு ஒப்பானது என்று கருதப்படுகிறது. யாப்பும் இசை நயமும் கலந்தது.

'நினது வழியே நடக்க
நினது பெயரே வழுத்த
நினது புகழே படிக்க
மறையோதி
நினது ஜெபமே ஜெபிக்க
நினதடிமையாகி நிற்க
நினது பதமேதுதிக்க
அதனாலே
எனது பவமே துடைக்க
எனது மலமே கெடுக்க
எனது பகையே துடைக்க
ஒழியாத
எனது கலியேகெடுக்க
எனது துயரே தணிக்க
எனது வசமே கடைக்கண்
அருள்வாயே'

என்பது போன்ற பாடல்களைக் காஸீம் புலவர் திருப்புகழில் காணலாம். மேலும் அஸனுலெப்பை, செய்யிது முகியித்தீன் கவிராயர் ஆகியோர் திருப்புகழ் பாடியுள்ளனர்.

மேலும், மெய்ஞ்ஞான நெறி விளக்கும் பல தத்துவ வித்தகர்களையும் தமிழ் முஸ்லிம் புலவர்களில் காணலாம். இவர்களின் சுல்தான் அப்துல் காதிர்லப்பை ஆலிம் புலவர், தக்கல் பீர் முஹம்மது அப்பா அவர்கள் ஆகியோர் சிறப்பாக குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் முதல்வரின் பாடல்கள், குணங்குடி மஸ்தான் சாகிப் திருப்பாடல்' என்னும் பெயரால் வழங்கப்படுகிறது. தக்கலை பீரப்பா அவர்கள், ஞான ஆனந்த களிப்பு ஞானக்குறம், ஞான நடனம், ஞானப்பால், ஞானப்புகழ்ச்சி, ஞானப்பூட்டு, ஞானமணிமாலை, ஞானமுச்சுடர்பதிகம், திருநெறி நீதம் போன்றஎண்ணற்ற மெய்ஞ் ஞான நூல்களைஎழுதிக்குவித்துள்ளார். இவற்றில் ஞானப் புகழ்ச்சி, திருமறையினைப் பிழிந்தெடுத்துச் சாறு போல இனிப்பதால், தென் மாவட்ட முஸ்லிம்கள் பக்தியொழுங்குடன் பாடிப்பரவசமடைவதைக் காணலாம்.

பீரப்பாவின் திருநெறிநீதம் பூவாறு நூஹ் ஒலி அப்பாவின் வேதப்புராணம், இஸ்லாமிய அறப்போதம் புரியும் நூல்களாகத் திகழ்கின்றன.

இதுவரை இன்பத்தமிழில் இஸ்லாமியர் வளர்த்த இலக்கியங்களில் சிலவற்றைப்பற்றிப் பார்த்தோம். இந்நூல்கள் ஒவ்வொன்றும் தமிழுக்கும் இஸ்லாத்திற்கும் அழியாச் செல்வமன்றோ!

★

# ஊமைக் கண்ணீர்

கத்திடும் தவளைக் கூட்டம்
கலங்கல்நீர்க் குட்டை தன்னில்
தொத்திடும் ஒன்றை யொன்று
தொடர்ந்திடும் மேலும் ஒன்று

வித்திடும் வித்த கந்தான்
கோசிகச் செம்மல் போலப்
புத்துல கிழைக்கத் தானோ!
புதுமையோ! வாழ்வின் பேறோ!

என்றவா றெண்ணி யாங்கே
இருந்தனள் ஒருத்தி நங்கை
கன்னலும் வெட்கிப் போகும்
கழையெனும் தோள்கள் காணின்

அன்னமும் நாணிச் சோரும்
அணிநடை சாயல் கண்டால்;
மின்னலும் வடிவம் தோற்றும்;
மின்னிடை தோற்றல் இன்றாம்!

கன்னலோ! கனியோ! தேனோ!
கட்டியோ! கண்டு தானோ!
பொன்னவிர் ஆம்பல் செவ்வாய்
பொழிந்திடும் மொழிகள் எல்லாம்!

பின்னலோ நீண்ட பாம்பு
பிறந்ததோ முகத்தை யொட்டி;
இன்னதன் அழகு தானும்
இளமதிக் கிரணம் மானும்

கன்னிகர் தோளரர் கண்டால்
கன்னியை அகலல் செய்யார்;
பின்னவர் அகல்வ ராயின்
பேடியர் இவரே என்பார்;

என்னதான் இருந்தும் என்ன
இளையவன் இல்லா தாட்கே?
அன்னம தூர்தி கொண்டான்
அளித்ததீ விதியாம் அந்தோ!

சின்மொழிப் பேதைக் கிள்ளை
சில்வளை துறந்தாள் இன்னே
சின்மலர்க் கூந்தல் காரில்
சிதைந்ததால் பூவும் பின்னே.


பொன்னிப் பல்பூ ஆடை
வெண்ணிறங் கண்ட தாலே
இன்புகொள் தவளை கண்டே
இருக்கிறாள் ஊமைக் கண்ணீர்.

முகிலன்



# காந்தி அழகிரி கவினுற வாழியே!

தேனும் பாலும் கலந்தால் சுவையே கூடும்!
ஒரு மானும் காளையும் ஒரு மனதாயினர் என்றால் உவப்பே நிறையும்!
காதல் இன்பம் அந்தக் கலப்பிலே பிறக்கும்!
மாண்புமிகு கலைஞரின் மகனும் அழகிரி
வாண்முக நங்கை சாந்தித் திருவிணைக்
கலப்புத் திருமணம் புரிந்தார்.
கலப்பது திருமணம்!
இதயங் கலப்பதும் இனங்கள் கலப்பதும்
திருமணத்தால் என்பது வரலாறாகும்!
காவியங்களும் சாசனங்களும் இந்தக் கருத்தையே வலியுறுத்தும்
மாண்புமிகு நாவலர் தலைமையில்
மணவாழ்வு கண்ட செல்வச் சிட்டுக்களைப்
பெரியாரும் பெரியோரும் வாழ்த்தினார்; இளந்தமிழர்
யாமும் வாழ்த்தினோம் இன்பம் நிறைகவே!




நூல்களெனும் நண்பர்களே! உலகைக் காட்டும்
நுணுக்கமிகு சன்னல்களே! காலத் தேரின்
கால்வழியின் சுவடுகளைப் படமாய் ஆக்கிக்
கண்முன்னால் திரையிட்டுக் காட்டு கின்றீர்!

நால்வகைப்பூ இதழ்களுக்குள் தேனீ மூழ்கி
நாவினிக்கும் தேனடையை உருவாய் ஆக்கும்;
வால்அறிவு பெறவேண்டின் நூல்க ளே,உம்
மடியினிலே நாங்களெலாம் மூழ்க வேண்டும்!

என்றைக்கோ செத்தவரை எங்கள் முன்னால்
எழுப்பிவந்து நிறுத்திவைத்துப் பேச வைப்பீர்!
என்றைக்கோ நிலவினில்நாம் உலவப் போகும்
எழிற்கனவைச் சுவையுடனே எடுத்துச் சொல்வீர்!

தென்றல்தொட்டே இதழ்விரியும் மலர்க ளெல்லாம்
சிரிக்கின்ற காலமிங்கே ஒருநாள் தானே!
என்றென்றும் அறிவுமணம் வீசு கின்ற
ஏடுகளே! உங்களுக்கோ மரணம் உண்டா?

துன்பத்தில் ஆடுகின்ற இதய ஓடம்
தொலைதூரக் கடல்சேர 'துடுப்'பாய் நின்றீர்!
மன்பதையின் தலைமுறைகள் அழிந்த போதும்
வருகின்ற 'தலை முறைக்குத் தூது' நீங்கள்!

மென்மையுள்ள மூளைகளைக் கூர்மை செய்யும்
மேதினியின் 'சாணைக்கல்' நீங்கள்தானே!
தின்பதெல்லாம் குடல்புகுந்தால் மறைந்தே போகும்!
தினம்படிக்கும் ஏட்டறிவு மறைவதேது?

சேரமன்னன் குட்டுவனின் வாளின் மோதல்
செவிகளிலே விழுகிறதே உமைத்தி றந்தால்!
வீரமுள்ள கண்ணகியின் நீள்வா தத்தின்
வெடிமுழக்கம் கேட்கிறதே உமைப்பி ரித்தால்!

ஈரநெஞ்ச அறச்செல்வி மேக லைப்பெண்
எழிற்சிரிப்பும் தெரிகிறதே உம்மைத் தொட்டால்!
பாரகத்துக் காட்சியெலாம் ஒளித்து வைத்த
'படுமாயக் கண்ணாடி' நீங்கள் தாமோ?

நூலாடை மேனியதன் மானங் காக்கும்;
நுண்ணறிவின் காவலரோ நீங்கள்; 'ஏட்டுப்
பாலாடை' மூலந்தான் வளரும் மூளை!
'பார்எல்லாம் தெரியும்'என்றே அகந்தை கொள்வோன்.

நூலகமே! உமைத்திரும்பிப் பார்த்து விட்டால்
நொடிப்போதில் திமிர்வாதம் அடங்கிப் போகும்!
காலமெலாம் அழியாத கவிதைக் காட்டைக்
கண்போலே வளர்க்கின்ற 'கழனி' நீங்கள்!

மதுக்குடமோ நரம்பினில்தான் முறுக்கை ஏற்றும்!
மாதுஅவள் உடம்பினில்தான் சுகத்தைச் சேர்ப்பாள்!
நதியோட்டம் விழிகளுக்கே மகிழ்ச்சி யூட்டும்!
நறுங்கறியோ நாவுக்கே சுவையைக் கூட்டும்!

மதியின்உலா காதலர்க்கே இன்பம் சேர்க்கும்!
மழலைமொழி இளமையில்தான் எழிலாய்க் காணும்!
எதிரில்லாப் பனுவல்களே! நீங்கள் நித்தம்
எடுத்துவைக்கும் இன்பத்திற் கீடும் உண்டா?

கா.வேழவேந்தன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ

# உயிர் ஊசலாடுகிறது

எங்கள் சமுதாயத்தின் உயிர், மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது.

அதன் அங்கங்கள் பெருநெருப்பில் வெந்து கொண்டிருக்கின்றன.

எங்கள் சமுதாயத்தில் ஒவ்வொரு குடிமகனும், ஒவ்வொரு பகுதியில் நின்று ஓலமிடுகிறான்.

பசிய வயல்களின் பசுமையை படரச் செய்தவன் அவன்தான்.

மலை நாட்டைக் கலை நாடாக்கியவனும் அவனேதான்.

மறக்கடிக்கப்பட்ட இந்த உண்மைகளை இப்போதெல்லாம் வெறும் வார்த்தையளவில்தான் அவன் சொல்லிக் கொள்ள முடிகிறது.

மனிதர் நுழையப் பயந்த காடுகளிலெல்லாம் மனந் துணிந்து நுழைந்தவன் அவன்தானென்பதும்—

இந்த மலையில் ஏற முடியுமா என்று உலகம் திகைத்தகாலை, மலைச் சாலைகளை அமைத்துத் தந்தவன் அவன் தானென்பதும்—

கடலில் மூழ்கி முத்தெடுப்பவன் அவன் தானென்பதும்நிலம்பிளந்து பொன்னெடுத்தவன் அவன் தானென்பதும்—

வெறும் மேடை முழக்கங்களாகவே போய்விட்ட நிலையில், அவனது துயரங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன.

சகோதரர்களின் ரத்த பாசமே தடம் பெயர்ந்து போய்விட்டது.

மாந்தளைச் சிறைச்சாலையில் வழியறியாது மயங்கிக் கிடக்கும் ஆயிரக்கணக்கான சகோதரர்கள்

தங்கள் எதிர் காலத்தைக் கேள்விக் குறியாகவே வைத்துக் கொண்டிருக்கிறார்கள்

யாழ் நகரத்தின் தெருக்கள், எங்கள்சகோதரர்களின் ரத்தத்தாலே அலங்கரிக்கப்பட்டிருக்கிறன.

பிஜீத்தீவின் தோட்டங்களிலே எங்கள் பரிதாபத்துக்குரிய சகோதரர்கள், தங்களைப் பலி கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

கடல் கடக்க வழிகாட்டியவனும், கப்பல் செய்து தந்தவனுமான எங்கள் முன்னோன்

சாவதற்கே எங்கள் சமுதாயத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறான்.

அந்தப் புழு புச்சிகள், அடிபட்டாலும் துடிப்பதற்கூட உரிமையில்லாது அடங்கிக் கிடக்கின்றன.

காலா காலங்களுக்கு கண்ணீர் வடிக்கும் உரிமை மட்டும் எல்லா நாடுகளிலும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

துயரத்தை யாருக்குச் சொல்வதென்று தெரியாமல், தனக்குத் தானே சொல்லிக்கொள்வதற்கு பெயர் தான் கண்ணீர்.

அவர்கள் பாவம்! வேறு யாரிடம் போய்ச் சொல்வார்கள்?

பாவம் தமிழர்கள்!

இப்படியோர் இனம் உலகத்தில் ஏன்தான் தோன்றியதோ?

சராசரி மனிதர்களுக்குக் கிடைக்கும் சராசரி உரிமைகள் கூட அவர்களுக்கில்லை!

அவர்கள் பார்க்கிறார்கள்; மற்றவர்கள் வாழ்ந்து கொண்டிருப்பதை,

அவர்கள் மூச்சுவிடுகிறார்கள், உயிர் வாழவேண்டுமேயென்று.

அவர்கள் இருதயம் பரந்து கிடப்பதாக எல்லோருமே சொல்கிறார்கள்.

பரந்து கிடக்கின்ற அந்த இருதயம் முழுவதிலும், துயரம் நிறைந்து கிடப்பதைக் காணமறுக்கிறார்கள்.

பிறருடைய கருணைக்காகவே அவர்கள் ஒவ்வொரு நாளும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.



# தண்டமிழ் ஆலயமும் தமிழக அரசும்

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு முகிழ்த்திட்ட பின்தான் அறநிலையத் துறையின் நிர்வாகம் செம்மையாக நிகழ்வுற, துரித நடைபோட அறநிலையத் துறைக்கென தனி அமைச்சர் அமைத்து அவரது பொறுப்பில் அறநிலையங்கள், ஆலயங்கள் ஒப்படைக்கப் பட்டன. தமிழக வரலாற்றிலேயே முதன் முதலாக அறநிலையங்களுக்கு—ஆலயங்களுக்கு சட்ட மன்றத்தில் முதன் முதலில் வரவு செலவுத் திட்டம் கொணர்ந்தது தி.மு.க அரசுதான்!

ஆலயங்களுக்கும்- அறநிலையங்களுக்கும் தஞ்சை மாவட்டத்தில் ஏராள நன்செய் நிலங்கள் இருந்தும் அப்போதைய காங்கிரஸ் ஆட்சி கொணர்ந்த ''மாரட்டோரியம்'' சட்டத்தால் நெல் அளக்காது பாக்கி ஏற்படும் குத்தகை பாக்கிகளை வசூலிக்க வழியில்லாமல் இருந்தது. இதனால் குத்தகைதார் கோயிலுக்குச் செலுத்த வேண்டிய பாக்கி மலை போல் குவிந்தது. முடிவு ஆலயங்கள் அனைத்தும் பணமுடையால் சீரழியும் நிலையில் இருந்தன இச்சட்டத்தின் சீர்கேட்டை இந்த அரசு உணர்ந்து ''மாரட்டோரியம்'' சட்டத்துக்கு மாற்றம் செய்து ஆலயங்கள் வருவாய் தடையேதுமின்றிப் பெற உதவியது. இதனால் ஆலயங்களின் வருவாய் பலமடங்கு பெருகியது.

ஜனநாயகத்தின் இருப்பிடம் என சிறப்பிடம் பெற்ற ஆங்கில அரசுதான் ஆர்ச் பிஷப்புகளுக்கும், சில தாபிதத் திருச்சபையின் பாதிரியார்களுக்கும் பிரபுக்கள் சபையில் அங்கம் வகிக்க உரிமை தந்தனர். அத்தகைய உரிமை தமிழகத்திலுள்ள மடாதிபதிகளுக்கு சட்ட மன்றத்தில் அங்கம் வகிக்க வழங்கப்படவில்லையே என ஆத்திகர் பலர் அங்கலாய்த்தனர். அந்தக் குறையினை டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் களைந்து தமிழக தெய்வீகப் பேரவையின் தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கட்கு மேலவை உறுப்பினர் பதவியை அளித்து தமிழன்னையின் அழகிய வடிவில் ஓர் முத்தைப் பதித்தார்கள்.

**அர்ச்சகர்களுக்கு தக்க பயிற்சி**

சர் சி.பி. இராமசாமி அய்யரைத் தலைவராகக் கொண்ட இந்துமத அறநிலையக் குழு தனது அறிக்கையில் ஆலயங்களில் அர்ச்சனை புரியும் அர்ச்சகர்களுக்கு ஓர் கல்வி யோக்யதாம்சம் அவசியம் வேண்டுமென நிர்ணயம் செய்ய வேண்டுமென (Code of Grant) பரிந்துரை வழங்கியது. இதனை வலியுறுத்தி அப்போதைய காங்கிரஸ் அரசு திரு ராமச்சந்திரன் அவர்களது தலைமையில் அமைத்த தமிழக சட்ட மன்றப் பேரவை (மூன்று

வது பேரவை) மதிப்பீட்டுக் குழுவினது 1965—66 ஆம் ஆண்டின் மூன்றாவது அறிக்கையில் இத்தகைய தகுதி அவசியம் வேண்டுமென வலியுறுத்திய தோடுமட்டுமில்லாமல் அதை உடனடியாக செயல் முறைக்குக் கொண்டு வர பத்தி 70வதில் வலியுறுத்திக் கூறியது.

அதற்குச் செயல் வடிவம் கொடுக்கவே இந்த அரசு ஆலயங்களில் உள்ள பரம்பரை அர்ச்சக முறையை ஒழித்து தகுதி உள்ளோர் அனைவரும் அர்ச்சகர் பணிக்கு வர சட்டமொன்றை 1971 ஆம் ஆண்டில் இந்து அறநிலைய சட்டம் என்ற பெயரில் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்தை எதிர்த்து சிலர் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு ஒன்றினைத் தொடுத்துள்ளார்கள். அந்த டெல்லி வழக்கு மன்றம் இடைக்கால தடை ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

ஆலயங்களின் சீர்திருத்தத்துக்காக அரசினரால் கொண்டுவரப்பட்ட எல்லா சட்டங்களையும் ஆத்திகர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பதில்லை. மாறாக, எதிர்ப்புக் கணைகளைத் தொடுத்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். தங்களது உரிமைகள் பறிபோவதாக வழக்கு மன்றமும் ஏறத்தான் செய்கிறார்கள். அறநிலையங்கள், சட்டங்கள் அனைத்தும் இத்தகைய எதிர்ப்புக்களையெல்லாம் ஏற்றுத்தான் இறுதியில் செயல்படத் துவங்குகிறது.

1. கோயில்களில் பலி இடுவதை நிறுத்தவில்லையா?

2. சாரதா சட்டம் அமுலுக்குக் கொணரவில்லையா?

3. ஹரிஜனங்களை ஆலயத்தில் நுழைய அனுமதிக்கவில்லையா?

**ஆலயங்களும் அரசின் தலையீடும்**

இந்தியாவிலேயே அறநிலையங்களின் கட்டளைகளுக்கு பொது மேற்பார்வையிடும் முறையை முதலில் புகுத்தியது தமிழ் நாடு தான்.

இந்திய நாட்டிலுள்ள ஆலயங்களையும் அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான சொத்துக்களையும் முறையாக நிர்வகிப்பது ராஜ்யத்தின் முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டு வந்தது. இந்து அரசர்கள் ஆண்ட காலத்தில் அரசர்களது ஆளுகைக்கு உட்பட்டு அரசர்களது அலுவலர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது. பின்னர் ஆலய மேற்பார்வையிடும் பணிகள் அந்தந்த மாநில அரசின் முக்கிய பணிகளில் ஒன்றாக தொன்றுதொட்டு அங்கீகரிக்கப் பட்டுள்ளது.

முகம்மதிய அரசர்கள் ஆண்ட காலத்தில் கூட அரசினது கடமை எடுத்து எறியப்படவில்லை. மதக் காழ்ப்புணர்ச்சி தலை தூக்கிய காலத்தில் அல்லது மற்றைய காலங்களில் இந்து ஆலயங்களை அலட்சியமும், நிர்வாகக்கோளாறுகளிலிருந்தும் அழிவிலிருந்தும் காப்பாற்ற போதிய வகை செய்யப்பட்டது.

ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்டபின் அறக்கட்டளைகளின்

தி. நாகராஜ் பி.எஸ்ஸி.
நிர்வாக அதிகாரி,
திருமயிலை கபாலீச்சரர் ஆலயம்.

வருவாய் அவற்றின் நிர்வாகிகளினால் துர்விநியோகமும், கையாடலும் செய்யப்பட்டன. எனவே ஆங்கில அரசு ஆலய அறநிலைய சொத்துக்களை முந்தைய அரசர்கள் மேற்பார்வையிட்டதுபோல மேற்பார்வையிடும் உரிமையினை நிலைநிறுத்தி முதன் முதலில் இந்திய துணைக் கண்டத்தில் 1810 வங்காளத்துக்கென ஓர் சட்டம் கொணர்ந்தது. சென்னை மாநிலத்தில் முதன்முதலில் 1817ல் அத்தகைய சட்டத்தை ஆங்கில அரசு அமுலுக்குக் கொணர்ந்தது.

இஃது இந்து அரசர்களும், முகலாய மன்னர்களும் அரசாண்ட காலங்களில் அமுலிலும், பழக்கத்திலுமிருந்த சட்டதிட்டங்களையும் நடைமுறைக்கு கொண்டு வந்தது அன்றைய ஆங்கில அரசு—அறநிலைய சொத்துக்களையும் அறநிலையங்களையும் அரசு அதிகாரிகளது கடுமையான கண்காணிப்பில் வைக்க வேண்டியது அரசின் தலையாய கடன் என உணர்ந்தது. இந்த முறை 1839 வரை தங்குதடையின்றி அமுலில் இருந்தது.

இத்தகைய முறைக்குகிறித்துவ திருச்சபைகள் 1839ல் ஓர் எதிர்ப்பினைத் தெரிவித்தது. இந்து அறக்கட்டளையும், இந்து ஆலயங்களையும் முகம்மதிய மசூதிகளையும் கிறித்துவர்களால் ஆளப்படும் ஆங்கில அரசு நிர்வகிக்கக் கூடாது? அரசின் கடமையல்ல என்று எதிர்த்ததால் ஆங்கிலேய அரசு கொஞ்சம் கொஞ்சமாக நிர்வாகப் பொறுப்பினைத் தளர்த்தியது. இதன் நோக்கம், பொதுவான தன்மை அரசினதும், அரசாங்க அலுவலர்களதும் தலையீட்டை அற நிலையங்களின் நிர்வாகத்திலிருந்து விலக்கி மதத்தில் பற்றுள்ள அறநிலையங்களைச் சார்ந்த மதத்தைப் பரப்பும் தகுதியுள்ள தனிப்பட்டவரிடம் ஒப்படைக்கவேண்டுமென்ற நல்லார்வத்தில் விளைந்ததுதான்.

12—6—1841ல் சென்னை அரசு ரெவின்யூ போர்டுக்கு மேற்கண்ட ரீதியில் உத்தரவு வழங்கியது.

1839—1842 நான்காண்டு காலம் இந்து ஆலயங்களின் நிர்வாகத்திலிருந்து அரசு தனது இணைப்பை துண்டித்துக் கொண்டது.

ஒழுங்குமுறைச் சட்டம் (Regulation Act) அமுலில் இருந்தும் 1842—1863 வரை அரசின் மேற்பார்வையிடும் பணி அறவே செய்யப்படவில்லை. விளைவு கேட்பாரும், மேய்ப்பாரும் இல்லாததால் ஆலய பணங்களில் கையாடலும் துர்விநியோகமும் ஆலய நிர்வாகத்தில் அன்றாட நிகழ்ச்சி ஆயின! நிர்வாகக்கேடுகள் உச்ச நிலையில் இருந்தன. எனவே அரசின் மேற்பார்வையிடும் முறை அவசியம் என உணரப் பட்டது.

எனவே தமிழக அரசு தன்டமிழ் ஆலயங்களில் தலையிடுகிறது என்ற குற்றச்சாட்டு ஓர் அர்த்தமற்ற கூப்பாடு! அறநிலையங்களையும் ஆலயங்களையும் காலதேவன் கரங்களின் அழிவிலிருந்து காப்பாற்றி வரப்போகும் சந்ததிகளிடம் ஒப்படைக்கும் ஒப்பற்ற பணியையும் அறநிலையங்கள், ஆலயங்களின் சொத்துக்களை அழிவிலிருந்தும் மீட்கும் அரிய பணியினையும் இவ்வரசு தனது கடமையாக ஆற்றி வருகிறது.

★

# கற்பனைத் தேவி

கற்பனைத் தாயே நின்னைக்
கைதொழு தேற்று கின்றேன்
சொற்களால் கோட்டை கட்டும்
சுந்தர வல்லி நீயே!
அற்புத வித்தை செய்தே
ஆட்களை ஆட்டி வைக்கும்
பொற்கொடி மாதே நின்னைப்
போற்றுதல் நேர்மை என்பேன்!

குடிசையில் வாழ்வோன் நெஞ்சில்
கோபுர எண்ணம் சேர்ப்பாய்!
மிடியினுள் ஆழ்வோன் நாவில்
மேன்மையை நித்தம் ஈவாய்!
இடிமழை ஓசை யாவும்
ஏற்றுவாய் மாந்தர் நெஞ்சில்
நடிப்பினில் வல்லார் தம்முள்
நாடகம் ஆக்கி நிற்பாய்!

அடிக்கடி விடுப்புக் கேட்கும்
அலுவலன் நாவினுள்ளே
படிப்படிக் காரணங்கள்
படர்ந்திடச் செய்வாய்; 'நோயின்
மடியினில் வீழ்ந்த பாட்டி
மடிந்தனள்' என்பான்; பின்னர்
முடிந்திடும் மூன்று திங்கள்
மடிந்தவள் மடிவாள் மீண்டும்!

ஓதிடும் படிப்புக் கூடம்
ஓர்மணி கழித்தே செல்வோன்
சேதியை அவனின் ஆசான்
சினத்தோடு வினவும் போதில்
சோதியாய் ஒளிர்வாய்; நெஞ்சில்
தோன்றுவாய்; அவளின் நாவோ
மாதிறம் படைத்தே மின்னும்
மாபெரும் கதைகள் சொல்லும்!

கடற்கரை மண்ணிற் காதற்
கவிதையே பாடித் துள்ளும்
மடக்கொடி யன்னுள் செய்கை
மறைந்திட எண்ணும் போதில்
அடக்கமாய்ப் பெற்றோர் முன்னே
'அருள்மிகுந் தோழி யோடு
கடந்தநாள் சேதி பேசிக்
களித்தனன்' என்றே சொல்லல்.

கற்பனைத் தேவி, உன்றன்
கண்ணருள் வண்ணம் அன்றோ!
குற்றமே செய்வார் நெஞ்சில்
குன்றென நிற்கும் செல்வீ!
மற்றவர் ஒப்புக் கொள்ளப்
பல்வித வேடம் கொள்வாய்!
கற்றவர் கல்லார் பேதம்
கனவினும் இல்லாய் வாழ்க!

**புலவர் ஓழப்பித்தன்**

# காஞ்சனையின் காதலன்

கன்னிமாடத்தில் காவல் அதிகம்தான் என்றாலும் காஞ்சனைக்கு மட்டும் கட்டும் காவலும் கிடையாது. காரணம் மன்னன் மகள். அவள் அந்தி சாயும் நேரத்தில் தன்னந் தனியாய் எங்கு போகிருள்?

பாண்டியப் பெருமன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் செல்லப் பெண் காஞ்சனைக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. சகலகலாவல்லி! முத்தமிழ் பயின்ருள். ஓவியக் கலையும் விட்டு வைக்கவில்லை. நடனக் கலையிலும் ஒரு தனியிடம் அவளுக்கு! இசைக் கலையிலோ, அவளுக்கு நிகர் அவளேதான். இத்தனைக்கும் அவள் மன்னனின் சொந்தப் பெண் அல்ல; வளர்ப்புப் பெண்.

கலை முழுதும் கற்றுத் தேர அவளைக் கன்னிமாடத்தில் விட்டு வைத்தான் மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன். கன்னிமாடத்து வாழ்க்கை இன்னும் இரண்டே நாட்கள்தான். மூன்ருவது நாள் அவள் பழையபடி அரண்மனைக்கே போய்விடப் போகிருள்.

இருப்பதோ இன்னும் இரண்டே நாட்கள். அதற்குள் அவனைச் சந்தித்து ஒரு முடிவு வேண்டும்.

"பராசக்தி! ஊரும் நாடும் தூற்றுவது போல அவர் அவனுயிருக்கக் கூடாதம்மா!" காஞ்சனையின் அந்தராத்மாவில் ஒரு வண்டுகோள். குமுறலுக்கிடையே இப்படியொரு பிரார்த்தனை.

இதயக் கோயிலிலே ஜீவ தெய்வமாக வைத்துப் பூஜித்தவளாயிற்றே! ஜீவகனை அவளால் மறக்க முடியுமா. மறந்து உயிர் வாழத்தான் முடியுமா?

கன்னிமாடத்திலே காஞ்சனை குடியேறி மூன்ருண்டுகள் ஆகின்றன. இந்த மூன்ருண்டுகளாக அவளும் கன்னிமாடத்து உத்தியானவனத்திலே காதல் கீதம் பாடி மகிழ்ந்ததை அவள்தான் மறக்கமுடியுமா. அவன்தான் மறக்கமுடியுமா?

காஞ்சனை, ஜீவகனைத் தன் காதலனைகத் தேர்ந்தெடுத்தாள் என்ருல், கண்டதும் காதல் என்பார்களே, அந்த முறையில் அல்ல.

யாரும் வளைக்காத வில்லை வளைத்த இராமசந்திரனை மணந்தாள் ஜானகி. மாலையை வீசி கோவலனைக் கைபிடித்தாள் மாதவி. இந்தக் காஞ்சனை ஜீவகனைத் தெரிந்ததற்கும் ஒருகாரணம் இருந்தது.

அந்த நிகழ்ச்சியை இன்று நினைத்தாலும் காஞ்சனைக்கு முகமெல்லாம் சிவந்துபோய் விடும். அவள் ரோஜாப்பூ கன்னங்களிலே செவ்வானத்தைப் பார்க்க வேண்டுமென்று ஜீவகன் அடிக்கடி விரும்புவதுண்டு. அப்போதெல்லாம் அவன் அந்த அரிய நிகழ்ச்சியைக் காஞ்சனைக்கு

நினைப்பூட்டினால் போதும், அவள் தாமரை முகம் குபீரென்று சிவந்து போகும்!

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி அது

செக்கர்வானம் படர்ந்து அந்திப் போதை மனோரம்மியமாய் ஆக்கிக் கொண்டிருந்த நேரம் அது.

குதிரைச் சவாரியிலே முழுமையடைந்து விட்டதாக ஓர் அகந்தை காஞ்சனைக்கு. வழக்கமாக ஏறிச் செல்லும் அதே பஞ்சகல்யாணிக் குதிரையைத்தான் அன்றும் ஓட்டிச் சென்றாள். ஏதாவதொரு காரியம் எதிர்பாராத விதத்திலே நடைபெறவேண்டுமாயின் அதற்கொரு காரண காரியம் வேணுமே. அதற்காகத்தானே என்னவோ அந்தப் பஞ்சகல்யாணிக் குதிரை முரண்டு பிடிக்கத் தொடங்கிவிட்டது. என்றுமில்லாத வேகத்தில், நாற்கால் பாய்ச்சலில் பறக்கத்தலைப்பட்டது அந்தப் பொல்லாத குதிரை. அடக்கிப் பார்த்தாள் ஆரணங்கு. அடங்கவில்லை, காற்றாய்ப் பறந்தது புரவி. குலை நடுங்கிப் போனாள் காஞ்சனை. "மீனாட்சித் தாயே! பராசக்தி, அம்பிகே!" என்று அவள் நெஞ்சம் பதறியது.

அவள் அபயக் குரலுக்கு ஆதரவு தருவதுபோல எங்கோ போய்க் கொண்டிருந்த ஜீவகன் பார்வையில் காஞ்சனை பட்டுவிட்டாள். புரவியைத் தட்டிவிட்டான் ஜீவகன். மின்னலெனப் பாய்ந்தது அவன் குதிரை.

இன்னும் ஒருகணம் தவறியிருப்பின் காஞ்சனையைத் தூக்கியெறிந்திருக்கும் அந்த அடம்பிடித்த குதிரை. அதற்குள் ஜீவகன் அவளை நெருங்கி விட்டான். குதிரையிலிருந்த காஞ்சனையைப் பூப்போலத் தூக்கித் தன் குதிரை மீது உட்கார வைத்துக் கொண்டான் ஜீவகன்.



## முத்தொள்ளாயிரத்தில் ஒரு முத்து

தன் மகன் அபிமன்னனைப் பகைவர்கள் கொன்று விட்டார்கள். வேறிடத்தில் போர் செய்து கொண்டிருந்த அருச்சுனன் இச்செய்தி யறிந்து துடித்தான். அழுதான், மயங்கினான், விழுந்தான், உணவுண்ணாது படுத்தான். நாளைக்கே பகைவரை மாய்ப்பேன், இன்றேல் நான் நெருப்பில் குதிப்பேன் என்று சூளுரைத்தான்.

பகைவரை மாய்க்க வலிவு வேண்டும். உண்ணாதிருந்தால் வலிவுண்டாகுமா? இந்தப் பழத்தை யுண்ணு என்றான் கண்ணன்.

இறைவனை வணங்காமல் எப்படி உண்ணுவேன்? என்று கேட்டான் அருச்சுனன் என் முடியின் மேல் பூக்களைப் போட்டு வணங்கு—அது இறைவன் திருவடியில் சேர்த்துவிடும். விரைவில் வணக்கம் முடித்துவிட்டு உண்ணு என்றான் கண்ணன்.

அன்று இரவு கண்ணனுடன் கைலைக்குச் சென்ற அருச்சுனன், தான் கண்ணன் முடியில் தூவிய அதே பூக்கள் சிவபெருமானின் திருவடிகளில் கிடக்கக் கண்டான் இறைவனைத் தொழுது படைக்கலம் பல பெற்றுவந்து பகைவரை வென்றான்.

உயிர்காத்த அந்த உத்தமனைத் தன் காதலனாக வரித்துக் கொண்டாள் காஞ்சனை.

ஜீவகன் யார்? என்ன தொழில். எந்த நாட்டைச் சார்ந்தவன் என்பன போன்ற விவரங்களைக் கேட்டறியாமல் அவனைத் தன் காதலனாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது தவறு என்பதை, காஞ்சனை இரண்டாண்டுகளுக்குப் பிறகுதான் உணர்ந்தாள்.

கன்னிமாடம் மலர்வனத்தில் ஜீவகனும் காஞ்சனையும் சந்தித்து காதல் கீதம்பாடும் செய்தி காற்றுவாக்கில் பாண்டியப்பெருமன்னன் செவியிலே விழுந்தது. புலியெனச் சீறவில்லை மன்னன். மாறாக என்ன செய்தான் தெரியுமா?

அமைச்சரை அழைத்தான். காஞ்சனையின் காதலனைப் பற்றிய விவரங்களைத் திரட்டித் தருமாறு கட்டளையிட்டான்.

மறுநாளே ஜீவகனைப் பற்றிய தகவல் புள்ளிவிவரத்தோடு மன்னனிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜீவகன் யார்! அருமை மகள் காஞ்சனைக்கு ஏற்றவன் தானா?

ஏற்றவன் தான் அழகிலும் சரி, அந்தஸ்திலும் சரி, கலைஞானங்களிலும் சரி, எல்லாவற்றிலும் ஜீவகன் காஞ்சனைக்குப் பொருத்தமானவன் தான். ஆனால்..

ஜீவகன் பகைவன்!

பாண்டியப் பெருமன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனுக்கு எதிராகப் போட்டியாகக் கிளர்ச்சி செய்யக் காத்திருக்கும் விரோதியின் மைந்தன் அவன்.

பாண்டிய நாட்டு அரசுரிமை கோரி ஒரு கூட்டம் கிளம்பியிருக்கிறது ஸ்ரீமாறனை அரசுக் கட்டிலை விட்டுக் கீழே இறக்கி அந்த அரி

# சேரன்

யாசனத்திலே ஒரு போலிப் பாண் டியனை அமர வைக்க நடத்திய போட்டிக் கிளர்ச்சி அது.

மன்னனுக்கெதிராகக் கிளர்ந் தெழுந்த போலிப் பாண்டியனின் மைந்தன் ஜீவகன். அவனுக்கா என் மகளைத் தாரை வார்த்துத் தருவேன்?' என்று சினந்தெழுந் தான் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்.

பெண்ணின் மேல் கொண்டுள்ள பாசம் அளவிடற்கரியது. ஸ்ரீமாறன் தீவிரமாய்ச் சிந்தித் தான். மகளிடம் இச் செய்தியைத் தெரிவித்தால் அவள் மனம் தாங் கிக் கொள்ளுமா?

அரசியலில் ஏற்பட்ட கொந்த ளிப்பு ஸ்ரீமாறன் நெஞ்சிலும் ஏற் பட்டது.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னர் மன்னன் ஒரு முடிவுக்கு வந்தான்.

காஞ்சனையை அழைத்தான்.

"அரசுரிமை கோரி எனக்கெதி ராகக் கிளர்ந்தெழும் ஒரு கலகக் கூட்டத்தின் தலைவன் மகன் ஜீவகன். அவனை மணக்க விரும்பு கிறாயா அம்மா?' என்று வேதனைக் குமுறலோடு கேட்டான் மன்னன்.

காஞ்சனையின் இதயத்திலே பேரிடி விழுந்தது. அகிலமே தலை கீழாகச் சுற்றுவது போல் உணர்ந் தாள்.

சிறிது நேரம்தான் அவள் செய லற்று நின்றாள். பிறகு—

பூ மனத்தைப் பெருங்கல்லாக் கிக் கொண்டாள்.

மன்னனை வாஞ்சையோடுநோக் கினாள். அவள் விழிகளில் ஏக்கம் தெரிந்தது ஏமாற்றம் பிரதிபலித் தது. அத்துடன் நேயக்கனலும் தெரிந்தது.

"மன்னர் மன்னா!"

"சொல் அம்மா!"

"காஞ்சனை தங்கள் மகள் மட்டு மல்ல; இந்த பாண்டிய நாட்டின் லட்சோப லட்சம் பெண்களில் ஒருத்தி. என் தாய்த்திரு நாட்டை நயவஞ்சகமாய்க் கவரும் முயற்சி யில் ஈடுபட்டிருக்கும் ஒரு வஞ்ச கன் உங்களுக்கு மட்டுமல்ல, இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, எனக்கும் தான் பகைவன். நச்சுப்பாம்பு பெற்றெடுத்த நயவஞ்சகனை நான் மனத்தாலும் தீண்டேன். அவனை என் இதயத்தைவிட்டு மட்டு மன்று; இந்த உலகை விட்டே எடுத்தெறிந்தால்தான் என் அகம் குளிரும் நாளை நான் சந்திக்கப் போகும் அந்தக் கடைசிச் சந்திப் பில் ஒரு நல்ல முடிவை இந்த நாடு காணப்போகிறது," என்று சூளுரைத்த காஞ்சனை "ஆனால் ஒன்று, தாங்கள் சொல்வதுபோல் ஜீவகன், கிளர்ச்சித் தலைவனின் பிள்ளை என்பது உண்மை புலப் பட்டாக வேண்டும்," என்று ஒரு நிபந்தனையும் விதித்தாள்.

ஜீவகனைக் காணத்தான் காஞ்சனை உத்தியானவனத்துக் குப் புறப்பட்டாள்.

பகைவனின் மைந்தனாக ஜீவகன் இருக்கக் கூடாது என்று அம்பிகையை வேண்டிக்கொண்டு சென்றாள் காஞ்சனை.

அவள் ஜீவகனை வழக்கமாகச் சந்திக்கும் இடத்தைக் காஞ்சனை அடைந்தாள். அங்கே—

அவ்ள் யாரைக் காண அங்கு சென்றாளோ, அந்த நபர் அங்கு காணவில்லை.

ஆம்; அவள் காதலன் ஜீவகனை அங்கு காணவில்லை.

காதலிப்பதாக நடித்துவந்த ஜீவகன் ஏன் வரப்போகிறான்?" எப்படி வருவான்?

# பறவை தந்த பரிசு

மாளிகைத் தோட்டத்தில் மன்னன் சாமிரான் தனது அமைச்சர்களோடு அமர்ந்து, ஏதோ முக்கிய ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தான்.

அப்பொழுது பாலைவனப் பறவை யொன்று, எதிரிலிருந்த கற்றூணின் மீது பறந்து வந்து உட்கார்ந்தது.

பறவையின் அவலக் குரலைக் கேட்ட வேந்தன், அதை உற்றுக் கவனித்தான். அதன் கழுத்தை ஒரு பாம்பு கவ்விக் கொண்டிருப்பது நன்றாகத் தெரிந்தது.

மன்னன் தன் மகனை பேகாமைத் திரும்பிப் பார்த்தான். நிகரற்ற திறமைசாலியும், சிறந்த வில்லாளியுமான பேகாம், தன் தந்தையின் குறிப்பை அறிந்து கொண்டான். வில்லை எடுத்து அம்பைத் தொடுத்தான். பாம்பின் தலையை அந்த அம்பு துண்டித்தது. பாம்பு தரையில் விழுந்து மடிந்தது. மகிழ்ச்சியான குரலில் கத்திக்கொண்டே, பறவை சிறகடித்துப் பறந்தோடியது!

அரசனும் மற்றவர்களும் அக் காட்சியில் உள்ளத்தைப் பறி கொடுத்தவர்களாக, அப்படியே அமர்ந்திருந்தார்கள்.

இயாரட் என்ற பிரதேசத்தை ஆண்ட சாமிரான்—சிறந்த வாள் வீரன், வல்லமை மிக்கவன். ஏராளமான செல்வம், அவனது கருவூலத்தில் குவிந்திருந்தது. அவன் அன்று உருவாக்கிய 'இயத்தினால் சாமிரான்' என்ற நகரம் இன்றும் அழகோடும் சிறப்போடும் விளங்குகிறது.

பாம்பின் பிடியிலிருந்து உயிர் தப்பி பறவை பறந்தோடிய சிறிது நேரத்தில், மன்னனும் அமைச்சர்களும் மீண்டும் தங்கள் பேச்சில் ஆழ்ந்தார்கள்.

மறு ஆண்டு அதே நாளில், அரசன் தற்செயலாக தோட்டத்தில் அதே இடத்தில் உட்கார்ந்திருந்தான்.

அந்தப் பாலைவனப் பறவை அங்கே பறந்து வந்து, மன்னனின் அருகே எதையோ அலகினால் வைத்துவிட்டுப் பறந்து சென்றது!

அரசனின் கட்டளையின்படி ஒரு போர்வீரன் ஓடிச்சென்று, பறவை வைத்துவிட்டுச் சென்றதைக் கொண்டு வந்து அவனிடம் கொடுத்தான்! அவை இரண்டு மூன்று விதைகள்!

பரிசாகப் பறவை தந்த அந்த விதைகளை, அமைச்சர்கள், அறிஞர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கு அரசன் காண்பித்து, பின்னர் தோட்டக்காரனிடம் கொடுத்தான். அந்த விதைகளை விதைத்து, பாதுகாப்பாகத் தனி வேலி போட்டு, சரியாக பத்திர

மாகக் கவனித்து வரும்படி, தோட்டக்காரனுக்கு அவன் ஆணையிட்டான்.

பாரசீக மாதமான நௌரஸ் என்ற மாதத்தில், அந்த விதைகளைத் தோட்டக்காரன் நட்டான். சில நாட்களில் செடிகள் முளைத்தன. காலப்போக்கில், இலை தளிர்த்துக் கொடியாகி மரப் பந்தலில் ஏறிப் படர்ந்தன. பிஞ்சுகள் தோன்றிக் கொத்துக் கொத்தாகக் காய்கள் தொங்கின!

அரசன் தன் பரிவாரங்கள் சூழ அடிக்கடி வருவதும், அதன் அழகைக் கண்டு மகிழ்வதுமாக இருந்தான்.

பச்சை நிறமாறி, கனிகளாகி, கருநீல வண்ணத்தில் அழகைச் சொரிந்தன! கனியின் ஒருபுறம் சிவப்பு நிறமும் ஒளி வீசியது! கனிகள் தினந்தினம் கொட்டத் தொடங்கின! அந்தக் கனிகளைச் சேகரித்து, அவற்றின் சாற்றைப் பெரியதொரு தொட்டி நிறைய நிரப்பினான், தோட்டக்காரன்.

மன்னன் வந்தான். தொட்டியைப் பார்த்து வியந்தான்.

அமைச்சர்களையும் மற்ற முக்கியமானவர்களையும் வரவழைத்து, அந்த அதிசயத்தைப் பார்க்கச் சொன்னான், மன்னன்.

“இது உயிரைக் குடிக்கும் நஞ்சா? அல்லது நஞ்சை முறிக்கும் மருந்தா!” என்பதை எப்படிக் கண்டறிவது என்ற பிரச்னை, அவர்களிடையே எழுந்தது.

நீண்ட நேர ஆலோசனைக்குப் பிறகு, மன்னனே ஒரு வழி சொன்னான். அதை அனைவரும் ஏற்றுக் கொண்டதோடு, பாராட்டவும் செய்தார்கள்.

மன்னனின் யோசனையின்படி, கொலைக்குற்றவாளி ஒருவனைச் சிறையிலிருந்து அழைத்து வந்தார்கள்! கொடிகளில் தொங்கிக் கொண்டிருந்த கனிகளின் கொஞ்சம் பறித்து, அவனிடம் கொடுத்தார்கள்.

கனிகளைத் தின்ற அக்கைதி, “மிகவும் இனிமையாக இருக்கிறது! அற்புதமாக இருக்கிறது!” என்று நாக்கைத் தட்டினான்.

தொட்டியிலிருந்த சாற்றை எடுத்துக் கொடுத்துக் குடிக்கச் சொன்னார்கள்.

குடித்த கைதியின் முகம் வரட்சியைக் காண்பித்தது! மேலும் மேலும் குடிக்கக் கேட்டான்! குடித்தபின், ஆடவும் பாடவும் தொடங்கினான்!

அரசன் முன்பு நிற்கிறோம் என்ற பயமோ பதட்டமோ, அவனுக்குத் தோன்றவில்லை. திரும்பவும் குடிக்கக் கேட்டான்! குடித்த பின்னர், “என்ன இன்பம்! என்ன குதூகலம்! சுவர்க்கமே என் கண்ணெதிரில் தெரிகிறது!” என்று சிரிப்பும் பேச்சுமாக—தலைப்பாரம் தாங்காமல் படுத்துத் தூங்கிவிட்டான்!

**கே.ஜி. இராதாமணாளன்**

மறுநாள் சுயநினைவு பெற்றதும் அவனை மன்னன் முன்பு கொண்டு போய் நிறுத்தினார்கள். அரசனின் கட்டளைக்கு இணங்க, அவன் தன் அனுபவத்தைவிளக்கிக்கூறினான்.

"முதல் தடவை குடித்தபோது, சற்று சிரமமாக இருந்தது! காரணம், ஏதோ அமிலத்தைக் குடிப்பதைப் போலச் சுவை இருந்தது! சாறு உள்ளே சென்றதும், திரும்பவும் குடிக்க வேண்டுமென்ற ஆசை தோன்றியது! இரண்டாவது தடவை குடித்ததும், ஓர் உற்சாகம் ஏற்பட்டது! மேலும் மேலும் குடிக்க வேண்டுமென்ற ஆவல் மிகுந்தது! குடிக்கக் குடிக்க, இனம் தெரியாத ஒரு களிப்பு உள்ளத்தில் ஊற்றெடுத்தது! வெட்கமெல்லாம் மறைந்து, உலகமே விரோதமாகத் தோன்றியது!"

இன்னமும் குடிக்கத் தருவார்களா என்ற ஆவலில், அக்கைதி சுற்றும்முற்றும் பார்த்தான்.

அக்கனிதான் திராட்சை! அச்சாறுதான் மது!

அன்றுதான் மன்னன்சாமிரான் 'மது' என்றால் என்னவென்பதை அறிந்து கொண்டான்! பறவை தந்த பரிசு எவ்வளவு சிறந்தது—பெரியது—என்றெண்ணி உள்ளம் பூரித்தான்! பெரிய விருந்து ஒன்று ஏற்பாடு செய்து, அதில் 'மது அருந்தும் முறை'யை, அவன் ஆரம்பித்து வைத்தான்!

அந்த மயக்கம்—அவன் கண்ட மயக்கம்—இன்று உலகமெங்கும் பரவிப் பல தீமைகளுக்கு காரணமாக அமைந்துவிட்டது. கேளிக்கைகளுக்கு மட்டுமல்லாமல் கேடுகளுக்கும் அது காரணமாகும் என்று அறிந்திருந்தால் இந்த முறையை அவன் ஆரம்பித்து வைத்திருக்கவே மாட்டான்.

## பொங்கலெனும் திங்கள்

மார்கழியில் கருவாகித்
தையிலே வெளியாகிச்
சீர்பெற்று மகிழ்ந்துவரும்
பொங்கல்—அவள்
ஊருக்கு ஒளிகாட்டும்
திங்கள்

மஞ்சள் முகங்குழைத்து
மாசிமுன் பொலிவுற்றுக்
கொஞ்சி விளையாடும்
பொங்கல்—அவள்
'குழவி' நடைபோடும்
திங்கள்

மன்பதையில் ஓடிவந்து
மனதை மகிழவைத்து
கண்களுக்குக் காட்சிதரும்
பொங்கல்—அவள்
விண்ணுலகில் விரைந்துவரும்
திங்கள்

தென்னன் தமிழோடு
தேன்சிந்தும் மலரோடு
மண்ணில் மணங்கமழும்
பொங்கல்—அவள்
பொன்போன்ற மேனியெனும்
திங்கள்

—செம்பை சேவியர்.

# என்னைக் கவர்ந்த புத்தகம்

"தமிழர் தலைவர்"

(தொடர்ச்சி)

திருமணமான ஆறுவது ஆண்டில் தனது 25 வது வயதில் ஈ. வெ. ரா. 'துறவு' மேல் பற்று வைத்தது, ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியாகும்.

தந்தையார் கண்டித்ததால்கோபம் கொண்ட ஈ வெ. ரா துறவியாகத் தீர்மானித்து, சென்னைக்கு வந்து அங்கிருந்து பெஜாவாடா வந்து சேர்ந்தார். அங்கே இவரைப்போல் வந்த இரண்டு தமிழ் நாட்டு ஐயர்களுடன் சேர்ந்து கொண்டு, பிச்சை எடுத்து அதன் மூலம் கிடைக்கும் அரிசியைக் கொண்டு, சமைத்துச் சாப்பிட்டு வந்தார்.

இம்மூவரும் 'கதாகாலட்சேபம்' செய்து சிறிது புகழ்பெறத் தொடங்கினர்.

பிற்காலத்தில் புராண இதிகாசங்களை, 'குடை குடை' என்று குடைந்து 'தாக்கு, தாக்கு' என்று தாக்கிய ஈவெரா — சமஸ்கிருதப் பண்டிதர், ராமாயண புராணக் கதைகளின் சமஸ்கிருத சுலோகங்களைச்சொல்லி, தமிழில் வியாக்கியானம் செய்வதை தெலுங்கில் மொழிபெயர்த்தார். 'ஐயர்' சொல்லும் விஷயங்களோடு அதிகமான கைச்சரக்கைச் சேர்த்துத் தனிப் பிரசங்கமே செய்தார்.

அங்கிருந்து 'மூன்று துறவிகளும்' காசி சென்றனர்.

காசியில் தாராளமாகச் சோறு கிடைக்கும் என்று கருதிச் சென்ற ஈ. வெ. ரா, பட்ட பாட்டைப் பாருங்கள்!......

"இரண்டொரு நாள் பட்டினி; கையிலோ காசும் இல்லை; பசியோ தாங்க முடியவில்லை. இந்நிலையில் ஒரு சத்திரத்து வாயிலில் நுழைந்தார். இவர் 'பிராமணர்' அல்ல, என்று கண்டு கொண்ட காவலன் வெளியே தள்ளினன். அப்போது, உள்ளே இருந்து எச்சில் இலைகளை வெளியே கொண்டுவந்து எறிந்தனர். பார்த்தார் ராமசாமி; பாய்ந்தார் இலைகளின் மீது; கையைப் போட்டுச் சோற்றை வழித்தார்...!

சாமி, சிதம்பரனர், இதனை மனம் கலங்கி எழுதுகிறர்.

"அந்தோ! செல்வத்தில் நிலைத்து, சிறிதும் பசிப்பிணி அறியாமலிருந்த நமது ராமசாமியார், எச்சிலைக்கு ஏமாந்து நின்றதை நினைக்க இன்றும் நமது நெஞ்சம் கலங்குகிறதன்றே? ஒரு புறம் எவ்வளவு நெஞ்சுத் துணிவிருந்தால் கையில் ஒன்றரைப் பவுன் மோதிரமிருக்க 'இச்செயலில்' புகுந்திருக்க வேண்டும் என்று வியப்பும் உண்டாகின்றது; சிரிப்பும் வருகிறது!"

மொட்டையடித்து, மீசையையும் எடுத்துக்கொண்டு, காசியில் ஒரு மடத்தில், ஒரு வேளைச் சாப்பாட்டுக்காக பூஜைக்கு வில்வம்


ஆ. வ. மெய்கண்டார்

தமிழ்த்துறை, மாநிலக் கல்லூரி



## தமிழர் தலைவர்

அருள் பொலியும் திருமுகத்தான்
அன்பு நிறை நெஞ்சத்தான்
இருள் விலகப் பணிபுரியும்
இனியதவம் இயற்றுகின்றான்!

தமிழரெல்லாம் தலைநிமிர்ந்து
தன்மானம் மிக்கவராய்
வாழ்வதற்குக் காரணனாய்
வந்துதித்த பெருந்தலைவன்!

கண்மூடி வழக்கமெலாம்
மண்மூடிப் போவதற்கே
எண்ணிஎண்ணிச் செயலாற்றும்
இதயமுள்ள மாமனிதன்!

தீதுக்குக் காரணமாம்
தெய்வமத சாத்திரத்தை
வாதிட்டே யொழிக்கவந்த
வண்டமிழர் தலைவனிவன்!

பறித்துக் கொடுத்தும், விளக்குப் போட்டும் வேலை செய்தார்.

குளிர் மிகுந்த காசியில்-விடியற் காலத்திலும், சாயங்காலமும் கங்கையில் குளிக்க வேண்டுமென்றால் ஈ. வெ. ராவால் முடியக் கூடிய காரியமா?

ஒரு நாள், ஈ. வெ. ரா குளிக்காமல், பல் கூட விளக்காமல் வில்வம் பறிப்பதைக் கண்டு பிடித்து, சாமியார் 'சீட்டைக் கிழித்து விட்டார்.'

பிறகு கங்கைக்கரையில்சிரார்த்தம் செய்பவர்கள், பிண்டம் போடும் அரிசி, பழம் முதலியவைகளை விநியோகிப்பதை வாங்கி உண்பதற்காக நிற்கும் பிச்சைக்காரர்கள் குழுவில் சேர்ந்து 30-40 நாட்கள் சுற்றினர்.

ஈரோட்டில் அவர் குடும்பத்தார் ஊராருக்குக் கொடுத்த 'சதாவிருத்தியை (பிச்சையை) யெல்லாம் வெளியூரில் வசூல் செய்யும் வேலையில் இறங்கினர்...

"காசி மக்கள் வாழ்க்கையில் ஒழுக்க ஈனமும் விபசாரமும் மலிந்து கிடப்பதைக் கண்டார். தன்னுடன் பிச்சை எடுக்கும் ஆண், பெண் பிச்சைக்காரர்கள், பார்ப்பனப் பெண்கள் உட்பட மது அருந்துவதும், மாமிசம் சுட்டுத் தின்பதும், வெளிப்படையாக விபச்சாரம் செய்வதும் பார்க்க சகிக்காததாய் இருந்தது. அவருக்கு அவ்வூரிலே ஒரு வித வெறுப்புத் தோன்றிவிட்டது."

பிற்காலத்தில் சமுதாய சீர்திருத்தவாதியாக விளங்கி வரும் 'ஐயா' அவர்களை காசி அனுபவங்கள் புடம் போட்ட பகுத்தறிவு வாதியாக மாற்றி இருக்கக்கூடும்.

★★

பெரியார் அவர்களின் பொது வாழ்க்கையைப் பற்றி ஆய்வதற்கு முன்னுல், சென்னை மாகாணத்தின் 'ஆக்டிங்' கவர்னராக இருந்த சர்.கே. வி. ரெட்டிநாயுடு அவர்கள் 1928-லேயே, அவரைப் பற்றிக் கூறிய வாசகங்களை நினைவில் கொள்ளவேண்டும்.

"அவர் ஒரு உண்மையான சிங்கம்; சிங்கத்தின் இருதயத்தைப் பெற்றிருக்கிறுர்; வாழ்க்கையில் பயமென்பது இன்னதென்றே தெரியாது! அவசியம் நேர்ந்தால் எவ்விதத்தியாகமும் செய்யத் தயாராக இருக்கிறவர்"

சமுதாயச் சீர்திருத்தத்திலும், அரசியலிலும் ஈடுபட்டு, இப்படிப் பட்ட 'இருதய பலத்துடனேயே அவர் வேலை செய்தார்.

இளமையிலேயே எதையும் பகுத்துணரும் ஈ. வெ. ரா தான் பெற்ற அனுபவங்களுடன், சாதி, சமயம், சாத்திரம் முதலியவைகளிலுள்ள புரட்டுக்களைக் கடுமையாகக் கண்டிக்கும்—கருவூர் மருதையாப் பிள்ளை, பகுத்தறிவாளரும், பார்ப்பனீயத்தின் பரம விரோதியுமான கைவல்யம் என்னும் வேதாந்த நூலை நன்கு கற்ற கைவல்ய சாமியார் ஆகியோர் நட்பால் முழுச் சீர்திருத்தக் காரரானுர்.

ஈ. வெ.ரா அவர்கள், ஈரோட்டு ராமனுக விளங்கி ஈரோடு வியாபாரச் சங்கத்தலைவர், தென்னிந்திய வியாபாரச்சங்க அங்கத்தினர், ஈரோடு தாலுகா போர்டு பிரசிடெண்டு, ஈரோடு முனிசிபல் சேர்மன், பிளேக் கமிட்டி செக்ரடரி, உலக யுத்தத்தின்போது தாலுகா ஆனரரி ரெக்ரூடிங் ஆபீசர், காரனேஷன் கமிட்டி செக்ரடரி, தமிழ்நாடு காங்கிரசு கமிட்டி செயலர், தலைவர், காதிபோர்டு அமைப்பாளர் முதலிய 29க்கும் மேற்பட்ட உயர்ந்த பதவிகளை வகித்து, பதவியின் சுகத்தையும் நன்கு அனுபவித்திருக்கிறுர்.

இது தவிர 40-42 இல் 2வைஸ்ராய்கள், 2 கவர்னர்கள் இவரை அழைத்து 'மந்திரிசபை' அமைக்க இவரைக் கேட்டுக் கொண்டார்கள். அத்துடன் சேலம். சி. இராஜகோபாலாசாரியாரும் (ராஜாஜி) வேண்டினுர். விருப்பமின்மையால் மறுத்து விட்டார்.

காங்கிரசின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்ட போது பொது நிலையங்களில் வகித்துவந்த 29 பதவிகளையும் ராஜிநாமா செய்துவிட்டார்.

இந் நாட்களில்தான் பெரியாருக்கு 'ராவ் பகதூர்' பட்டம் கொடுக்க அரசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

—பெரியார் 'பட்டம்', 'பதவி' களை எவ்வளவு 'அற்பமாக' மதித்தார் என்பதை இந்நிகழ்ச்சிகள் உணர்த்தும்!



சாமி சிதம்பரனுர்

இதனை இக்கால அரசியல்வாதிகள் 'ஐயா' அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்து, இலட்சியத்திற்காகப் பணத்தை எப்படி 'துச்சமாக' மதித்தார் என்பதைக் காண்போம்.

அந்தக் காலத்திலேயே ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20000க்கு மேல் வரும் வியாபாரத்தை அடியோடு நிறுத்திவிட்டு காங்கிரசில் ஈடுபட்டு 'மெய்ம்மறந்து' உழைத்தார். காந்தியாரின் சீடராகி ஆடம்பரத்தை விட்டுக் குடும்பத்துடன் கதர் உடுத்தினார். காந்தியார் கோட்டுகளைப் பகிஷ்கரிக்கச் சொன்ன காலத்தில் குடும்பத்துக்கு வரவேண்டிய அரை லட்சம் — 50000 ரூபாய்— சொத்தை அப்படியே 'மனதார' இழந்தார். காந்தியார் மது தரும் மரங்களை வெட்ட வேண்டும் என்று குறிப்பிட்டபோது சேலம் தாதபட்டியில் தனக்குச் சொந்தமாக இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்.

ஈ. வெ. ரா 'தொழிலை' விட்டு விட்டு, ஊர் ஊராகச் சென்று 'கதர்ப் பிரச்சாரம்' செய்திருக்கிறார்!

ஈ வெ. ரா முதன் முதலாகச் சிறை சென்ற நிகழ்ச்சியாவது:

ஈரோட்டில் ஈ. வெ. ரா வீட்டில் காந்தியார் முதலியவர்கள் கூடின காலத்தில், கள்ளுக்கடை மறியல் செய்ய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. இம்முடிவுக்கு அடிப்படை ஈ வெ ராவின் முழு ஆதரவேயாகும்.

தமிழ் நாட்டிலேயே ஈரோட்டில் தான், மறியல் மும்முரம் மிகுதி. ஈ. வெ. ராவே தலைமை தாங்கி நடத்தினார். இதற்காகப் போடப்பட்டிருந்த 144 தடை உத்தரவை மீறி கைதாகி 'ஒரு மாதத் தண்டனை' பெற்றார்.

ஈ.வெ.ரா 'வைக்கம் வீரர் பெரியார்' என்று வாய் குளிர அழைக்கிறார்களல்லவா? அது பெரியாரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

"மலையாளத்தில் வைக்கம் என்ற ஊரிலுள்ள தெருவில் தாழ்த்தப்பட்டவர்கள் நடக்கக் கூடாது என்ற வெகு நாளைய கட்டுப்பாட்டை மீறி, சுயமரியாதை உணர்ச்சி கொண்டு சத்தியாகிரகம் துவக்கிய 19 பேர்கள் கைது செய்யப்பட்டனர். தலைவர் இல்லாத குறையால் போராட்டம் பிசு பிசுத்து விடும் போலிருந்தது.

சிறையிலிருந்து ஈ. வெ. ரா வுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. அவ்வமயம் பெரியார் மதுரை சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு 'வயிற்றுக் கடுப்பால்' துன்புற்ற வண்ணம் ஈரோட்டிலிருந்தார். கடிதத்தைக் கண்டவுடன், அஞ்சா நெஞ்சினராகிய ஈ. வெ. ரா தன் மனைவியாரிடம் தன் நோய் குணமாகி விட்டதென்று பொய் சொல்லிவிட்டு அன்றிரவே வைக்கம் புறப்பட்டு விட்டார். மறுநாள் இரண்டு மணிக்கு 'வைக்கம்' வந்தடைந்ததும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

சத்தியா கிரகம் தீவிர மடைந்தது; கைது செய்யப்பட்டு ஒரு மாதம் சிறையிலடைக்கப்பட்டார். பிறகு விடுதலை செய்யப்பட்டு 'பிரஷ்ட' உத்தரவு போடப்பட்டது. அதையும் மீறி 'ஆறுமாதக் கடுங்காவல்' தண்டனை பெற்றார். அதற்குப் பிறகு இவர் மனைவியார் தலைமை தாங்கி பெரும் கிளர்ச்சியை உண்டாக்கினார். இறுதியில் சத்தியா கிரகம் வென்றது. இதனால்தான், 'கோயில்' பிரவேசக் கிளர்ச்சி' ஏற்பட்டு திருவாங்

கூர் கோயில்கள் எல்லா தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் திறந்து விடப்பட்டது.

ஈ. வெ. ராவும் 'வைக்கம் வீரரா'னார்.

பெரியார் பிற்காலத்தில் பயங்கரமான 'காங்கிரசு எதிர்ப்பாளராகவும், பிராமண எதிர்ப்பாளராகவும் ஆனார், அல்லவா?

அதன் காரணம் எல்லாரும் தெரிந்த கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

சேலம் சேர்மா தேவியில் வ. வெ சு. ஐயர் அவர்களால் பொது மக்களிடமிருந்து பெற்ற பணத்திலிருந்து தமிழ் நாட்டுக் குருகுலம்' ஒன்று துவங்கப் பட்டது.

அதில் பிராமணர், பிராமணரல்லாதார் பேதம் பாராட்டப்பட்டது.

பிராமண ரல்லாதவர்களுக்கு தனி உணவு', 'தனி இடம்', தனி பிரார்த்தனை' என்ற பாகுபாடு காட்டப்பட்டது.

'இப்பிரிவினை தவறு; குருகுல நோக்கத்துக்கு மாறுபட்டது; தேசீய ஒற்றுமைக்கு ஏற்றதன்று. சமபந்தி உணவே அளிக்கப்பட வேண்டும்'' என்பது ஈ. வெ. ரா அவர்களின் கருத்து.

தகராறு பலமாக முற்றிவிட்டது!

மகாத்மா காந்தியே தலையிட்டார்! ''குரு குலத்தில் ''சாதிப் பிரிவினைக்கு இடம் தருதல் கூடாது; சமபந்தி உணவுதான் அளிக்க வேண்டும்'' என்று மகாத்மா கூறினார். அதனை வ.வெ.சு ஐயர் ஏற்கவில்லை.

''பிராமணப் பிள்ளைகளும், பிராமணரல்லாத பிள்ளைகளும் ஒன்றாக உட்கார்ந்து உணவருந்த தான் ஒருப்பட முடியாது! அப்படிச் செய்தால் குருகுலம் கெட்டு விடும்'' என்று ஐயர் கூறி விட்டார்.

—இதுதான் ஈ வெ ரா காங்கிரசையும், பிராமணர்களையும் தாக்குவதற்குச் சாதனமாக அமைந்தது!

இறுதியில் குருகுலம் மூடப் பட்டது.

பிராமணர் — பிராமணரல்லாதார் பேதம் வளர்ந்தது; பின்னால் 'ஆரியர் — திராவிடர்' என்றெல்லாம் 'பல' மாகப் பேசப்பட்டது.

ஈ. வெ. ரா காங்கிரசிலிருந்த காலத்திலேயே வகுப்புரிமைக்கும் சமுதாய உரிமைக்கும் பாடுபட்டு வந்தார். வகுப்பு எண்ணிக்கைக்குத் தக்கவாறு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்பதை ஆதரித்தார்.

வகுப்புவாரித் தீர்மானத்தை 1922-ல் திருப்பூரில் நடந்த மாகாண நாட்டில், ஈ. வெ. ரா. விடாப்பிடியுடன் பிரேரேபித்து, தீவிரமாக வாதிட்ட போது கோபமடைந்து, 'மநு தர்ம சாஸ்திரத்தையும், ராமாயணத்தையும்' கொளுத்த வேண்டும் என்றார்.

1925 இல் இதே தீர்மானம், காஞ்சிபுரம் மாநாட்டில் கொண்டு வந்த போது, தலைவராக இருந்த திரு. வி. க. கலியாணசுந்தர முதலியார் நிராகரித்தார். ஈ. வெ. ரா. ஆத்திரமடைந்து "காங்கிரசால் பிராமணரல்லாதார் நன்மையைப் பெற முடியாது; காங்கிரசை ஒழிப்பதே எனது வேலை!'' என்று கூறி விட்டு வெளியேறினார்.

—ஒரு பெரு கூட்டம் அவரைப் பின் தொடர்ந்தது.

'அரசியல் பார்ப்பனர்களை ஒரு போதும் நம்பாதீர்கள்' என்னும் தியாகராயர் பொன் மொழியின்

# பழந்தமிழ் பழகுக

கீழே சில பழந்தமிழ்ச்சொற்கள் உள. அவற்றிற்கு மும்மூன்று பொருள்களும் உள. ஒன்று சரி; பிற கற்பனை. சரியான பொருளைக் கண்டு பிடியுங்கள். தெரியாவிட்டால் 41ம் பக்கம் பாருங்கள்.

1. இழிதல்—அழிதல் — விழுதல் ஓடுதல்.
2. மண்ணுதல்—மண்ணுக்குதல் —அழகுபடுத்துதல் — மணத்தல்.
3. கஞவிய—ஆர்த்து முழங்கிய —பூத்துக்குலுங்கிய- சேர்த்து நடத்த.
4. ஞமலி—மயில்—கீரி—நாய்.
5. எழிலி—சேலை—மயில்-மேகம்
6. பதாடை — பதவி—செடி — பில்லக்கு.
7. குயிலுதல்—கூறுதல்— குடைதல்—குறித்தல்.
8. சாம்புதல்—தேய்தல் — வாடுதல்—ஆராய்தல்.

---

உண்மையினை உணர்ந்தார். இனி பார்ப்பனரல்லாதார் நன்மைக்கே உழைப்பதென உறுதி பூண்டார்.

—அது முதல் 'நாம்' சுய மரியாதை அடைந்தால்தான் அரசியல் உரிமை பெறத் தகுதி உடையவராவோம்; முதலில் நாம் சுய மரியாதை பெறவே முயற்சிக்கவேண்டும்'' என்று ஈ.வெ.ரா கூறிவந்தார்.

1925 ஆம் ஆண்டுவரை ஈ.வெ.ரா. உண்மையான காங்கிரசுக்காரராகவே இருந்தார்.

1926-நவம்பரில் சென்னை சட்டசபைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் பார்ப்பனரல்லாதார் கட்சி படுதோல்வியடைந்தது. தோல்வியடைந்த நீதிக் கட்சியினர் படுத்துவிட்டனர். ஈ.வெ.ரா சிறிதும் தளர்ச்சி அடையவில்லை.

இராமசாமியார் அளித்த ஊக்கம் ஒரு மாநாடாக உருவெடுத்தது. 1926 டிசம்பர் 25, 26 ஆம் நாட்களில் மதுரையில் மாகாண பார்ப்பனரல்லாதார் மாநாடு கூடிற்று.

மாநாட்டில் அளவு கடந்த ஊக்கம் தாண்டவமாடிற்று.

தலைவர்கள்; தொண்டர்கள்— அனைவரும் திரண்டிருந்தனர்.

எண்ணற்ற காங்கிரசுக்காரர்களும் இதில் கலந்து கொண்டனர்.

தமிழ் நாட்டுப் பழம் பெரும் தலைவர்கள் வ. உ. சிதம்பரம் பிள்ளை, சாத்தூர் சுப்பிரமணிய நாயனார், ஜியார்ஜ் ஜோசப் முதலியவர்களும் வந்திருந்தனர்.

இயக்கம் புத்துயிர் பெற்றது.

—பின்னர் நாடெங்கும் பல பார்ப்பனரல்லாதார் மாநாடுகள் நடைபெற்றன.

1927-இல் காந்தியார் வர்ணாஸ்ரம தர்மத்தை ஆதரித்துப் பேசிய பேச்சு ஒன்று வெளி வந்தது. அப்பொழுது ஈ. வெ ரா. காந்தியாரை—அவர் ஓய்வுக்காக பெங்களூரில் மகாராஜா விருந்தினராகத் தங்கி இருந்தபோது

கண்டு பேசினார். அதைப் பற்றி அவர் எழுதியுமிருக்கிறார்.

''முக்கியமான மூன்று விஷயங்களைப் பற்றித்தான் மகாத்மாவிடம் நாமும், நமது நண்பரான திரு. எஸ். இராமநாதனும் (முன்னாள் விளம்பர அமைச்சர்) சம்பாஷித்தோம்.

அதாவது, ஒன்று 'காங்கிரசு' என்பதை ஒழிக்க வேண்டியது; இரண்டாவது, 'இந்து மதம்' என்பதை ஒழிக்க வேண்டியது; மூன்றாவது, 'பிராமண ஆதிக்கத்தை' ஒழிக்க வேண்டியது என்பதாகும்.

இம் மூன்று விஷயங்களைப் பற்றியும் மகாத்மா சொன்ன சமாதானங்கள் எம்முடைய அபிப்ராயத்தை மாற்றக் கூடியதாக இல்லை என்றும் சொல்லி, மகாத்மாவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு வந்து விட்டோம்!''

1927-இல் இந்தியாவுக்கு வந்த சைமன் கமிஷனை—ஏனைய கட்சிகளெல்லாம் வரவேற்பதா, வேண்டாமா என்று குழம்பிக் கொண்டிருந்தபோது—வரவேற்க வேண்டுமென்று துணிந்து கூறியவர் பெரியார்தான்!

தீண்டாமை, ஜாதி ஒழிப்பு, மதக் குறிகளைவிட்டு விடுதல், ஜாதியைக் குறிக்கும் பட்டப் பெயர்களை நீக்குதல், புரோகிதத்தை அடியோடு நீக்குதல்; பூஜை செய்யத் தரகர்கள் கூடாது. கடவுள் வணக்கத்துக்கு ஒரு காசு கூடச் செலவிடக் கூடாது; பெண்களுக்கு உரிமை தருவது ஆகிய விஷயங்களுக்காக இடைவிடாமல் அவர் பிரசாரம் செய்து வந்தார்.

இதற்குப் பிறகுதான் ஈ. வெ. ராவை நாஸ்திகர், மதத் துரோகி என்றும், தேசத் துரோகி என்றும் மாற்றார் வசை பாடினர்.

அவரும் தான் 'ஒரு ஆஸ்திகன்' என்று ஒருபோதும் கூறிக் கொள்ளவில்லை!

பெரியாரைச் 'சரிகட்ட' பல மதவாதிகள் முயற்சி செய்தனர்.

1930-இல் தன்னை வந்து காணுமாறு, சிருங்கேரி மடத்துச் சங்கராச்சாரியார் 'திருமுகம்' விடுத்தார்.

பல 'காரணங்களால்' பெரியார் சந்திக்கவில்லை.

அதே ஆண்டில் காந்தியார் உப்புப் போராட்டம் தொடங்கிய போது ஈ. வெ. ரா. அதனை ஆதரிக்காமல் கண்டித்ததற்காக காங்கிரசார் அவரை, சுட்டு விடுவதாகவும், வெட்டி விடுவதாகவும் மிரட்டினர்.

மிரட்டல்களுக்கு அஞ்சும் சுபாவம் ஈ. வெ. ராவுக்கு எந்த நாளிலும் இருந்ததில்லை.

'இன்றைய ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்?' என்று எழுதியதற்காக, ஈ வெ. ரா, 6 மாதத் தண்டனை கொடுக்கப்பட்டு சிறையில் வைக்கப்பட்டார்.

ஈ. வெ. ரா நீதி மன்றங்களில், எப்பொழுதும் எதிர் வழக்காடுவதில்லை!

காங்கிரசிலிருந்து பெரியார் வெளியேறிய பிறகு, இவரும், இவரது அரசியல் வைரியான இராஜகோபாலாச்சாரியாரும் கோவை சிறையில் ஒன்றாகச் சில காலம் இருந்தார்கள்.

கட்சி வேற்றுமையால் நெடு நாள் பிரிந்திருந்த இரு நண்பர்களும் இப்பொழுது சிறைத் தோழர்களாயினர். இருவரும் கலந்து வேலை செய்ய ஒரு 'பொது வேலைத் திட்டம்' போட்டனர். அது காந்தியாருக்கு அனுப்பப் பட்டது—அதில் எண்ணிக்கைக்

குத் தக்கபடி அரசியல் பிரதி நிதித்துவமும் உத்தியோகமும் கொடுக்கப்பட வேண்டும் என்று இருந்ததால் காந்தியார் நிரா கரித்து விட்டார் என்று பின்னால் ஆச்சாரியாரால் (இராஜாஜியால்) அறிவிக்கப்பட்டது.

காந்தியார் ஆதரித்திருந்தால் தமிழகத்தின் அரசியல் வேறுவித மாக இருந்திருக்குமோ என்ன வோ?

பெரியார் 'சிறைப் பறவையாக' பலமுறை இருந்திருக்கிறார்.

சிறையிலிருந்து வெளி வந்ததும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற சமதர்மவாதிகள் ஈரோடு வந்து பெரியாரைக் கண்டு சென்றனர்.

ஈ. வெ. ராவின் ஆற்றலை உணர்ந்த பொப்பிலி அரசர் இவரை 'ஜஸ்டிஸ் கட்சியின்' முதன்மையாளராக ஆக்கினார்.

1934-இல் நீதிக் கட்சி மீண்டும் படுதோல்வி அடைந்தபோது மனம் தளராமல் ஊக்கத்துடன் வேலை செய்தார்.

ஈ. வெ. ராவின் வெற்றியின் இரகசியமே இந்த இடத்தில்தான் ஒளிந்து கொண்டிருக்கிறது. தோல்வியை வெற்றிக்குரிய சாதனமாக ஆக்கிக் கொள்ளும் 'ரசவாதி' அவர்!

1937-இல் இராஜாஜி மந்திரி சபை அமைத்தார். காங்கிரசின் விரோதியான ஈ. வெ. ரா காங் கிரசைக் 'குறி' பார்த்துக் கொண் டார்.

அதற்கேற்றாற்போல் இராஜாஜி இந்தியைக் கட்டாயப் பாடமாக் கினார்.

1926] முதலேயே இந்தியை எதிர்த்து வந்த ஈ. வெ. ரா. போர்க் கொடி உயர்த்தினார்.

இந்திப் போரில் பெரியார் சிறைப்படுத்தப்பட்டார். அவ ருடன் 1500 பேர் சிறை சென்ற னர். சுமார் 3 ஆண்டுக் காலத் தண்டனை எனினும் 167 நாட்க ளுக்கு மேல் துன்பமுற்று 1939 மே 22-இல் விடுதலை ஆனார்.

கட்டாய இந்தியை எடுக்காம லேயே அரசு இவரை விடுதலை செய்தது.

சிறைக்குப் போகுமுன் 190 பவுண்டுஎடை இருந்தார். விடுதலை ஆனதும் 166 பவுண்டாக ஆனார். ஆம்; 1938 லேயே, ஈ. வெ. ரா. அவர்கள் 24 பவுண்டு சதை யைச் செந்தமிழுக்களித்து, 'தமிழர் தலைவர்' ஆனார்.

ஈ. வெ. ராவை, இப்பொழுது 'பெரியார்' என்று பெருமதிப் புடன் அழைக்கிறோமல்லவா!

அந்தப் பட்டம் கிடைத்த வர லாறு இது.

13-11-37 இல் மறைமலை அடி களார் மகளார் திருமதி நீலாம் பிகை அம்மையார் தலைமையில், சென்னையில் தமிழ்நாட்டுப் பெண் கள் மாநாடு நடைபெற்றபோது தான், ஈ. வெ. ராவின் பெயருக்கு முன்னால் 'பெரியார்' என்ற அடைமொழி கொடுத்து அழைக்க முடிவு செய்யப்பட்டது.

இதே ஆண்டில்தான் பெரியார் 'தமிழ்நாடு தமிழருக்கே!' என முழங்கினார்.

★★

பெரியார் இவ்வளவு பெருமை யையும், புகழையும் ஆண்டவ னுடைய அருளினாலோ, அரசியல் தந்திரங்களாலோ, பதவியின் அதிகாரத்தாலோ, செல்வத்தின் வலிமையாலோ, நிச்சயமாகப் பெறவில்லை. தான் கொண்ட, தத்துவ வலிமையின் காரணமா கவே உலகத் தலைவராகிறார் என்

யதை இந்நூலிலிருந்து உணரலாம்.

பெரியார் பிறப்பிலேயே மதப் புரட்சிக்காரராகப் பிறந்தார்; சமூகப் புரட்சிக்காரராகப் பிறந்தார்; சமதர்ம வாதியாகப் பிறந்தார்.

திரு. காந்தியாரைப் போன்றும் ஆசாரியார் (ராஜாஜி) போன்றும் மத வேஷத்தாலோ, 'கடவுள்' பெயரைச் சொல்லியோ, செல்வாக்குப் பெற்றுர் என்று சொல்ல முடியாது — இது இவருடைய 'தனித் தன்மையைக்' காட்டுகிறது.

பெரியார் எதைச் சொன்னுரோ அதைச் செய்தார்; எதைச் செய்வாரோ அதைச் சொன்னுர்.

அஞ்சாமை, துணிவு என்னும் சொற்களின் மாற்றுப் பெயரே 'பெரியார்' ஆகும்.

பெரியார் பொதுத் தொண்டில் தீவிரமாக ஈடுபட்டு சுற்றுப் பயணங்கள் செய்து பிரச்சாரம் செய்து வந்த காலத்தில், வீட்டிலுள்ளவர்களின் உடல் நலமின்மைக்காகவோ, சாவுக்காகவோ காத்திருப்பதில்லை.

இதற்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம்.

"இவர்கள் குடும்பத்திற்கு ஒரே பையன். அவன் க்ஷய ரோகத்தால் இறந்து விட்டான். அவன் இறக்கும்போது ஈ. வெ. ரா. சுற்றுப் பயணத்தில் இருந்தார். இவரது மாமனுர், நோயால் ஈரோட்டில் இவர் வீட்டில் இறக்கும் போது, இவர் சென்னையில் இருந்தார். இவர் தமையனுர் மனைவி இறந்த அன்றே வெளியூருக்குப் புறப்பட்டு விட்டார். இவரது தாயார் இறக்கும்போது ஒரு மணிக்கு முன் சுற்றுப் பிரயாணம் சென்றுவிட்டார். அது போலவே, மனைவி நாகம்மையார் சாவுப் படுக்கையில் இருக்கும் போது திருப்பத்தூர் மாநாட்டுக்

# பழந்தமிழ்

## பழகுக

## விடை

1. இழிதல்—விழுதல்

"இழும் என இழிதரும் அருவிப் பழமுதிர்சோலை மகிழ்வோனே"

—திருமுருகாற்றுப் படை

2. மண்ணுதல்—அழகுபடுத்துதல்

"மணங்கமழ் மாதரை மண்ணி அன்ன......பாலை"

—பொருநர் ஆற்றுப்படை

3. கஞவிய—பூத்துகுலுங்கிய

"நறும்போது கஞலிய ...குறும்பொறை நன்னாடு"

—சிறுபாணாற்றுப்படை

4. ஏமலி—நாய்

"மறைகிளை கோழியொடு ஏமலி துன்னாது"

—பெரும்பாணாற்றுப்படை

5. எழிலி—மேகம்

"எழிலி பெரும் பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

—முல்லைப்பாட்டு

6. பதாகை—கொடி

"பல்வேறு குழூஉக் கொடிப் பதாகை நிலைஇ"

—மதுரைக் காஞ்சி

7. குயிலுதல்—குடைதல்

"குன்று குயின்றன்ன செங்கு நிலைவாசல்"

8. சாம்புதல்—வாடுதல்

"நீர்ச் செருவின் நீள் நெய்தல் பூச்சாம்பும் புலத்து"

—பட்டினப்பாலை

குச் சென்றுவிட்டார். வந்ததும் மனைவி இறந்து போனார். இறந்த அன்றே திருச்சிக்குச் சென்று அங்கு ஒரு 144-ஐ மீறி கைது செய்யப்பட்டு விட்டார்.

பெரியார் எந்தெந்தச் செயல்கள் நன்மையாகக் காணப்படுகின்றனவோ, அச் செயல்களை நடத்துவதற்குப் பின் வாங்க மாட்டார்.

"இவரது மனைவியார் இறந்தவுடன் யாரையும் அழக் கூடாது என்று தடுத்துவிட்டார். அவர் தனது கைத்தடியுடன் வாயிற்படியில் நின்று கொண்டார். துக்கத்திற்கு வரும் பெண்களிடம் 'அழுவதாயிருந்தால் உள்ளே செல்ல வேண்டாம்; இப்படியே திரும்புங்கள்'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

பிணம் பெட்டியில் வைக்கப்பட்டது. வண்டியில் ஏற்றி மாடு கட்டி ஓட்டப் பட்டது. சுடுகாட்டில் கொளுத்தப்பட்டது.

பெட்டியில் வைத்தல் முசுலிம் வழக்கம்; வண்டியிற் கொண்டு செல்லுதல் கிறித்துவ மதத்திற்கு உடன்பாடு. சுடுவது இந்து மதக் கொள்கை - இம் மூன்றும் அன்னை நாகம்மையார் இறந்தபின் பெரியார் நடத்திக் காட்டிய நன்முறையாகும்.

— இந் நிகழ்ச்சி இவருடைய சொல்லுக்கும், செயலுக்கும் ஒரு சான்றாகும்.

"முகதாட்சண்யம் இவருக்கு அதிகம். பண விஷயத்தில் மட்டும் பெரியாருடன் ஜாக்கிரதையாக நடந்து கொண்டால் மற்றக் காரியங்களில் எவ்விதமான பெரிய குற்றத்தையும் கூட மன்னித்து விடுவார். நீண்ட காலப் பகைவர்களிடமும் கூட வெகு விரைவில் தாமாகவே வலிந்து ஒட்டிக் கொண்டு விடுவார்.

பெரியார் எந்தப் பொருளையும் அதனுடைய பயன் கருதியே போற்றுவார். மொழி விஷயத்திலும் இது பொருந்தும். இதை அவரே கூறுகிறார்:

"தமிழ்மொழி மிகப் பழைய பழமொழி என்பதற்காகவோ, அகஸ்தியரால் உண்டாக்கப்பட்ட மொழி என்பதற்காகவோ எனக்கு அதன் மீது பற்றில்லை. வஸ்துவுக்காக என்று எனக்கு ஒன்றினிடத்திலும் பற்று கிடையாது; அது மூடப்பற்று; மூட பக்தியாகும்."

பெரியாரின் பேச்சாற்றலைப் பற்றி திரு. வி. க. கூறுகிறார்:

"நாயக்கர் ஆயிரக் கணக்கான மக்கள் கூடும் கூட்டத்தில் இடையறாது காற்றும், மழையும் கலந்து வீசுவதுபோல், நான்கு மணி நேரம், ஐந்து மணி நேரம் பேசுவார். ஏழை மக்களுக்கு உணர்ச்சி உண்டாகுமாறு அவரைப்போல் பேசுபவர் தமிழ் நாட்டில் அரியர் என்றே கூறலாம்''

தனக்குத் தெரியாத செய்திகளில் இவர் தலையிடுவதேஇல்லை.

இவர் பேச்சில் அடிக்கடி பழமொழிகளும் உபமானங்களும் கலந்துவரும்.

"தோட்டத்தில் பகுதிகிணறு," "தூங்குகிறவன் தொடையில் கயிறு திரிப்பதுபோல்", "வௌவால் வீட்டிற்கு உறவு முறையார் வந்தால் ஆளுக்கொரு கிளையில் தானே தொங்க வேண்டும்," "காய்த்த மரத்துக்குத்தானே கல்லடி விழும்'', பட்டுச் சீலையை இரவல் கொடுத்து மனையைத் தூக்கிக் கொண்டே திரிவதா" பூசனிக்காய் அளவு முத்தை எதில் தொங்க வைப்பது'' முதலியவைகள் அவர் உபயோகிக்கும் பழமொழிகளிற் சில.

விவாதத்தில் யாரும் இவரை வெல்ல முடியாது.

"அடுக்கடுக்காகக் கேள்விகளைப் போடுவார். சொற்களின் பொருளை விளக்க வேண்டுவார். எவராவது அவரிடம் சொல் வழங்கிடும் போது அவர் கேள்விகள் திகைப்பை அளிக்கும். பழக்கத்

தில் வழங்கும் சொற்களுக்கும் "அதற்கென்ன அர்த்தம்" "அப்படி என்றால் என்ன?", "கர்மபலன் என்றால் என்ன?" "நரகம் என்றால் யாருடைய நரகம்?" "எல்லோருக்கும் ஒரு நரகந்தானா?" "தேச பக்தன் என்றால் யார்?" "கடவுள் என்றால் எந்தக் கடவுள்?" "கடவுள் என்னும் சொல்லுக்குப் பொருளென்ன?" என்று கேட்பார். எதிரிகள் கேள்வி கேட்டால் அவர்கள் சொற்களைக் கொண்டே மடக்கி விடுவார்.—இவ்விதம் வாதமிடும் தன்மை, தத்துவ ஞானி சாக்ரடீசுக்கே இயற்கையில் அமைந்திருந்தது.

சில சமயங்களில் விதண்டாவாதமும் செய்வார்.

கல்கி இதற்கு ஒரு உதாரணம் கூறுகிறார்:

"ஸ்ரீமான் நாயக்கர் சட்டசபை பிரவேசத்துக்கு விரோதமாக பல பிரசங்கங்கள் புரிந்தார். அப்போது அவர் கூறிய வாதங்களில் ஒன்று, சட்டசபைப் பிரவேசத்தினால் வீண் பணச் செலவு நேரும் என்பது."

"ஒரு ஜில்லாவில் சுமார் 30000 வாக்காளர்கள் இருப்பார்கள். அபேட்சகராக நிற்பவர் இந்த 30000 பேருக்கு 30000 கார்டாவது போட வேண்டும். சர்க்கார் தபால் இலாகாவுக்கு லாபம் இத்துடன் போகாது. இதே அபேட்சகர் ஒரு வதந்தியைக் கிளப்பி விடுவார்.' நான் செத்துப் போகவில்லை. உயிருடன் தான் இருக்கிறேன்' என்று மறுபடியும் 30000 கார்டு போட வேண்டும்."

"—நாயக்கரின் இந்த வாதத்தில் அர்த்தமே இல்லை என்று சொல்ல வேண்டுவதில்லை. அதுவும் எழுத்தில் பார்க்கும்போது வெறும் 'குதர்க்கமாகவே' காணப்படுகிறது. ஆனால் அப்போது நானும் இன்னும் 4000 ஜனங்களும் ஒவ்வொரு வாக்கியத்துக்கு ஒருமுறை கொல்லென்று சிரித்து மகிழ்ந்தோம்."

பெரியாரின் எழுத்தாற்றலைப் பற்றி கே. வி. ரெட்டி நாயுடு கூறுகிறார்.

"பழைய காலத்து வீரர்கள் தங்கள் ஆயுதத்தை உபயோகித்தது போல, நாயக்கர் தனது பேனாவை எங்கும் பயமின்றி செலுத்துவார்".

இவர் எதைப் பற்றியும் அஞ்சாமல் எழுதுவார்.

இவருக்கு இலக்கணம் தெரியாது. எழுதுவதில் எழுத்துப் பிழைகள் மலிந்திருக்கும் சொற்பிழைகள் நிறைந்திருக்கும்...ஒரு வாக்கியம் 4 முழம், 5 முழம் நீண்டிருக்கும்.

இவர் எழுத்தில் 'மொழிவளம்' இல்லாவிட்டாலும் 'பொருள் வளம்' உண்டு.

தன் கருத்துக்கு மாறான பொருள்படாமலிருக்க வேண்டும் என்பதற்காகவே பல சொற்களைப் புகுத்தி எழுதுவார். "அதற்காகவேதான்", "மற்றப்படி", "அதுவும் அல்லாமல்", "அதனோடும் கூட", "என்றுதான் சொல்லுகிறோம்" என்பன போன்ற சொற்களை மிகுதியாகப் புகுத்துவார்.

பெரியாருக்கு 'சித்திரபுத்திரன்' என்ற புனைபெயரும் உண்டு.

பெரியார் தன்னைப் பின்பற்ற முட்டாள்கள்தான் தேவை என்று சொல்வதாகச் சிலர் கூறுகிறார்களல்லவா?

அதற்கான விளக்கத்தை இந்நூலில், 'ஐயா' அவர்களே எழுதிய 'என்னைப்பற்றி' என்னும் 'அருமையான' 'கட்டுரையி'லிருந்து படித்துணரலாம்.

பெரியார் கூறுகிறார்:

"என்னைப் பொறுத்த வரையில் என்னைப் பின்பற்றி நடந்து வருபவர்கள் புத்திசாலிகளாக இருக்க வேண்டும் என்ற கவலை எனக்கு ஒரு சிறிதும் கிடையாது...

"யாராவது ஒருத்தன் தான் நடத்தக்கூடியவனாக இருக்க முடியுமே தவிர, எல்லாரும் தலைவர்களாக இருக்க முடியாது. மற்றவர்கள் தலைவர்களிட்ட கட்டளைப்படி நடக்க வேண்டியவர்கள்தான்."

"நீங்கள் இந்த இயக்கத்தில் உள்ள வரை உங்கள் சொந்த பகுத்தறிவை மட்டுமல்ல, உங்கள் மனச்சாட்சி என்பதைக் கூட நீங்கள் கொஞ்சம் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டியதுதான்"

"ஒரு எஜமான் வேலைக்காரனைப் பார்த்து 'அந்தப் பெட்டியைக் கொஞ்சம் எடப்பா" என்று கூறினால், என் மனச்சாட்சி அதற்கு அனுமதிக்கவில்லையே என்று கூறினால், அது முறையாகுமா? ஒரு டிஸ்டிரிக் சூபரண்டெண்டு 'சுடு' என்று போலீஸ்காரனுக்கு உத்தரவு போட, அவன் 'என் மனச்சாட்சி இடங்கொடுக்கவில்லையே' என்று கூறினால் அந்த சூப்ரெண்டு கதி என்னவது? 'அந்த ஆட்டை வெட்டுடா' என்று எஜமான் உத்திரவிடும்போது" அய்யோ என்மனச்சாட்சி மாட்டேனென்கிறதே; நான் என்ன செய்யட்டும் என்று கூறினால், 'ஏண்டா மடப்பயலே! முன்னடியே இது உனக்கு தெரியாமற் போனதேண்டா? என்று கேட்பானா? இல்லையா?

ஆகவே, மனச்சாட்சியோ, சொந்தப் பகுத்தறிவோ கழகக் கொள்கையை ஒப்புக் கொள்ள மறுக்குமானால் உடனே விலகிக் கொள்வதுதான் முறை.

பெரியார் தன் கட்சியில் சேருமுன் சிந்தித்துச் சேர முழுவாய்ப் பளிப்பார்.

பெரியார் சர்வாதிகாரியா?

பெரியார் பதில் தருகிறார்.

"இது ஓரளவு சர்வதிகாரம் தான் என்பதை ஒப்புக் கொள்கிறேன். நீங்கள் சிந்திக்க வேண்டும். இந்தச் சர்வதிகாரம் எதற்குப் பயன்படுகிறதென்று? என்னுடைய சர்வதிகாரத்தைக் கழக லட்சியத்தின் வெற்றிக்காக, பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறேனே ஒழிய, கடுகளவாவது எனது சொந்தப் பெருமைக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டுகிறேன்."

இவைகளில், ஐயா அவர்கள், தன்னுடைய வாதங்களை நியாயப் படுத்துகிற நேர்த்தியைக் காணலாம்.

பெரியார் தன்னை ஜனநாயகவாதி என்று எக்காலத்திலும் தம் பட்டம்' அடித்துக் கொண்டதில்லை.

பெரியார் கொள்கை இல்லாதவரா? அடிக்கடி கட்சி மாறக்கூடியவரா?

இதற்கு சாமிசிதம்பரனார் இந்நூலின் முன்னுரையில் அருமையான விளக்கம் தருகிறார்.

"இவரைப்பற்றி பகைவர்கள்" கொள்கை இல்லாதவர்; கொள்கையை விட்டுக் கொடுப்பவர்; கட்சியைக் காட்டிக் கொடுப்பவர் என்றெல்லாம் பழி கூறுவர். இப்பழி ஆதாரமற்ற பொருமைப் பேச்சு; இவருடைய பொதுஜன செல்வாக்கைக் குறைக்கும் கெடு நினைப்புடன் கூறும் கூற்று. இவர் கட்சி மாறி இருப்பது உண்மை. காங்கிரசிலிருந்து மாறினார். ஏன்? அதன் போக்குத் தன் கொள்கைக்கு மாறாகவிருந்தது. தன் கொள்கைக்கும் காங்கிரசைத் திருப்ப முயன்றார். முடியவில்லை. அதனால் அதைவிட்டு விலகினார். இதுவே இவருடைய கொள்கையில், இவருக்குள்ள உறுதியான பிடிப்பைக் காட்டுவதாகும்."

★★

பெரியார் சுயமரியாதை இயக்கங்களின் தத்துவத்தை விளக்க மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் 1929 லேயே சுற்றுப் பயணம் செய்திருக்கிறார். அங்கெல்லாம் பெரும் சிறப்புடன் வரவேற்கப்பட்டார்.

1932-இல் மேலைநாடுகளான ஈஜிப்ட், கிரீஸ், துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுக்கல் முதலிய நாடுகளில் ஓராண்டுக் காலம் சுற்றுப்பயணம் செய்தார்.

சமதர்ம ஆட்சி நடைபெறும் ரஷ்யாவில், ஈ. வெ. ரா நீண்ட நாட்கள் தங்கினார். சென்ற நாடுகளிலெல்லாம் அரசாங்கத்தாலும், பொதுமக்களாலும், தொழிலாளர்களாலும் நன்கு வரவேற்கப்பட்டார்.

20.6.1932 இல், பெரியார், இங்கிலாந்தில் 'மேக்ஸ்பரோலேக் பார்க்கில் 50,000 தொழிலாளர்கள் கலந்துகொண்ட ஒரு பொதுக் கூட்டத்தில், தொழிலாளர் தலைவர் தோழர் லான்ஸ் பரியுடன் பேசினார்.

அங்கு பேசிய பெரியாரின் பேச்சு அவரது துணிவுக்கும், பேச்சு எளிமைக்கும், நயத்துக்கும் சான்று பகரக்கூடியது.

"இந்தியர்களாகிய எங்களை நீங்கள் ஒரு பரிகசிக்கத்தக்க சமூகமாகக் கருதலாம். ஆனால் நாங்கள் பிரிட்டிஷ் தொழிற்கட்சியை மிக மிகப் பரிகசிக்கத்தக்க விஷயமாகக் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசாங்கத்தில் 10 மணி நேர வேலைக்கு 8 அணா கூலி கொடுத்து இந்தியர்களிடம் வேலை வாங்கப்படுகிறது. சுமார் 40,000 பெண்கள் தினம் 5 அணா கூலிக்கு பூமிக்குள் வேலை செய்து கொண்




திருப்பூவல்லி

வணங்கத் தலைவைத்து
வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீரடியார்
கூட்டமும்வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை
யம்பலத்தே ஆடுகின்ற
குணங்கூறப் பாடி நாம்
பூவல்லி கொய்யாமோ!

பாலும் அமுதமும்
தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங்
கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார்
நன்னெறியாம் அந்நெறியே
போலும் புகழ்பாடிப்
பூவல்லி கொய்யாமோ!

—திருவாசகம்.

அடுத்த இதழில்

**வ. ரா.**

**(வ. ராமசாமி ஐயங்கார்)**

எழுதிய

**மகா கவி பாரதியார்.**

---

டிருக்கிறார்கள். இந்தக் கொடுமையையும் ஆபாசத்தையும் நிறுத்த தொழிற்கட்சி அரசாங்கம் என்ன செய்தது?

ஆதலால் யார்க்ஷைர் தொழிலாளர்களே! நீங்கள் இந்தப் போலிக் கட்சிகளையும், கொள்கைகளையும் நம்பாமல், மனிதசமூக விடுதலைக்கும், சுதந்தரத்துக்கும், சமத்துவத்துக்கும் உண்மையாகவே போராடுவதற்காக உலகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை எதிர்நோக்கிக் கொண்டிருங்கள்.

★★

இந்நூற்றுண்டின் மிகப்பெரிய மனிதரான ஐயா அவர்களைப் பற்றிய ஏராளமான உண்மைத் தகவல்களை அள்ளி அள்ளி வழங்குகிறது. இந்நூல். ஐயா அவர்களைப் பற்றி பரவலாக எதிரிகள் கிளப்பிவிடும் ஐயங்களையும் அகற்றுகிறது இந்நூல்.

சாமி சிதம்பரனுருக்கு 'மெய் கண்டான்' என்னும் புனை பெயருமுண்டு!

இந்நூலுக்கு அக்காலத்தின் 1938 மிகப் பெரிய மனிதர்களான ஆர். கே. சண்முகம் செட்டியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் சிறப்புரைகள் அளித்துள்ளனர்.

"தமிழர் தலைவர்" ஐயா அவர்களின் வாழ்க்கையை 1939வரையிலுமே சித்திரிக்கிறது.

இந்நூலாசிரியர் சிதம்பரனுர் இந்நூலின் முன்னுரையில் "பெரியார் அவர்களே தமது வாழ்க்கை வரலாற்றை எழுதி இருப்பார்களாயின் அது மிகமிக நன்ருக இருக்கும். பல உண்மை நிகழ்ச்சிகளையும் விடாமல் கூறுவதாகவும்இருக்கும்." என்று தன் ஆசையை மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

பெரியார் அவர்களுடன் நெருங்கிப் பழகியவர்கள் ஆசை மட்டுமல்ல அது. தமிழர் ஒவ்வொருவரின் ஆசையும் அதுதான்!

இத்துறையில் ஐயா அவர்களுடைய பிரதம சீடர்கள், இனியேனும், தாமதமற்ற வகையில் ஆர்வம் காட்டவேண்டும்.

நூலாசிரியர் சாமி சிதம்பரனுர் நூலின் இறுதியில் கூறுகிறார்.

"உலகத்தில் ஒரே ஒரு சாக்ரடீஸ்; ஒரே ஒரு புத்தர்; ஒரே ஒரு மார்ட்டின்லூதர்; ஒரே ஒரு அமானுல்லா; ஒரே ஒரு கமால் பாட்சா ஒரே ஒரு பர்னுட்ஷா; ஒரே ஒரு ராமசாமிப் பெரியார்தான் தோன்றுவார்கள்; தோன்ற முடியும்"

இது உண்மை; 'வெறும்' புகழ்ச்சி இல்லை!

---


கிடைக்கும் இடம் :

**"தமிழர் தலைவர்"**

(பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு)

விடுதலை, சென்னை-7

விலை ரூபாய் 5.

*With the best compliments of:*

Grams: "LIONPIPE"

Phone: Office: 85589, 810389; Factory: 441099

# Madras Asbestos Pipe Company

*Manufacturers of:*

LION BRAND ASBESTOS RAINWATER PIPES

and

FITTINGS

As per I. S. S. 1626—1960.


*2/142, Mount Road,*

**MADRAS-6.**

*Factory:*

**PORUR, MADRAS - 16.**

# ஏழை வண்டி



மனிதனை மனிதன் இழுக்கிறான்—நல்ல
மாட்டைப் போலே உழைக்கிறான்
மணமகன் போலே மனிதரும்—அதன்
மேலே ஏறிச் செல்கிறார்.

ஏழை வண்டி இழுக்கவே—நல்ல
கோழை யென்றே நினைக்கிறார்
ஏழையைக் கண்டால் மோழையும்—பாயும்
என்பது எல்லாம் சரிதானோ?

நிலத்தில் நீரை வடிக்கிறான்—நாளும்
நிலையில் லாமல் துடிக்கிறான்.
பலத்தைக் கொண்டே இழுக்கிறான்—பாழும்
பணத்திற் காக உழைக்கிறான்.

காசுக் காக மாடானான்—மேலே
கருணை செலுத்த மறுக்கிறார்
நாசுக் காகப் பேசியே—அதில்
நான்கு பணத்தைக் குறைக்கிறார்

உயர்வு தாழ்வு நமக்கில்லை
உலகின் மக்கள் நாமெல்லாம்
உயர்வை உலகில் பெறவேண்டின்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்.

மனிதனை மனிதன் இழுத்துத்தான்—இந்த
மாநி லத்தில் பிழைக்கணுமோ
புதுமை வண்டிகள் இருக்கையிலே—இந்தப்
புன்மை தொடர்ந்து நடக்கணுமோ?

குழ. கதிரேசன்

# அதே கண்கள்

மணலெடுத்து வீடுகட்டி விளையாடும் பருவம்
மக்களுக்குள் தாழ்வேற்றம் தெரியாத காலம்
துணையாக விளையாடச் சிறுபெண்ணாள் வந்தாள்
தொட்டுவிளை யாடிடுவோம் வேற்றுமையே இல்லை
சிணுங்கிடுவாள், சீறிடுவாள், கலகலத்த பேச்சில்
சிரித்திடுவாள், பதில்பேசாள், மிகக்குறும்புக் காரி
மணிமணியாய் திறக்கின்ற கருவிழிகள் தம்மில்
மல்கிவரும் குறும்பினையே முதன்முதலில் கண்டேன்!

தெருவினிலே என்னோடு விளையாடி வந்த
தேனொத்த பெண்ணாளின் உடல்தேடி வந்து
பருவத்தின் சாயலெல்லாம் படர்ந்தோடிப் பாய
‘பாட்டென’வே உள்ளத்தைக் கொள்ளைகொள்ள ஆனாள்
விரும்பியதைப் பெறத்துடிக்கும் இளம்பருவந் தன்னில்
விளையாட்டுத் தோழியெனில் கேட்டிடவோ வேண்டும்
கருத்தழிக்கும் மிகப்பெருத்த நீள்விழிகள் தம்மில்
காதல்வெறிப் போதையினை அந்நாளில் கண்டேன்!

காதலிலே வெற்றிக்கு வழிகண்டு விட்டேன்
கருத்தழித்த பெண்ணாளே மனைவியென வந்தாள்
ஏதொன்றும் துன்பமின்றி எங்களுடை வாழ்க்கை
இன்பத்தின் உச்சியிலே மிதந்தோடும் போழ்தில்
மாதங்கள் பலசெல்ல என்வீட்டுக் காரி
மாநிலத்தில் தாய்மையென்ற பேறுபெற்று விட்டாள்
சீதமிகும் நீலமெனத் திகழ்விழிகள் தம்மில்
சிந்துகின்ற அன்பன்றி வேறொன்றுங் காணன்!

இராம்வே. சேதுராமன்

# தாய் மகளுக்குக் கட்டிய தாலி

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1939-இல் விடுதலையில் துணை ஆசிரியராக ஆனார்கள். 1942-இல் 'திராவிட நாடு' 'அதிபரானார்கள்.

விடுதலையின் துணை ஆசிரியராக ஆனது முதல் 1968-ல் மறையும் தருவாய் வரை கைவலிக்க, தோள் வலிக்க 'தொய்வு' என்பது சிறிதுமின்றி, இடையறாது எழுதிக் கொண்டேயிருந்தார்கள்.

அண்ணா சிறந்த அறிஞர்; சிந்தனையாளர்; ஆராய்ச்சியாளர்; தலை சிறந்த பேச்சாளர்; நல்ல நடிகர்; கேலிச்சித்திரக்காரர் எல்லாவற்றுக்கும் மேலாக 'தன் வாழ்நாளில் வாழ்ந்த, ராஜதந்திரிகளையெல்லாம் புறம் கண்ட ராஜதந்திரியுமாவார்.

அவர் நாடகமெழுதினார்; நாவல் எழுதினார்; இலக்கியக் கட்டுரைகள் எழுதினார்; அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதினார்; சமுதாயச்சீர்திருத்தக் கட்டுரைகள் எழுதினார்; புதுமைக் கவிதைகள் பல படைத்தார்.

அது தவிர சிறந்த சிறுகதைகளை ஏராளமாக எழுதினார். அவை அனைத்தும் சமுதாயச் சீர்திருத்தம், பெண்ணடிமை ஒழித்தல், விதவா விவாகம் வற்புறுத்துதல், காதல் திருமணம், கலப்புத்திருமணம் ஆகியவற்றை ஆதரித்தல், தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, ஆண்டான் அடிமை ஒழித்தல், ஏழை பணக்கார வேறுபாடு நீக்குதல் பற்றியவை.

இவை அனைத்தையும் ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாக நின்றே எழுதினார்.

அரசியல் கருத்துக்களை விளக்குவதற்கும் சிறுகதைகள் எழுதினார். இதனால்தானோ என்னவோ, கவிஞர் கண்ணதாசன், "தமிழ் எழுத்து நடையில் மிகச்சிறந்த ஓட்டம் கொண்டுவந்தவர் அவர்தானே! பற்பல புதிய சொற்களை உருவாக்கியவர் அவர். அவர் முக்கால் பங்கு கவிஞர் தான், கால் பங்குதான் அரசியல்வாதி" என்று கூறியுள்ளார்.(ஆனந்த விகடன் 1965ல் இவரைப்பற்றி பகுதியில், கண்ணதாசன் பேட்டி) என்று கூறியுள்ளார்.

அண்ணா அவர்களது பேச்சுக்களும், எழுத்துக்களும் பெரியதும் சிறியதுமாக 135 புத்தகங்களுக்கு மேல் வெளிவந்துள்ளன.

பாரதி கவிதா மண்டலம், பாரதிதாசன் பரம்பரை என்பதைப் போல அறிஞர் அண்ணா அவர்களைப் பின்பற்றி 'வாரிசுகளாக' எழுதிய

மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் தமிழுலகில் பலராவர். அவர்களில் 'இருபது-இருபத்தைந்து' எழுத்தாளர்கள் குறிப்பிட்டத்தக்கவர்களாவர்.

இவ்வளவு ஆற்றல் பெற்ற அறிஞர் அண்ணு அவர்களைப்பற்றி அவர் ஈடுபட்டிருந்த ஒவ்வொரு துறையிலேயும் உள்ள வல்லுநர்கள் ஆய்வுகள் நிகழ்த்தி அவருடைய'உண்மையான பெருமையை' வெளிப்படுத்த வேண்டும்.

ஆனுல் ஏனே தமிழுலகம் அதைச் செய்யத் தவறிவிட்டது.

அறிஞர் அண்ணு அவர்கள் எழுத்துக்கள் முறையாக விமர்சனம் செய்யப்படவில்லை; விமர்சனக் கூட்டம் கால்நூற்ருண்டுக்கும் மேலாக சிறந்த பல்துறை எழுத்தாளராக வாழ்ந்த அவரைப் புறக்கணித்தே வந்திருக்கிறது.

தமிழ் விமர்சன உலகில் குழு மனப்பான்மையும், அரசியல், மத, இன கண்ணேட்டங்களும் நிறைந்திருப்பது வருந்தத்தக்கது.

அறிஞர் அண்ணு அவர்கள் கால்நூற்ருண்டுக்கு முன்னுல் எழுதிய சிறுகதை ஒன்றினைச் சிறுகதைச் சுவைஞர்களின் கவனத்துக்கும் ஆய்வாளர்களின் கவனத்துக்கும் கொண்டு வருகிறேம்.

இக்கதைக்கு அண்ணு அவர்கள் சூட்டிய பெயர் 'தாய்மகளுக்குக் கட்டிய தாலி.' ஆனுல் இதே கதை 1970 பிப்ரவரி மாத மன்றம், அண்ணு நினைவு இதழில் 'சொல்லாதது' என்ற தலைப்பில் வெளிடப்பட்டுள்ளது.

இக்கதையில் மனிதர்களின் உள்ளுணர்வுகளையும், உணர்ச்சிகளையும் ஆசிரியர் அழகுற சித்தரித்துள்ளார்.

**—தி. வ. மெய்கண்டார்**

அவளுக்கு' சுந்தரி என்ற பெயர் காரணப் பெயராகவே அமைந்தது என்று எந்த இலக்கணப் பண்டிதரும் சொல்லவில்லை. சொல்வானேன்? மலரை எடுத்து வைத்துக் கொண்டு ஆஹா! என்ன மணம், எவ்வளவு இன்பம்! என்று சொல்லாமலே, எவ்வளவு பேர் முகந்து ரசிக்கவில்லையா? சுந்தரியின் சிறு பிராய முதலிலே அவளுடைய அழகைக் கண்டவர் களித்தனர். கடைவீதி போய் வீடு திரும்புவதற்குள், கன்னத்திலே எத்தனையோ முத்தம்; கையிலே பலவகைப் பண்டம், அப் பெண்ணுக்கு பள்ளியிலே பலநாள் ஆசிரியருக்கு கோபம். பாடத்திலே அந்தப் பாவை நினைவைச் செலுத்தாததால், அப்படிப்பட்ட மாணவியை, முட்டாள் தடிக்கழுதை, உதைக்கிறேன் பார், என்று எவ்வளவோ வசைமொழி சொல்லலாம். ஆசிரியருக்கு அகராதியா தெரியாது? ஆனுல் அவர் ஒரு நாளாவது சொல்ல வேண்டுமென்று எண்ணியதைச் சொன்னதேயில்லை. புன்சிரிப்புடன் தலையை அசைப்பார், சுந்தரியின் முகத்திலே கொஞ்சம் பயம் தட்டுப்படும். அது ஒரு புதுவிதமான களையைத் தரும். அதை ரசிப்பார் ஆசிரியர். வேறு மாணவியின் காதை இழுப்பார். கன்னத்தைக் கிள்ளுவார், தலையைக் குட்டுவார், சுந்தரி மீது கடு சொல்



வீசமாட்டார். அந்த மலர் வாடி விடுமோ என்று நினைத்து.

"குட்டி பெரியவளானால் மகா ரூபவதியாக இருப்பாள். கண்களே போதும் ஆளை மயக்க, அந்தப் புன்சிரிப்பு இருக்கிறதே, அதுபோல நான் கண்டதேயில்லை. சுருண்டு, கருத்து அடர்ந்து, காற்றிலே அலையும் அவளுடைய கூந்தல் இருக்கிறதே அடடா என்ன நேர்த்தி, என்ன இலாவண்யம்" என்று சுந்தரியின் பால பருவ ரசிகர்கள் சொல்லவில்லையே தவிர, அவ்விதமும், அதற்கு மேலும் நினைக்காதவர்களே கிடையாது.

"சுந்தரி நாமோ ஏழைகள் வித விதமான துணிகள் உனக்குக் கிடைக்காது. நான் ஆப்பம் சுட்டு விற்று அதைக்கொண்டு தானே இரண்டு ஜீவன்கள் வாழ வேண்டும். உன் தகப்பனோ எங்கோ தேசாந்திரம் போய்விட்டான். நாம் என்ன செய்யலாமடி கண்ணே! சோற்றுக்கு ஊறுகாய் தான் உனக்கு வறுவல், கூட்டு, வடை எல்லாம்" என்று சுந்தரிக்கு அவளுடைய தாயார் தனபாக்கியவதி சொல்லவில்லை; சுந்தரிக்குத்தான் இது தெரியுமே. அந்தப் பச்சை நிறச் சொக்காயும். பாக்குக் கலர் பாவாடையும் அவளுடைய பவுன் நிற மேனிக்கு அழகாகத்தான் இருந்தது. பம்பாய் 'சில்க்கும்' சீமை வாயிலும் அவளுக்கு எதற்கு? அழுமூஞ்சி அன்னம், பொட்டைக் கண் பொன்னி, வழுக்கைத்தலை வனிதா இவர்களுக்கு வேண்டும் இந்த மேனி மினுக்கிகள் என்று தனபாக்கியம் சொல்லவில்லை. ஆப்பம்சுட்டு விற்பவளுக்குப் பணக்கார வீட்டுப் பெண்களைக் கேலி செய்யும் உரிமை உண்டா?

சுந்தரியின் வளர்ச்சியும், வீட்டிலே வறுமையின் முதிர்ச்சியும் ஒன்றை ஒன்று போட்டியிட்டன. இந்த அமளியின் இடையே, அவளுடைய அழகு வளர்ந்தபடி இருந்தது, எதையும் சட்டை செய்யாமல்.

"எனக்கு மட்டும் கொஞ்சம் சொத்து. ஒரு சொந்தவீடு இருந்துவிட்டால், என் தங்கத்துக்கு ஏற்றவனாக ஒருவனைத் தேடிப் பிடித்துக் கலியாணம் செய்து வைக்க முடியும். கண்டேன் கண்டேன் என்று கைலாகு கொடுக்க எவரும் சம்மதிப்பார்கள். சுந்தரி

ஆப்பக்கடைக் காரியின் பெண் ணுபிற்றே. எந்த அடியனே வெறி யனே எவனே ஒருவனுக்குத் தானே வாழ்க்கைப் பட்டாக வேண்டும்" என்று தனபாக்கியம் சொல்லவில்லை. அவளுடைய கண்ணீர், ஏற்கனவே தாசு நிரம் பிக்கிடந்த தலையணையை மேலும் அதிகமாக அழுக்காக்கி விட்டது.

"அழகான பெண். அடக்கமான வள், ஏதோ கொஞ்சம் படித்தும் இருக்கிறாள். ஏழைதான். இருந் தால் என்ன? நம் வீட்டிலே உலா வினாலே போதும், கிருக லட்சுமி யாக இருப்பாள். நமது பைய னுக்கு ஏற்ற பொருத்தமான பெண். என்ன செய்வது? அவள் ஆப்பக்காரிக்கா பிறக்க வேண் டும்? அரசமரத்தை ஆறு வருஷம் சுற்றியும் பயனில்லாமல் அடுத்த தெருவிலே, அழுது கொண்டிருக் கிறாளே தாசில்தாரின் சம்சாரம் தில்லை அவள் வயிற்றிலே பிறந்தி ருக்கக் கூடாதா? நமது பையனுக் குக் கலியாணம் செய்து கொள்ள லாமே" என்று லோகு முதலி சொல்லவில்லை. மனதிலே இது போலப் பல முறை அவர் நினைத் தார்; சொல்லவில்லை வெளியே லோகு முதலி பணம் படைத்தவர், பெண்டு இழந்தவர், ஓரே மகன் அவருக்கு ஒய்யாரமான பையன் அவனுக்குச் சுந்தரியிடம்மையல்.

"கனகு ஏனப்பா, அடிக்கடி அந்த ஆப்பக் கடைக்குப் போய் வருகிறயாமே. அந்தப் பெண் சுந்தரியை நேசிக்கிறயாமே" என்றும் லோகு முதலி சொன்ன தில்லை, மகனிடம் இதுபோலப் பேசக்கூடாது என்ற சம்பிரதாயத் தினல்.

"எனக்கு என்னமோ அப்பா அந்தக் கடைப் பக்கம் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது போய் வராவிட்டால், சந்தோஷம் உண்டாவதில்லை. அப்பா, சுந்த ரியின் அழகு என்னை என்ன பாடு படுத்துகிறது. தெரியுமா தூக்கமே இருப்பதில்லை, தவறித் தூங்கினு லோ கனவுதான். கனவிலே அந்தக் கிளிமொழியாள் பிரசன்ன மாகிறாள் அப்பா. நான் என் உயிர் போவதானாலும் சுந்தரியைத் தவிர வேறு ஒரு பெண்ணைக் கலி யாணம் செய்து கொள்ளவே மாட் டேன். சத்தியமாகச் சொல்கி றேன் அப்பா, சுந்தரிதான் எனக்கு வேண்டும். இல்லாவிட் டால் கலியாணமே வேண்டாம்". என்று கனகசபேசன் சொல்ல வில்லை. தந்தையிடம் தனயன் இதுபோலப் பேசுவது தகுமா?

சுந்தரியாவது சொன்னாளா மன திலே நினைத்ததைச் சொல்லவே யில்லை. அம்மா, கனகு, என்னைக் கண்டதும் ஒரு மாதிரியாகச் சிரிக் கிறான். தண்ணீர் கேட்கிறானே, அப்போது நான் குவளையைக் கொடுக்கும்போது, வேண்டு மென்றே என்னைத் தொடுகிறான். என்னைத்தான் கலியாணம் செய்து கொள்ளப் போவதாகக் கூறினான் என் காதில் படும்படி என்று சுந்தரி சொல்லவில்லை. அவள் சொல்வானேன், சுந்தரியைப் போல தனபாக்கியமும் வாலிபப் பெண்ணாக இருந்தவள்தானே!

"சுந்தரி உன்னை நான்கட்டாயமாகக் கலியாணம் செய்து கொள் கிறேன், ஏமாற்றி விடுவேன் என்று எண்ணாதே. ஏழை வீட்டுப் பெண்தானே என்று எங்கள் வீட்டிலே தள்ளி விடுவார்கள் என்று கருதாதே. பார், எப்படியா வது எங்கள் வீட்டாரைச் சரிப் படுத்திக்கொண்டு உன்னைக் கலி யாணம் செய்து கொள்கிறேன்.

"என்னையாவது நீங்கள் கலியா ணம் செய்து கொள்வதாவது. அறுபது வேலிக்குச் சொந்தக் காரர் உங்கள் அப்பா, நான் ஆப் பக்காரி மகள். என்னையாவது நீங்கள் கலியாணம் முடிப்பதா

## தமிழ் மறை

★ உலகம் நிலைத்திருப்பது மழையினால்தான். எனவே, அம்மழையே அமிழ்தம் என்பதை உணர்தல் வேண்டும்.

★ செயற்கரிய செயல்களைச் செய்பவர்களே பெரியவர்கள். செயற்கரிய செயல்களைச் செய்ய வியலாதவர்கள் சிறியவர்களே!

★ அறத்தைக் காட்டிலும் உயர்ந்த செல்வம் வேறு எதுவும் இல்லை. அறத்தை மறப்பதைக் காட்டிலும் பெரிய கேடு வேறு ஒன்றும் இல்லை.

—திருக்குறள்.

---

வது. அதெல்லாம் நடவாத காரியம், ஏன் வீணாக என்னை ஏய்க்கப் பார்க்கிறீர்கள்!''

''சுந்தரி, சத்தியம் செய்கிறேன் என்னை நம்பு.''

''சத்தியமா? ஆசைக்குக் கண் மண் தெரியாது. அதனாலே பேசுகிறீர்கள். இதுபோல வீணாக என்னைக் கெடுக்க வேண்டாம். நான் ஏழை.''

''எங்கள் வீட்டிலே மண்டை உடையக்கூடிய சண்டை நடப்பதானாலும் சரி, உன்னைத்தான் கலியாணம் செய்து கொள்வது என்று நான் தீர்மானித்துவிட்டேன்.''

மனக்கோட்டை இது, இடிந்து போகும். இலுப்பப்பட்டி மிராசுதார் மகள் முகம் இஞ்சி தின்ற குரங்கு போல இருக்குமாம்! இருந்தால் என்ன, அவள்தான் உனக்கு நாயகியாக வரப்போகிறவள்.''

''சீ அந்தக் குரங்கையா நான் கலியாணம் செய்து கொள்வேன்?''

இவை சுந்தரிக்கு கனகு சொல்லாதவை. கனகுக்குச் சுந்தரியும் சொன்னதல்ல!

சில காலத்துக்குப் பிறகு இலுப்பப்பட்டி மிராசுதாருக்குத்தான் கனகு மருமகனானான்.

''குரங்கு போல இருக்கிறாயே. உன்னைக் கட்டிக் கொண்டேனே. நான் ஒரு மடையன். அப்பன் மிரட்டினால் என்ன, பிடிவாதமாக இருந்தால் எப்படி நடந்திருக்கும் இந்தக் கலியாணம்? பாழான பணத்தாசை எனக்கும் பிடித்துக் கொண்டதால்தான், நானும் இதற்கு ஒப்புக்கொண்டேன். பத்தரை மாற்றுத் தங்கம் போன்ற சுந்தரியை இழந்து விட்டேன். இனி உன்னோடு அழ வேண்டும். என் விதி! விதி என்ன செய்யும்? என் புத்தியைக் கட்டையாலே அடிக்க வேணும்'' என்று கனகு சொல்லிக்கொள்ளவில்லை எண்ணமலுமில்லை. அவன்தான் என்ன செய்தான் பாவம்! அறுபது வேலி நிலமும் இழுப்பப்பட்டியாரிடம் அடகு இருந்தது, தன்னுடைய அழுமூஞ்சியை கனகு கழுத்திலே கட்டிவிட்ட பிறகுதான், வட்டியும் அசலும் செல்லாகிவிட்டதாக எழுதிக் கொடுக்க இசைந்தார். பட்ட கடனுக்கு இது தண்டனை என்று கனகு நினைத்துக் கொண்டான். சொல்ல முடியுமோ?

தேசாந்திரம் செய்து கொண்டிருந்த திருவேங்கடம் எனக்கு மனைவி உண்டு. ஒரு மகளும் உண்டு, சிகப்பாக இலட்சணமாக இருப்பாள். என் மனைவி எப்படியோ கஷ்டப்பட்டு

ஏதேதோ பாடுபட்டு என் மகளை வளர்த்து வருகிறாள். எனக்கு வேலை செய்ய முடிவதில்லை. வீட்டைக் கவனிக்க முடியவில்லை. இப்படி ஊரு ஊராக அலைந்து, அரை வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறக்க முடிகிறதே யொழிய வீட்டோடு இருக்கப் பிடிக்கவில்லை. நான் கட்டியிருப்பது காவிதான். ஆனால் கள்ளச் சாவி கிடைத்தால் போதும்—போதைக்குச் சரியான "சான்சு" கிடைத்துவிடும். அது ஒன்றுதான் வாழ்க்கையிலே எனக்கு இருக்கும் திருப்தி" என்று திருவேங்கடம் சொல்லவில்லை. ஆனால் அவன் எண்ணம் அதுதான். சுந்தரியின் பருவ நிலையைப் பற்றியோ, கனகுவின் காதல் விஜயம் பற்றியோ அந்தக் காதலை அவன் வீட்டு நிர்பந்தத்தினால் கைவிட வேண்டி நேரிட்டது பற்றியோ, ஊருராகச் சுற்றிக் கொண்டு ஓய்வுக்கு மடங்களிலே தங்கி, தேர்த் திருவிழாக் காலங்களிலே திருப்தியாக வாழ்ந்து வந்த திருவேங்கடத்துக்கு யாரும் சொல்லவில்லை.

கனகுவின் மனைவியானாளே இலுப்பப்பட்டியார் மகள் காவேரி, அவளுக்குக் கனகுவோ, வேறு யாரோ சொல்லவில்லை. ஆப்பக் கடைக்காரியின் மகளிடம் கனகு காதல் கொண்டிருந்த கதையை, எப்படி அவ்வளவு பணக்காரப் பெண்ணிடம் அதைப் பேசுவது என்ற பயத்தால்.

இவ்வளவுதானா. கனகுவின் இஷ்டப்படி சுந்தரி சில வேளைகளிலே நடந்துகொண்ட விஷயத்தை யாரும் தனபாக்கியத்துக்குச் சொல்லவேயில்லை.

'இது ஏன் இந்தப் பெண் இவளோடு இப்படிக் குலாவுகிறாள்' என்று தனபாக்கியம் பல சமயங்களிலே எண்ணினதுண்டு, சொன்னதில்லை. அடி அம்மா ஜாக்கிரதை, அவன் அப்படி இப்படி என்று ஏதாகிலும் கெட்ட பேச்சுச் சொன்னால் கேட்காதே, அம்மாவிடம் சொல்லி விடுவேன் என்று மிரட்டி வை என்றும் சுந்தரிக்கு அவள் தாயார் சொல்லவில்லை. கனகு கெட்ட பேச்சு பேசியிருந்தால்தானே, சுந்தரி அம்மாவிடம் தானாகவாவது சொல்லியிருப்பாள்? அவன்சொன்னதுதான் அவளுக்குஆனந்தமாக இருந்ததே கேட்க.



## அவளைப் பார்த்தேன்

அவளைப் பார்த்தேன்—அவள்
அழகைப் பார்த்தேன்—நான்
ஆசை கொண்டேனே!

பூவைப் பார்த்தாள்—செம்
பொட்டைப் பார்த்தாள்—மஞ்சள்
பொடியைப் பார்த்தாளே!

இயற்கை யான—நல்
எழிலைக் கொண்டும்—அவளுக்கு
ஏனோ நிறைவில்லை?

செயற்கை யழகை—அவள்
தேடிக் கொண்டாள்—இதில்
சேர்ந்த பயனென்னே?




உலகம் முழுவதும் தன் உடைமையாகக் கொண்ட பெரிய வேந்தனுயினும், காட்டில் வேட்டையாடித் திரியும் வேடனுயினும் இருவரும் உண்ணும் உணவு நாழி அளவே!

அவர் உடுக்கும் உடையும் இரண்டே! இன்னும் இருவர்க்கும் வாழ்க்கைத் தேவைகள் ஒரு தன்மையாயினவே! எனவே செல்வத்தைத் தான் ஒருவனே அனுபவிப்பேன் என்று கருதுவது தவருதலின் அதைப் பிறர்க்கும் கொடுத்து வாழ்வதே பயனுடையதாகும்.

—புறநானூறு.

---

"அம்மா வாயைக்குமட்டுகிறது, சாதம் பிடிக்கவில்லை, மயக்கமாக இருக்கிறது, என்னமோபோலிருக்கிறது உடம்பு" என்று சுந்தரி சொல்லாமலேயே தனபாக்கியம் நிலைமையைக் கண்டு கொண்டாள். "ஐயையே மோசம் வந்துவிட்டதே, அந்தப் பயல் அநியாயமாக ஏதுமறியா என் மகளைக் கெடுத்துவிட்டான் போலிருக்கிறதே. நான் என்ன செய்வேன்? ஏழை என்பதற்காகவே இவளை நல்ல இடத்திலே யாரும் கேட்கவில்லை. இப்படியும் நேரிட்டுவிட்டால் என் கதி என்னுவது? அடி பாழும் பெண்ணே! இப்படி என் அடிவயிற்றிலே நெருப்பைக் கொட்டினுயே அவ்வளவு திமிரா உனக்கு? ஆணவமா? கொழுத்துப் பேசனுயா!' என்றெல்லாம் சொல்லி தனபாக்கியம் சுந்தரியைக் கண்டிக்கவில்லை. விஷயம் வெளிவந்து விட்டால் விபரீதமாகி விடுமே என்ற பயத்தால். ஆனுல் தனபாக்கியத்தின் பெருமூச்சும், தாளுக வழிந்த கண்ணீரும் சுந்தரிக்கு இதை விட விளக்கமாய் தெரிவித்தது.

"தம்பி, ஊரில் உனக்கு உத்தமன் என்று பெயர் இருக்கிறது. நல்ல குணமென்று புகழாதவர்கள் இல்லை. ஏழைகளிடம் இரக்கம் காட்டுகிருய். இலுப்பப்பட்டி மிராசுதாரின் இறுமாப்பினுல் கஷ்டமடைந்தவர்களையெல்லாம் உன் கருணையால் காப்பாற்றுகிருய். இவ்வளவு நல்லவனுன உன்னுல் என் குடும்பமே பாழாகி விட்டதே. அதோ சுந்தரி படும் வேதனையைப் பாரடா அப்பா! எந்தப்பாவி கொடுத்த மருந்தும் அதைக் கரைக்கவில்லையே.வளருகிறதே உன்னுல் ஏற்பட்ட வம்பு. ஊரார் தூற்றுகிருர்களே. சுந்தரியின் கண்ணீர் என்னை சித்திரவதைக்கு ஆளாக்குகிறதே ஏதோ பணத்துக்கு ஆசைப்பட்டுக் கொண்டோ, அப்பனுக்குப் பயந்தோ ஒருவளைக் கலியாணம் செய்து கொண்டாய் உன் அன்பு மொழியை நம்பினுள் இந்த அபலை, இவளையும் ஏற்றுக்கொள்ளக் கூடாதா இரண்டாந்தாரமாக இழிவு போகுமோ" என்று தனபாக்கியம் கனகனிடம் கூறவில்லை. கூறிப் பார்ப்போம் என்று பல தடவை எண்ணுவாள். எப்படிக் கூறுவது, சொல்லிப் பயன் என்ன என்று எண்ணி ஏங்குவாள்.

"அம்மா கன்னி கருவுற்ருள். ஊர் தூற்றும் என்று பயந்து ஓடி வந்து விட்டோம் நீ காப்பாற்று" என்று சொல்ல மனம் இடந்தரவில்லை. தனபாக்கியத்துக்கு ஊரை விட்டுத் தொலைந்தால்

போதும், என்று சுந்தரியை அழைத்துக்கொண்டு வேறு ஊர் வந்து குடி ஏறினான். சுந்தரிக்கு பத்தாம் மாதம் மருத்துவம் பார்க்க வந்த கிழவியிடம், தனபாக்கியம், அபாக்கியவதி சுந்தரியின் அந்தரங்க கதையைக் கூறவில்லை.'' அவளுடைய புருஷன் அக்கரைக்கு ஓடிவிட்டான்,'' என்று பொய்யுரைத்தாள். தாலி இருந்தது சுந்தரியின் கழுத்திலே. தாய் மகளுக்குக் கட்டிய தாலி!

தங்க விக்ரஹம் போன்ற குழந்தை பிறந்தது சுந்தரிக்கு. பேரன் பிறந்தது தெரியாமல் பெருமாள் கோயிலிலே பலமான பூஜை நடத்திக் கொண்டிருந்தார் லோகு முதலி.

கலியாணமே இல்லை. குழந்தையோ தவழ்ந்தது அந்தக் குடிசையிலே! மாளிகையிலே கனகமும் காவேரியும், கனபாடிகளின் பூஜை, காளி உபவாசியின் தாயத்து, சித்த வைத்தியரின் செந்தூரம் ஆகியவற்றை நம்பிக் கிடந்தனர். பலனின்றி.

“என் மகன் ராஜா போலஇருக்கிறான், எனக்கென்ன கவலை?' என்று கனகு யாரிடம் கூறுவான்? எப்படிக் கூறுவான்? விஷயமே அவனுக்குத் தெரியாது! தெரிந்தாலும் கூற முடியுமா?

‘போனவன் திரும்பவில்லையே!' என்று பலர் ஆயாசமும். ஆச்சரிமும் கொண்டு, சுந்தரியைக் கேட்டனர். ‘அக்கரை இல்லை அவருக்கு ஆகவே அவர் அக்கரையில் இருக்கிறார்' என்று சாக்கு கூறுவது தவிர வேறு வழியில்லை. விழியிலே நீர் வழிய வதைப்பட்டுக் கிடந்த அந்த வனிதைக்கு காலம் அவளுடைய கவலையைப் பற்றிய கவலையால் ஓய்ந்து விடுமா? அது ஓடிக்கொண்டேயிருந்தது. ஓராண்டு, ஈராண்டு, மூவாண்டு ஐந்து ஆண்டுகள் கழிந்தன. தாலி

**பிழைபட்ட கருத்து**

முயற்சியும் உண்மையாக பற்றும் இல்லாதவர்கள் பிறமொழி பேசுவோருடன் கலந்தால் தமது மொழிச் சொற்களை விட்டுப் பிற மொழிச் சொற்களையே எடுத்தாளத் தலைப்படுவார்கள். தமக்குரிய மொழியை வளம் பெறச் செய்யும் முயற்சியும் அதன் பாற் பற்றும் இல்லாமற் போதல் எதனால் என்றால், பிறிதொரு மொழியிலும் தாம் வல்லுநர் என்பதைக் காட்டித் தம்மை உயர்வு படுத்திக் கொள்ளும் எண்ணமும், பொருள் வருவாய் ஒன்றிலேயே நோக்கம் வைத்து, அதற்கேற்றது பிற மொழிப் பயிற்சியே என்ற பிழைபட்ட கருத்தும் கொள்ளப் பெற்றிருத்தலேயாம்.

—மறைமலையடிகள்

யுடன் மணமாகாத மங்கை உலவிக் கொண்டிருந்தாள். தகப்பனைக் காணாது தத்தி நடக்கும் பருவமடைந்தான் தங்க ராசன். தாய் தங்கமே என்று கொஞ்ச, பாட்டி ராசா என்று கொஞ்ச, இரண்டு ஆசை மொழிகளும் திரண்டு குழந்தைக்குத் தங்கராஜன் என்ற பெயராக ஏற்பட்டது. தங்கராஜனின் தகப்பனாரின் “ராஜ்யம்'' “தங்கம்'' இரண்டுக்கும் தேய்வு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது இந்த ஐந்து வருஷங்களிலே! இலுப்பப்பட்டி மிராஸ்தாருக்கு ஒரு வியாஜ்யம். அது முனிசீப்புக் கோர்ட்டிலிருந்து ஹைகோர்ட் சென்றது. இந்த பிரயாணச் செலவு மிராஸ்தாரின் தங்க நகைகளை மார்வாடிக்கும். நிலத்தின் முக்கிய பகுதிகளை வேறோர் ஜெமீனுக்கும் கட்டணமாக்கி விட்டது.

“எந்த வேளையிலே நீ எனக்கு மருமகனாக வந்தாயோ அன்றே என்னைச் சனி பிடித்துக்கொண்டது. என் முகத்தில் விழிக்காதே

**இணையில்லை**

*வெல்லாத இல்லை*
*திருவள்ளுவன் வாய்*
*விளைத்தவற்றுள்*
*பொல்லாத தில்லை*
*புரைதீர்ந்த வாழ்வினிலே*
*அழைத்துச்*
*செல்லாத தில்லை*
*பொதுமறையான*
*திருக்குறளில்*
*இல்லாத தில்லை*
*இணையில்லை முப்பாலுக்*
*கிந்நிலத்தே!*

—பாரதிதாசன்

---

உன்னைக்கண்டாலே எனக்கு கடுங்கோபம் பிறக்கிறது.''

''உனக்கு இவ்வளவோடா நின்று விடும் கேடு? நீ படவேண்டியது எவ்வளவோ இருக்கிறது. உன்னுடைய பணத் திமிரினால் எவ்வளவு ஏழைகளைக் கண் கலங்க செய்திருக்கிறாய்? அதனுடைய பலனை அடைகிறாய். என் மீது கோபித்துக்கொள்ளுயே. உன் அட்டகாசத்தால் ஊரிலே உனக்குப் பகை. வியாஜ்யம் பிறந்ததும் உன் விரோதிகள் உன்னை தீர்த்துக்கட்டவேலைசெய்கிறார்கள். படு எனக்கென்ன! நான் என்ன செய்வது? உன்னாலே நான் கெட்டேன். என்னாலே அந்தப் பெண் கெட்டுச் சீரழிந்து, எங்கோபோய் விட்டாள். உன்னைப் பார்க்கும் போதே. எனக்கு வருகிற கோபம் கோடாரியையோ அரிவாளையோ தேடச் சொல்கிறது.''

மாமனாரும் மருமகனும் சொல்லிக் கொள்ளவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ளும் போதெல்லாம், கண்கள் இக்கருத்துக்களையே காட்டின.

கேஸ் தோற்றுவிட்டது.கஷ்டம் முற்றிவிட்டது.இலுப்பப்பட்டி கை மாறிவிட்டது போலத்தான் என்று மிராசுதார் சொல்லவில்லை, அவருடைய வயிற்றுவலி வாந்தி, காய்ச்சல், இவைகள் வேறு என்ன கூறின.

சீமானின் மருமகனாகிச் சிங்காரமாக வாழ நினைத்த கனகு சீரழிந்த மிராசு குடும்பத்தைக் காப்பாற்றித் தீர வேண்டிய பொறுப்பைத் தான் பெற்றான். குளிக்கப் போனவன் சேறு பூசிக்கொண்ட கதை போல.

தேசாந்திரி திருவேங்கடத்துக்குத் தன் குடும்பத்தின் நிலையை யாரும் கூறவில்லை.யாருக்குஎன்ன அக்கரை. அவன் ஒரு நாள் அன்போடு உபசரித்தான் ஒரு ஆண்டியை! அந்த ஆண்டி மாறுவேடத்திலே வந்திருந்த இலட்சாதிகாரி என்பதைத் திருவேங்கடத்துக்கு யாரும் சொல்லவில்லை. தனக்கு கிடைத்தசோறு வேறொருவனின் பசியைத் தீர்க்க உதவட்டும் என்ற பெரிய தத்துவத்தையும் அவன் யாரிடமும் பாடங் கேட்டவனல்ல. அன்று அவனுக்கு போதை! சோறு இருந்தது நிரம்ப. பசி இல்லை. பாதையிலே சுருண்டு கிடந்தான் ஒரு பரதேசி; தூக்கி எடுத்து வைத்துக்கொண்டு உபசரித்தான் திருவேங்கடம்.

பரதேசிக் கோலத்திலே பல ஊர்ச் சுற்றித் தர்மவான்களின் தப்பிலித்தனம் புண்ணியவான்கள் செய்யும் பாபச் செயல்கள், முதலிய லோக விசித்திரத்தைக் கண்டு அனுபவ அறிவு பெற்று வந்த அருமை நாயகம் பிள்ளை பல இலட்சத்தைப் பாங்கியில் வைத்திருந்தார். குடும்பம் கிடையாது ஒரு ஆண்டிக்கு ஈரமுள்ள நெஞ்சு இருந்தது. கண்ட அருமை நாயகம் அந்த ஆண்டிக்கே சொத்து முழுவதையும் தந்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டான். அதைச் சொன்னால் அவன் நம்பமாட்டான் என்பதற்காகத்தான்

எண்ணத்தைச் சொல்லவில்லை. தன்னுடன் வரும்படி கூறினான். "வீடு நமக்கு நாடு முழுவதுமே ஓடு உண்டு கையில்" என்ற விருத்தத்தைப் பாடியபடி சம் மதித்தான் திருவேங்கடம்.

இருவரும், பல ஊர் அலைந்து விட்டு அருமைநாயகத்தின் ஊரா கிய ஆற்றூர் வந்து சேர்ந்தனர். அந்த வேற்றூரிலே அங்கும் இங் கும் சுற்றிக்கொண்டிருக்கையில் தனபாக்கியத்தைத் திருவேங் கடம் கண்டான். ஆச்சரியமடைந் தான். குடிசை சென்றான். சுந்தரி யைக் கண்டான், தங்கராஜனைக் கண்டான். தகதகவென ஆடி னான் சந்தோஷத்தால், மெள்ள மெள்ள விஷயத்தைத் தெரிந்து கொண்டான். அவன் மனம் துடித் தது.

"எங்கே இருக்கிறான் அந்தப் பாவி? அவன் கழுத்தை முறிக் கிறேன்."

"வேண்டாம். அவன் பெரிய பணக்காரன் உலகம் அவன் பக்கம் பேசும்."

"துறவிக்கு வேந்தன் துரும்பு, தெரியுமா? அவன் மனிதனாடி? இந்த சொர்ண விக்கிரகத்தை அவன் கண்டானா? அவன் பணக் காரனானால் எனக்கென்ன பயமா! சீ! நான் எத்தனையோ பணக் காரன் பரதேசிப் பயலாகி விட்ட தைப் பார்த்திருக்கிறேன். இதோ இதே ஊரிலே இருக்கிறாரே அருமைநாயகம், இந்த ஆசாமி ஆண்டியாக இருந்தது எனக்குத் தெரியும். பணமாம் பணம் அது என்னடி செய்யும்?"

திருவேங்கடம் தன் மனைவி யிடம் இதுபோலச் சொல்லிக் கொண்டு இல்லை. மனதிலே எண் ணினான். பல சொல்ல வாய் வர வில்லை.

**அறிஞர் வாழ்க !**


அந்நாளின் இலக்கியத்தின்
ஆய்தல் ஒன்றே
அரும்புலமை எனும்மடமை
அகன்ற திங்கே
இந்நாளிற் பழந்தமிழிற்
புதுமை ஏற்றி
எழுத்தெழுத்துக்கினிப்பேற்றி
இந்த நாடு
பொன்னான கலைப்பேழை
என்று சொல்லும்
புகழேற்றி வருகின்றார்
அறிஞர் வாழ்க !

—பாரதிதாசன்

---

திருவேங்கடத்தின் குடும்பத் தின் நிலைமையைத் தெரிந்து கொண்டார் அருமைநாயகம். நிரக்கதியாகி. நிந்தனைக்குட்பட் டுக்கிடந்த ஒரு குடும்பத்தைக் காப்பாற்றும் சக்தி தனக்கு இருந் ததற்காகச் சந்தோஷமடைந்தார். குடிசை சரியாகிவிட்டது. தங்க ராஜன் பெரிய தாத்தா மடியில், கொஞ்ச நேரமும், சின்னத் தாத்தா மடியில் கொஞ்ச நேரமும் இருப்பான், கூத்தாடுவான், கூவுவான். கண்டுகளிப்பாள் சுந்தரி, மறுகணம் அவள் கண் களிலே கண்ணீர் பெருகும். ஏழ் மையிலே மூழ்கியிருந்த சமயத்தி லாவது சதா ஜீவனத்துக்கு வேலை செய்து கொண்டிருக்க வேண்டி யிருப்பதால், விசாரப்பட நேரம் கிடைப்பதில்லை. அருமை நாயகத் தின் ஆதரவால் ஜீவனக் கஷ்டம் இல்லாமற்போகவே சுந்தரிக்கு விசாரம் விடாத நோயாகி விட்டது.

இலுப்பப்பட்டியார் இறந்தார், கனகனின் தகப்பனார் அவரைத் தொடர்ந்தார். காவேரி காச நோய்க்குப் பலியானாள். கண



கார்காலம் வந்தது; ஆனல் காதலன் வரவில்லை. தலைவி கலங்குகின்ருள். அவள் துயர் கண்ட அன்னையர் திருமால் கோயிலுக்குச் சென்று வரங்கேட்டனர். அதே நேரத்தில், ஆயர் குலப் பெண்ணொருத்தி கன்றுக் குட்டிகளைப்பார்த்து, ''தாய்ப்பசுக்கள் வந்துவிடும்'' என்று கூறித் தேற்றுகிருள். அச்சொல் வரங் கேட்டுக் கொண்டிருந்த, பெண்கள் காதில் விழ, 'நல்ல சகுனம்' என்று நினைத்துக் கொண்டார்கள் தலைவியைத் தேடிவந்து, ''கலங்காதே, உன் காதலன் வந்து விடுவான்'' என்று கூறித் தேற்றுகின்றனர்.

—முல்லைப்பாட்டு.

---

-வன் கப்பலேறினன். பர்மாவுக்குக் கடை கணக்கப் பிள்ளையாக; அக்கரையிலிருக்கிருன்சுந்தரியின் கணவன் என்று சொல்லி வந்த பொய்யே மெய்யாகி விட்டது.

தங்கராஜனுக்கு வயது பத்தாகி விட்டது. அவனுக்குச் சொல்லவில்லை தயாரின் துயரத்தை. தகப்பன் அக்கரையிலே ஏன் இருக்கிருர், எவ்வளவு காலத்துக்கு இருப்பார்?' என்று அவன் கேட்கவுமில்லை. என்ன காரணத்தாலோ, மனைவியிடம் சண்டையிட்டுவிட்டு அவர் போய் விட்டார் என்று நம்பியிருந்தான்.

கனகன் வேலைக்கு அமர்ந்திருந்த கடையின் முதலாளி, கொடுமைக்காரன். அவன் தந்த இடி பொறுக்க மாட்டாமல், கனகன், தாய்நாடு சென்று அன்னக்காவடியாக வந்து வாழலாம் என்று அக்கரையைவிட்டு இக்கரை வந்தான். சுந்தரி இருப்பதை, அவனுக்கு யாரோ சொல்லியல்ல அவன் ஆற்றூருக்கு வந்தது. ஆற்றூரிலே அருமை நாயகம் என்பவர் ஆலை வைத்திருக்கிருர், அங்கு சென்ருல் வேலைகிடைக்கும் என்ற செய்தி தெரிந்து, வேலைக்காக அவர் வீடு வந்தான்.

கனகனுடைய வரலாற்றினைக் கேட்டார் அருமை நாயகம்.

''நீதானு அந்த ஆசாமி! அடமடையனே, உன்னுலே நிராகரிக்கப்பட்ட பெண்ணிடம் போய் மன்னிப்பு க் கேட்டுக்கொள்'' என்று அவர் சொல்லவில்லை.

''உட்கார் தம்பி! உட்கார்! உன்னைக் காணப் பல நாட்களாகக் காத்துக் கொண்டிருந்தேன். இலுப்பப்பட்டி மிராசுதாரின் மருமகன் கனகு நீதானு? சரி, சரி உட்கார்'' என்று கூறினுர், அருமை நாயகம். ஆச்சரியத்தால் திகைத்துப் போனுன் கனகன்.

''தங்கம்! ராஜா! டே, தம்பி, தங்கராஜ்!'' என்று அழைத்தார். ''தாத்தா, இதோ வந்தேன்'' என்று கூவிக்கொண்டே ஓடிவந்தான் பையன்.

''உன் அப்பா வந்திருக்கிருர்'' என்ருர், கனகன் மிரண்டான். பையனின் கண்கள் அகன்றன. வாய் திறந்தபடி நின்ருன், முகத்திலே ஓர் விவரிக்கமுடியாத உணர்ச்சிக்குறி!

அடுத்த விநாடி 'அப்பா!' என்ருன், பாய்ந்தோடி கனகுவின்

கழுத்தைக் கட்டிக்கொண்டான், கனகனுக்கு ஒன்றும் புரியவில்லை.

“ஐயா! இது என்ன? வேலை தேடிக்கொண்டு இங்கே நான் வந்தேன். இது யார் இந்தச் சிறுவன், என் மகன் என்று கூறுகிறீரே. அவனும் அப்பா என்று அழைக்கிறானே, இதென்ன விந்தை!” என்று கனகன் கேட்கவில்லை. அவனுடைய கண்களின் மிரட்சியைக் கண்டு அருமை நாயகம் சிரித்தபோது, கனகன் இப்படிக் கேட்க எண்ணுகிறான் என்பதை அவர் தெரிந்தேதான் சிரித்தார் என்பது தெரிந்தது.

அடுத்த விநாடி துள்ளிஓடினான் தங்கம்.

‘அம்மா, அம்மா, அப்பா, அப்பா, அப்பா வந்துவிட்டார். ஓடிவா,சீக்கிரம்வா’ என்று கூவினான். ஓடினான் வீட்டுக்குள் தாயைத் தேடிக்கொண்டு.

“அப்பா, அப்பா, அப்பா வந்துவிட்டார்”. ஆம், ஆம் அவனுடைய செவிகளுக்கு அந்த மொழி எவ்வளவுதான் இன்பம் தந்தது. பல நாட்கள் மெல்லிய குரலிலே யாருக்கும் தெரியாதபடி, அவனுக்குக்கூறிக் கொள்வான். அப்பா, அப்பா, இல்லை அப்பா இங்கே இல்லை. அப்பா வரவில்லை. அப்பா இன்னமும் வரவில்லை, என்று. அப்பா வந்து விட்டார், என்று கூவினான், மான் போலத் துள்ளிக் குதித்தான். தங்கராஜின் ஆர்ப்பாட்டத்தைக் கண்ட சுந்தரிக்குப் பயமாகி விட்டது, அவனுக்குப் பித்தம் பிடித்துவிட்டதோ என்று. தாயைக்கண்ட உடனே கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினான் தங்கராஜன். கனகன் இருந்த அறைக்குள். வாசற்படியருகே சென்றாள். உள்ளே இருந்த கனகன் ‘சுந்தரி” என்று கூவினான். இருவரிலே யார் முதலிலே பாய்ந்தது என்று தெரிய முடியாதபடி, ஒரு ஆனந்த அணைப்பு ஏற்பட்டது. ஒரு வயோதிகரும், ஒரு சிறுவனும் அங்கே இருந்ததை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை, இருவர் விழிகளிலும் நீர் குபு குபு வென்று கிளம்பி வழிந்தது.

“சுந்தரி! சுந்தரி! கண்ணே சுந்தரி.’ ’என்று கதறினான் கனகு. முகத்தைக் தன் இரு கரங்களிலும் பிடித்துக்கொண்டு உற்றுப் பார்த்தாள். அவள் கன்னத்திலே புரண்டோடிய கண்ணீரைத் துடைத்தான். மீண்டும் அணைத்துக் கொள்ளச் சென்றான்; கழுத்திலே



முன்கையில் சிறுவளையல்களையணிந்துள்ளனர். விரிந்தவிழ்ந்த கூந்தல் முதுகிலே கிடக்கின்றது. இரவைப் பகலாக்கி விடுவன போன்று பளிச்சென மின்னும் வாளை இடையிலே தொங்க விட்டுள்ளனர். எண்ணெய் சிந்தும் தீப்பந்தங்களைத்தூக்கிக்கொண்டு கதை இரவில் காவல் காத்துச் சுற்றிச்சுற்றி வருகின்றனர். கைப்பந்தம் அணையும் போதெல்லாம் மீண்டும் கொளுத்துகின்றனர்.

இப்பெண்கள் யார்?

பண்டைத்தமிழகத்து வீரப்பெண்கள் தாம் இவர்கள்.

—முல்லைப்பாட்டு

## தனித் தமிழுண்டோ?

மொழிகள் ஒன்ருேடொன்று கலக்கப் பெறுவதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருந்ததால், நாகரிகம் வாய்ந்த எந்த மொழியும் பிற மொழிக் கலப்பில்லாமல் இருத்தல் இயலாது. இது மக்களியற்கையினையும் அவரது வாழ்க்கையின் இயல்புகளையும் அமைதியாக ஆராய்ந்து பார்ப்பவர்க்கல்லாமல் மற்றவர்க்கு ஒரு சிறிதும் விளங்க மாட்டாது. தமிழ் மக்கள் பண்டு தொட்டே நாகரிகத்திற் சிறந்தவராயிருந்ததனுல் அவரொடு பல மொழி பேசும் பல நாட்டவரும் கலந்து பழகவே மற்ற மொழிகளின் சொற்களில் சில தமிழிலும் காணப்படுவதாக ஆயின. இங்ஙனம் காணப்படுதல் தமிழ் மொழியின் நாகரிகச் சிறப்பினையும் அதன் வளப்பத்தினையும் காட்டுகின்றதே யல்லாமல் அதற்கு அது தாழ்வாதலைக் குறிக்கின்றதில்லை

உண்மை இவ்வாறிருப்ப, இதனைச் சிறிதும் உணர மாட்டாமல், சுவாமிநாததேசிகர் என்பார் தாம் இயற்றிய இலக்கணக் கொத்தில், "அன்றியும் தமிழ் நூற்களவிலை அவற்றுள் ஒன்றேயாயினும் தனித்தமிழுண்டோ?" எனக் கூறியது வெற்றுரை வார உரையாமன்றிப் பிறிதென்னே?

—மறைமலையடிகள்

---

தாலி இருக்கக் கண்டான் பயந்தான். சுந்தரியின் முகத்திலே ஒரு குறுநகை பிறந்தது.

"தங்கம் சின்னத் தாத்தாவை அழைத்து வா" என்று கூறினுள், சிறுவன் ஓடினுன், அவனைப் பின் தொடர்ந்து சென்ருர் அருமைநாயகம்." அரைமணி நேரம் யாரும் அந்த அறைப்பக்கம் போகக் கூடாது என்று உத்தரவிட்டார்.

சுந்தரி தன் சரித்திரத்தைக் கூறி முடித்தாள் கனகனிடம். கனகன் தன் கதையைக் கூறினுன். அவள் கட்டியிருந்த தாலியை முத்தமிட்டான்.

"அக்கரைக்குச் சென்றிருந்த சுந்தரியின் புருஷன் வந்துவிட்டார்" என்று ஆற்றூர் வாசிகள் பேசிக்கொண்டனர். அவர்களுக்கு சுந்தரியின் சோகக் கதையின் சூட்சமப் பகுதியை யாரும் சொல்லவில்லை. தாய்கட்டிய தாலி அக்கரைக்குப் போன அவள்-புருஷன் வந்து விட்டான். இனி இக்கரையிலேதான் இருப்பானும்! என்று ஊரார் சொல்லிக் கொண்டார்கள். அவன் கட்டாத தாலி அவள் கழுத்திலே இருந்தது யாருக்குத் தெரியும்? அவனுடைய அந்த நாள் நடவடிக்கையை யார் அவர்களுக்குச் சொன்னுர்கள்.

சுந்தரி: தங்கம்! உங்க அப்பாவை ரொம்ப நல்லவரென்று எண்ணுதே! ஜாக்கிரதை. ரொம்ப ரொம்பக் கெட்டவர். அவர் என்ன செய்தார் தெரியுமா? சொல்லிடட்டுமா?

கனகன்: "சுந்தரி, சுந்தரி, சொல்லாதே சுந்தரி! உனக்குக் கோடி புண்ணியம், அதை மட்டும் சொல்லாதே!"

தங்கம்: "அம்மா, அம்மா, சொல்லம்மா, சொல்லு! அப்பா! அம்மா வாயை மூடிடாதே.

சுந்தரி: 'உங்க அப்பா என்ன செய்தாரு, தெரியுமா? ஒரு நாள்......"

கனகு; "ஆ அப்பா அடிவயிற்றிலே வலிக்குதே அப்பா பொறுக்க முடியவில்லையே, தம்பி ஓடிப்போய்க் கொஞ்சம் தண்ணீர் எடுத்துவா."

*With Best Compliments From :*

★★★
★★
★

Phone Office : 38683
Res : 440794

# RATHINA TRANSPORT

*TRANSPORT CONTRACTORS*

**11, Basin Water Works Street**
**MADRAS-1**

★★★
★★
★

***H. O. Nagapattinam***

***P. R. Lakshmanan,*** B.A.
Partner.



# காலம்,
# கலிகாலம்

மைத்ரேயரே! கலியினுடைய ஸ்வருபத்தை விவரமாகச் சொல்கிறேன். கேளும். கலியுகத்தில் மனிதரிடத்தில் வர்ணுசிரம ஆசார நடவடிக்கைகள் இராது. அதில்லாததால், ரிக், யஜுர், சாமம் என்ற வேதங்களில் சொல்லப்பட்ட யாகாதி கிரியைகளும் இராது. கலி காலத்தில் தர்மமான திருமணங்கள் நடைபெருது. குரு மாணவ முறையும் இராது. தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் நடந்து கொள்ளும் முறைமையும் தர்மமும் இராது. அக்கினியில் செய்யத் தக்க தேவவேள்வி முறைகளும் இல்லை. எந்த குலத்தவனுயினும் பலசாலி எவனே, அவனே எல்லோருக்கும் அரசனுவான். எல்லா ஜாதிகளிலேயும் பொருள் உள்ளவனே, கன்னிகாதானம் செய்யத் தகுதியுடையவனுவானே யன்றி கல்வி ஒழுக்கங்கள் உடையவன் அத்தகுதியுடையவனுக மாட்டான்.

விஷ்ணு புராணம்

(பையன் ஓடினதும், கனகன், சுந்தரியைக் கட்டித் தழுவிக் கொண்டு)

சுந்தரி, கண்ணில்லே, சொல்லாதேம்மா, தயவு செய்து சொல்லாதே கண்ணு!

சுந்தரி: இப்படி தனுக்கு செய்து விட்டுத்தானே என்னைத் தவிக்க வைத்துவிட்டுப் போயிட்டிங்க முன்னே.

கனகன்: "அதற்காகத் தீவாந்திரசிட்சையை அனுபவித்தாகி விட்டதே!"

சுந்தரி: ஐயோ! பாவம்! என்னுலே உங்களுக்கு இத்தனை கஷ்டம்

(அறைக்கு வெளியே சிறுவன்)

தங்கம்: அப்பா! இதோ தண்ணீர்

(அறைக்குள்ளே சுந்தரி)

சுந்தரி: விடுங்கள், பையன் வந்துவிடுவான்.

(உள்ளே நுழைந்த சிறுவன்)

தங்கம்: அப்பா வலி போயிடுத்து?

சுந்தரி: ஓ! கிலியும் போயிடுத்து.

தங்கம்: நீ, என்ன புலியா, எங்க அப்பா கிலி அடைய. அதுசரி அம்மா! சொல்றேன் சொல்றேன்னே சும்மா இருக்கிறயே, சொல்லம்மா!

இந்த ரசமான நாடகம் அடிக்கடி நடந்தது, ஆனுல் சுந்தரி ஒரு நாளாவது, தங்கராஜனுக்குக் காவேரியிலே ஸ்நானம் செய்த கனகனின் கதையை மட்டும் சொல்லவே இல்லை, எப்படிச் சொல்ல முடியும்!!

# கவித்திறனாய்வு

இ. கி. முத்துசாமி எம்.ஏ.,பி.ம

## கலையுணர்வு

வாழ்வியலைப் பெரிதென மதிக்கும் சமுதாயங்கள் பொருள் செய்தலையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டியங்குகின்றன. இத்தகைய சமுதாயப் போக்கினைப் பொருள் நிலை நாகரிகம் .(Materialistic civilization) என்கிறோம். மேலை நாடுகள் இந்நெறிக் கண் செல்கின்றன எனலாம்.

கீழ்த்திசை நாடுகள் ஆன்மீகத் துறையில் அளவிலா ஈடுபாடு கொண்டு, சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாய் வீட்டின்பம் விழைந்து, கற்பனையிலும் கனவிலும் காலத்தைக் கழித்து, உள்முகமாக உற்றுநோக்கி அனுபூதி நிலைகளில் (Mystical experiences) ஆழ்ந்து நிற்கின்றன. இத்தகைய சமுதாயப் போக்கினை ஆன்மீக நாகரிகம் (spiritualistic civilization) என்கிறோம்.

இவ்விருநிலை நாகரிகங்களுக்கும் கலையுணர்வு பொதுவானதேயாகும். மக்கள் மனவளர்ச்சிக்கும் மன மகிழ்ச்சிக்கும் கலையைப் பயன்படுத்த எண்ணுவது பொருள் நிலை நாகரிகம்; இறைநிலையை அணுகும் கருவியாகப் பயன்படுத்துவது ஆன்மீக நாகரிகம். இருசாராருக்கும் கலை மனித உள்ளத்தைப் பண்படுத்தும் கருவியாகவே காட்சியளிக்கிறது. எனவே மானிட உள்ளத்தின் ஆழமான அடிப்படை உணர்வு கலை எனலாம்.;

## கலைபோற்றும் நிலை

எக்காலத்திலும் கலைகள் மக்கள் உள்ளங்களை மகிழ்வித்துவந்திருக்கின்றன.

"துன்பம் நேர்கையில்
யாழெடுத்து, நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?"

எனப் பாவேந்தர் வினவுவது முற்றிலும் உண்மை. ஆயினும் கலைகளை, இல்லை, கலைஞரை வரிசையறிந்து போற்றி ஆதரிப்போர் ஒரு சிலரே. பாணன் ஒருவன் கலைகளைப் போற்றுவாரின்மை குறித்து,

"சில் செவித்தாகிய கேள்வி நொந்து நொந்து ஈங்கெவன் செய்தியோ பாண?

எனக் கேட்கின்றான். கலை நுட்பங்களை உணர்ந்து கலைஞரைப் போற்றுபவர், சிலரே; ஆதலின் 'சில் செவித்தாகிய' கேள்வி என்று குறிப்பிடுகின்றார். புறநானூற்றுப் புலவர் தம் வாழ்வை

'வரிசைக்கு வருந்தும்
இப்பரிசில் வாழ்க்கை'

என உரைக்கின்றார்.

இலக்கியமெனும் நுண்கலை கவிதை. It is the finest of all arts; the most refined department of Literature' கவிநயம் கண்டின்புறும் மரபு கவிதைத் திறனாய்வு (Poetical criticism) எனப்படும்.

திறனாய்வு என்னும் கருத்து கண்ணோட்டம் ஏதோ இந்த நூற்றாண்டில் மேலை நாட்டிலிருந்து இங்கு இறக்குமதியான சரக்கன்று. ஒரு சில கருத்துக்கள், பார்வைகள் மேற்கிலிருந்து வந்தன எனலாம். தொல்காப்பியர் காலத்திலேயே இலக்கிய ஆராய்ச்சி உயர்நிலை அடைந்திருந்தது. செய்யுளியல், உவமவியல், மெய்ப்பாட்டியல் போன்றவற்றில் அக்காலத்தில் எண் வகைச் சுவைகள், பல்வகை வண்ணங்கள், வனப்புக்களின் ஆராய்ச்சிகளை தெளிவுற எடுத்துக்காட்டுகின்றன கவிதை, காப்பியம், நாடகம், சிறுகதை, உரைநடை போன்ற பல்வகை இலக்கியத் துறைகளைப் பற்றியும் தொல்காப்பியர் நுட்பமாக ஆராய்ந்திருக்கின்றார்.

சங்க காலத்தில்

கவிஞரைக் கவிஞர் போற்றும் மரபு சங்க காலத்திலேயே வேரூன்றி இருந்திருக்கின்றது.

'செறுத்த செய்யுள்
செல்செந் நாவின்
வெறுத்த கேள்வி
விளங்கு புகழ்க் கபிலன்'

எனக் கபிலர் பாராட்டப் படுகிறார். சுருங்கிய சொல்லில்விரிந்த பொருளைச் செறித்துக் கூறுவது அந் நாளைய மரபாகும்.

பண்புடையார் நட்பைப் போற்றுகின்ற இடத்தில் வள்ளுவர்,

'நவில் தோறும் நூல் நயம்
போலும் பயில் தொறும்
பண்புடை யாளர் தொடர்பு'

என்கின்றார். கவி நயத்தைத் தான் நூல் நயமென்று இவ்விடத்தில் குறிப்பிடுகின்றார் வள்ளுவர் என நான் கருதுகின்றேன்.

'உவப்பத் தலைக்கூடி
உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

என்னும் குறட்பாவிலும் கலித்தொகையில் கண்டதுபோல் புலவர் கூடிப் "புதிதுண்ணும்" நிலையை மறைமுகமாகச் சுட்டியுள்ளதாகக் கொள்ள இடமுண்டு.

'வள்ளுவர் பாட்டின்
வள முரைக்கில் வாய் மடுக்கும்
தெள்ள முதின் தீஞ்சுவையும்
ஒவ்வாதாம்'

என்ற திருவள்ளுவ மாலைப் பாடல் பாட்டு வளத்தில் அப்புலவர் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்தும்

இடைக்காலத்தில்...

வாழ்வியலைப் பற்றிய செய்யுள் இலக்கியம் சங்க காலத்தில் செழித்து வளர்ந்தது. சங்க மருவிய காலத்தில் அறநூல்கள் வடிவில் வரட்சி யடைந்தது. பக்தி இலக்கிய காலத்தில் தமிழ்க் கவிதை இசைவெள்ளமென இறை நெறியில் பெருகி ஓடிற்று.

"பண்ணிடைத் தமிழொப்பாய்
பழத்தினிற் சுவையொப்பாய்

எனப் பாட்டிசைத்தனர்.

கவி இன்பத்தை ஆரத் துய்த்தவன் கம்பன்.

'தென்னுண் தேனிற் தீஞ்சுவை
செஞ்சொற் கவி இன்பம்'

என்னும்வரியிலேயே கவி இன்பம் துள்ளுவதைக் காணலாம். கவிதைக்கு மரபு வழி நின்று இலக்

ணம் செய்தான் கம்பன். கோதாவரியின் வெள்ளப் பெருக்கைக் காணுங்கால், தமிழ்க்கவியின் இலக்கணமே கம்பனுக்குக் கண்முன் நிற்கின்றது.


"புவியினுக் கணியாய்
ஆன்ற பொருள் தந்து
புலத்திற் ருகி
அவியகத் துறைகள்
தாங்கி ஐந்திணை நெறியளாவி
சவியறத் தெளிந்து
தண்ணென் ஞெழுக்கமும்
தாங்கிச் சான்ரேர்
கவியெனக் கிடந்த
கோதாவரியினை
வீரர் கண்டார்"

உலகினுக்கே அணிகலனாய் விளங்குவது கவிதை; பரந்த பொருள் செறிந்தது கவிதை; புலன்களின் வாயிலான அனுபவத்தை உரைப்பது கவிதை; அகத் துறையும் ஐந்திணை நெறியும் அமைவது கவிதை; தெளிந்த நீரோட்டத்தை ஒத்தது கவிதை என்பது கம்பன் கருத்தாகும். 'புலத்திற்ருகி' என்றும் தொடருக்கு 'அறிவில் தோன்றுவது' என உரைகூருது ஐம்புலன் வாயிலாக அனுபவிக்கப்படும் இன்பத்தை' என மாற்றுரை கொடுத்துள்ளேன். இது பற்றியே நன்னூலாரும்

'உணர்வினின் வல்லோர்
அணிபெறச் செய்வது
செய்யுள்'

என்ருர். அறிவுநிலையில் பிறப்பதன்று கவிதை; உணர்வு நிலையிலேயே பிறப்பதாகும். Wordsworth கூறுவது போல Emotion, recollected in tranguility.

'சொற்களை' தேர்ந்த கம்பன் தரும் கவிதை இலக்கணம், அது பற்றிய தமிழ் மரபுகளைத் திறனாய்ந்து தெளிந்த ஒன்ருகும்.



கண்ணாடிக் குவளை

மேல் நாட்டிலிருந்து இத் தென்னாட்டில் விலையாகும் தெளிவான ஒருவகை மட் பாண்டத்தைக் கிளாசு என்றும் கோப்பை என்றும் வழங்குகின்றனர். கிளாசு, கோப்பை என்னும் இச் சொற்கள் ஆங்கிலச் சொற்களின் திரிபுகளாகும்; இப் பண்டங்கள் மேல் நாட்டிற் செய்யப் பட்டனவாய் இருப்பதால், இவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்களைத் தமிழர் தாமும் எடுத்தாளுதல், பொருத்தமே யாம். இப் பாண்டங்களையும் கூடத் தமிழறிவு மிக்கவர்கள், கண்ணாடிக் குவளை, பீங்கான் கிண்ணம் என்று தமக்குரிய தமிழ்ச் சொற்களாலேயே வழங்குவர்.

—மறைமலையடிகள்

கம்பன் கவிதையும் அந்நெறி நின்று செஞ்சொற் கவி இன்பத்தை

''யாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து
தேன்பிலிற்றும் நீர்மையதாய்'

என்றும் வாரி வழங்குகின்றது.

கம்பன் காலத்திற்குப் பின்னர் கவிநயத்தைக் கண்டு வரிசையை முடிவு செய்யும் வழக்கம் நின்றுவிட்டது. எண்ணிக்கையை வைத்துக் கவியின் சிறப்பைக் கணிக்கலாயினர்.

'இம்மென்னும் முன்னே
எழுநூறும் ஐநூறும்'

பாடுவதே திறமை எனக் கொள்ளப்பட்டது.

தலபுராண காலத்திலும், சிற்றிலக்கியங்கள் செழித்து வளர்ந்த காலத்திலும் கவிதைத் திறனாய்வும் ஒட்டக்கூத்தர், வில்லிப்புத்தூரார் போன்ற இலக்கிய உலகச் சர்வாதிகாரிகளிடம் சரண் புகுந்தது. பொருளணிகளில் புலவர் சிந்தனை செலுத்தாது யமகம், திரிபு, அந்தாதி போன்ற சொல் அணிகளில் செந்தமிழைச் சிறை வைத்தனர். கவிநயம் காண்டல் என்பது வெறும் சொற்சிலம்பம் அடிப்பது என்ற இழிநிலைக்கு இறங்கியது.

**தற்காலத்தில்...**

சங்க இலக்கியக் கண்டுபிடிப்பாலும், மேலை நாட்டு இலக்கியக் கொள்கைகள் நுழைவாலும் கவிதைத்துறையில் ஏற்பட்டது போலவே, கவித் திறனாய்வுத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

'அணிசெய் ஆயிரம்
காவியம் கற்பினும்,
ஆழ்ந்திருக்கும் கவியுளம்
ஓர்கிலர்'

எனப் பாரதி பாடினார். பற்பல காவியங்களை முறையாகப் பயின்றும், ஆழ்ந்து காணப்படும் கவியுள்ள நிலையை உணர்வது கடினம்.

இக் கருத்தையே ரசிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் மிகவும் வலியுறுத்தி தமிழ்ப் புலவர்களுக்குக் கவிதை பற்றி ஒன்றும் தெரியாது என்று பிறர் மனம் புண்படப் பேசினார் கவித் திறனாய்வு தமிழ்ப் புலவர் உட்பட அனைவருக்கும் அரிய செயல் என்று கூறினால் தவறில்லை.

கவித்திறனாய்வில் டி. கே. சி. ஒரு திருப்பத்தையும் எழுச்சியையும் ஏற்படுத்தினார் என்பது தெளிவு கவிதைக்கும் செய்யுளுக்கும் உள்ள வேறுபாடு (The distinction between poetry and verse) அன்னாது ஆய்வுரைகளால்தான் தமிழகத்தில் தற்போது நன்கு உணரப்படுகின்றது. இருப்பினும் கவிஇன்பத்தில் டி. கே. சி. கொண்ட ஈடுபாடு வெறியாக மாறிக் கம்பன் பாட்டு பத்தாயிரத்தில் ஏழாயிரத்தை வெட்டச் செய்தது என்றால் மிகையன்று. தீபத்தை வைத்துக் கொண்டு வழிகாட்டவும் செய்யலாம், வீட்டையும் கொளுத்தலாம். வழிகாட்டுவதாக நினைத்துக் கொண்டு வீட்டைக் கொளுத்தினாரோ என ஐயம் எழுகின்றது.

இன்று கவிநயம் காணும் ரசிகர்களினும் கவிஞர்கள் அதிகமிருப்பதாகத் தோன்றுகிறது. கவியரங்கங்களின் வாயிலாகக் கவியின்பம் இடைக்காலத்தைப் போல் சொற்சிலம்பமாக மாறிவிடுமோ என்னும் அச்சம் பிறக்கின்றது. புதுக் கவிதைகளின் வாயிலாகக் கவிதை வெறும் விடுகதையாய் முடிந்துவிடுமோஎன்ற எண்ணம் எழுகின்றது. கவித் திறனாய்வாளர்களும் கவிஞர்களும், சுவைஞர்களும் செந்நெறிக்கண் சிந்தையைச் செலுத்த வேண்டுவது இன்றியமையாத கடமையாகிவிட்டது.

# சிறந்த நூல்கள்

**வ. சுப. மாணிக்கம்**

| | |
|---|---|
| கம்பர் | 4-00 |
| இலக்கிய விளக்கம் | 3-00 |
| உப்பங் கழி | 4-50 |
| ஒரு நொடியில் | 4-00 |

**கி. வா. ஜெகந்நாதன்**

| | |
|---|---|
| கவி பாடலாம் | 5-00 |
| வீரர் உலகம் | 3-00 |

**ஜி. சுப்பிரமணியபிள்ளை**

| | |
|---|---|
| மாணிக்கவிருந்து | 7-00 |
| கம்பர் விருந்து | 3-00 |

**மயிலை. சீனி. வேங்கடசாமி**

| | |
|---|---|
| நுண்கலைகள் | 3-00 |

**ப. கோதண்டராமன்**

| | |
|---|---|
| உலகப் பெருங் கவிஞர்கள் | 4-50 |

**இரா. சாரங்கபாணி**

| | |
|---|---|
| பரிபாடல் திறன் | 6-00 |

**மு. வை. அரவிந்தன்**

| | |
|---|---|
| உரையாசிரியர்கள் | 15-00 |

**சோம. இளவரசு**

| | |
|---|---|
| இருபது நூற்றாண்டுகளில் தமிழ் | 3-00 |
| திருவருணைக் கலம்பகம்—உரை | 3-50 |

**ச. மெய்யப்பன்**

| | |
|---|---|
| மும்மணிகள் | 3-00 |

மணிவாசகர் நூலகம்
சிதம்பரம்

# கும்பாபிஷேகம்

"மணி எட்டாயிடுத்தேடா... இனிமெ நான் எப்ப போயி திரும்ப வரது?...ஏய் அம்பி, அம்மாவை வேலையைச் சுருக்கா முடிக்கச் சொல்லுடா...அப்பப்பா காலங் கார்த்தாலே வெயில் உக்கிரமான்னு எரிக்கிறது..."

பஞ்சாமிக் குருக்கள் (பஞ்சாபகேஸ்வரக் குருக்கள் என்பதன் குறுக்கல் விகாரம்) குளித்து முழுகி மடி ஆசாரத்தோடு தயாராக நின்று கொண்டிருந்தார். ஈரம் புலராத முடி ஒரு பனங்காயளவு முடியப்பட்டுத் தோளில் புரண்டது. தணலைக் குளிப்பாட்டி வைத்தாற்போன்ற அவரது கரிய திருமேனியில் ஆங்காங்கே திருவெண்ணீறு துலாம்பரமாகப் பளிச்சிட்டது.

சீஷப்பையன் அடுக்களையிலேயிருந்து நைவேத்யத்துக்கு வேண்டிய பொங்கல் பிரசாத்தை சிறு டிபன் பாக்ஸில் வைத்து, சாயத் துணியால் மூடி, கொண்டு வந்து எதிரே வைத்தான். பின் ஆளோடிக்குப் போய் சுவரோரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வந்து முற்றத்தில் ஸ்டாண்டு போட்டு நிறுத்தினான். பஞ்சாமிக் குருக்களைப் போலவே அதுவும் பழைய தலைமுறையைச் சேர்ந்த சைக்கிள்.

பஞ்சாமிக் குருக்கள் பெரிய குடும்பி. ஐந்தாறு பிள்ளைகள். புரோகிதம்தான் தொழில், அந்த நான்கைந்து மைல் சுற்று வட்டாரத்தில் எல்லாக் கோவிலுக்கும் அவர்தான் மணியடிக்கிறார். ஒவ்வொரு கோவிலுக்கும் சம்பளமாக ஒரு கலம் நெல்லும், பதினைந்து ரூபாயும் வருகிறது. இதை வைத்துக் கொண்டுதான் 'ஆட்டைத் தூக்கிக் குட்டியிலே போட்டு, குட்டியைத் தூக்கி ஆட்டிலே போட்டு' என்பது போல என்னென்னவோ செய்து பகீரதன் மேலே இருந்த கங்கையைக் கீழே கொண்டுவந்தது மாதிரி, இவர் அதல பாதாலத்திலே கிடந்த தன் குடும்பத்தை மேலே தூக்கி விட்டார்.

மூத்த பையன் பிலாய் உருக்குக் கம்பெனியில் வேலை பார்க்கிறான். அடுத்த பையன் மாதுங்காவில் இருக்கிறான். தோல் ஏற்றுமதி இறக்குமதி கம்பெனியில் மேனேஜர் வேலை, மூன்றாவது மகன் திருவையாற்று வேதப் பாடசாலையில் புரோகிதம் படிக்கிறான். எல்லாப் பிள்ளைகளுக்குமே அவரவர்களுக்கு ஏதோ வழி செய்து—கைகாட்டி விட்ட பிறகும் கூட அவர் கோவிலுக்கு மணியடிப்பதை விடவில்லை.

பஞ்சாமிக்குருக்கள் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு புறப்பட்டார். உஞ்சவிருத்தி செய்து பிழைக்கும் ஒரு மொட்டைப் பண்டாரம் பட்டினத்தார் பாட்டொன்றைத்

தப்பும் தவறுமாகப் பாடிக் கொண்டு அப்போதுதான் எதிரே வந்தான். அவனைக் கண்டதும், "பர்வதம்...அடியே பர்வதம்" என்று குரல் கொடுத்தார்.

"உன்னைத்தாண்டி... இந்தச் சாமியாருக்கு ஏதாச்சும் போட்டுப் போகச்சொல்லு" என்று சொல்லிவிட்டுச் சைக்கிளில்ஏறி உட்கார்ந்தார். அதற்குள் அடுத்த தெரு அம்மாக் கண்ணுக் கிழவி தன் பேரனை அழைத்துக்கொண்டு எதிரே வந்தாள்.

"சாமி...பையனுக்கு 'மொறைக் காய்ச்சல்' ஏதோ 'காத்துக் கறுப்பு' தோஷம் போலிருக்கு; வெரண்டு வெரண்டு அழறான்... உடம்பு நெருப்பாக் காந்துது..." என்று சொல்லிவிட்டு முந்தானையால் கண்ணைக் கசக்கிக்கொண்டு நின்றாள்.

பஞ்சாமிக் குருக்கள் கீழே இறங்கிப் பையனைத் தொட்டுப் பார்த்தார். மடியில் இருந்த விபூதிப் பைக்குள் கைவிட்டுக் கொஞ்சம் விபூதியை எடுத்துக் கண்ணை மூடிச் சற்றே தியானித்தவாறு, அவனுடைய நெற்றியில் இட்டுக் கையிலும் கொஞ்சம் கொடுத்தார். "வீட்டுக்குப்போயி இன்னொரு தடவை நெத்தியிலே இட்டுக்கோ! ஈச்வரன் க்ருபையாலே எதுவா இருந்தாலும் சொஸ்தமாயிடும்" என்றார் பின் அம்மாக் கண்ணுக் கிழவியிடம் ஏதோ சிறு கைவைத்தியமாக சிலவற்றை விளக்கினார்.

தெருவில் அன்னக் காவடிப் பண்டாரத்துக்குப் பிச்சை போட்டுவிட்டுத் திரும்பிய அய்யரின் ஸகதர்மணி அந்தக் காட்சியைப் பார்த்ததும் தோள்பட்டையால் முகத்தைஇடித்துக்கொண்டு, "ஆசாரமாம்... அநுஷ்டானமாம் ... பூஜைக்குப் போற நேரத்திலே எவனோ ஒரு பறப் பிள்ளையைத் தொட்டுத் தீண்டிட்டுப் போறாரே...ஏன்தான் இந்தப் பிராமணனுக்கு இப்படிப் புத்திக் கெட்டுப் போறதோ?" என்று உள்ளூறச் சலித்துக்கொண்டாள்.

பஞ்சாமிக் குருக்கள் தம் வாகனத்தில் ஆரோகணித்தபடி தம் திக்விஜயத்தைத் தொடங்கினார்.

ஐயர் கோயிலுக்கு மணியடிக்கும் குருக்கள் மட்டுமல்லர். அந்த வட்டாரத்தில் உள்ள எல்லாரோடும் ஒன்றிப் போய்விட்ட ஒரு விநோதமான பிரகிருதி. யார் வீட்டில் கலியாணம் கருமாதி என்றாலும் இவர்தான் முன்னின்று நடத்துவார். ஊர்ப் பொதுக் காரியங்களிலெல்லாம்— கலெக்டருக்கு மனுக் கொடுப்பதில் இருந்து, ஊர்ப் பொதுக் குளத்தை யாருக்குப் 'பாசிக் குத்தகை' விடுவது என்பது வரை—அவர் தலையிட்டு முடித்து வைப்பார். அவரைப் பற்றி இரண்டு விதமான அபிப்பிராயங்கள் எப்போதுமே இருந்து வந்தன. சில பேர், "பஞ்சாமிக் குருக்களா? பிராமணோத்தமராச்சே அவர்... அவர் இருக்கறதினாலேதான் இந்தப் பாழப் போன ஊர்லே கூட தவறாமல் மழை பெய்யுது" என்பார்கள். இன்னும் சிலரோ "அவரா...? அவர் என்ன பிராமணன் மாதிரியா நடந்துக்கறார்? 'தீட்டு' 'தொடக்கு' எதுவுமே இல்லை; தாலுக்கா ஆபீஸ் டவாலிச் சேவகன் மாதிரி பூணூலை மாட்டிகிட்டா எல்லாம் ஆயிடுச்சா.. என்னவோ கர்மாந்திரம்" என்பார்கள். பஞ்சாமிக் குருக்கள்

எழில்முதல்வன்



இதைப்பற்றியெல்லாம் கவலைப் பட்டதில்லை. அவருக்குத் தன் நிஷ்காமிய கர்மம்தான் குறி.

உப்பு மண்ணை வாரி வந்து கண்ணிலே கொட்டும் வைகாசி மாசத்து வறண்ட எதிர்க் காற்றையும் பொருட்படுத்தாமல் தென்னடார் கிராமத்தை நோக்கி ஐயர் சைக்கிளில் பறந்து கொண்டிருந்தார். கிராம எல்லைக்குள் நுழைந்தபோது வடிவேலுத் தேவர் எதிர்ப்பட்டார். முள்ளி யாற்றுப் படுகைக்குக் கீழ்ப்புறமாக இருந்த அவரது பங்கில், மராமத்து வேலை நடந்துகொண்டிருந்தது. வயல் வரப்பில் குடையைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தார் தேவர்.

''யாரு குருக்களய்யாவா? வரணும் வரணும்'' என்று வரவேற்றார் தேவர். பின் அவரது க்ஷேமலாபங்களைக் கூட விசாரிக்காமல், ''நம்ம கோயிலுக்கு இந்த வருசமாவது கும்பாபிஷேகம் நடத்தவேண்டாமா? ஊர் நாட்டாண்மைக் காரனெல்லாம் தலைக்குத் தலை கட்சி கட்டிகிட்டு நவக்கிரமா நிக்கிறுனுக. அவனவன் வப்பாட்டி வீட்லே போயி படுத்துகிட்டான். சாமியைப் பத்தி யாரும் கவலை படலே. நீங்கதான் சாமி முயற்சை பண்ணி திருப்பணியை நடத்தி வைக்கணும்'' என்றார்.

''நீங்களெல்லாம் பெரியவாளாச் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டியிருக்க-இந்த ஏழைக் குருக்கள் என்ன பண்ணிட முடியும்...?''

''இந்தப் பாழும் பயல் ஊரிலே இது நடக்குமா சாமி? சுண்டைக்காய் பொருத காரியத்துக்கு சுப்ரீம் கோட்டிலே அப்பீல் பண்ணுவான் அடுத்தவன் பொண்டாட்டியைக் கையைப் புடிச்சி இழுத்து இழவு கொண்டாடிட்டு அதுக்காக ஆயிரம் ஐநூறுண்ணு செலவு பண்ணி வக்கீல் வச்சி வாதாடுவான் இந்த மானங்கெட்ட பயகளுக்கு சத்காரியத்திலே ஏதுசாமி கவலை?'' என்று சொல்லிவிட்டு வாயிலிருந்த வெற்றிலைச் சாற்றை யார்மீதோ காறி உமிழ்வது போலத் துப்பினார்.

தேவரய்யா... ஒரு ஸ்லோகம் சொல்றேன் கேளுங்கோ .. ஆதி சங்கர பகவத்பாதாள் சொல்றார் : 'ஆத்மா நம் மானுஷம் ப்ராப்ய, ப்ராப்ய தத்ராபி பௌருஷம், இத கோந்வஸ்தி மூடாத்மா, யஸ்து ஸ்வார்த்தே ப்ரமாத்யதி!—அதாவது மாயா கல்பிதமான இந்த

ப்ரபஞ்சத்திற்கு அடிமையாகி விட்டால் நமது அரிதாகிய மானிடப் பிறவியே வீணாகிப் போகும் என்கிறார் சங்கரர், நம்ம ஊர் தேவமார்கள் இப்படி மாயையிலே விழுந்து கிடக்கறாளேன்னு நேக்கும் மனசு அடிச்சிக்கத்தான் செய்யுது. தூங்கறவாளே எழுப்பிடலாம். தூங்கறாப்போலே நடிக்கறவாளே எழுப்ப முடியுமா சொல்லுங்கோ?'' என்றார் பஞ்சாமிக் குருக்கள்.


தென்னடார்க் கிராமம் சிறிய கிராமம் தான்; அங்கு எத்தனை குடும்பங்கள் இருந்தனவோ அந்த அளவுக்குக் கட்சிகளும் இருந்தன. ஒவ்வொருவரும் தன்னை விட்டால் பெரிய மனிதன் யாருமில்லை என்று நினைத்துக் கொண்டு நடப்பவர்கள் கையில் சேர்ந்தாற்போல் ஐம்பது ரூபாயைப் பார்த்துவிட்டால் போதும் அவனுக்குத் தலைகால் தெரியாது எவனுக்காவது சவால்விட்டு,'விடு வேணா பார்க்கலாம்' என்பான். ஊர் மக்களுக்கிடையே இருந்த உட்பூசலால் அந்த கிராமத்தில் கோயில் காரியங்கள் புறக்கணிக்கப்பட்டே கிடந்தன. அந்த ஊர்ச் சிவன் கோயிலில் நெருஞ்சியும், எருக்கும் படர்ந்து கிடந்தன. 'ஊர்மக்களையெல்லாம் ஒன்று சேர்த்துக் கும்பாபிஷேகம்நடத்தி விடவேண்டும்' என்பது பஞ்சாமிக் குருக்களின் ஆசை கும்பாபிஷேகத்தை முன்னிட்டாவது நாட்டாண்மைக் காரர்களிடத்தில் ஒற்றுமை பிறக்காதா என்ற சபலம் அவருக்கு உண்டு.

வடிவேலுத் தேவரும் பஞ்சாமிக் குருக்களும் இதற்கு முன் செய்த சில முயற்சிகள் தோற்றுப் போய்விட்டன. ''மணியக்கார ராமசாமித் தேவன் கோயில் வாசல்லே அடியெடுத்து வெச்சான்னா திருவிழாவே நடக்காது என்றார் டிரஸ்டி பெரியதம்பித் தேவர். ''பெரிய தம்பித் தேவனை ஒழிச்சிக் கட்டிட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன். இல்லேன்னா நான் ஒருத்தனுக்குப் பொறந்தவன் இல்லே'' என்று சூள்உரைத்தார் ராமசாமித்தேவர். ''குதிரை வாகன மண்டகப்படி ரெண்டாம் கரையான்களுக்குக் கிடையாது; எங்களுக்குத்தான் உண்டு'' என்பது மற்றொரு கட்சி, ''ரிஷப வாகனத்தன்று இடும்பாவனம் குஞ்சம்மாள்தான் சதுர் ஆடவேண்டும். வேறு எவளும்கோயில் வாசலுக்கு வரக்கூடாது''-என்பது இன்னொரு கட்சி. இந்தக் குழப்பத்திற்கு முடிவுகட்டவேண்டும என்பது தான் பஞ்சாமிக் குருக்களின் கவலை.

வடிவேலுத் தேவரும்பஞ்சாமிக் குருக்களும் இதைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தனர். அப்பொழுதுதான் தலையாரி ரெங்கன் அந்த வழியாக வந்தான். தலையிலே கோணிச் சுருளும் கையில் மரக்காலும் இருந்தன. ரெங்கன் இரண்டு பேருக்கும் பெரிய கும்பிடாகப் போட்டுவிட்டுக் குருக்களைப் பார்த்து, ''சவுரியங்களா சாமி? பாத்து ரொம்ப நாளாச்சி!'' என்று பணிவன்போடு விசாரித்தான்.

''ஏண்டா ரெங்கா எப்படியிருக்கே? பொண்டாட்டி முழுகாம இருந்தாளே...புள்ளை பெத்துட்டாளா? என்ன புள்ளை?'' என்றார்.

''இல்லீங்க சாமி...இதுதான் மாசம்' என்று நாணத்தோடு சொன்னான் ரங்கன்.



"அடே அபிஷ்டு—அபிஷ்டு... என்னடா இப்படி வெக்கப் படறே...இதுக்கா வெக்கப்பட றது...அதுசரி...உனக்கு எத்தனை கொழந்தைங்க...!"

"நாலு சாமி..."

"போதும் போதும்! இத்தோட நெறுத்திக்கோ. அதுக்கு மேலே போனு போஷிக்கறது கஷ்டம்... என்றார் குருக்கள்.

ரெங்கன் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான். வடிவேலுத் தேவரும் குருக்களும் அடுத்தவாரமே ஊர்ச்சபையைக் கூட்டுவது என்ற முடிவோடு பேசி முடித்தனர்.

ஒரு வாரம் சென்றது—

ஊர்ச்சபை கூடிற்று; பலத்த வாதப் பிரதிவாதங்களுக்குப் பிறகு எப்படியோ ஒரு முடிவுக்கு வந்தார்கள். கைகலக்கும் அளவுக்கு நிலைமை முற்றியபோதெல்லாம் பஞ்சாமிக் குருக்கள்தான் தன் சாமர்த்தியத்தால் அனைவரையும் வழிக்குக் கொண்டுவந்தார். மணியக்கார ரங்கசாமித் தேவர், டிரஸ்டி பெரியதம்பித் தேவர், இரண்டாம் கரை மூன்றும் கரை நாட்டாண்மைகள் எல்லாரும் ஒருமித்த முடிவுக்கு வந்தனர். கும்பாபிஷேகத் தன்று இரவு இடும்பாவனம் குஞ்சம்மாளைச் சதுர் ஆட வைப்பது என்ற பிரச்சினையைத் தவிர மற்ற எல்லாப் பிரச்சினைகளுமே கடுமையான பிரதிவாதங்களுக்குப் பிறகுதான் தீர்வு கண்டது.

அந்த வட்டாரத்தில் பத்துமைல் சுற்றளவுக்கு யாரைப் பார்த்தாலும் தென்னடார்க் கிராமத்துக் கோயில் கும்பாபிஷேகத்தைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள் கன்னுங் கடைகள், பலகாரக் கடைகள், காப்பிக் கடைகள் எல்லாம் கோயிலைச் சுற்றித் திடீர்த் திடீரென்று முளைத்தன. குடைராட்டினம், 'வைராஜா வை' சூதாட்டம் இதற்கும் குறைவில்லை. அலுமினிய வெண்கலக் கடைகளும் வந்து சேர்ந்தன.

கும்பாபிஷேகத்தன்று காலை ஆறு மணிக்கே தென்னடார்க் கிராமத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி விட்டனர். காலையில் சரியாக உதயாதி நாழிகை பத்துக்கு கும்பாபிஷேகம் நடக்கும் என்று பத்திரிகை அடித்து அனுப்பியிருந்தார்கள்.

கோயில் வேலையைக் கவனிப்பதற்காகத் திருவையாற்றிலிருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப் பட்டிருந்தனர். வேதபாட சாலையில் புரோகிதம் படித்துக் கொண்டிருந்த பஞ்சாமிக் குருக்களின் இளைய புத்திரன் கிட்டாவும் வந்திருந்தான்.

கும்பத்தை யாகசாலையிலிருந்து கும்ப உத்தாபனத்துக்காக எழுந்தருளச் செய்தார்கள்.

ஆச்சாரியார், சிவதீட்சைபெற்ற இரு பரிசாரர்களை அழைத்து, பட்டு, உருத்திவிக்கம், மாலை முதலியவற்றால் அவர்களை அலங்கரித்து, பிரதான கும்பம் வர்த்தனி கும்பம் இரண்டினையும் அவர்கள் தலைமேல் வைத்தார். மூர்த்தியர்கள் எண்மரும் அஷ்ட வித்தியேசுவர கும்பங்களை எடுத்துவர, வேத கோஷங்களுனும், தேவார திருவாசகங்கள் முதலிய திருமுறைகள் ஒலிக்க, வாத்தியங்கள் முழங்க, கொடி குடை சாமரங்கள் முதலிய சகல ராஜ உபசாரங்களும் நிகழ, கூர்ச்சத்தினால் பிரதான கும்பத்தைத் தொட்டவாறு, மூலமந்திரத்தை உச்சரித்துக் கொண்டு வீதிவலத

வந்தனர். இவ்வாறு வீதிவலம் வரும்போதுதான் ஸ்தூபி கும்பத்தைப் பஞ்சாமிக் குருக்கள் எடுத்துக் கொண்டுபோய் விமானத்தின் மேலிருக்கும் ஸ்தூபியை அடைந்து அபிஷேகிக்க வேண்டும். வீதிவலம் வரும் ஆசாரியர்கள் விமானத்தில் ஏறுவதற்கு சாரங்கட்டி இருக்கும் இடத்தை அடையும் போதுதான் யாருமே எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்தது.

சாரங்கட்டியிருந்த அந்த இடத்திற்கு அருகாமையில் சுமார் பத்தடி தூரத்தில் ஒரு பலகாரக் கடை இருந்தது. அந்தக் கடையின் வாசலில் ஒரு மண்தொட்டி நிறையத் தண்ணீர் நிரப்பிவைக்கப்பட்டிருந்தது. ஜனக்கூட்டத்தின்நெரிசலை ஊடுருவிக்கொண்டு எங்கேயோ கிடந்த சர்வ விகாரமான ஒரு சொறிநாய் ஓடிவந்து, அந்தத் தொட்டியில் வாயை வைத்து நக்கிற்று, ஆசாரிய திருக்கூட்டத்தின் முன்னே புனிதத் திருக்கோலத்தோடு பக்தியே வடிவாக வந்துகொண்டிருந்த பஞ்சாமிக் குருக்களின் கண்களில் அந்தக் காட்சி தற்செயலாகப் பட்டுவிட்டது.

அதே நேரத்தில் பலகாரக் கடைக்காரன் சொறிநாயைக் கண்டு முகத்தைச் சுளித்து, அருவருப்பு கொண்டவனாய் பலகாரம் நிறுப்பதற்காகக் கையிலே வைத்திருந்த இரும்பு எடைக்கல்லைக் குறிபார்த்து நாயின்மேல்வீசினான். பின்புறக் காலிடுக்கில் வாலை நுழைத்துக்கொண்டு, அவசரக் அவசரமாய் தண்ணீரை நக்கிக் கொண்டிருந்த அச்சொறிநாய் எதிர்பாராத தாக்குதலால் “வீல்” என்று பரிதாபமாகக் கத்திக் கொண்டு அப்பால் போய் விழுந்தது.

தன் காலடியில் என்னைக் காப்பாற்று’ என்பது போல் வந்து

---



### எவ்வளவு சொன்னாலும்

ஓர் ஊரில் ஒரு பெண்மணி இருந்தாள். அவளுக்கு நிறையச் சொத்து இருந்தது. அவள் நிறைந்த செல்வத்தோடு நிறைந்த கல்வியும் உடையவள். அவள் கீதையையும் படித்துத் தன் அறிவை மேம்படுத்திக்கொள்ள விரும்பினாள். அதனால் அவள் ஓர் அறிக்கை வெளியிட்டாள்.

“கீதையின் உட்பொருளை எனக்கு விளக்கி உரைப்பவர்களுக்கு என் சொத்தில் பாதியைத் தருவேன்” என்று அவள் அறிவித்தாள்.

இந்த அறிவிப்பைக் கேட்டு அவள் கணவன் “இது என்ன மூடத்தனமான செயல்!” என்று அவளைக் கடிந்து கொண்டான்

‘கவலைப்படாதீர்கள்! அவ்வளவு எளிதாக நம் சொத்தை இழந்துவிடமாட்டேன். யார், எவ்வளவு விளக்கிச் சொன்னாலும் நான் புரிந்து கொள்ளமாட்டேன்’ என்று கூறி அவள் தன் கணவனை அமைதிப்படுத்தினாள்.

—வங்க முதல்வர் சித்தார்த்தர் சங்கர் ரே சொன்ன கதை.

---

விழுந்த சொறிநாயைப் பஞ்சாமிக் குருக்கள் பரபரப்போடு நோக்கினார், குருக்களின் நெஞ்சம் நீராளமாய் நெகிழ்ந்தது. ஊற்றுக்கண் திறந்தாற்போல கருணை பெருகியது. 'எல்லாஉயிர்களிலும் நானே இருக்கிறேன்' என்ற குரல் அசரீரியாக அவர் அகச்செவியில் ஒலித்தாற்போல் உணர்ந்தார். விழிகள் பிறழ, நாக்கை நீட்டிக் கொண்டு, பரிதாபமாக மல்லாந்து விழுந்து கிடக்கும் நாயை ஒரு தாயைப்போல் நோக்கினார்

கும்ப நீரை எடுத்து, மண்டியிட்டுக் குனிந்தவாறே நாயின் வாயில் பயபக்தியோடு சொரிந்தார்.

ஆம்! அவரைப் பொறுத்தவரை கும்பாபிஷேகம் முடிந்துவிட்டது.

“அபச்சாரம்! அபச்சாரம்!!” என்ற குரல் ஆசாரிய திருக் கூட்டத்திலிருந்து ஒலித்தது. செய்தி காட்டுத் தீ போல் எங்கும் பரவியது.

---



### இது ஒரு குடும்பம்

சான்றோர்களுக்குக் கற்புடைய மனைவி போன்றது கல்வி. அந்தக் கற்புடைய மனைவியிடம் பிறந்த சிறந்த பிள்ளைதான் கவிதை. இந்தச் சான்றோர் குடும்பத்துச் செல்வம் அவர்களுடைய சொல் வளமே.

—குமரகுருபரர்

“அந்தப் பாப்பானைப் பிடிச்சிப் பந்தற்காலிலே கட்டுடா!” என்று ஆணையிட்டார் மணியக்காரர்.

“இந்தக் கறுப்புப் பாப்பானுக்கு என்ன நெஞ்சழுத்தம் இருந்தா இப்படிச் செய்வான்? தெய்வ நிந்தனை பண்ணினான் ஊரே சுடுகாடாயிடுமே” என்றார் ஒருவர்.

“ஊர்ச் சோத்தைத் தின்னுட்டு குருக்கள் கொழுப்பெடுத்து அலையுறான்” என்று மற்றொரு குரல்.

பஞ்சாமிக் குருக்களைச் சொறி நாயை இழுத்துவருவது போல் இழுத்து வந்து பந்தற்காலில் கட்டினார்கள் சிலர். அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டைகளைப் போலத் திசைக்கொருவராகப் பிரிந்து நின்ற நாட்டாண்மைக் காரர்கள் இந்த விஷயத்தில் ஏகோபித்து நின்றனர்.

இரண்டாம் கரை நாட்டாண்மைக்காரர் தலையாரி ரெங்கனின் கையில் சாட்டையைக் கொடுத்து “உம்... அடிடா அந்த அயோக்கியனை” என்று ஆக்ரோஷமாகக் கத்துகிறார். தலையாரி ரெங்கன் சில விநாடிகள் கைநீட்டத் தயங்குகிறான். செம்மறி ஆடு தலையைச் சிலுப்புவது போல அவர் சற்றே உறுமுகிறார். ரெங்கன் ஊராரின் ஆணைக்குக் கட்டுப்பட்டுச் சாட்டையைக் கையில் வாங்குகிறான்.

திருப்பணி நடக்கிறது...

திருவையாற்று வேதப்பாடசாலையில் புரோகிதம் படித்துக் கொண்டிருந்த பஞ்சாமிக் குருக்களின் இளைய புத்திரன் கிட்டா அலறித் துடிக்கிறான்... ஓடிவந்து தடுக்கிறான்.

பஞ்சாமிக் குருக்கள் நாஸ்திகராம்!

அவர் நாஸ்திகரா?

தமிழகத்தின் சிறப்புமிக்க

**சுகுணா ஸ்டீல் பீரோக்கள்**
**டேபிள்கள்**
**கட்டில்கள்**
**சோபா கம் பெட்கள்**

குறைந்த விலையில், தங்களின் மனமகிழ்விற்கு
ஏற்றவாறு தருகின்றோம்

**உயர்ந்த தரமும்,**
**உன்னதமான வேலைப்பாடுகளுடன்**
**நீடித்து உழைத்திட**
**எங்களது சுகுணா பர்னிச்சர்களை**
**வாங்கிப் பயன் பெறுவீர் !**

★
★★
★★★

# சுகுணா எண்டர்பிரைசஸ்

**1/21, தெற்கு கெனல் பேங்க் ரோடு,**
(மந்தவெளி பஸ்நிலையம் அருகில்)
**சென்னை-28**
தொலைபேசி : 71856

# சங்கொலிக்கும் என் தமிழே

உள்ளத்திலே இருந்து புறப்பட்டு உணர்ச்சியிலே மூழ்கி, உற்சாகம் கரைபுரள வெளிவருகின்ற உண்மை, கற்பனை ஆடை கோர்த்து, கருத்து அணி பூண்டு, கவர்ச்சித் திறன் கொண்டு அனைவரின் கருத்தையும் ஈர்த்து இழுக்கவல்லது எதுவோ அதுவே கவிதை.

வாள் சாதிக்க முடியாததை வார்த்தையை ஆயுதமாகக் கொண்டவன் சாதித்திருக்கிறான். வேல் தாக்கி வீரம் விளைத்து சாதிக்க முடியாததை வேலனைய சொல்கொண்டு வீழ்த்துகின்ற வேலையைச் செய்பவன் கவிஞன். சட்டங்கள் போட்டு மாற்ற முடியாததை சதிராடும் சொற்களாலே சாதித்துக் காட்டக் கூடியவன் கவிஞன்.

ஏடெடுத்தவனெல்லாம் கவிஞனாக முடியாது. வாள் தூக்கியவனெல்லாம் வீரனாக முடியாது. தோள் குலுக்கியவனெல்லாம் நடிகனாக முடியாது.

அதைப் போல தமிழை உயிராக கொள்ளாதவனெல்லாம் கவிதை உலகில் நிலையான இடத்தைத் தேடிக்கொள்ள முடியாது. தமிழ் மூச்சாகவும், பேச்சாகவும் உயிர்ப் பொருளாகவும்,ஒளித்திரளாகவும் உள்ளத்தில் நடமிட வேண்டும்.

"கன்னித் தமிழ்
எங்கள் வண்ண மொழி
இதன் காலமறிந்தவர்
யாருமில்லை"

என்று கூறும் நெஞ்சம் நம் கவியரசு கண்ணதாசன் அவர்தம் நெஞ்சம்.

தமிழ்எப்படிப்பட்டது? வாயுள்ளவருக்கெல்லாம் வள்ளல் போல் வார்த்தையினை அள்ளித் தருவது செயுடையவர்கள் வீட்டில் செழித்துத் தழைப்பது. இதனை நம் கவியரசர் கூறும் போது—

"வாயுடையார்க் கெல்லாம்
வார்த்தை தரும் வண்டமிழே
செயுடையார் வீட்டில்
செழித்து வரும் செந்தமிழே"

என்று பாடிப் பரவுகின்றார்.

காதற் பெண்கள் கனியிதழில் முத்தமிடும் போது எழுகின்ற வண்ண ஒலி கூட தமிழ் என்று காணுகிறார்—

"நேயக் கலவி மயக்கத்தில்
நெஞ்சுருக
மாய விழிக்காரி வண்ணக்
கனியிதழில்
முத்தமிடும் போதும் மூழ்கித்
தனை மறந்து
சத்தமிடும் போது
சங்கொலிக்கும் என் தமிழே!"

என்கின்றார்.

இந் நாளில் யாப்பிலக்கணமில்லாத பாடலாக யார் வடித்துத் தந்தாலும் அதனை மா பலா, வாழை போன்று எண்ணுவது தமிழ். காலமெல்லாம் வாழுவது தமிழ்.

எங்கெங்கே வளை ஒசை கேட்கின்றதோ அங்கெல்லாம் கொலுவிருப்பது தமிழ். அதனை—

"ஆயர்கைப் புல்லாங் குழலில்
அமைந் தெழுந்து
தாயர்கை வளையலிலும்
சலங்கையிலும் குடிபுகுந்து
கோயில் மணி ஓசையிலே
கொஞ்சித் தவழ்ந்துவந்து
சேயின் மணி வாங்கச்
சிறகை விரித்தெழுந்து
பூஞ்சிட்டுப் போல்வான்
புறத்தே பறந்து வந்து
அப்பனுக்குக் கணக்காகி
ஆச்சியர்க்குப் பட்டாகி
ஒப்பரிய தாயார்க்கு
ஒப்பாரிக் கலையாகி
தப்பிப் பிறந்து வந்த
தங்கமெனத் தாய் உரைத்த
இப்பாவிக் கவிமகனை
ஈன்றெடுத்த செந்தமிழே!"

வானின்றிப் பயிரில்லை; ஊனின்றி உயிரில்லை. அதைப் போல தமிழ் இல்லையேல் நானில்லை என்கிறார் —

"நீயில்லையேல்
நான் இல்லை
நில மில்லையேல்
பயிரில்லை
தாயுனக்கோர்
வாழ்த்துத் தருகின்றேன்
நீ வாழ்க!"

என்று வாழ்த்துகின்றார்.

உருவான எழுத்துக்கு உயரிய விளக்கத்தை உவமை நயம்படக் கூறுகின்றார்.

ஒரு கன்னிப் பெண் உட்கார்ந் திருப்பது போல் இருக்கிற எழுத்து "க"

வைகறையிலே எழுந்து உடற் பயிற்சி செய்யும் இளைஞனைப் போல் இருக்கிறதாம் "ங"

உறையிலே இருந்து வெளிக் கிளம்பிய வாள் போல் இருக் கிறதாம "ச"

குழநதையை தன் மடியிலே கிடத்திய வண்ணம் போல இருக் கிறதாம் "ட"

"பேசுகின்ற குரலாகி
பின்னர் எழுத்தாகி
கன்னிப்பெண் அமர்ந்ததுபோல்
"க" வாகி காலையிலே
உடல் பயிலும் வாலிபனின்
உருவம்போல் "ங" வாகி
சமர்களத்து வாள்போலச்
"ச" வாகி சேய் துயில
தாய்விரித்த மடிபோல
"ட" வாகி ஒவ்வொன்றும்
ஒவ்வோர் இமையாகி
உருவமான தாய்மொழிக்கு
தொல்காப் பியன்நாளில்
தொடங்கிற்று .. ..."

கஸ்தூரி போன்றது கன்னடம். மல்லிகை போன்றது மாலையாளம். தேன் போன்றது தெலுங்கு என்று மொழிகளுக் கெல்லாம் பிறப்பிடம் தமிழ், இந்தக் கருத்தை மிக நயம் பட நவில்கின்றார் நம் கவியரசர் —

"வேண்டும் வரை கடன்தந்து
தெலுங்கையாக்கி
வீணைநிகர் "ஞ" தந்தே
ஆன்றபுகழ் மலையாளம்
கன்னடத்தை
ஆக்கியது".

என்று பெருமிதத்தோடு பூரிக் கின்றார்.

உணர்ச்சிகரமாக தமிழைக் காப்பதில் முன்னணியில் நிற்கும் போர்ப்படை வீரர் போல் முழக்க மிடுகிறார் கவிஞர்.

மறைமலை அடிகள் எழுதியதும் தமிழா? என்ற ஒரு சிக்கல் எழுந்த காலை அதற்குப் பதில் சொல்லுகிறார் —

"வேறெடுத்த செம்மைமொழி
தமிழல்லாமல்
வேறெதுதான் தமிழாகும்"

என்று வேகமாகக் கேட்கின்றார்.

ப. குணசேகர்
பி.ஏ., பி.டி., எல்.எல்.பி.

தமிழ் நமது மொழி; இனிமைத் தமிழ் மொழி; அமுது மொழி என்கின்ற உரிமை உணர்வு அவர் உள்ளத்தில் பொங்கி ஒளிர்கின்றது—

தொட்டகரம்
பொன்னாகும்
மெல்ல மெல்ல சுவைத்து
இதழ் கனியாகும்
நெஞ்சமன்றில் பட்டவுடன்
பொருளாகும்
வாழ்க்கை வண்ணம்
படைத்த சுவை நூல்கள்
ஒரு கோடியாகும்
கட்டுமலர்க் கொத்தேபோல்
இனிமைதேக்கி காந்தமொழி
தமிழாகும் நமதாகும்''

தமிழ்ப் பற்று மிகக் கொண்டவர் நம் கவிஞர்—

''எந்தமிழை அழிப்பாரை
துண்டாகி வெட்டித்
தூளாக்கி உரமாக்கி
வண்டாடும் பூமலர
வைப்போம்''

என்று சூளுரைக்கிறார் தமிழைக் காக்க.

அன்னைத் தமிழை அரியணை ஏற்ற ஆவி துடிக்கிறது. அதற்கு ஒரு ஊறு நேருமெனில் நெஞ்சம் கொதிக்கிறது. உணர்ச்சி கொப்பளிக்கிறது. மனம் குமுறுகின்றது. அது சினம் மிகுந்த சொல்லாய் வெடிக்கிறது. தாயின்மேல் ஆணை பிறக்கின்றது—

''தமிழர்கள் கெடுவது ஒன்றே
தரணியின் முறையா தூய
அமிழ்து ஒழித்து அரக்கர்
கூட்டம் ஆள்வது சரியா-இல்லை
தமிழுக்கும் தமிழர்க்கும்
தடைபோடும் வெறியர் தன்மை
இமைவேறு கண்கள் வேறாய்
இருநூறு துண்டங்
காண்போம்''

உணர்ச்சி வெஞ்சவிலேதான் உயிர்த் துடிப்புள்ள கவிதை பிறக்கும். எதைப்படித்தால் என் தலையைக் கழற்றி விடுவது போல் இருக்கிறதோ அதுவே கவிதை என்றான் ஓர் ஆங்கிலக் கவிஞன். கவிஞரின் வீர வரிகள் இதைத்தான் உணர்த்துகின்றன.

''குருதியே ஓடினாலும்
குடல் நிணம் சிதைந்தபோதும்
பரிதியின் மாலை வண்ணம்
படைத்தது மண் என்றாலும்
வருதுயர் தமிழுக்கென்றே
வாழிய பாடல் பாடி
உறுதியில் இறங்கு!
வெற்றி உனக்கிது
இயற்கை வேதம்.''

தமிழுக்கு முதல்நிலை தர வேண்டும். மூவேந்தர் போற்றிய முத்தமிழுக்கு முதலிடம் கிடைக்கச் செய்யவேண்டும். என்பதிலே இவருக்கு இருக்கிற ஆர்வம் மிகப் பெரிது—

''தாய்மொழித் தமிழை
தனித் தமிழாக்க
தாயகம் முடிதர
வேண்டும்.''

தலை கொடுத்துத் தமிழ் காத்தான் குமணன். அதைப்போல் தமிழர்கள் யாவரும் தமிழைக் காக்க உறுதி கொள்ள வேண்டும் என்பது கவிஞரவர்களின் மங்காத எண்ணமாகும்.

''தமிழன் பெற்ற
தமிழர்க்கெல்லாம்
தலை கொடுத்தேனும்
தமிழினைக் காப்போம்''

என்று உறுதி கூறுகின்றார்.

# திருடன் போட்ட வேடம்

ஓர் ஊரில் ஒரு திருடன் இருந்தான். நள்ளிரவில் வீடுகளில் புகுந்து திருடுவது அவன் வழக்கம். திருடித் திருடி அவன் திருட்டுத் தொழிலில் தேர்ந்தவனாகி விட்டான்.

சின்ன வீடு, பெரியவீடு, ஏழை வீடு, பணக்காரன் வீடு எல்லா வீட்டிலும் அவன் திருடியிருக்கிறான். ஆனால் அரசனுடைய அரண்மனையில் மட்டும் அது வரை அவன் திருடியதில்லை.

அரண்மனையில், அதுவும் அரசனிடத்தில் ஏதாவது திருடிவிட வேண்டும் என்று ஒரு நாள் தோன்றியது. அரண்மனையில் புகுந்து யாரிடமும் அகப்படாமல் அரசனுடைய பொருளைத் திருடிக் கொண்டு வந்துவிட்டால்தான் தான் பெரிய திறமைசாலி என்று சொல்லிக்கொள்ள முடியும் என்று அவன் நினைத்தான்.

திட்டமிட்டபடி அவன் ஒரு நள்ளிரவில் அரண்மனைக்குள்புகுந்தான். எப்படியோ அரண்மனைக் காவலாளிகள் கண்ணில் படாமல் உள்ளே நுழைந்து விட்டான். அரசனுடைய படுக்கையறையருகிலும் சென்று விட்டான். அப்போது அரசன் அரசியுடன் பேசிக் கொண்டிருந்தான். பேசி முடித்து உறங்கட்டும் என்று திருடன் வெளியே ஓர் இருட்டு மூலையில் ஒளிந்து காத்துக் கொண்டிருந்தான்.

அந்த அரசன் தெய்வபக்தியுடையவன். தெய்வபக்தியைக் காட்டிலும் அவனுக்கு அடியார் பக்தி அதிகம். அதாவது, தெய்வத்தை வணங்குகின்ற பக்தர்களை அந்த அரசன் தெய்வமாகவே எண்ணி வணங்குவான். அப்படிப்பட்ட அந்த அரசனுக்கு ஓர் அழகான மகள் இருந்தாள். இளவரசியான அந்த மகள் திருமண வயதை யடைந்தாள். அதனால் அவளுக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று அரசி ஆசைப் பட்டாள். ஆகவே, அவள் அன்று இரவு, தன்மகள் திருமணத்தைப் பற்றி அரசனிடம் பேசத் தொடங்கினாள்.

“அரசே, நம் மகள் திருமண வயதை யடைந்துவிட்டாள். விரைவில் அவளுக்கு நல்ல மாப்பிள்ளை ஒருவனைப் பார்க்க வேண்டுமே!” என்றாள் அரசி.

“ஆம்! நம் மகளுக்கு நாம் பார்க்கும் மாப்பிள்ளை ஒரு தெய்வ பக்தராக இருக்கவேண்டும்” என்றார் அரசர்.

“அப்படியானால்...?”

“நம் ஊர் ஆற்றங்கரையிலே சாமியார்கள் இருக்கிறார்கள் பார்த்திருக்கிறாய் அல்லவா?

அவர்களிலே ஒருவருக்கு நம் மகளைத்திருமணம் செய்து வைக்க வேண்டும். தெய்வத்தின் அருளால் பிறந்த நம் மகளைத் தெய்வ பக்தர் ஒருவருக்குக் கொடுக்கவே நான் விரும்புகிறேன்.'' என்றான் அரசன்.

''தங்கள் விருப்பமே என் விருப்பம்'' என்றாள் அரசரை என்றுமே எதிர்த்துப் பேசியறியாத அரசி.

''நாளையே நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்றான் அரசன்.

அதற்குப் பிறகு அவர்கள் பேச்சை நிறுத்தி விட்டு உறங்கி விட்டார்கள்.

வெளியில் ஒளிந்திருந்த திருடன் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். ''நான் இங்கு வந்த நேரம் நல்ல நேரந்தான். இளவரசியை மணம் புரியும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கிறது. நான் இப்போது திருட வேண்டியதில்லை. நாளை ஆற்றங் கரைக்குப் போய் சாமியார் களோடு சாமியாராய் உட்கார்ந்து விட வேண்டியதுதான். வாய்ப்பு இருந்தால் இளவரசியின் கணவன் ஆகிவிடுவேன். அதனால் அரசருக்கு வாரிசும் ஆகிவிடுவேன்'' என்று எண்ணிக்கொண்டே திருடன் அங்கிருந்து கிளம்பினான்.

எப்படித் தந்திரமாய் அரண்மனையின் உள்ளே நுழைந்தானோ அப்படியே வெளியேறிவிட்டான். மறுநாள் அவ்வூர் ஆற்றங்கரையில் சாமியார் வேடத்துடன்போய் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

அரண்மனை அதிகாரிகள் வந்தார்கள். ஆற்றங்கரையில், மரங்களின் அடியில் ஆங்காங்கே உட்கார்ந்து இறைவனை நோக்கித் தொழுதுகொண்டிருந்த சாமியார்களைக் கண்டார்கள். ஒவ்வொருவரிடமாகச் சென்றார்கள். ''ஐயா தாங்கள் எங்கள் அரசன் மகளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்'' என்று கேட்டார்கள். குடும்ப வாழ்க்கையே வேண்டாம் என்று வந்திருந்த அந்த உண்மையான சாமியார்கள் இளவரசியைத் திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்டார்கள்.



அதிகாரிகள் அரசருடைய விருப்பத்தை எவ்வளவோ எடுத்துக் கூறியும் அந்தச் சாமியார்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

சாமியார் வேடத்தில் இருந்த திருடனிடம் வந்தார்கள். மற்ற சாமியார்கள் மறுத்து விட்டதைக் கவனித்த திருடன், தான் உடனே ஒப்புக் கொண்டால் ஐயம் தோன்றக் கூடும் என்று எண்ணி முதலில் மறுத்துவிட்டான்.

ஆனால் அதிகாரி மேலும் மேலும் வேண்டியபோது இப்பொழுதே ஒப்புக்கொள்ளலாமா, இன்னும் சிறிது நேரங்கழித்து ஒப்புக் கொள்ளலாமா? என்று நினைத்துக் கொண்டே பதில் பேசாமல் இருந் தான்

அதிகாரிகள் அரசனிடம் திரும்பிச் சென்றார்கள். "மன்னவா, எந்தச் சாமியாரும் இளவரசியைத் திருமணம் புரிய ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், இளம் வயதுடைய ஒரு சாமியார் இருக்கிறார் தாங்களே நேரில் வந்து கேட்டுக் கொண்டால் ஒருவேளை அவர் ஒப்புக் கொள்ளக் கூடும்" என்றார்கள். இதைக் கேட்ட அரசன் உடனே ஆற்றங்கரைக்குப் புறப்பட்டான்.

அதிகாரிகள் சுட்டிக்காட்டிய சாமியார் வேடத்தில் இருந்த திருடனிடம் வந்தான். தன் விருப்பத்தை எடுத்துக் கூறினான்.

திருடன் அப்பொழுது சிந்தித் தான்

"சாமியார் வேடத்தில் இருக்கும் என்னை அரசனே வந்து கெஞ்சுகிறான். வேடத்தில் இருக்கும் போதே இவ்வளவு பெருமையிருந்தால், உண்மையான சாமியாராக இருந்தால் எவ்வளவு பெருமை யுண்டாகும். அரசன் மகள் எனக்குவேண்டாம். இன்று முதல் நான் உண்மையான



சாமியாராகவே ஆகிவிடுகிறேன். இனி எனக்குக் கடவுளே எல்லாம்."

மனந்திருந்திய திருடன் அரசன் மகளை மணக்க மறுத்து விட்டான். அரசன் திரும்பச் சென்று விட்டான். அந்தத் திருடனே, உண்மை பக்தனாகி பிற்காலத்தில் ஒரு பெரிய மகாத்மா ஆகிவிட்டான்.

உயர்ந்தவர்களைப் போல் வேடம் போடுபவர்களுக்கு சில சமயங்களில் உயர்ந்த எண்ணங்களும் உண்டாகும்.

—பகவான் இராமகிருஷ்ணர்

---

## நான்கு நான்கு

நூற்பயன் நான்கு

அறம், பொருள், இன்பம், வீடு.

வேதம் நான்கு

ரிக், யஜுர், சாமம், அதர்வணம்.

கவி நான்கு

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.

பாவகை நான்கு

ஆசிரியம், கலி, வஞ்சி, வெண்பா.




# 4. சுவரும் தரையும்

வண்ணம் பூசிய சுவர்களும், தட்டிகளும், பலகைத் தரைகளும் மிகவும் அழுக்குப் படிந்து போயிருந்தால், சோப்புத் தண்ணீருடன் திரிசோடியம் பாஸ்பேட் (Tri sodium Phosphate) சிறிது கலந்து கொள்ளலாம். ஆனால், இந்தக் கலவையை மரச்சாமான்களையோ அல்லது விரிப்புக்களையோ சுத்தம் செய்யப்பயன்படுத்தவே கூடாது.

சுவர்களையோ மரத்தட்டிகளையோ சுத்தம் செய்யும் போது கவனிக்க வேண்டிய விதியொன்று உள்ளது. அவற்றைக் கீழிருந்து மேலாகச் சுத்தம் செய்துகொண்டு போக வேண்டும். மாறாகச்செய்வோமானால், மேலே நாம் கழுவுகிற தண்ணீர் கீழே விழுந்து எளித்ல் மாற்ற முடியாத கறைகளைச் சுவரில் படியும்படி விட்டுவிடும். ஈரத்தைத் துடைப்பதற்குத் துணியைக் காட்டிலும் கடற்பஞ்சு நல்லது. அது ஈரத்தை எளிதாக உறிஞ்சும் சக்தியுள்ளது.

வண்ணச் சுவர்களைச் சுத்தப்படுத்திய பிறகு அவற்றின் மேல், சலவைத் தொழிலாளிகள் துணிமணிகளுக்குப் பயன் படுத்துகிற கஞ்சியை இலேசாக பிரஷினால் தடவி வைப்பது நல்லது. இவ்வாறு செய்வதால் மேன்மேலும் படியும் அழுக்கும் தூசியும் சுவரில் நேராகப் படியாமல் இந்தக் கஞ்சியின் மேல் படிந்திருந்து மறுபடியும் தண்ணீர் விட்டுத்துடைக்கும் போது கஞ்சியுடன் வந்து விடுகின்றன.

இதுவரை சுவர்களைச் சுத்தம் செய்யும் முறையைப்பார்த்தோம். இனித் தரையை எவ்வாறு சுத்தம் செய்வதென்று கவனிப்போம்.

பளிங்கு சிமெண்டுத் தரைகளை நன்றாகத் தண்ணீரை ஊற்றித் தென்னை நாரினால் தேய்த்து விட வேண்டும். பிறகு அந்தஅழுக்குத் தண்ணீரை வெளிப்படுத்திவிட்டு, மீண்டும் நல்ல தண்ணீரை ஊற்றிக் கழுவி விட வேண்டும் கழுவிய உடனே கந்தைத் துணியொன்றினால் நன்றாகத் துடைத்து விடவேண்டும். துடைக்காமல் விட்டுவிட்டால் தண்ணீர் அங்கங்கே தேங்கித் திட்டுத் திட்டாக நின்று, காய்ந்த பின் அந்தத்தண்ணீர் நின்ற இடம் ஒரேதூசியாகக் காட்சியளிக்கக்கூடும். சிமெண்டுத்



தரைகளுக்கு முதலில் சோப்புக் கரைத்த தண்ணீரை உபயோகப் படுத்துவது நல்ல பலனளிக்கும்.

பாலிஷ் தேய்த்து அழகாக விளங்கும் மரப்பலகையினாலாகிய தரைகளில் எக்காரணத்தைக் கொண்டும் தண்ணீர் விட்டுக் கழுவக் கூடாது. நாள்தோறும் பாலிஷ் போட்ட மரப்பலகைத் தரையைக் கூட்டும் பிரஷினால் தேய்த்துக் கூட்டிச் சுத்தப்படுத்தினால் போதும். மண்ணெண்ணெய் மூன்று மடங்கும் தார் எண்ணெய் (Paraffin oil) ஒரு மடங்கும் கலந்த எண்ணெயில் விளக்குமாற்றுப் பிரஷை நனைத்துக் கொண்டு பலகைத் தரையைத் துடைத்துக் கூட்டலாம்.

இந்த விளக்குமாற்று பிரஷ் அழுக்கடைந்துபோனால், சூடான சோப்புத் தண்ணீரினால் இதைச் சுத்தப்படுத்திக் கொள்ளலாம்.

பாலிஷ் செய்யாத பலகைத் தரைகளை, உவர்மண்ணால் தேய்த்துக் கழுவிச் சுத்தம் செய்யலாம். ஸ்டீல் வுல் (steel wool) கொண்டும் தேய்த்துக் கழுவலாம்.

வார்னிஷ் பூசிய தரைகளை நீண்ட கைப்பிடியுள்ள விளக்குமாற்று பிரஷினால் துடைத்து வந்தால் போதும்.

வாசல், முற்றம், படிகள் வெளிப் பத்திகள், நடைகள், தாழ்வாரங்கள் ஆகியவற்றைக் கூட்டுவதற்கு மட்டும் தென்னை விளக்குமாற்றை உபயோகிக்க வேண்டும். அறைகளைக் கூட்டுவதற்குத் தோகைமாறு அல்லது பூந்துடைப்பத்தைப் பயன் படுத்தலாம். தோகைமாற்றில் சீகுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், கூட்டுமாற்று பிரஷைப் பயன் படுத்துவது நல்லது. தரையில் மைசிந்தியோ, ரத்தம் சிந்தியோ உறைந்து போயிருக்கும் கறையைத் துடைக்க முதலில் அந்த இடத்தில் கொஞ்சம் தண்ணீரை ஊற்றவேண்டும். பிறகு வெள்ளைச் சாக்கட்டியை அதன் மீது தேய்க்கவேண்டும். அதை நன்றாக உலரவிட்டுப்பிறகு பிரஷினால் துடைத்து விட்டால், கறை மறைந்து போகக் காணலாம்.

தரை விரிப்புகளிலோ, துணிகளிலோ மைசிந்தி விட்டால் உடனே அதன் மேல் சிறிது பசும் பாலை விட்டு அதன் மேல் அரிசி மாவைத் தூவ வேண்டும். பிறகு அதை அகற்றி விட்டு அந்த இடத்தில் சோப்புக் கரைசலை விட்டுத் தேய்க்க வேண்டும். அப்படியும் கறை நீங்கவில்லையானால் பால் பசையை அந்த இடத்தில் தடவி மாவிட்டு ஒரு இரவு முழுவதும் விட்டுவைத்து மறுநாள் காலையில் துடைக்க வேண்டும்.

துணிமணிகளை இரும்புத் தொட்டியில் வைத்திருந்து, துருப்பிடித்த கறைகளை நீக்குவதற்கு அந்த இடத்தில் ஆக்சாலிக் ஆசிட் (Oxalic acid) திரவத்தை ஊற்றி அலச வேண்டும்.

மருந்துகள், ஷூபாலிஷ் முதலியன பட்டுக் கறை பிடித்திருந்தால் அமோனியா கலந்த சோப்புக்கரைசலில் விட்டுத் தேய்த்து அலசக் கறை நீங்கும்.

சன்னல் கதவுகளில் உள்ள தூசியைத் துடைப்பதற்கு முதலில் பிரஷையும் பிறகு, துணியையும் உபயோகப் படுத்தலாம். சன்னல் கதவில் உள்ள கண்ணாடியை மாவில் தோய்த்த் தெடுத்த துணியால் துடைத்தால் பளிச் சென்று வெள்ளையாகி விடும். படங்களில் உள்ள கண்ணாடியைத் துடைப்பதற்கும் இந்த முறையைக் கையாளலாம். வீட்டில் தூசியடிக்கும் போது எப்போதும் சுவரில் உள்ள படங்களைக் கழற்றித் துடைத்து விடவேண்டும்.

# ராஜாவும் ராஜாவும்

மது, மங்கை இவை இரண்டும் தான் இந்த உலகமென்று எண்ணினான். மங்கையரின் கொவ்வை அதரங்களைச் சுவைத்துக் கிடப்பதையே பேரானந்தமாகக் கொண்டான். தங்க நிறங் கொண்ட அவர்களது அங்கங்களை அணு அணுவாய் ரசிப்பதிலேயே நாட்களைக் கடத்தினான். கோதையரோடு கோலாகலமான கேளிக்கை தான் அவனது பொழுது போக்கு.—மஞ்ச சுகந்தருகின்ற வஞ்சியரிடம் தஞ்சமடைந்து கிடப்பதையே அவன் நெஞ்சம் பெரிதும் விரும்பியது.

எனவே, கோலமொழி சிந்துகின்ற கோகிலங்கள் அவன் அண்டையிலேயே வண்டு போல சுற்றிப் பறந்து வந்தனர். சுந்தர நடை காட்டும் வேல்விழி மாதரின் மையலிலே சிக்குண்டு—அதிலிருந்து மீளமுடியாமல் தவித்தான். அவன் பெண் மயக்கம் அவனுக்கு போதையாக மாறி அதுவே வெறியாக நீண்டு கொண்டே இருந்தது நாளுக்கு நாள்!

இத்தகைய பெண் லோலனாய்த் திரிந்தவன் ஊர் பேரறியா மனிதனல்லன்; ஊராளும் பொறுப்பேற்று உட்கார்ந்திருக்கும் மன்னன் இவனது முன்னோர்கள் எவரும் இப்படிக் கேளிக்கைகளிலே கவனத்தைச் செலுத்தி, தங்களது வாழ் நாட்களை வீணாக்கிக் கொண்டவர்களல்லர்!

போரென்றால் புலியெனச் சீறிப் பாயும் தன்மை பெற்றோர்-புறமுதுகிட்டு ஓடியறியாத பரம்பரை—எதிரியின் படை, வலிமை பெற்றதாயினும், அதைத் தங்களது யுத்த தந்திரத்தால் சிதறடித்துச் சின்னாபின்னமாக்கிவிடும் சிங்கங்கள்! இத்தகைய கீர்த்திக்கும் தன்மான உணர்ச்சிக்கும், தகுதியும், திறமையும், சுயமரியாதையுங் கொண்டதுதான் மராட்டிய குலம்! அக்குலத்தின் வழித்தோன்றலாம் சிவாஜியின் மைந்தன் சாம்பாஜியே மேற்சொன்ன கோலாகல வாழ்வு நடத்திக் கோலோச்சி வந்த கோமான்!

சிவாஜி உயிருடன் இருக்கும் போதே பல சமயங்களில் அவனுடைய தீய செயல்களுக்காகத் தண்டனையளித்தும், நாடு கடத்தியும் இருக்கிறார். என்றாலும் இவற்றாலெல்லாம் அவன் திருந்தினானில்லை! பயங்கரக் காட்டினுள் புகுந்து செல்லும் ஒற்றையடிப் பாதைபோல் அவனது உள்ளமும் தீய செயல்களுக் கிடையே சென்று கொண்டேயிருந்தது! மைந்தனின் இந்நிலைக் கண்டு மராட்டிய மண்டலத் தலைவனும் சிவாஜியின் உள்ளத்தில் வேதனைத் தேள்கள் கொட்டிய வண்ணமாகவே இருந்தன.

“ஆயிரமாயிரம் இன்னல்களுக்கிடையே கட்டிக் காத்த இம் மராட்டிய மண்டலம் என்னோடு

மறைந்துவிடுமா? என் மரணத்துக்கு பின் மாற்ருர் வசம் சிக்கிச் சீரழிந்துவிடுமா? அந்தோ! இதற்காகவா இத்தனை அரும்பாடுகள் பட்டு இதைக் கட்டிக் காத்து வந்தேன்?'' என்கின்ற பேரிடி போன்ற கவலைகள் எப்போதும் அவர் உள்ளத்தைத் தைத்துக் கொண்டே இருந்தன!

இக் கவலைகளே பெரிதாக உருவெடுத்து அவர் மரணத்திற்கும் காரணமாகி, அம்மா வீரரை இப் புவியினின்று மறைத்து விட்டது இயற்கை!

சிவாஜிக்குப் பிறகு அவருடைய மூத்த மைந்தனுன சாம்பாஜி அரசுக் கட்டிலிலே ஏறினுன்!

அன்பும், பண்பும் எக்கொலு மண்டபத்தில் கொலு வீற்றிருந்தோ—வீரமும் விவேகமும் எச் செங்கோலில் குடிகொண்டிருந்ததோ—அங்கே கோழைத்தனமும் கொடூரச் செயலும் தலை தூக்கி நிற்க ஆரம்பித்துவிட்டன.

சாம்பாஜி மன்னனுகி பொறுப்பற்ற தன்மையில் நடந்து கொண்டதால் மக்கள் பெரிதும் பீதியடைந்தனர். 'அன்னியரின் தாக்குதல்கள் அடிக்கடி நம்மை இப்படி பயமுறுத்திக் கொண்டிருக்கும் போதே மன்னன் மதுப் பிரியனுகவும், பெண் பித்தனுகவும் இருந்து கொண்டு காலத்தை வீணுக்கிக் கொண்டிருக்கின்ருனே! அந்தப் புலிக்கு இந்தப் பூனை எப்படித்தான் பிறந்ததோ என்றெல்லாம் எண்ணி சொல்லொணுத வேதனை கொண்டனர்.

ஒரு நாள் எங்கெல்லாமோ தன் மனம் போன போக்கெல்லாம் சுற்றி அலைந்து திரிந்து விட்டு ஆற்றங்கரையோரமாக குதிரையில் வந்து கொண்டிருந்தான் சாம்பாஜி!

திடீரென்று அவன் கண்களுக்கெதிரே மின்னலிட்டது போல ஒரு காட்சி! அது கண்களைப் போக்கும் மின்னலல்ல; சிந்தை சொக்கும் சித்திரப் பாவை போன்றதொரு மின்னலிடைக் காரி! பூக்குடலை ஏந்தி அவள் ஒய்யார நடைபோட்டுச் செல்லும் காட்சியைக் கண்டு ஒரு நிமிடம் குதிரையை நிறுத்தி, அவளது சிங்காரத்தில் தன் சிந்தையைச் செலுத்தினுன், அவளுடைய அழகு அவன் உள்ளத்திலே காம வெறியைத் தூண்டியது.

இத்தனை அழகு படைத்த இவள் யாராய் இருக்கக் கூடும்? என்றும் சிந்தித்தவாறே அவளின் பின்னே சென்று கொண்டிருந்தான். மன்னன் பின் தொடர்வதை அறிந்த அந்த வேல்விழியாள், விறுவிறு என்று நடையை வேகமாகப் போட்டுச் சென்று தன் வீட்டிற்குள் நுழைந்து விட்டாள்! அவள் சென்ற இல்லத்தை கண்டவுடன் தன் குதிரையைச் சட்டென்று நிறுத்தி விட்டான் சாம்பாஜி! காரணம் அவனுடைய தளபதி கண்டோஜியின் இல்லம்.

''கண்டோஜிக்கு ஒரு தங்கை இருக்கிருளென்று தான் கேள்விப் பட்டிருக்கிறேன்! ஆனால், இப்படி அழகின் பிறப்பிடமாய் ஆழ் கடலின் ஒளி முத்தாய் அவள் இருப்பாளென்று நான் கனவிலும் கருதியது கிடையாதே! தளபதி

இலக்கியச்சித்தர்
தங்கவயல்
லோகிதாசன்

யின் தங்கையா இத் தங்கக்கட்டி என்றெல்லாம் சிந்தித்த வாறே குதிரையிலிருந்து கீழே இறங்கினன் சாம்பாஜி.

தன் கீழ்ப் பணிபுரியும் தளபதியின் தங்கைதானே என்று எண்ணும்போது, அவன் உள்ளத்தில் அவளின் பால் அலட்சிய பாவம் தோன்றி நின்றது. தன் இச்சைக்குத் தடையேதும் சொல்லமாட்டாள் அந்தப்பச்சைக் கொடி என்ற முடிவிற்கு வந்தவனாய் மான்கண்ட புலிபோல வீட்டினுள் நுழைந்தான் அவன்.

அரசனைக் கண்டதும் அமர ஆசனத்தைக் காட்டி உபசரித்தாள் அந்த நிலவழகி. பாவம் அப்போது அறிய மாட்டாள் அவனை, ஆட்டுக்குட்டியைப் பார்த்துவிட்டு, வாய்பிளந்து வந்திருக்கும் ஓநாயென்று. களங்கமில்லாமல், "என்ன வேண்டும் தங்களுக்கு?" என்று கேட்டாள்.

"நீ அருகினில் இருக்கையில் எனக்கு எதைப்பற்றி சிந்திக்க நேரம்! கோலனுசெய்யும் உனது குமுதவிழிகள் கூறுமே என் விழிகளில் வழிந்தோடும் ஏக்கத்தை!" என்று பதிலளித்தான் சாம்பாஜி!

"அரசே! தாங்கள் கூறுவது எனக்கு ஒன்றும் புரியவில்லையே, புரியும்படி சொல்லக் கூடாதா? என்னால் முடியுமானால் எதையும் செய்கிறேன்!" என்று சொல்லி நின்றாள், தளிர் மேனி காட்டி நிற்கும் அந்த குளிர் நிலா!

"என்னவென்று சொல்லுவேன் என் எழில் பிம்பமே உன் அழகு என்னைப் பித்தனாய் உன் பின்னால் இழுத்துவந்து உன்னிடம் பிச்சை கேட்கும்படி செய்திருக்கிறது மோகத்தால் சுடர்விட்டெரிகின்ற என் தாபத்தை உன் பனிப் பார்வையால் அணைத்துவிடு, வா. என்னை வருத்தாதே மேலும்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து அவளைத் தொட்டணைக்கத் துடித்துச் சென்றான் அவன்.

சாம்பாஜியின் இச்செய்கையைக் கண்டு, "ஐயோ குடி காக்கும் கொற்றவனா இக்குற்றத்தைப் புரிவது?" என்று சொல்லிப் பதறி நின்றாள் அந்தப் பச்சைக் கிளி.

"குற்றமென்று சொல்லாதே என் கோமளமே. மற்ற எல்லாரிடமுமிருந்து ஒதுக்கப்பட்டவனா கொற்றவன்? அவனும் குடிகளிலே ஒருவன்தான்" என்று சொல்லிக் கொண்டே சாம்பாஜி பூனையைப் போல் பாய்ந்தான்; அந்தக் கிளியும் "கீச்...கீச்" என்று கத்திக்கொண்டே இருந்தது.

பல வருடங்களாகப் பாதுகாத்து வந்த அமிர்தத்திலே இன்று விஷம் கலக்கப்பட்டு விட்டது. அழகிய மலர்—அது இன்று மந்தியின் கையிலே. காத்திருந்த ரோஜா—இன்று அது இடையிலே வந்த இராஜாவின் மடியிலே.

ஒளி இழந்த முத்தாய்—கண்ணற்ற ஓவியமாய்க் கதறிக் கொண்டிருந்தாள் அவள்.

"ஏனம்மா கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டுக்கொண்டே ஒரு கரம் அவள் தலையைக் கோதுவதை உணர்ந்து தலையை நிமிர்ந்து பார்த்தாள். எதிரே கண்டோஜி கலக்கத்தோடு நின்றிருப்பதைக் கண்டு, "அண்ணா" என்று அலறி "ஓ" வெனக் கூச்சலிட்டாள்! மன்னனால் கசங்கிய மலரான கதையைக் கூறினாள்!

தங்கைக்கு வந்துற்ற கேட்டை நினைத்து தாங்கொணாத் துயரங் கொண்டான். என்ன செய்வதென்றே புரியாமல் இருதலைக்

கொள்ளி எறும்புபோல் தத்தளித்துக் கொண்டிருந்தான்.


மணிமகுடம் தரித்து நிற்கும் மன்னன் ஒரு புறம். சிதைந்த சிற்பமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கும் தங்கமான தங்கை ஒரு புறம்! இவ்விருவரும் ஒருவர் பின் ஒருவராக அவன் கண்முன்னே நிழலாடிக் கொண்டிருந்தனர்.

எதிரிகளுக்கும் இடங்கொடுத்து நாட்டையுங் கோட்டையும் விட்டவர்களாவோம்!

மானமே பெரிதெனக் கருதும் மராட்டிய குல மங்கையாயிருக்கும் நீ! உன் கற்பின் களங்கத்தை ஊரறிவதற்குள் ஓடி மறைந்து விடு. நாடு மரணத்தை. ஆம் அதுதான் உனக்கு அமைதியை




"அம்மா! மதி கெட்டவன் இப்போது மன்னனாக இருக்கிறான்! இந்த மராட்டியத்தை உருவாக்கி அவனுக்கு இந்த நிலையை ஏற்படுத்திச் சென்ற சத்திரபதி சிவாஜியின் வார்த்தைக்கே மதிப்பு வைக்காத மடையன்! அவனை நான் என்ன செய்யலாம்? கொல்ல முடியும்! அவ்வளவுதான். குடியனோ, வெறியனோ நாட்டுக்கு தலைவனாக அவன் இருக்கும்போது அவனை இல்லாதபடி செய்து விட்டால் நாடும் குழப்பமடையும், அளிக்கக்கூடிய அருமருந்து" மணக்கோலத்திலே காணவேண்டிய தமையன் மரணக் கோலத்திலே காணத் துடிக்கின்றானே, என்று நினைக்கிறாயா? மானசத் துடைக்க அதுதான் வழி. உன் ஊனத்தை மறைக்க அதைத் தவிர வேறு வழியே கிடையாது" என்று பெரும தொல்லையின் எல்லையிலே நின்று தன் உள்ளத்தை வெளிக்காட்டிவிட்டு வீட்டை விட்டகன்றான் கண்டோஜி.



மஞ்சள் தாமரை

அழகுமிக்க செந்தாமரை மலரின் செந்நிறத்தையும் அதில் தளும்பிவழியும் கொழுந்தேனையும் அகற்றிவிட்டு, அவற்றிற்கு மாருய் அதற்கு மஞ்சள் நிறத்தை ஊட்டிச் செங்கழுநீர் மணத்தைப் புகுத்திக் கற்கண்டின் நீரைச் சொரிந்து வைப்பேன் என்று ஒருவன் அதன் இயற்கையை மாற்றப் புகுந்தால், அது கைகூடாமல் அத் தாமரை மலர் அழிந்து போவதுபோல, மற்ற மொழிகளும் இனிய சொல்லும் சிறந்த பொருளும் உயர்ந்த பயனும் உடையனவாய் இருந்தாலும், தமிழின் நிறமும் அதன் சுவையின் தேனும் இயல்பாகப் பொருந்தப் பெற்ற நமதுயிரை அவ்வியற்கையினின்றும் மாற்றி அம் மற்ற மொழிகளின் தன்மையை அதற்கு ஏற்றிஞல் அது தற்றன்மை இழந்து அழிந்து போகும்.

— மறைமலையடிகள்

---

அவன் திரும்பவும் வீடு திரும்பிய போது அவன் தங்கையின் பிணந்தான் அவனை வரவேற்றது. அதைக் கண்டதும் சொல்லொணுத் துயரத்திலே சோர்ந்து வாழ்க்கை என்பது என்னவென்றே அறியாமல் போய் விட்டாளே, என்று நினைத்து பெரிதும் வேதனை கொண்டான் அவன்.

நாட்கள் நகர வருடங்கள் உருண்டன. மதுப் பிரியனை சாம்பாஜி தன் நிலை மறக்கும் நிலையிலே மதுவை குடித்துவிட்டு, ஒருநாள் பூங்காவிலே புரண்டு கிடந்தான். இக்காட்சியைக் கண்டு ஒளரங்கசீப்பின் ஒற்றர்கள் இதுவே தகுந்த சமயம் என்றெண்ணி, சாம்பாஜியைக் கட்டித் தூக்கிக் கொண்டு போய் விட்டனர்.

சிறையிலே சாம்பாஜி, இச் செய்தியை கண்டோஜி! அறிந்த போது உணர்ச்சிப் பெருக்கால் உள்ளம் பதைபதைத்துத் துடித்தான். தனக்கும் தன் வம்சத்திற்கும் சதா காலமும் இடையூறுகளைத் தருவதையே நோக்கமாக சாம்பாஜி கொண்டிருந்தாலும், அவனிடம் பக்திக் கொள்ளச் செய்திருந்தது அவன் உள்ளமென்றல், அதற்கு ஒரே ஒரு காரணம் தான் இருக்கமுடியும்; அதுதான் இராஜபக்தி. தன் வர்க்கத்தையே பூண்டோடு அழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு அழித்ததோடல்லாமல் தன் உயிருக்குயிரான ஒரே தங்கையின் மரணத்திற்கும் காரணமாயிருந்த சண்டாளனின் வாழ்க்கை டில்லிச் சிறையோடு முடிந்துவிட்டால்? என்கின்ற கேள்வி கண்டோஜியின் உள்ளத்திலே உதித்து நின்றது ஆனல், சிவாஜியின் தியாகமும், முயற்சியும், அவரது கடைசி ஆவலும் பூர்த்தியாகாமலே வீணுகக் கூடாதே என்று நினைக்கும்போது அந்த கேள்வி நெடுநேரம் நிலைக்காமல் அவன் உள்ளத்தினின்று உடனே மறைந்தது! துள்ளியெழுந்தான் புத்துணர்ச்சி பெற்றவனுக. சாம்பாஜியை மீட்பது எப்படி? என்று தன் சிந்தனையைச் செலுத்த ஆரம்பித்தான் அவன்

கண்டோஜியின் தோற்றம் ஏறத்தாழ ஒளரங்கசீப்பின் தோற்றம் போலவே இயற்கையாக

அமைந்திருந்தது இதைப் பயன்படுத்தி எப்படியாவது சாம்பாஜியை மீட்பது என்ற திடமான முடிவிற்கு வந்து, செயலாற்றவும் புறப்பட்டு விட்டான் அவன்!

ஔரங்கசீப்பைபோல் தன்னை அலங்கரித்துக் கொண்டு சிறைச் சாலைக்குள் நுழைந்த கண்டோஜியைக் கண்ட மொகலாய வீரர்கள் வணங்கி வழி விட்டனர்! ஔரங்கசீப்பிற்கும் அவனுக்கும் எவ்வித மாற்றமும் அவர்களால் காண முடியவில்லை. அவ்விதமிருந்தது கண்டோஜியின் வேஷம்!

சாம்பாஜியின் அறையின் முன் நின்று கதவைத் திறக்கும்படி கட்டளையிட்டான்; உடனே கதவு திறக்கப்பட்டது!

ஔரங்கசீப்புதான் வருகிறான் என்று எண்ணி வெகு அலட்சியத்தோடு நின்றிருந்தான் சாம்பாஜி! கண்டோஜி சிறையினுள் நுழைந்தவுடன், ''அரசே! என்னை அடையாளம் தெரியவில்லையா? நான் தான் கண்டோஜி உடனே நீங்கள் இவ்வுடைகளை அணிந்து கொண்டு இங்கிருந்து தப்பிவிடுங்கள். இந்தாருங்கள் உடை என்று சொல்லிக்கொண்டே தன் உடைகளைக் கழற்றிக் கொடுத்தான்!

இதைக் கண்ட சாம்பாஜி ஆச்சரியத்தில் மூழ்கியவனாய்த் திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டான்! கொடுமையைத்தவிர வேறெதையும் செய்தறியாத நமக்கு இந்த உதவியைச் செய்ய முன் வந்திருக்கிறான் கண்டோஜி! என்று எண்ணும் போது சாம்பாஜியின் கண்கள் நீரைப் பெருக்கின. உடனே அவனைக் கட்டித் தழுவிக் கொண்டு, ''கண்டோஜி! என்னை மன்னிப்பாயா?'' என்று கதறினான்.

''அரசே! அதைப்பற்றியெல்லாம் இப்போது பேசிப் பயனில்லை நீங்கள் இங்கிருந்து உடனே தப்ப வேண்டியது அவசியம்! சீக்கிரமாகப் புறப்படுங்கள்!'' என்று துரிதப் படுத்தினான் கண்டோஜி!

சாம்பாஜியும் ஔரங்கசீப்பைப் போல் உடையணிந்து கொண்டு புறப்பட்டு விட்டான்!

வந்தவரே போகிறார்! என்று எண்ணி காவலரும் கவனியாமல் இருந்துவிட்டனர்.

சாம்பாஜி தப்பிச் சென்றான்! ஆனால் கண்டோஜியின் உயிர் டில்லி சிறையினின்று தப்பிச் செல்ல முடியவேயில்லை! சிறையிலேயே சித்திரவதை செய்யப்பட்டு மாண்டு மடிந்தான் அம் மாவீரன்.

### குருடனும் குருடனும் கூடி

முழுமுதற் கடவுளாகிய நம் சிவபெருமானையன்றி வேறு நம் போன்ற சிற்றுயிர்களின் வடிவங்களைக் கல்லிலும், செம்பிலும் செய்து வைத்துக் கொண்டு அவற்றை வணங்குதலே பெரிதும் குற்றமாவதாம். மாரி, காளி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரை வீரன் போன்ற ஆவிகளெல்லாம் நம் போற் குற்றமுடைய சிற்றுயிர்களாதலின் அவற்றைத் துணையாகக் கொள்வது, ஒரு குருடன் மற்றொரு குருடனைத் துணை கூட்டிச் சென்று இருவரும் பள்ளத்தில் வீழ்தற்கே ஒப்பாம். விவிலிய நூலிலும் கடவுளுக்கு மாறான உருவங்களை வணங்குதல் ஆகாதென்று சொல்லப்பட்டதேயல்லாமல் கடவுளின் திருவுருவத்தை வழிபடுதல் வழுவென்று கூறப்பட்டதில்லை.

—மறைமலையடிகள்

# நாடகத் தமிழ்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அவிநயக்கூத்தை 'ஒற்றை நடிகர் கவிதை நாடகம்' என்றே கூற வேண்டும். இக்கூத்தில் கதையை விட உணர்ச்சிக்கும், மெய்ப்பாட்டு வளத்துக்கும், இலக்கிய நயத்துக்கும், அழகுணர்ச்சிக்கும், கற்பனை இன்பத்துக்குமே முதலிடம் உண்டு. இது பலகாலம் வரை மக்களால் போற்றப்பட்டுவந்ததற்குக் காரணம் சுவைஞரின் பேரறிவுடைமையும் நிறைந்த கற்பனை உணர்ச்சியுமேயாகும்.

நுண்ணிய கலைநயத்தைப் பேரறிஞர்களும் நல்ல கல்வியாளருமே போற்றிச் சுவைத்துணர முடியும். பண்டைத்தமிழர் எத்தகைய கலையுணர்ச்சியும் கற்பனை வளமும் நிறைந்தோராய் இருந்திருந்தனர் என்பதை இதனால் நன்கு உணர முடிகிறது.

இத்தகு 'உணர்ச்சி நாடகம்' தமிழகத்திற்கே உரிய சிறப்புக் கலையாகும். உலகில் இந்த வகை நாடக அமைப்பு வேறெந்த நாட்டிலும் இல்லாத முறையாகும்.

குறிப்பிட்ட கதைத் தலைவன் தலைவியர் இல்லாத நாடக அமைப்பு இலக்கியப்புலமை மிக்கவர்களால் மட்டுமே நன்குணர்ந்தின்புறக் கூடிய இயல்பினது. இக்கலைப்பண்பு உலகப் பொதுமை நாடகப் பண்பாம். இது தமிழ் மொழிக்கே உரிய தனிப்பண்பு மரபு; அதே நேரத்தில் உலகக்கலை மரபு கனிந்திட அமைந்த மரபு, வித்துமாகும். தமிழ்நாடகஇலக்கியம்உலகநாடக இலக்கியமாக விளங்கிய மாண்பைத் தமிழ் நாட்டினரும், தென்னாட்டினருமேஇன்னும் உணர்ந்து போற்றாதது வியப்பளிக்கிறது.

இவ்வுண்மையை இனிமேல் தான் உலகிற்கும் உணர்த்த வேண்டும். மேலைநாட்டு 'பால் நடனம்' நம் நாட்டுக் குரவைக் கூத்தின் சிதைவு வளர்ச்சியே என்பதை யாரே அறிவர்?

பொது விழாக்களுக்கும் தனி விழாக்களுக்கும் மன்பதை விழாக்களுக்கும் அரசியல்விழாக்களுக்கும் நாடகம்-நடனம் அமைத்து அதைச் சிறப்பும் உயர்வும் இன்பமும் உள்ளதாக ஆக்கும் 'நாகரிகப் பண்பாடும்' தமிழகக் கலை வாழ்க்கைப் பண்பாடு ஆகும். வியக்கத்தக்க உலக உணர்வு மாண்பு இதில் புதைந்துள்ளது. தனி மனிதனுக்கு உலகிலுள்ள உரிமையும், உலகம் தனியாருக்கு ஆற்றும் கடமையும் இரு சார்பின் இயைபும், இருபக்கமும் இக்கலை நிகழ்வமைப்பால் இணைக்கப்பட்டுப் பொதுமை அறம் புரக்கப்படுவதை நோக்க வேண்டும்.

ஒரு நாட்டின் கலைகளின் அமைதியையும் பண்பையும் கொண்டே அந்நாட்டு வரலாற்றையும் மக்கள் வாழ்க்கை முறையையும் மன்பதை அமைப்பையும் கணித்து விடலாம். தமிழக மன்பதை இயக்கம் நாட்டியல் மரபு ஆகியவை எவ்

வளவு பண்பட்டவை எவ்வளவு அறிவு நலன் வாய்ந்தவை எத்துணை நாகரிகச் செம்மை கனிந்தவை என்பதை இதனால் தெளியலாம்.

வாழ்க்கையின் சிறப்பான நிகழ்ச்சிகளே கலைகளின் நிறை உருவமாக உருவாகியிருக்கிறது.

கலைஞர்களுக்கு மட்டுமின்றிச் சுவைஞர்கட்கும் கற்பனையாற்றல் இருக்க வேண்டும் என்பது தமிழகக் கலை இலக்கியக் கொள்கையாகும். கலைஞன் கூறியதைவிடக் கூறாமல் கூறிய கருத்துக்களை உணர்ச்சிகளை இலக்கிய கலைச் சுவைஞன் தன் பகுத்தறிவில் வல்லமையால் உய்த்தறிந்து தெளிய வேண்டும்.

கதை, கவிதை, நாடகம் முதலிய எக்கலையாயினும் அதன் முன் பின் தொடர்புகளையும் சூழ்நிலைகளையும் அக்கலையாக்கத்தின் 'நிழல்களையும்' 'எதிரொலிகளையும்' எதிர் வினைகள் -விளைவுகளையும் தன் நுண்மாண் நுழைபுல மேதையால் சுவைஞனே கற்பித்து உய்த்தறிந்து சுவைக்க வேண்டும்.

தொகை நூல்களில் பாடல்களுக்கு முன் பின் நிகழ்ச்சித் தொடர்பு உண்டு. சான்றாக ஒரு காதலி தோழிக்கு பிரிவு ஏக்கத்தை விளக்குவதாக ஒரு பாட்டு இருக்கும். இது ஒரே ஒரு நிகழ்ச்சியாலான ஒரு காட்சி மட்டுமே. இதற்கு முன் பல நிகழ்ச்சிகள் காட்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. இக்குறிப்பிட்ட காட்சிக்குப் பின்பும் பல நிகழ்ச்சிகள் காட்சிகள் நிகழப்போகின்றன. இந்த இரு நிகழ்ச்சிகளையும் சுவைஞர் தாமே தம் கற்பனைத் திறனால் உய்த்துணர்ந்து சுவைக்கவேண்டும். இதனால் சுவைஞரின் எண்ணும் ஆற்றலும் கற்பனையாற்றலும், நுண்ணாய்வு ஆற்றலும் திறனாய்வுத் தன்மையும், ஆராய்ச்சி இயல்பும், வாழ்க்கை அடைவைப் பற்றிய ஆர்வமும் வளரக்கூடிய வாய்ப்பு, உண்டாகிறது. இதுவே இவ்வருந் தமிழ் இலக்கியம் கலைகளைப் பயில்வதாலும் சுவைப்பதாலும் சுவைஞர்க்கு ஏற்படும் பயன்களாகும்.

நுண்ணிய அறிஞர்க்கே தமிழ்க் கலைகளும் தமிழ் இலக்கியங்களும் தம் ஒப்பற்ற இன்பத்தையும், ஆக்கத்தையும் புதைபொருட்செல்வங்களையும் நுண்மாண் ஒண்மைகளையும், நுண்ணிய எழிற்சுவைகளையும் ஈயும். பிறர் அவ்வொட்ப நுட்பம் உணர இயலாது வாளா நொந்து வெறுப்படைவர்.

இவ்வொரு நுட்பம் கொண்டே பண்டைத் தமிழ்ப் புலவர் கலைஞர்களின் ஆராய்ச்சி அறிவும், கற்பனையாற்றலும், எண்ணுந்திறனின் ஆழமும், உலகியல் உணர்வும் முருகுணர்வும் எவ்வளவு சீரியது, நுட்பமானது விழுமியது என்பதை உணரலாம்.

புலவர்கள் தாமே புகுந்து பாட்டில் பேசாமல் கதையுறுப்பினர் வாயிலாகப் புகுந்து பேசி, உணர்வையும் கருத்தையும் வெளியிடும் நுண்திறமே தமிழில் மிகப் பழங்கால இலக்கிய வாழ்வை மரபு, வரலாற்றைக் காட்டுகிறது.

'ஆசிரியர் பேசும் முறையே முதலில் பயின்று பின்பே கதை மாந்தர் கூற்று முறை அமைந்தது' என்ற நுண்ணிய உண்மை தமிழ்க் கலை இலக்கியத்துறை ஆராய்ச்சி

புலவர்
கி.நா.அறிவொளி

யில் புதியதோர் ஒளி தரும் கருத்தாகும்.

இங்கு ஆசிரியர் கூற்று முறை அமைந்த அகப்பொருள் நூல்கள் பாட்டுக்கள் இன்று எங்கே? எனக் கேட்கும்போது அவை இருந்து அழிந்து பட்டன என்றே கூற வேண்டிய நிலையிலிருக்கிறோம். ஆனால், அவை இருந்தன என்பதற்குரிய அரிய சான்று கோவை நூல்களில் அமைந்த கவிக்கூற்று ஆகும். அதுமட்டுமின்றிப் பழந் தமிழ்க் கூத்தில் இறுதிப்படியாக விளங்கிய தெருக்கூத்துக்களிலும், குறவஞ்சி நாடகங்களிலும் வரும் கட்டியக்காரன் கூற்றுனது கவிக் கூற்றேயாகும். கவிஞனே கதையை இயக்குபவன். அக்கவிஞன் குரலாகக்கட்டியக்காரன் கூத்தில் இடம் பெற்றான்.

தமிழர் எழுதிய எல்லா நூல்களும் அழியாமல் இன்று கிட்டியிருந்தால் வரலாற்றாராய்ச்சியிலும், கலை ஆராய்ச்சிலும், இலக்கிய ஆராய்ச்சியிலும் பல உண்மைகளைத் தெளிவாக உணர்ந்திருக்கலாம். அதோடு உலகத்துக்கும் பல உண்மைகளை உணர்த்தி வழி காட்டிஇருக்கலாம். என்செய்வது!

சங்ககால இலக்கியங்கள் எல்லாமே கூட நமக்குக் கிட்டவில்லையே! சங்ககாலத்திய படைப்புக்களில் விரல்விட்டு எண்ணத்தக்கவை மட்டுமே நமக்குக்கிட்டின. அவ்வாறிருக்கையில் தம்முடைய ஆராய்ச்சிகளில்மறுப்புக்குரியவைகளைக் கூறுவோர் துணிந்து எதையும் கூற முடியாதே!

பண்டைக்கால நாடக உரையாடல் எவ்வாறிருக்கும் என்பதற்கு எதிர்பாராத வகையில் ஒரு சான்று புறநானூற்றில் கிட்டுகிறது. அதிகமான் நெடுமான்அஞ்சி போர்க்களத்தில் மார்பில் வேல் ஊடுருவிப் பாய இறந்துபட்டான். அதைக்கண்ட செந்தமிழ்ப்புலமைச் செல்வி அவ்வையார் உள்ளம் புண்பட்டு நொந்தழுது அரற்றிய மொழிகள் எவ்வாறே பாட்டாக நம்புறநானூற்றில் அமைந்துவிட்டது. இது தமிழரின் நற்றவமே போலும்! அப்பாட்டினை 'இணைக் குறள் ஆசிரியப்பா'என யாப்பியல் வழி வழங்குவர். ஆயின், பாட்டமைதியினூடே ஆக்காலப் பேச்சு வழக்கியல்பே மிகுந்திருப்பதை நுண்ணிய ஆய்வு நோக்கோடு கற்றோர் அறிய முடியும்'

'சிறியகள் பெறினே
எமக்கு ஈயும் மன்னே!
பெரியகள் பெறினே
யாம் பாடத்தான் மகிழ்ந்து
உண்ணும் மன்னே!
சிறு சோற்றானும்
நனிபல கலத்தல் மன்னே!
பெருஞ் சோற்றானும்
நனிபல கலத்தல் மன்னே!
என்பொடு தடிபடு வழி யெல்லாம்
எமக்கு ஈயுமன்னே!
அம்பொடு வேல்நுழை
வழியெல்லாந் தான்
நிற்கும் மன்னே!
நரந்த நாறும் தன் கையால்
புலவு நாறும் என்தலை
தைவரு மன்னே!
அருந்தலை இரும்பாணர்
அகல் மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண்
பாவை சோர
அஞ்சொல் நுண் தேர்ச்சிப்
புலவர் நாவில்
சென்று வீழ்ந்தன்று அவன்
அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை
யாண்டு உளன் கொல்லோ!
இனிப்பாடுநரும் இல்லைப்
பாடுநர்க்கு ஒன்று
ஈகுநரும் இல்லைப்
பனித்துறைப் பகன்றை
நறைக் கொண் மா மலர்
சூடாது வைகியாங்குப்
பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும்
உயிர் தவப் பலவே'

(புறநானூறு. 235)

இப்பாட்டை நன்கு ஆராயும்போது அக்காலப்பேச்சு வழக்கின் உருவம் நமக்கு நன்கு புலனாகும். உணர்ச்சிக் கொந்தளிப்பு, அவ்வையாரின் உரையில் பொங்கிப் பொதுளுவதை நன்கு அறியலாம். இத்தகு உரைவளம் மிக்க நாடகங்கள் பண்டைக்காலத்தில் மிகுதியாக நாடெங்கும் நடைபெற்றிருந்தன எனலாம்.

நாடக வழக்கு மிகுதியாக இருந்தமையால் தானே தொல்காப்பியர், செய்யுள் வழக்கைக் குறிக்க வந்தபோது உலகியல் வழக்கையும், நாடக வழக்கையும் ‘ஒப்ப மதித்து ஆராய்ந்து பாடல் சான்ற புலநெறிவழக்கத்தைத் தம் அரும் பெரும் இலக்கணத்தில் அமைத்தார்! இலக்கணப் பேராசிரியர்களும் மதிக்கும் நாடக வழக்கு தமிழகத்தின்’ வாழ்க்கைக் கலை’ யாக வழங்கிச் சிறந்த மாண்பு வியக்கத் தக்கதே.

கலித்தொகையும், பரிபாடலும் எவ்வளவு நாடகப் பண்பமைந்தவை என்பதை ஆராயும்போது நம் கற்பனையாலும் எட்டமுடியாத வியப்பும் விரிந்த இலக்கிய நோக்கும் முகிழ்க்கிறது. சங்க இலக்கியங்களை நாம் குறுகிய எல்லையிலிருந்து ஆராய்வதை விட்டு விட்டு, விரிந்த ஆராய்ச்சி நோக்கில் அணுகாததால்பல உண்மைகளைக் காணவும் உணர்த்தவும் தவறிவிட்டோம்.

தொகை நூற்களைக்கூட நாம் தமிழ் மரபுக்கிசைந்த கண்ணோட்டத்தில் ஆராயாமல் இருக்கும் குறைபாட்டை மாற்றிக் கொள்ள வேண்டும். கலித்தொகையும், பரிபாடலும், ஐந்திணை நூல்களும் கோவைநூல்களும்கவிதை நாடக இலக்கியங்களே என்ற உண்மையை ஆராய்த்தறிந்தபோது வியப்பின் எல்லையை எய்தினேன். அந்நூல்களை நாடக அமைப்பு முறையில் வகுத்தமைத்து ஒரு நூல் இயற்றினால் அப்போது அவற்றின் உண்மையை உலகம் உணரும். இதேபோலக் காமத்துப்பாலும் ஓர் ஒப்பற்ற நாடகத் தமிழ் இலக்கியமேயாம். இவற்றை அரங்கில் நடிக்கவும் முடியும் என்பதைத் தமிழகம் நனியறிய வேண்டும்.

இவ்வுண்மைகளை உணர்ந்து சங்க இலக்கியங்களின் உண்மை நாடகத்தமிழிலக்கியத்தை ஆராய வேண்டுவது ஆய்வறிஞர்கள் கடமையாகும்.

---

**ஐயா வணக்கம்**

செல்வத்தினாலேயேனும், கல்வியினாலேனும் தலைமையினாலேயேனும் வலிமையினாலேயேனும் சிறந்தவனாயிருக்கும் ஒருவனைச் செல்வமும் கல்வியும் தலைமையும் வலிமையும் இல்லாத பிறர் பெரும்பாலும் அச்சத்தால் வணங்கா நிற்பர். மேற் சொன்ன வளங்களுடையோன் தன்னையே பெரியனாக மதித்துத் தன்னை வணங்குவோரை மதியாது ஒழுகும் வரையில், அவனை வணங்குவோர் அவன்பால் என்றும் அச்சமே கொண்டு நிற்பர். அங்ஙனஞ் செல்வம் முதலிய வளங்களால் உயர்ந்தோன் தன்னை மேலாகக் கருதாது தன்னை வணங்குவோரெல்லாரிடத்தும் அன்பும் இரக்கமும் உடையனாய் ஒழுகுவனாயின், அவனைவணங்குவார் தமக்குள்ள அச்சந்தீர்ந்து அவன் பாற்பேரன்புடையராய் உளங் குழைந்து உருகியொழுகு தலையும் காண்கின்றோம். இவ்வியல்பை உற்று நோக்குங்காற், கடவுளை அச்சத்தால் வணங்குவார் நிலைக்கும் அன்பினால் வணங்குவார் நிலைக்கும் உள்ள வேறுபாடு நன்கு விளங்கா நிற்கும். —மறைமலையடிகள்

---





தலைவாழை இலைப்பரப்பில் சிரிக்கும் பொங்கல்
தண்மதியே! உதிர்க்கின்றாய் முகத்தில், பண்பில்.
தலைமகளே! பவளநிறப் பானை வைத்து
தளிர்க்கரத்தால் மஞ்சளிஞ்சி கரும்பு கட்டி,
கலையழகு மிளிர்ந்திடவே அடுப்பி விட்டு
கனித்தமிழில் பண்ணிசைத்தோம் தாளத் தோடு!
தலைப்பொங்கல் நீபொங்க இன்பம் பொங்கி
தனிப்பொங்கல் பொங்கிட்டோம் கடந்த ஆண்டில்!

நீர்பொங்கி நிலம்பொங்கி வயல்க ளெல்லாம்
நீள்கதிர்கள் தானியங்கள் பொங்கும் போதில்
கார்பொங்கி வளிபொங்கி இயற்கைச் சீறறம்
களக்காடாய் நாடெல்லாம் பொங்கி, உயரும்
ஊர்பொங்கி உயிர்பொங்கி மக்கள் கெட்டு
உலைபொங்க இடமுமின்றி மனமும் பொங்கி
சீர்பொங்கும் செயல்களிலே தடையும் பொங்கிச்
சினம்பொங்கச் செய்ததந்தோ! இயற்கைப் பொங்கல்!

வெண்பொங்கல் உன்நெஞ்சின் தூய்மை காட்டும்,
விரிமலரே! செந்தேனே! அன்பின் ஊற்றே!
கண்பொங்கிப் பார்வையற்றோர் ஒளியைப் பெற்றோர்
காட்சிதனை மாட்சிதனைக் காணு கின்றோம்.
மண்சொந்தம் நிலப்பட்டா ஏழைக் கின்பம்
மருவுகின்ற நேரத்தில் ஏதோ சில்லோர்
கண்குருடாய் அரசியலில் பொங்கி யுண்டு
களிப்படையும் சூழ்ச்சிதனைப் பொங்க விட்டார்!

நினைத்தாலே பொங்குதடி, நீசத் தன்மை
நிலைத்திருக்க விடுவோமா? வீறு கொண்டு
வினைமுடிப்போம், பண்பாட்டைத் தமிழர்நாட்டு
விவேகத்தைக் காத்திடுவோம். வெற்றி கொள்ள
முனைந்திடுவோம் வஞ்சகரின் செயல்கள் வீழ்த்த!
முன்னேற்றம் தடைபடவோ படைகள் கொண்டோம்?
பனைவெல்லம் ஔடதமே! உணர்வு பெற்றுப்
பால் பொங்க உளம்பொங்கி உயர்வோம் கண்ணே!

— வேதா மஹாலன்



# வெய்யில் எரிக்கிறது மழை பெய்கிறது!



மஞ்சுளா இன்னமும் வரக் காணோமே?...

மேஜை மீதிருந்த டைம்பீஸ் அவன் பார்வையில் சுழன்றது. பொட்டுப் பொட்டாக நீர்மணிகள் சிந்தின; சிதறின. ஏதேதோ நினைவுகள் எப்படி எப்படியோ அவனை அலைக்கழித்திருக்க வேண்டும். நெஞ்சம் குலுங்கியது; நலிந்து மெலிந்த இடதுகை, இருதயத்தைத் தடவிக் கொடுத்தது. புரண்டு படுத்தான், அவன்.

அவன்: குமார். படுக்கை நொந்ததோ?

பட்டு மெத்தையில் அவன் நெஞ்சு ஒட்டட்டுமென்று காத்திருந்தமாதிரி, இருமல் ஆழமாகவும் அழுத்தமாகவும் மூர்த்தண்யமாகவும் புறப்பட்டது. தரைமீனாகத் துடிதுடித்தவனாக, 'மஞ்சு!' என்று முனகியவண்ணம் விதியைக் கண்டு பயந்தவன் மாதிரி மல்லாந்து படுத்துக் கொள்ள முயற்சி செய்யலானான் குமார். மூச்சுவாங்கியது; வேர்வை துளித்துளியாக நெற்றிமேட்டிலும் மார்பிலும் சரம் கட்டத் தொடங்கியது. கண்கள் இருண்டன. 'தெய்வமே!'

மஞ்சள் வெய்யில் விளையாடியது; மணி ஆறு.

அடுத்த 'டோஸ்' மருந்து அருந்த வேண்டும்.

மருந்துச் சீசாவை குமார் விரதியோடு நோக்கினான். அவனுடைய பார்வையில் ஏக்கம் நெடுமூச்செறிந்தது. 'ஒரு வாரத்துக்கு முந்திவரையிலும் மஞ்சு - என் மஞ்சு எனக்கு மருந்து கொடுப்பதற்கென்று சொல்லிவச்ச மாதிரி ஆறுமணிக்கெல்லாம் டாண்ணு ஆபீஸிலேருந்து வந்து இங்கே நிற்பாளே!...'

பைகிராப்ட்ஸ் சாலைக்கென்று இப்படியொரு பயங்கரச் சந்தடியா?

மஞ்சுளா இன்றும்கூட இன்னமும் ஏன் வரக்காணோம்?

உயிரைப் பிடித்துக் கொண்டு மெல்லத் தலையைத் தூக்க முயன்ற குமார் மறுகணம் ஏனோ ஒருகளித்துப் படுத்துக்கொண்டான். மருந்துப்புட்டியும் அவுன்ஸ் க்ளாஸும் இப்போது அவன் பார்வையினின்றும் மறைந்து விட்டன. பிரமை தட்டியவன் போல் அவன் சாய்ந்து கிடந்தான். நினைவுகள் திசைகூடி, திசை பிரிந்து ஆலவட்டம் சுற்றின போலும்!

எதை நினைப்பான்?

எதை மறப்பான்?

'மஞ்சுளா!...' — குமாரின் வெளுத்த உதடுகளில் மஞ்சுளா ஊர்ந்தாள். தோல் உரித்து காய்ந்

திருந்த இதழ்க்கரையில் ஒதுங்கியது ஈரம். நெஞ்சின் ஈரம் கண்களுக்கு-குழிவிழுந்திருந்த அந்தக் கண்களுக்குப்பாய்ந்ததோ? நெஞ்சுக் குருத்தில் நோவு கண்டது. சலனம் கடந்து சாந்தியுடன் சற்றே இருக்க முற்பட்டு விழிகளை மூடினன் அவன். விழிகள் மூடினல் என்ன? இதயம் திறந்திருக்கிறதே?

கழிந்த சில தினங்களை யொட்டியே இன்றும் காலையில் ஏழு மணிக்கெல்லாம் வேலைக்குப் புறப்பட்டுவிட்டாள் மஞ்சுளா. மற்ற நாட்களைவிட இன்று அவள் உடையலங்காரம் சற்று எடுப்பாகக்கூட இருந்தது. ஹார்லிக்ஸ் கலந்த ஃப்ளாஸ்க், துண்டாடி எவர்சில்வர் பிளேட்டில் காத்திருந்த ஆப்பிள், நெஞ்சுவலி, இருமல், ரத்தவிருத்தி ஆகியவற்றுக்கான லேபிள் ஒட்டிய வெவ்வேறு திணுசு காப்ஸ்யூல் பாட்டில்கள், ப்ரெட் என்று எல்லாவற்றையும் டீபாயில்வைத்து, விவரம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள். "ஆபீஸில் வேலைப்பளு கூடிவிட்டது. அதனுலேதான் சீக்கிரம் கிளம்பி, தாமதமாகத் திரும்பவேண்டியிருக்குதுங்க, அத்தான்," என்று இயந்திரம் போல பாடம் ஒப்புவித்துவிட்டு, என்னவோ சிந்தித்தவள் போல அங்கிருந்து புறப்பட்டாள் அவள். சோர்வும் வேதனையும் அவளுடைய கன்னக் கதுப்புக்களைச்சுற்றி நிழலாடியதை அவன் கண்டுகொள்ளாமல் இருப்பாஞ?

பூவும் பொட்டும் கண்ணில் நீள்கின்றன!...

'ஆமா- இப்படித்தான் இருக்கும் நான் மஞ்சுவுக்குச் சுமையாய்ட்டேனு? அதனுலேதான் அவள் என்னை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாகவிலகிக்கிட்டுஇருக்கிருளோ? பெருமூச்சு பீறிட்டது. சில தினங்களாக உருக்கொடுக்க முடியாமல் குழம்பிய ஒரு காரணத்துக்கு காரணத்தின் விஷயத்துக்குஇப்போது வடிவம் கொடுத்துவிட்ட பாவனையில்-வடிவம் கிடைத்துவிட்ட பாவனையில் அவன் வெளிப்படுத்திய அந்தப் பெருமூச்சு மௌனமாகப் பேசியது போலும்!

ஒரு நாளா, இரண்டு நாளா? கிட்டத்தட்ட எழுபது நாட்களாகத்தான் அவனுக்குத் துணையிருந்தாள் அவள் நர்ஸிங்ஹோமில். நெஞ்சுவலியென்று பேர் சூட்டிக் கொண்டு வந்த நோய்கினை வெடித்துப்படர்ந்தது. அவனுக்கு வாழ்க்கைப்பட்ட மூன்ருவது மாதத்திலா இப்படிப்பட்ட சோதனை ஏற்படவேண்டும்?

ஒரு நாள்.

"கலியாணத்தின்போது ஒருத்தொருக்கொருத்தர் எவ்வளவு அற்புதமான 'மாட்ச்' ஆகத் தோணினீங்க நீங்க ரெண்டு பேரும்?"... பார்க்கவந்த தம்பதி இப்படி அனுதாபப்படவில்லையா?

"மஞ்சு, உனக்குச் சுமையாகத்தானு நீ உன் அத்தானை மணக்க ஒப்பாமல், என்னை வலிய வந்து கல்யாணம் செய்துக்கிட்டே?" என்று குமார் சுயப்பிரக்ஞையை மீட்டுக் கொண்டதும் கண்ணீர் பெருக்கினுன்.

"அத்தான், அப்படிச் சொல்லாதீங்க; நீங்க சுமைன்னு ஒரு நாளும் கருதவேமாட்டேன்!...

நீங்க என்பேரிலே கொண்டிருக்கிற நேசத்துக்கும் அன்புக்கும் பாசத்துக்கும் நான் உங்களுக்கு ஏழேழு ஜன்மத்துக்கும் கடமைப்பட்டவளாச்சுங்களே, அத்தான்? நீங்க இந்தச் சமயத்திலே அமைதியாக இருக்க வேண்டியது ரொம்ப அவசியம்- கூடிய சீக்கிரம் நீங்க உடல் தேறி, முன்மாதிரி ராஜாவாட்டம் நீங்க ஆபீசுக்குப்

புறப்பட்டுடுவீங்க. நியாயமான கோரிக்கைகளுக்குத் தெய்வம் கட்டாயம் செவிசாய்க்குமுங்க, அத்தான்!''

அன்றொரு நாள் எத்துணை பான்மையுடன் செப்பினாள் மஞ்சுளா!

என்னவோ படபடத்த சத்தம் கேட்கிறதே!

திரும்பினான் குமார்.

மஞ்சுளாவின் அத்தான் டாக்டர் சாந்தமூர்த்தி அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதம் அது. அந்தக் கடிதம் வீட்டு விலாசத்துக்கு வந்திருந்தது. அலுவல் முடிந்து முதலிலே வந்த குமார் அதைப் பார்த்தான். உறைக் கடிதம் அவனுக்கு விவரம் குறித்துக் காட்டியது. பணி முடிந்து மீண்ட தன்னுடைய இன்னுயிர்த் துணையிடம் நீட்டினான் கடிதத்தை. அவள் அழகான புன்னகைக் கோலம் ஏந்தி அக்கடிதத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்தாள். ''நீங்கள் படிச்சிப்பாருங்க, அத்தான்!'' என்றாள்.

''இது உனக்கு வந்த தபாலாச்சே, மஞ்சு?''

''எனக்கு வந்திருந்தால் என்னவாம்? ம்... பிரிச்சுப் படியுங்க!'' நிஷ்களங்கத்தோடும் பச்சிளங் குழவியின் கெஞ்சுதலோடும் அவள் வேண்டும்போது, அவனால் மறுக்கக் கூடுமா?

தெரிந்தே இனம் புரியாமல் தவறு செய்வது போன்றதொரு மனவுணர்வுடன் அவன் கடிதத்தைப் பேசச் செய்தான்.

சாதாரணக் கடிதம் அது.

ஆனால் அன்பு சாதாரணம் அல்லவே?

அமெரிக்காவிலிருந்து தாயகம் திரும்பும் செய்தியை எழுதியிருந்தார் டாக்டர் சாந்தமூர்த்தி.

''அத்தான், என்னோட டாக்டர் அத்தானுக்கு என்மீது எத்தனை அன்பு பார்த்தீங்களா?'' என்று நளினம் சிந்திச் சிரிப்பைச் சிந்தினாள் மஞ்சுளா.

அவனும் தன் நோயை மறந்து சிரிக்கத் தவறவில்லைதான்

டாக்டர் சாந்தமூர்த்தி ஒரு காலத்தில் மஞ்சுளாவைக் கரம் பற்றத் தவம் இயற்றியது கனவல்லவே, கதையல்லவே!

''மிஸ்டர் குமார், நான் உங்களை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். இந்தக் காதலுக்கு நம் இருவருடைய மனங்களும் ஒன்றுபட்டது மாத்திரம் காரணமல்ல; நம்முடைய அந்தஸ்தின் சூழலும் அனுசரணையாக இருப்பதும் காரணமாகும். என்னுடைய டாக்டர் அத்தானுக்கு என்னைக் காட்டிலும் உயர்ந்த இடத்துப் பெண் தான் மனைவியாகும் பாக்கியம் பெற வேண்டும்!''

சென்னைப் பல்கலைக்கழகம் நடத்திய அனைத்துக் கல்லூரிப் பேச்சுப் போட்டியில் குமார் முதற்பரிசையும், மஞ்சுளா இரண்டாம் பரிசையும் பெற, அந்த வெற்றித் தொடர்பின் அறிமுகத்தில் கனிந்த காதலுக்கு அவனைப் போலவே அவளும் ஆத்ம சமர்ப்பணம் செய்ய முன்வந்த நேரத்தில் அவள் பேசிய இந்தப் பேச்சு அவனைப் பொறுத்தமட்டிலே விந்தையாகவே பட்டது! நெஞ்சம் நெக்குருகினான்!

பூவை ஆறுமுகம்

குமார் ராஜாபோலவும் மஞ்சுளா ராணிபோலவும் காட்சிகொடுத்து, இருமனம் ஒன்று சேர்ந்ததற்குச் சாட்சி கொடுத்து நின்ற அந்தத் திருமணநிழற் படம் இன்னமும் சிரித்துக்கொண்டுதான் இருக்கிறது.

ஆனால்...

மஞ்சுளா இன்னமும் வரவில்லையே?—ஏன்?...

'ஓ! மை டியர் மஞ்சு!...

ஜன்னல் கதவுகளை அடைத்தும் கூட, வாடை இன்னமும் அடங்கினபாடில்லை.

மேஜை விளக்கு மட்டும்தான் மங்கலாக எரிந்து கொண்டிருக்கிறது.

தலையணைக் கடியில் கிடந்த 'பைல்' உறுத்தவே, அதை அப்புறப்படுத்த முனைந்தான் குமார். கைகள் நடுங்கின. 'க்ளிப்' போட்டுவைத்திருந்த ரசீதுகளும் கடன் வாங்கிய கணக்குக் குறிப்புக்களும் அவனுடைய நோய்க்கு அர்ப்பணமான சோகத்தை இயம்பி இருக்கலாம்!

டயர் கம்பெனிஒன்றிலே வேலை செய்ததோடு பகுதிநேரமாக வேறோரிடத்தில் 'டைப்' செய்து கொடுத்து, அதன் மூலம் கிட்டிய இருநூற்றைம்பது ரூபாயை மனைவியின் அன்புக்கரங்களில் ஒப்படைத்து அவளை திடுதிப்பென்று வியப்பில் ஆழ்த்திய அன்றிரவில் தொட்ட நோய், விட்ட குறை-தொட்டகுறையாகித் தொலைத்ததே!

குமார் நீலப் பாதரச விளக்கைப் போட்டுவிட்டு, அவசரம் அவசரமாக டிரான்ஸிஸ்டரை இயக்கினான்.

'வங்காள தேசத்தில் பாதிக்கு மேற்பட்ட பகுதிகளை நம் பாரத ராணுவ வீரர்கள் பிடித்துவிட்டார்கள். ஜெஸ்சூர் நகரையும் கைப்பற்றி விட்டோம். இப்போது டாக்காவை நோக்கி இந்தியப் படை விரைந்து கொண்டிருக்கிறது?

அவன் மனம்விட்டுச் சிரித்தான் இப்படிச் சிரித்து எவ்வளவு நாட்களாகின்றன?

'மஞ்சு—என்னுடை மஞ்சு இன்னமும் வரவில்லையா?'

தவித்தான் குமார். கலவரமும் ஏக்கமும் சூழ, வாயிற்படியை விரக்தியோடு நோக்கினான். கண்கள் கலங்கத் தொடங்கின. சற்று நேரமாவது தூங்கினால் மனஉளைச்சலும் மண்டை வலியும் சற்று நேரமாவது அடங்குமென எண்ணியவனாய், தூக்கமருந்துக் குப்பியை எட்டி எடுத்தபோது அடியிலிருந்த சஞ்சிகை ஒன்றும் அதைத் தொடர்ந்து சில காகிதங்களும் விழுந்தன!

நேற்றிரவு அந்த ஏட்டிலிருந்துதான் கதை ஒன்றைப் படித்துக் காட்டினாள் மஞ்சுளா.

நோயாளிக்கணவன் சுமையாக இருப்பதாகக் கருதிய அவன் மனைவி அவனுக்குக்கடிதம் எழுதி வைத்துவிட்டு, ஓடிவ்டுகிறாளாம்!

கதையைக் கேட்டு முடித்த குமார் மலைத்துப் போனான்.

"அத்தான், கதை எப்படியிருக்குங்க?" இனிய பாதி கேட்டாள்.

"கதையா இது? குப்பை!"... உடையவன் முடிவு தெரிவித்தான்.

"என்ன அத்தான் இப்படிச் சொல்கிறீங்க? எனக்கென்னவோ இந்தக் கதை ரொம்பப்பிடிச்சிருக்காக்கும்!"

"அப்படியா?"என்றான் குமார்; தாங்கமுடியாத திகிலும் விதியின்

வியப்பும் நெருப்பாகப் பற்றி எரிந்ததோ; என்னவோ?

"என்னுங்க அத்தான் இப்படி அதிசயப்படுறீங்க?... நோயாளிப் புருஷன் அவளுக்குச் சுமை என்று அவளோட நெஞ்சுக்குத் தோணின அப்புறம், அவள் கொண்டவனைத் துறந்து விலகுவதைத் தவிர வேறே என்ன வழி இருக்காம்? தமிழ்ப்பண்பாடு அது இதுன்னு மாமூலான சப்பைக் கட்டுக் கட்டாமல், கதை ஒரு புதுத் திரும்பு முனையிலே அமைஞ்சிருக்குதே?... இல்லீங்களா, அத்தான்?"

அவன் பதில் ஏதும் சொல்லவில்லை. அவளை அவன் ஊடுருவிய சமயம், அவளுடைய எழில் மிகு வதனத் திரையில் கோடு கிறுக்கியிருந்த அந்த நிர்த்தாட்சண்யப் போக்கை அவன் எங்ஙனம் மறப்பான், பாவம்?

"பத்தியம் கொடுக்கிறீயா?" என்று தாசூக்காகப் பேச்சை வேறு திக்குக்கு மாற்றுவதுதான் அப்போதைக்கு அவனுக்கு மாற்று மருந்தெனத் தோன்றியது. துருப்பைத் தூறுக்கிக்குழம்பாமல், அவளுடைய அந்த இன்னமுதப் புன்னகையில் வழக்கம்போல் சொக்கியவனாகி, பத்தியக் கஞ்சியைக் குடிக்கலானான்.

நீள்மூச்சு வெடித்தது.

தூக்க மாத்திரைச் சீசாவோடு காகிதக் கிழிசல்களும் கையோடு வந்தன.

அவசியம் ஏற்பட்டால் மட்டும், ஒன்றிரண்டு தூக்கமாத்திரைகளை மட்டும் சாப்பிடவேண்டும்என்பது டாக்டரின் விதி—கட்டளை! அது மட்டுமல்ல; அதுவே மஞ்சுளாவின் பிரார்த்தனையும் ஆகியிருந்தது!

வலிய வரவழைத்துக் கொண்ட நகைப்புடன் குப்பியை உள்ளங்



கையில் கொட்டினன். ஐந்தாறு மாத்திரைகள் கண்ணுக்குத் தெரிந்துவிட்ட விதியைப்போல விழுந்தன! அவனுடைய நடுங்கிய திருஷ்டி, மடியில் சரணடைந்த தாள்களிலே நிலைத்தது. புரட்டினன். வெறும் கோடுகள் தாம் தென்பட்டன.

மஞ்சுளா இரவு வரும்போது புதுப்பேனு ஒன்று வாங்கி வந்திருந்தாள்! அது நன்ருக எழுதுகிறதாவென்று சோதித்துப் பார்த்த கோடுகள் அவை, விதியின் கோடுகள் அல்லதான்! மேலும் புரட்டினன்.

'ஆ!'—வீரிட்டலறியது உள்மனம். நைந்த மேனி ஆடியது. பச்சை நரம்புகள் விம்மின.

அந்தக் கடிதம் சிரித்தது!—விதியைப் போலவா?—இல்லை, விதியாகவா?

அத்தான்!

என்னை மறந்து விடுங்கள். நான் இனி உங்கள் சொத்து அல்ல!

இப்படிக்கு,
மஞ்சுளா

அவன் 'மஞ்சு!...' என்று ஓலமிட்டான். பொலபொலவென்று வழிந்தோடிய கண்ணீர் அக் கடிதத்திலும் அந்தத் தூக்க மாத்திரைகளிலும் விழுந்து சிதறின. 'ராத்திரி படித்துக் காட்டின கதையிலே, நோய் வசப்பட்ட கணவன் தனக்குச் சுமையாக இருப்பதாக முடிவு செய்து அவனை விட்டு ஓடிவிடும் அந்த மனைவிக்காக வக்காலத்து வாங்கிப் பேசினுள் மஞ்சு!... என்—ம்... மஞ்சு!... காரணம் இப்போ புரியுது!...கடிகாரத்தை வெறித்துப் பார்த்தான்.

மணி எட்டு இருபது!

சிறு பிள்ளைமாதிரி குமார் செருமத் தொடங்கினன். 'மஞ்சுளா! நீ என்னைச் சாசுவதமாவே மறந்திடத் துணிஞ்சிட்டியா? நான் உனக்குச் சுமையாக இருப்பதை உணர்ந்து உன் கிட்டே வருந்தினபோதெல்லாம் நீ எனக்கு எவ்வளவோ சமாதானம் சொன்னியே, மஞ்சுளா?... என் விதி உன் ரூபத்திலா விளையாடவேணும்?...நீ இல்லாத நான் இனி எப்படி இந்த உலகத்தின் கண்களிலே விழிப்பேன்?... ஐயையோ, உன்னை நான் எப்படி மறப்பேன், மஞ்சு?...என்னுடை உயிரைப்பற்றி இனி எனக்கு அக்கறை இல்லைதான். ஆனல், என்னுள்ளே உயிரும் உயிர்ப்புமாகக் கலந்திட்ட உன்னை நான் மறப்பதா? ஊஹும் உன்னை நான் மறக்கவே மாட்டேன்!...மறக்கவும் முடியாது! என், தெய்வமே!... மஞ்சு .. மஞ்சுளா!...' கண்களை மூடிக்கொண்டான்; திறந்து கொண்ட அகக்கண்களிலே மஞ்சுளா அன்பு காட்டி, பாசம் ஊட்டி, நேசம் காட்டி பரிவு ஊட்டி விளையாடிக் கொண்டேயிருந்தாள். பனித்திரையினூடே நடனம் புரியும் கந்தருவப் பெண்ணுக அவள் விளையாடினுள்; விளையாட்டும் காட்டினுளோ?

உள்ளங்கையில் குவிந்து கிடந்த அந்தத் தூக்கமாத்திரைகளை விழிவெள்ளத் தோடு ஊடுருவி நோக்கினன் குமார். 'ஊஹும், என்னுடை மஞ்சு எனக்கு ஒருகாலும் துரோகம் செய்யத் துணியவே மாட்டாள்!... இந்த ஒரு மகத்தான ஆறுதலின் துணையுடன் அவன் மறுபடி அந்தத் தூக்கமாத்திரைகளைப் பார்த்தான் விதிக்கு வடிவம் இல்லை என்கிருர்களே, அது சுத்தப்பொய்! 'எங்களுடைய தாம்பத்ய வாழ்விலே இன்னிக்கு மாதிரி மஞ்சுளா என்னிக்குமே

இவ்வளவு லேட்டாய் வந்ததில்லையே?' மாளாத ஏக்கமும் மீளாத வேதனையும் சூழ, அவன் அந்தத் தூக்கமாத்திரைகளை அப்படியே தன் வாயருகே கொண்டுபோக எத்தனம் செய்த போது, மின்னலால் தாக்குண்ட நிலையில் ஓர் இமைப்பொழுதுக்கு அவன் அப்படியே கல்லாக நின்றான்! மறுஇமைப்பில், அவன் வெறிபற்றின பாங்கில் நழுவிக் கிடந்த அந்தச் சஞ்சிகையை கை நடுங்கப் புரட்டி, உயிர் நடுங்கப் பார்க்கலானான். உடனே ஓ... மை டியர் மஞ்சு! ' என்று தன்னுள் தனக்குக்குத்தானே குதூகலம் அடைந்த வண்ணம் அந்தப் பத்திரிகையை வீசிவிட்டு அந்தக் கடிதத்தை மேஜைமீது போட்டு விட்டு, உள்ளங்கையிருந்த தூக்கமாத்திரைகளில் இரண்டைமட்டும் வாய்க்குள் போட்டுக்கொண்டான்.

ஹார்லிக்ஸ் இவ்வளவு ருசியாகவும் இருக்குமோ?

சிரித்தான்!

★

''அத்தான்!... அத்தான்!''...

விதியின் நாயகியாக வந்து நின்ற மஞ்சுளா கூவினாள்.

குமார் கண்களைத் திறக்கவே இல்லை இன்னமும்!...

உயிர்க்கழுவில் ஊசலாடிய அவள் மீண்டும் அலறினாள். அவள் பார்வையில் அந்தக் கடிதமும் தூக்கமாத்திரைச் சீசாவும் தென்பட்டன.'' ஐயையோ, அத்தான்! ஐயோ, என் தெய்வமே!'' என்று ஓலம்பரப்பிக்கொண்டே அவளுடைய குமாரின் மார்பில் தஞ்சமடைந்தாள் மஞ்சுளா.

புதிய ஆப்பிள் உருண்டதும்.

கெட்ட கனவு கண்டு விழிப்பவனைப் போல குமார் பதட்டம் சூழ, கண்களைத் திறந்தான், தன்




நல்லாரைக் காண்பதுவும்
நன்றே நலமிக்க
நல்லார்சொல் கேட்பதுவும்
நன்றே-நல்லார்
குணங்கள் உரைப்பதுவும்
நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும்
நன்று.

தீயரைக் காண்பதுவும்
தீதே திருவற்ற
தீயார்சொல் கேட்பதுவும்
தீதே—தீயார்
குணங்கள் உரைப்பதுவும்
தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவும்
தீது.

—வாக்குண்டாம்

---

இருகைகளாலும் தன்னுடைய ஆருயிரை ஆரத் தழுவியபடி மெள்ள எழுந்து உட்கார்ந்தான். மீண்டும் ஒரு முறை மஞ்சுளாவை ஊடுருவினான். அவனது குழிவிழுந்த கண்களின்றும் கண்ணீர் மடை திறந்தது. ''மஞ்சு! மை டியர் மஞ்சு! என்னை-இந்தப்பாவியைத் தயவு செஞ்சு மன்னிப்பாயா?'' என்று தேம்பத் தொடங்கினான்.

மஞ்சுளா தன்னுடைய கண்ணீரையும் இப்போது துடைத்துக் கொண்டாள். ''அத்தான், உங்க கையிலே மன்னிப்புக் கேட்கணும்னு உயிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு ஓடியாந்திருக்கேன்

நான். இப்போ நீங்க என்ன சொல் றீங்க?'' என்று நா தடுமாற வின வினுள். மாரகச்சேலே நழுவத் துடித்தது. ஜாதிமல்லி மணத்தது.

மஞ்சு/ ராத்திரி நீ படிச்சுக்காண் பித்த அந்தக் கதையிலே வரு கிற மஞ்சுளாவாக நீ ஒரு போது மே இருக்கமாட்டாய் என்கிற அந்தரங்கத்தை என்னுடைய மனச் சாட்சி தீர்க்கமாக உணர்ந்திருந் தும்கூட, உன்னுடைய இந்தக் கடு தாசி என்னை ஒருகணம் தடுமாறச் செஞ்சிட்டுதே, மஞ்சு? என்னுடைய கண்கண்ட தெய்வத்தைத்தவருக நினைக்கத் துணிஞ்ச நான் மகா பாவி! கேவலமான அற்பன் நான்! பெரிய மனசு வச்சு என்னைத் தயவு பண்ணி மன்னிக்க மாட்டி யா, மஞ்சு?'' தேம்பினுன் குமார்.

''அத்தான்!'' என்று கதறினுள் மஞ்சுளா. ''தெய்வத்தை பக்தை மன்னிப்பதா? அப்படியெல்லாம் நீங்க சொல்லலாமா? நான் ராத் திரி படிச்சுக்காட்டின கதையிலே வருகிற அந்த மஞ்சுளாவாக நான் ஒரு போதுமே மாறமாட்டேன் என்கிற உண்மையை—சத்தியத் தை போலவே நீங்களும் நிச்சயம் புரிஞ்சுகிட்டிருப்பீங்கன்னு நானும் உணர்வேனுங்க. கதையிலே வரு கிற மஞ்சுளா தன்னுடைய நோ யாளிக் கணவனைச் சுமையாகக் கருதினுள். அது அவள் மனச் சாட்சியின் பிழை; விதியின் பிழை யாகவும் இருக்கலாம். தன் நோ யாளிக்கணவன் சுமையாக இருக் குமளவுக்குக் கதையைக் கதாசிரி யர் யதார்த்தப் போக்கிலே கொண்டு செலுத்தி எழுதியிருந் தார். அந்த ஒரு திறமையை வியந்துதான் அந்தக் கதை எனக் குப் பிடித்ததாகவும் நான் சொன் னேன்! ஆனுல் அந்தக்கதையிலே வரக்கூடிய அந்த மஞ்சுளாவை எனக்குப் பிடிச்சதாகச் சொல் லவே இல்லே! வாழ்க்கையை விளையாட்டின்னு சொன்னுல், அந்த விளையாட்டிலே விதி என் கிற ஒரு விசித்திர சந்திக்கும் பங்கு இல்லேன்னு சொல்லவே முடியிலே!'' மூச்சு வாங்கியது. நீலப் பாதரச ஒளியில் ஒளிவிழிகள் பளபளத்தன.

''அப்படியா?''

ஆமாங்க, அத்தான். இல்லேயா னுல், நான் புதிசாக வாங்கிவந்த பேனு நன்ருக எழுதுதான்னு பரீட்சை செய்து பார்க்க, ராத்திரி உங்களிடம் படிச்சுக்காட்டின அந்தக்கதையிலே வருகிற கடிதத் தையே காப்பியடித்து நான் ஏன் எழுதப்போகிறேன்? அந்தக் கதையின் நாயகியின் பெயரும் மஞ்சுளா என்று ஏன் அமைந்தது. எழுதின கையோடு அந்த லெட்ட ரைக் கிழிச்சுப் போடணும்னு நினைச்சப்போ, நீங்க பலமாக இருமவே, உங்களைக் கவனிக்க ஓடியாந்திட்டேன். அந்தக் கடு தாசி விஷயம் கொஞ்சநேரம் முந் திதான் எனக்கு ஞாபகமே வந்திச் சுங்க அத்தான்! என்னுடைய சிறு பிள்ளைத்தனமான விளையாட்டு விஷப் பரீட்சையாகிடப் படாதே அப்படின்னு தெய்வத்தை வேண் டிக்கிட்டு டாக்ஸியிலே பறந்துவந் தேனுங்க அத்தான், வெறும் நடைப்பிணமாக!... நல்லகாலம், என் உயிர் பிழைச்சிட்டுது!... ''மானம் பிழைச்சுட்டுது!...''

அந்தக் கடிதம் இப்போது சுக்குநூருகிப் பறந்தது.

''மஞ்சு!...''

''அத்தான்!'' என்று ஆன்ம நேயப் பெருக்குடன் ஆனந்தக் கண்ணீர்சொரிந்தவளாக, டம்பப் பையினின்றும் புத்தம் புதிய கரன்ஸிநோட்டுக் கட்டு ஒன்றை எடுத்து அவளுடைய அவனிடம் சமர்ப்பித்தாள் மஞ்சுளா குமார்.

''மஞ்சு!...

"அத்தான், ஒருசமயம் எனக்குத்தெரியாமல் நீங்க பார்ட் டயமாக வேலை செஞ்சு நிரம்பப்பணம் கொண்டாந்து என் கையிலே கொடுத்து என்னைத் திகைக்கச் செஞ்சிட்டு பாயும் படுக்கையும் ஆனீங்க. இப்போ உங்க மாதிரி நானும் என் தோழியோட கம்பெனியிலே பகுதிநேரம் வேலை பார்த்து அந்த வேலைக்கான ஊதியத்தைத் திடுதிப்னு உங்ககிட்டே சமர்ப்பிச்சு, உங்களை ஆச்சரியப் படச்செய்யனும்னுமனசுக்குள்ளே ரகசியமாகத் திட்டம் போட்டேன். இந்த விஷயம்கூட, சிந்திச்சுப் பார்த்தால், ஒரு விளையாட்டுப்போலவே அமைஞ்சிட்டுது. அதுவரைக்கும் இந்த நடப்பு என் வரையிலும் நல்லகாலம்னு சொல்றதைப்பார்க்கிலும், அது உங்களுக்கு உங்களோட இந்த மஞ்சு பேரிலே இருக்கக்கூடிய பெருந்தன்மையான-தர்மம்மிக்க நம்பிக்கையையே குறிக்கும்னு சொல்றதுதான் உசிதம்! ஆமாங்க, அத்தான்!..." சுருள் இழைகளில் நெற்றித் திலகத்தைச் சூழ்ந்தன.

"ஓ...மஞ்சு!"

அவன் இதயபூர்வமாகச் சிரித்தான்; இதயபூர்வமாகவிம்மினான். மழையும் வெய்யிலும் விளையாடி, விளையாட்டுக் காட்டுமே அப்படி!

"அத்தான், இன்னொரு நல்ல சேதியையும் உங்ககிட்டே சொல்லனும். என்னோட டாக்டர் அத்தான் ஏழுமணிக்குத் தாயகம் திரும்பிட்டாங்க! இன்றைக்கு ஒன்பது மணிக்கு நம்மை மீட் பண்ண வரப்போறாங்க! எண்ணி முப்பதே நாளுக்குள் உங்களை பழையபடி ஒரிஜினல்ராஜாவாகச் செய்து விடுவதாக உத்தரவாதம் கொடுத்திருக்காங்க, என் அன்பு அத்தான்! இருதயநோய் சம்பந்தப்பட்ட சகல நோய்களுக்கும் அவரது புதிய ஆராய்ச்சியும் அனுபவமும் ஈடு கொடுக்கவல்லது என்கிற உண்மையையும் நீங்க மறந்திடக்கூடாதுங்க, அத்தான்டியர் அத்தான்!" அவளது ஆனந்தச் சிரிப்பு அந்த மங்கலத் தாலியில் முகம் பார்த்துக் கொண்டது போலும்!

"அப்படியா? எல்லாம் நீ இடும் பிச்சை, தாயே!"

அடர் மழைக்குப்பின்னே முகம் காட்டும் வெய்யிலின் அருமையும் பெருமையும் அனுபவித்தவர்களுக்குத்தான் புரியும்!

## எனக்குத் தெரியாது

கிருத்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் வேலைக்கு ஆள் வேண்டியிருந்தது. அந்த வேலைக்கு ஒருவர் மனுப்போட்டிருந்தார். பேட்டி நடந்தது.

தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வேலைக்கு வந்திருந்தவரை திறனாய்வு நடத்தினார். குற்றியலுகரத்திற்கும் முற்றியலுகரத்திற்கும் ஒவ்வோர் எடுத்துக் காட்டுக் கூறுமாறு கேட்டார்.

வந்தவர், "எனக்குத் தெரியாது" என்றார்.

உடனே அவரை வேலைக்குச் சேர்த்துக் கொண்டார். வந்தவர் சொன்ன சொற்களில் எனக்கு என்பதில் குற்றியலுகரமும் தெரியாது என்பதில் முற்றியலுகரமும் உள்ளன. பேட்டி கண்ட போராசிரியர் பரிதிமாற் கலைஞர். வேலைக்கு வந்தவர் மறைமலையடிகள்.

# கவிதை

மையொற்றுந் தாளில் ஒரு துளி மைவிழுந்தாலும் கசிந்து பரவுவது போல் கவிஞன் மனத்தில் ஒருசிறு நினைவெனினும் இன்பமோ, துன்பமோ—மிகுதியாக ஊறிவரும். அத்தகைய மனமே கவிதை பிறக்கக் களமாகின்றது. கவிதையைச் சுவைக்கவும் திறம் பெறுகின்றது.

ஓவியர்கள் சித்திரம் வரைவதற்கென்று தாளை எடுப்பார்கள். ஓவியம் துவங்கு முன்னதாக, தாளை நீரில் நனைப்பார்கள். இல்லையேல் தாளை ஈரப்படுத்தி வைப்பார்கள். அதன் பின்னரே வண்ணம் நன்றாக, படலம் படலாக ஏற்றப்படும். அதுபோல ஈரமான இதயத்தில்—உணர்வுகள் ஊறும் உள்ளத்தில்தான் கவிதை அநுபவமே படிப்படியாக உருப்பெறும்.

ஒரு மன ஏட்டில் மற்றொரு மனம் வரிவரியாய் வனைந்தெழுதும் ஓவியம் கவிதையாகின்றது.

மனிதன் பேசும் மொழி ஒரு முதல் விந்தை. அம்முதல் விந்தையின் வழிவந்த இறுதி விந்தை—இதயச் சுருதி விந்தை கவிதையே.

மனிதனின் மொழி செய்தி சொல்லும்; கவிஞனின் மொழி சீரிய ''உள்ளங்களின்'' செய்தி சொல்லும். சொற்கள் குவிந்தால் மொழியாகும்; சொற்களில்—சொல்லமைப்பில் உணர்வு குவிந்தால் கவிதையாகும். உணர்வு வற்றினால் எத்துணை அழகிய சொற்களானாலும் சிதறிய வண்ணத்திட்டுக்களாக நிற்கும்; கண்டு கருதத்தகும் ஓவிய மொழிவார்ப்பாக, உணரும் கவிதை வடிவாக அமைவதில்லை!

உணர்வால் சொற்கள் குவிந்தால்—கவியுள்ளம் அங்கே பொதியவிழும். பொதியவிழ்ந்த மனமே கண்திறக்க மறுக்கும் காரண அறிவுக்குக் (Reason) கண் திறந்துவிடும். மனம் கொடுத்த பார்வையைக் கருதும் காரண அறிவு பெற்றால் உலகம் கற்பனைக் களமாகத் தெரியும். கற்பனை என்பதே கவிதை உறவு கொண்டாடும் உலகக் களமாகத் தெரியும். வானில் வானகம் தெரியும்; மண்ணில் மண்ணகம் புரியும்.

கவிஞனின் இதயம் விரிவாக, காண்பவை விரிந்தனவாகத் தோன்றும். கவியுள்ளத்தின் மாண்பே காணும் உலகக் காட்சி வழியே வெளிப்படரும். எனவே, உலகங் கொடுத்த உண்மைகளை உள்ளங் கொடுத்த கற்பனையோடு

கண்டுணர்ந்து பாடுகின்றவன் கவிஞன் படைப்பில் கவிதை பொதிந்திருப்பதைவிட, தன்முன் விரிந்த படைப்பில் மூழ்கிய கவிஞனின் வியப்பில், மனவிரிவில் கவிதை பொதிவாகி யுள்ளது எனலாம்.

கவிஞனின் உலக அநுபவம் கற்பனை; உலகத்தாரின் கற்பனை மொழி—அநுபவம், கவிதை! மனிதன் கவிதையில் வாழ்வைத் தேடுகிருன்; கவிஞன், வாழ்வில் கவிதையைத் தேடுகிருன்.

இருவகை நாட்டங்களுக்குமிடையில் வாழ்வுக்கும் கவிதைக்கும் ஊடகம் அமைக்கும் வகையில் அமைவது பண்பட்ட மொழி. அம்மொழிக்கு மக்கள் ''தொடர்ச்சி'' தருகின்றனர்; கவிஞன்'' நிலைபெற்ற வடிவ வாழ்வைத்'' தருகின்ருன். அதில்தான் மொழியின் பயனும் வாழ்வின் பயனும் அமைந்திருக்கும். அவ்வமைப்பில், மனிதரில் கவிஞனின் தகுதி—நிலை என்ன என்பதை அறியாதார், வியப்புக்களில் ஒரு வியப்பை அறியாதாரே!

தாகூரைச் சந்தித்து உரையாடிய பின்னரே வானம் மேலும் விரிவுடையதாகத் தோன்றுவதை உணர்கின்றேன் என்ருர் ஓர் அறிஞர். மனிதனின் உணர்வுக்கும் கவிஞனின் உணர்தல் திறனுக்கும் உள்ள பெரியதொரு வேறுபாட்டை இது காட்டுகின்றது.

உணர்வு மிதப்பில்—உணர்வு மீறிய சிலிர்ப்பில் ஏற்படும் கலையனுபவத்தைத்தான் கவிஞன் மொழியில் உதிர்த்துப் பதித்துத் தருகின்ருன். கவிதை என்ருல் என்ன? மனிதனை நோக்கி,

''இனிமேல் வானவில்லைக் கண்டால் நான் சொல்லும் படியெல்லாம் வண்ணப் பொலிவிருக்கிறதா என்று பார்த்துப் பாராட்டு''—

என்று கவிஞன் சொல்வதும்

''இனி எப்போதாவது ஆதரவற்ற பிச்சைக்காரியைக் காண நேரிட்டால் பரிவு காட்டு''

என்று கவிஞன் பேசுவதும் தானே? பாராட்டத் தெரிந்து கொள்—பரிவுகாட்டப் பழகு என இருதிறப்பட்ட உணர்வுகளை—இன்னபிற சுவடுகளை நினைவில் ஆழப்பதிப் பதே கவிஞனின் பணி என்ருலும், இதில் என்னபிழை?!



# தூய பைபிள்

தூய பைபிள் உலக வேதங்களிலே ஒன்று. இதற்கு முன் தமிழிலே சில பேரறிஞர்கள் பைபிளை மொழி பெயர்த்திருக்கிறார்கள். ஆனால் அவற்றில் கையாளப்படும் நடை தனிப் போக்குடன் அமைந்திருப்பதைக் காணலாம். சென்ற இதழில் பைபிளின் முதல் அதிகாரத்தை மொழி பெயர்த்திருந்தேன். இப்போது இரண்டாவது அதிகாரத்தை மொழி பெயர்த்திருக்கிறேன். மனிதனின் கொடுமை வளருவது கண்டு கடவுள் உலகை அழித்துவிடக் கருதினார். அந்த பொங்கும் சினத்தினால் வெள்ளப் பெருக்கை உண்டாக்கினார். ஆனால் சினத்தினிடையேயும் அவருடைய அருள் வெளிப்பட்டது. தான் படைத்த உயிர்கள் பூண்டோடு அழிவதை அவர் விரும்பவில்லை. தழைக்கப் படைத்த உயிரினம் மீண்டும் நல்ல முறையில் தழைத்துப் பெருக வேண்டுமென அருள் பாலித்தார், அவருடைய அருளின் திறத்தைக் கூறும் அதிகாரமே இவ்விரண்டாம் அதிகாரம்.

பைபிள் ஒரு சிறந்த வேதம் மட்டுமன்று. சிறந்த இலக்கியமும் ஆகும்.

## 2. வெள்ளப் பெருக்கு

மனிதர்கள் பெருகினார்கள். அவர்களுக்குப் பல பெண்கள் பிறந்தார்கள்.

கடவுளின் மக்களாகிய ஆண்கள் மனிதர்களின் மக்களாகிய பெண்கள் அழகாயிருப்பதைக் கண்டார்கள். அந்தப் பெண்களில் அவர்கள் விரும்பியவர்களையெல்லாம் தங்கள் மனைவிகளாக்கிக் கொண்டார்கள்.

“என் ஆவி மனிதனுடன் எப்பொழுதும் உழன்றுகொண்டிருக்க வேண்டியதில்லை. அவனும் சதையால் ஆனவனாயினும் அவனுடைய வாழ்வும் நூற்றிருபது ஆண்டுகள் மட்டுமே யாகட்டும்” என்றார் இறைவன்.

அந்த நாட்களில் உலகில் அரக்கர்கள் இருந்தார்கள். கடவுளின் மக்களுக்கு மனிதர்களின் பெண்கள் குழந்தைகளைப் பெற்றார்கள். அந்தக் குழந்தைகள் வலிமை மிக்கவர்களானார்கள்.

மனிதனின் கொடுமை உலகில் அதிகமானதைக் கடவுள் கண்டார். நாளுக்கு நாள் மனிதன்

உள்ளத்தில் தோன்றிய மனோபாவம் ஒவ்வொன்றும் தீயதாகவே இருந்தை அவர் அறிந்தார்.

மனிதனை உலகில் படைத்ததற்காக இறைவன் மனம் வருந்தினார்; அவர் உள்ளம் வேதனையடைந்தது.

''மண்ணுலகில் நான் படைத்த மனிதனை அழித்து விடுகிறேன். மனிதனையும், அவனுடன் மிருகங்களையும், ஊர்வனவற்றையும், பறவைகளையும் அழித்து விடுகிறேன். அவைகளை உண்டாக்கியது எனக்கு மனவேதனை யளிக்கிறது' என்றார் இறைவன்.

ஆனால் நோவா இறைவனின் கண்களில் அருளைக் கண்டான். அவன் இறைவன் அருளுக்கு உரியவனாயிருந்தான்.

அப்போது நோவாவின் தலைமுறை உலகில் தோன்றியிருந்தது. நோவா நேர்மையான மனிதன். அவன் தலைமுறையில் வந்த மக்களும் நிறைகுணமுடையோர். நோவா கடவுளுடன் நடந்து திரிந்தான்.

நோவாவுக்கு ஷெம், ஹாம், ஷாஃபெத் என மூன்று மைந்தர்கள் இருந்தார்கள்.

கடவுளின் முன்னால், உலகம் சீர் குலைந்து கொடுமை நிறைந்து காணப்பட்டது. சதையினாலாகிய எல்லா உயிர்களுமே உலகில் அவருடைய நெறியை உருக்குலைத்துவிட்டன.

கடவுள் நோவாவைப் பார்த்து, ''எல்லாச் சதை உயிர்களின் முடிவும் நெருங்கி விட்டது. அவற்றால் உலகில் கொடுமை நிறைந்து விட்டது. அவைகளை யெல்லாம் அழித்துவிடப் போகிறேன், பார்!'' என்றார்.

''கோபர் மரத்தால் உனக்கு ஒரு பெரிய பேழை செய்துகொள். அந்தப் பேழையினுள் அறைகள் அமைத்துக்கொள். அந்தப்பேழையின் நீளம் முந்நூறு முழம் இருக்கட்டும். அதன் அகலம் ஐம்பது முழமும், உயரம் முப்பது முழமும் இருக்கட்டும். ஒரு முழத்தில் அந்தப்பேழையில்ஒரு சாளரம் அமை. பக்கவாட்டில், பேழையின் மூன்று தளக்கட்டுகளுக்கும் சேர்ந்தாற்போல் ஒரு கதவு அமை.''

''உலகில் நான் வெள்ளத்தைக் கொண்டு வரும் போது எல்லாம் அழிந்துவிடும். ஆனால் உன்னை மட்டும் காப்பாற்ற நான் உடன்படுகிறேன். நீயும், உன் மைந்தர்களும், உன் மனைவியும், உன் மருமக்களும் அந்த மரப் பேழைக்குள் வந்துவிடவேண்டும். உயிர் இனங்கள் எல்லாவற்றிலும், ஒவ்வோர் இனத்திலும் ஆணும்பெண்ணுமாய் இரண்டிரண்டைக் கொண்டுவந்து பேழையில் உன்னுடன் வைத்துக் கொள். நீயும் அவைகளும் உயிருடன் இருப்பதற்காக வேண்டிய உணவுப் பொருள்களையும் அந்தப் பேழைக்குள் சேர்த்துவைத்துக் கொள்''

கடவுள் ஆணையிட்டபடி நோவா அவ்வாறே செய்தான்.

இறைவன் நோவாவைப் பார்த்து, ''இந்தத் தலைமுறையில் நேர்மையை நான் காண்பதால் நீயும், உன் வீட்டினர் எல்லோரும் பேழைக்குள் வாருங்கள்.'' என்றார்.

''தூய்மையான உயிரினங்களில் ஆணிலும் பெண்ணிலும் ஏழு ஏழும், தூய்மையற்ற உயிரினங்களில் ஆணும் பெண்ணுமாய் இரண்டிரண்டும் உன்னுடன் சேர்த்துக்கொள். காற்றில் பறக்கும் பறவைகளிலும் உலகில் அவற்றின் இனம் நிலைத்திருக்க ஆணிலும் பெண்ணிலும் ஏழு ஏழாய்ப் பேழைக்குள் சேர்த்துக் கொள்.''

"இன்னும் ஏழு நாட்களில் உலகின் மேற்பரப்பில் நாற்பது பகலும் நாற்பது இரவும் தொடர்ந்து மழை பொழியச் செய்வேன். உலகில் நான் படைத்த ஒவ்வொரு உயிர் வாழும் இனத்தையும் அழித்துவிடுவேன் என்று கூறினார் இறைவன்.

இறைவன் கட்டளையிட்ட படியெல்லாம் நோவா செய்தான். உலகில் வெள்ளம் பெருகியபோது நோவாருக்கு அறுநூறு வயதாகியிருந்தது.

வெள்ளத்திலிருந்து தப்புவதற்காக நோவாவும் அவன் மைந்தர்களும், அவன் மனைவியும் அவர்கள் மனைவிமார்களும் பேழைக்குள் புகுந்து கொண்டார்கள்.

தூய விலங்குகளும், பறவைகளும், வளர்வனவும் ஆணும் பெண்ணுமாய் இறைவன்கட்டளையிட்டபடி நோவாவின் மரப்பேழைக்குள் நுழைந்து கொண்டன. இறைவன் பேழைக் கதவை மூடிவிட்டார்.

ஏழுநாட்களுக்குப் பிறகு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எல்லா நீர்நிலைகளும் உலகின் மேற்பரப்பில் பொங்கிப் பெருகின. நோவாவின் அறுநூறுவது ஆண்டில், இரண்டவாது மாதம் பதினேழாவது நாளன்று உலகத்தின் பெரிய ஆழமான நீர்நிலைகளெல்லாம் உடைப்பெடுத்துக் கொண்டன. வானகத்தின் சாளரங்களும் திறந்துகொண்டன.

நாற்பது பகலும் நாற்பது இரவும் உலகில் மழை இடைவிடாது பொழிந்து கொண்டிருந்தது. நாளுக்கு நாள் வெள்ளத்தின் அளவு பெருகியது. வெள்ளம் பெருகப் பெருகப் பேழையும் உயர்ந்து உயர்ந்து நீரின் மேற்பரப்பில் மிதந்துகொண்டிருந்தது.

தரைக்குமேல் பதினைந்து முழ உயரம் நீர் பெருகிவிட்டது. மண்பரப்பும், உயர்ந்த மலைகளும், வானகத்தில் கீழேயிருந்த எல்லாப்பொருள்களும் நீரினால் சூழப்பெற்றன.

உலகில் நடமாடிய சதையுடைய கிய உயிரினங்கள் அனைத்தும் விலங்கினங்களும், பறவைகளும், ஊர்வனமும், மனிதர்கள் எல்லோரும், மூக்கினால் உயிர்த்துக்கொண்டிருந்த எல்லாம் நீரில் அமிழ்ந்து இறந்தன.

நோவா மட்டும் உயிருடன் இருந்தான். அவனோடு பேழையில் இருந்த உயிரினங்களும் உயிருடன் இருந்தன

வெள்ளம் நூற்றைம்பது நாட்கள் வரை உலகைச் சூழ்ந்திருந்தது.

நோவாவையும் அவனுடன் பேழையில் இருந்த உயிர்னங்களையும் கடவுள் நினைத்துக் கொண்டார். கடவுள் உலகின் மேற்பரப்பில் காற்றடிக்கச் செய்தார். வெள்ளப் பெருக்குத் தணிந்தது.

ஆழ்ந்த நீர்நிலைகளும், விண்ணகத்தின் சாளரங்களும் மூடி நிறுத்தப்பட்டன. வானிலிருந்து பெய்த மழையும் தடுக்கப்பட்டது. மண்ணுலகத்திலிருந்து தொடர்ந்து நீர் திரும்பிச் சென்றுகொண்டேயிருந்தது நூற்றைம்பது நாட்களுக்குப் பிறகு நீர்ப்பெருக்கு பெரிதும் குறைந்துவிட்டது.

ஏழாவது மாதம் ஏழாவது நாளன்று ஆராரத்து மலையின் மேல் அதுவரை மிதந்துகொண்டிருந்த அந்த மரப்பேழை நின்றுகொண்டது.

பத்தாவது மாதம் வரையில் நீர் மட்டம் தொடர்ந்து குறைந்து

கொண்டே வந்தது. பத்தாவது மாதம் முதல் நாள் அன்று தான் மலையின் உச்சி கண்ணுக்குத் தெரிந்தது.

நாற்பது நாட்கள் ஆனபின், நோவா தான் செய்த மரப்பேழையின் சாளரத்தைத் திறந்தான். அந்தச் சாளரத்தின் வழியாக அவன் அண்டங் காக்கையை வெளியில் அனுப்பினான். அது உலகின் மேற்பரப்பில் உள்ள நீர் வறளும் வரை அங்குமிங்கும் பறந்து கொண்டேயிருந்தது.

நீர் வற்றிவிட்டதா என்று பார்த்து வர அவன் ஒரு புறாவை வெளியில் அனுப்பினான். உலகைச் சுற்றிப் பறந்து திரும்பிய அந்தப் புறா கால்வைக்கச் சிறிது இடங்கூடக் காணாமல் பேழைக்குத் திரும்பி வந்தது. உலகம் முழுவதும் அப்போதும் தண்ணீரினடியில் அமிழ்ந்திருந்ததையறிந்த நோவா தன் கையை நீட்டிப் புறாவை உள்ளுக்கு இழுத்துக் கொண்டான்.

ஏழுநாட்கள் காத்திருந்த பிறகு புறாவை மீண்டும் வெளியில் விட்டான். அன்று மாலையில் புறா திரும்பி வந்த போது அதுதன் வாயில் ஓர் ஆலிவ் இலையைக் கௌவிக் கொண்டுவந்தது. நீர் வற்றிவட்டது என்பதை நோவா அறிந்து கொண்டான்.

மேலும் ஏழுநாட்கள் சென்ற பிறகு அவன் மீண்டும் அந்தப் புறாவை வெளியில் விட்டான். அது அவனிடம் திரும்பி வரவேயில்லை.

அவனுடைய அறுநூற்றியொன்றாவது ஆண்டின் முதல் மாதம் முதல் நாளன்று உலகப் பரப்பின்மீது நீர் முழுவதும் வற்றி மண் நன்றாகக் காய்ந்துவிட்டது. பேழைக்கதவைத் திறந்து பார்த்த நோவா தரை காய்ந்திருப்பதைக் கண்டான்.

இரண்டாவது மாதம் இருபத்தி ஏழாவது நாளன்று ஈரம் சிறிதுமில்லாமல் மண் உலர்ந்து விட்டது.

அப்போது கடவுள் நோவாவைப் பார்த்துப் பேசினார்.

"பேழையிலிருந்து எல்லோரும் வெளியில் செல்லுங்கள். மிருகங்களும், பறவைகளும், ஊர்வனவும் ஆகிய எல்லா உயிர் இனங்களையும் வெளியில் கொண்டுவா. எல்லாம் உலகில் நன்றாக மேய்ந்து, வளமாக வாழ்ந்து பல்கிப் பெருகி வாழட்டும்"

இறைவன் கட்டளைப்படியே, நோவாவும் அவன் மக்களும், அவன் மனைவியும் அவர்கள் மனைவிமார்களும் வெளியில் வந்தார்கள். உயிரினங்கள் யாவும் பேழையிலிருந்து வெளிப்பட்டன.

நோவா இறைவனுக்காக ஒரு பீடம் கட்டினான். தூய்மையான மிருகங்களையும், தூய்மையான பறவைகளையும் எடுத்து, அந்தப் பீடத்தின் மேலிட்டு அவற்றைச் சுட்டுப் பலி கொடுத்தான்.

இறைவன் ஓர் இனிய மணத்தை நுகர்ந்தார்.

"நான் மனிதனுக்காக மறுபடியும் உலகத்தைச் சபிக்க மாட்டேன். மனிதனுடைய உள்ளத்தில் தோன்றும் மனோபாவம் அவனுடைய இளமைப் பருவத்திலிருந்தே தீயதாக இருந்த போதிலும் உலகை அழிக்கமாட்டேன். இப்போது செய்ததுபோல் மீண்டும் உயிர் வாழ்வன எல்லாவற்றையும் கொன்றொழிக்க மாட்டேன்" என்று இறைவன் தம் உள்ளத்துக்குள்ளே சொல்லிக் கொண்டார்.

"உலகம் நிலையாயிருக்கும்! நடவும் அறுவடையும், குளிரும், வெப்பமும், கோடையும் வேனிலும்,

# சோழ நாட்டு வளம்

*சோழனது தேசமெலாம் சுத்தபச்சை யாயிருக்கும்*
*காவேரி நீரெல்லாம் கழனியிலே பாய்ந்துவரும்*
*வயல்வயலாப் பாய்ந்து வந்துவிழும் காவேரி*
*காவேரி வண்டலினால் கக்குமாம் நெற்பயிரை*
*வளர்ந்ததொரு நெற்பயிர்கள் வாரிமுத்தை வீசிவிடும்*
*தாளொன்றில் ஆயிரம்நெல் தான்காட்டிச் சாய்ந்திடுமாம்*
*நெல்லின் கதிர்முற்றி நேரே தலைசாயும்*
*அரிதா ளறுத்துவர மறுநாள் பயிராகும்*
*அரிதாளின் கீழே ஐங்கலத்தேன் கூடுகட்டும்*
*செல்வம் நிறைந்திருக்கும் செம்மை மனிதரைப்போல்*
*பெருமை சிறிதுமின்றிப் பேணித் தலைவணங்கி*
*நெற்குலைகள் எல்லாம் நிலநோக்கிச் சாய்ந்திருக்கும்.*

—அமிர்தவல்லிமாலை.

---

பகலும் இரவும் இடைவிடாது மாறிமாறி வரும்'' என்றார் இறைவன்.

நோவாவையும் அவன் மைந்தர்களையும் கடவுள் வாழ்த்தினார். வளமாக வாழுங்கள்! இனத்தைப் பெருக்குங்கள்! உலகை நிரப்புங்கள்!'' என்று கூறி அவர் வாழ்த்தினார்.

''உலகில் உள்ள மற்ற உயிர் வாழ்வன எல்லாம் உங்களுக்குப் பயந்து வாழும். அவை உங்கள் கையில் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. பச்சைப் பூண்டுகள் எல்லாவற்றையும் நான் உங்ளுக்கு கொடுத்திருந்த போதிலும், நடமாடும் உயிர்ப்பிராணிகள் யாவும் உங்களுக்கு உணவாகப் பயன் படட்டும்.''

''ஆனால், உயிருள்ள எந்த விலங்கையும், நீங்கள் உண்ணக் கூடாது.''

''உங்கள் குருதி எனக்கு நிச்சயம் தேவைப்படும். ஒவ்வொரு உயிரினிடமிருந்தும் எனக்கு இரத்தம் தேவைப்படும். ஆகவே எந்த இரத்தத்தையும் வீணில் சிந்தக்கூடாது''

மனிதனுடைய இரத்தத்தை எவன் சிந்துகின்றானோ அவனுடைய இரத்தம் மனிதனால் சிந்தப் படும். ஏனெனில் கடவுள் மனிதனைத் தம்முடைய வடிவத்தில் உருவாக்கினார்.

கடவுள் நோவாவையும், அவனுடன் இருந்த அவன் மைந்தர்களையும் பார்த்துப் பேசினார்.

''நான் உங்களுடனும், உங்கள் பரம்பரையுடனும், உலகில் உயிர் வாழும் ஒவ்வொரு இனத்துடனும் ஓர் உடன் படிக்கை செய்து கொள்கிறேன்.

''இனி நான் உலகத்தை வெள்ளத்தால் அழிக்க மாட்டேன். எனக்கும் உலகிற்கும் உள்ள இந்த உடன்படிக்கைக்கு அடையாளமாக மேகத்தில் என்னுடை வில்லை நிறுத்துகிறேன். அது என்றென்றும் நிலைத்திருக்கும். இந்த உடன்படிக்கையை எனக்கு நினைவுறுத்துமாக! என்றார் இறைவன்.

---

அடுத்த இதழில்
பிரிவினை

---

# நல்லது கேட்கின்...

பன்னிரண்டு ஆண்டுகளில்
வருவாய் இரட்டிப்பாகிட
தமிழக மாநில திட்டக் குழுவின் திட்டங்கள்.

★ ★ ★

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம் !
வழித் தடங்கள் நாட்டுடமை !
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டு மனை ! நிலப்பட்டா !
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு.
உதவிகள் ! சலுகைகள் !
பிச்சைக்காரருக்கு மறு வாழ்வு !
குடிசை மாற்று வாரியம்
கண்ணொளி வழங்கும் திட்டம் !

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

## குடும்ப நலத் திட்டம்


பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை !
எனவே
திட்டமிட்ட குடும்பம்......
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது !

---

**அடுத்த குழந்தை இப்போது வேண்டாம் !**

**இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம் !**

குடும்ப நலத்துறை, தமிழ்நாடு அரசு.



# பிள்ளைக் கவியமுதம்

## முன்னுரை

வாழ்வு தொடங்கிய நிலையில் ஒரு கணவனும் மனைவியும் தங்களுக்கு ஒரு செல்வப் பிள்ளை வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அவர்கள் எதிர்பார்த்தபடியே பிள்ளை பிறக்கும் முன்பாகத் தோன்றும் அறிகுறிகளே பெருமகிழ்ச்சியைத் தோற்றுவிக்கும் ஆற்றல் படைத்தவையாம். பிள்ளை பிறந்தபின், அதைச் சீராட்டுவதிலும் பாராட்டுவதிலும் வாழ்வு இன்பநடை போடுகிறது. மனத்திற்கு இன்பஞ் சேர்க்கும் அந்தக் குழந்தையைப் பெற்றவர்கள் பலவிதமாகக் கொஞ்சிக் குலவுவதைக் காண்கிறோம்.

காலையும் கையையும் ஆட்டிக்கொண்டு போட்ட இடத்திலேயே கிடந்த குழந்தை குப்புறக் கவிழ்ந்து கொண்டதும் ஒரு குதூகலம் பிறக்கிறது. அது வயிற்றால் நகரத் தொடங்கும்போது புது மகிழ்ச்சி தோன்றுகிறது. அந்தச் சின்னஞ்சிறிய குழந்தை தவழுவதும், எழுவதும், ஆடுவதும் கை வீசுவதும், மழலைமொழி பேசுவதும், சிரிப்பதும் நடப்பதும் எல்லாம் புதுமையாகவும் இன்பமாகவும் இருக்கின்றன.

சிற்றிளம் பருவத்தில் அக்குழந்தையின் செயல் நிலைகள் ஓவ்வொன்றையும் குறித்துப் பேசுதலும், கொஞ்சுதலும் பெற்றோர்க்குப் பெரிதும் இன்பம் தருவனவாம். இந்த இயல்பை மனத்துட் கொண்டு முன்னைத் தமிழ்ப் புலவர்கள் பிள்ளைத் தமிழ் நூல்கள் பல இயற்றியுள்ளார்கள்.

பிள்ளைத் தமிழ்நூல் இயற்றிய பழம்பெரும் புலவர்கள், தாம் தாம் விரும்பி வழிபடும் தெய்வங்களில் ஒன்றைப் பிள்ளை நிலையில் வைத்துப் பாடியிருக்கிறார்கள்.

அவர்கள் தம் அரிய நூல்களில் அத்தெய்வப் பிள்ளைகளை ஆடவும் பாடவும் வைத்தும், தாலாட்டியும் சீராட்டியும் பாராட்டியும் நீராட்டியும் மகிழ்ந்திருக்கிறார்கள்.

பிள்ளைத் தமிழ் நூல்களிலே குமரகுருபர அடிகள் அருளிய மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் கவினழகு வாய்ந்த தமிழ் நடையும் கற்பவர் மனத்தை ஈர்க்கும் பெருஞ்சுவையும் பொருந்திய சிறப்புடையது.

அழகு கொழிக்கும் அப்பிள்ளைத் தமிழிலேயே எழிலின் உச்சமெனப் புலவர்கள் போற்றும் பாட்டு இதுவாகும்.


தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க
முடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

சிறப்பு மிகுந்த இந்நூல்கள் யாவிலும், பாட்டுடைத் தலைவனைப் பிள்ளையாக வைத்துப் பேசுகின்ற நூலாசிரியர்கள், பிள்ளைப் பருவத்துச் செயல்களைக் காட்டிலும், அத்தெய்வங்கள் அல்லது பெரியார்களின் அரும்பெரும் செயல்களையே பெரிதும் பாடி வைத்திருக்கிறார்கள்.

பிள்ளைத் தமிழில் பிள்ளையைப் பிள்ளை நிலையிலேயே முழுதும் வைத்துப் பாடினால் பொருத்தமாயிருக்குமே என நினைத்தேன். அதன் விளைவே இந்நூல்.

குருபரர் போன்ற அருளும் புலமையும் பெருகிய நிலையினன் அல்ல என்றாலும், பொருளும் சிறப்பும் பொருந்தவே இந்நூலை எழுதியுள்ளேன். பெற்றோர் தம் குழந்தைகளைப் பேச்சால் மட்டுமல்லாமல் தமிழ்ப் பாட்டாலும் கொஞ்சி மகிழ இப்பிள்ளைக் கவியமுதம் பெரிதும் உதவும் என்று கூறுவேன். எவரும் பாடி மகிழத்தக்க எளிய நடையில் உள்ள இந்நூலைத் தமிழன்பர்கள் போற்றி வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**நாரா நாச்சியப்பன்**



தன் வயிற்றில் பிறந்து, மடியில் தவழ்ந்து இன்பம் விளைவிக்கும் எழிலோவியமான குழந்தையைத் தாய் கொஞ்சி மகிழ்ந்து வாழ்த்துக் கூறுகிருள்.

## 1. இன்பம் தரப் பிறந்த எழிலோவியமே.

இன்பம் உலகம் எனமனத்தில்
எண்ணும் பேற்றைத் தரப்பிறந்த
அன்பே கட்டிக் கரும்பேநல்
அமுதே என்றன் ஆருயிரே
அன்னை என்னும் நிலையெய்தி
அகம்பூ ரித்து மகிழ்கின்ற
என்ம டிக்குச் சிறப்பளிக்கும்
எழிலோ வியமே வாழியவே.

கோடித் தவங்கள் செய்தவரும்
கும்பிட் டன்பாய்ப் பலகடவுள்
நாடிக் குறையைச் சொன்னவரும்
நல்ல பிள்ளைப் பேறெய்தி
ஆடிக் களியா உலகத்தில்
அம்மா என்று குரலெழுப்பி
நீடிய இன்பம் தரப்பிறந்த
நித்தில மேநீ வாழியவே!

வயிறு பசித்தால் அழுதிடுவாய்
வந்தின் னமுதம் குடித்திடுவாய்
உயர்ந்த பட்டுத் தொட்டிலிலே
உறங்கி விழித்துச் சிரித்திடுவாய்
அயர்ந்த மனத்தில் தெம்பேற்றி
அன்பு விளங்க வைத்திடுவாய்
உயிரோ வியமே என்னகத்தின்
ஒளிவி ளக்கே வாழியவே!

தவழும் பருவத்தில் மழலை மொழி குழறும் குழந்தை தன் உடலை ஆட்டி ஆட்டி மன மகிழ்ச்சியைக் காட்டிக் கொள்கிறது இதனையே செங்கீரையாடுதல் என்பர் புலவர். கண்ணுக்கு விருந்தளிக்கும் இந்தக் காட்சியைக் கண்ட தாய், தன் குழந்தையை மேலும் மேலும் செங் கீரை ஆடச் செய்து கண்டு மகிழ்கிருள்.



## 2. ஆடாய் ஆடாய் செங்கீரை.

நெஞ்சை யள்ளும் சிரிப்புடனே
நீளத் தவழ்ந்து வந்திங்கே
பிஞ்சுக் கையும் முழங்காலும்
பெரிதும் தேய நின்றபடி
அஞ்சொல் மழலைத் திருவாயால்
அப்பா அம்மா எனக்குழறிக்
கொஞ்சி யாடாய் செங்கீரை
குலுங்கி யாடாய் செங்கீரை!

சின்னஞ் சிறிய செவ்வாயில்
சிரிப்பு முத்துத் தோன்றிடவே
கன்னக் குழியின் இருமுத்தும்
கவலை போக்கத் தோன்றிடவே
பொன்னின் உடலில் வியர்வையெனப்
புதிதாய்ப் பலமுத் தரும்பிடவே
அன்பே யாடாய் செங்கீரை
அமுதே ஆடாய் செங்கீரை.

இருகை தட்டி வருகவென
இனிதுன் அப்பா அழைத்திடவும்
இருந்த அன்னை மடிவிட்டே
இறங்கித் தவழ்ந்து விரைந்தாய்நீ
திருவாய்க் கடையில் பாலொழுகச்
சிரிக்கும் அழகே பசும்பொன்னே
அருமைத் தமிழே செங்கீரை
ஆடாய் ஆடாய் செங்கீரை.



பசித்தழுத குழந்தை பால் குடிக்கிறது. பின் அது தூங்குவதற்காக அழுகிறது. பட்டுத் துணியால் தொட்டில் கட்டி அதில் தன் குழந்தையைப் படுக்க வைத்து, பாட்டுத் தமிழால் பாராட்டித் தாலாட்டி மகிழ்கிருள் அன்னை.

## 3. தாலோ தாலேலோ.

எண்ணி யெண்ணித் தவமிருந்தே
இன்பக் கனவு பலகண்டே
வண்ணச் சிலையாய்ப் பெற்றெடுத்த
வைர மணியே தாலேலோ
உண்ணும் சோறும் உனக்காக
உயிரும் வாழ்வும் உனக்காக
கண்ணின் மணியே தாலேலோ
கட்டிக் கரும்பே தாலேலோ.

'அம்மா அம்மா' என்றேநல்
அமுதக் குரலில் அழைத்துளத்தில்
சும்மா சும்மா தேன்பாய்ச்சும்
சுடர்வி ளக்கே தாலேலோ.
இம்மா நிலத்தில் உனைக்காணும்
இன்பம் ஒன்றே பேரின்பம்
என்மா தவமே தாலேலோ
இன்ப மணியே தாலேலோ.

கண்டு சிரிக்கும் கற்கண்டே
கனிவாய் மழலைச் சொற்கண்டே
வண்டு விழியே பூச்செண்டே
வண்ணத் தமிழே தாலேலோ
எண்ணம் இனிக்கப் பிறந்தாய்நீ
ஏற்றம் சேர்க்கப் பிறந்தாய்நீ
கண்ணே தாலோ தாலேலோ
கனியே தாலோ தாலேலோ.

பிறந்து ஏழெட்டு மாதம் ஆனபின் குழந்தை நன்றாக உட்காரப் பழகிவிடுகிறது. தரையிலும், அன்னை மடியிலும், தந்தை தோளிலும் அமர்ந்து ஆனந்தம் ஏற்படும் போது தன்னிரு கையும் சேர்த்துத் தாளம் போட்டு மகிழ்கிறது. பஞ்சினை யொத்த மென்மையும் பிஞ்சினை யொத்த தன்மையும் கொண்ட சிறு கைகளால் அது சப்பாணி கொண்டும் அழகைக் கண்ட தாயின் மகிழ்ச்சி கரை புரண்டோடுகிறது.



## 4. சிரித்துக் கொட்டு சப்பாணி.

செந்தா மரைபோல் முகமலரச்
சிரிக்கும் அழகே ஓவியமே
நந்தா விளக்கே வாழ்வினிலே
நாளும் ஒளிரும் திருச்சுடரே
செந்தா மரைப்பூக் கையிரண்டும்
சேர்த்துக் கொட்டு சப்பாணி
திருவாய் மலர்ந்து பூரித்துச்
சிரித்துக் கொட்டு சப்பாணி.

நெஞ்சில் இன்ப ஒளிசேர்க்கும்
நித்தில மேஎன் செந்தேனே
கொஞ்சிப் பேசப் பிறந்திருக்கும்
கோலப் பச்சைப் பசுங்கிளியே
பஞ்சு போன்ற கையிரண்டும்
பழக்கக் கொட்டு சப்பாணி
பனிவாய் மலர்ந்து சிரிப்பள்ளிப்
பாய்ச்சிக் கொட்டு சப்பாணி.

வெல்லப் பாகே புன்சிரிப்பை
விரித்து நெஞ்சைக் கொள்ளைகொளும்
செல்லக் கிளியே பசும்பொன்னே
சித்திரப் பூவே திருவிளக்கே
செல்லப் பிஞ்சுக் கையிரண்டும்
சேர்த்துக் கொட்டு சப்பாணி
திருவாய் மலர்ந்து பூரித்துச்
சிரித்துக் கொட்டு சப்பாணி.



உயர்ந்த அன்பு எங்கே விளங்குகிறதோ அங்கே, முத்தம் பிறக்கிறது. அன்பு நிறைந்த உள்ளத்தால் தன் குழந்தையை உச்சி மோந்து முத்தமிட்டு மகிழுகின்ற தாய், திரும்பவும் அந்தக் குழந்தையின் சின்னஞ் சிறிய செம்பவழ வாயால் முத்தம் பெற்றுத் தன் இன்பத்தை முழுமையாக்கிக் கொள்ளு கிருள்.


## 5. முத்தந்தா நீ முத்தந்தா

சொல்லச் சொல்லப் பயின்றுகொளும்
சோலைக் கிளியே என்னுயிரே
வெல்ல மழலை மொழிபேசி
விரியும் திருவாய் முத்தந்தா
செல்லத் தமிழே கனியுதடு
சிவக்கச் சிவக்க முத்தந்தா
செந்தேன் மலரே கனியுதடு
சிவக்கச் சிவக்க முத்தந்தா.

தவழ்ந்து தவழ்ந்து வந்துளத்தில்
தழையும் அன்புத் தளிர்க்கொடியே
அவிழ்ந்து அவிழ்ந்தே இதழ்விரியும்
அழகு மலரே முத்தந்தா.
பவழச் செவ்வாய்க் கனியுதடு
பதித்தோர் இன்ப முத்தந்தா.
பால்வழி யும்வாய்க் கனியுதடு
பதித்தோர் இன்ப முத்தந்தா.

எல்லை யில்லாப் பேரின்ப
எழிலோ வியமே காவியமே
தொல்லை மறந்து வாழ்வினிலே
சுகத்தைக் காணச் செயப்பிறந்த
முல்லைப் பூவே செங்கனிவாய்
முத்தந் தாநீ முத்தந்தா
முருகு விரியும் செங்கனிவாய்
முத்தந் தாநீ முத்தந்தா.

பத்துப் பதினாறு மாதம் ஆகும் போது குழந்தை தளர் நடை பயிலத் தொடங்குகிறது. தடு மாறிக் கொண்டு அது நடந்து வரும் காட்சி வேடிக்கையாக வும் விருந்தாகவும் இருக்கிறது. அங்கும் இங்கும் நடந்து செல்லா மல், தன்னை நோக்கி வருவதை யே பெரிதும் விரும்புகின்ற தாய் 'வா, வா, இங்கே வா' என்று அழைக்கிறாள்.




## 6. பொன்னே வைரப் பூவே வா

கட்டிக் கரும்பே இங்கேவா
கனியே தேனே இங்கேவா
தட்டித் தடவித் தடுமாறித்
தளர்ந்து விழுந்து விட்டாலும்
முட்டி மோதிக் கொண்டாலும்
முயன்று மேலும் நடைபயிலும்
சிட்டுக் குருவி இங்கேவா
சின்னப் பூவே இங்கேவா.

ஆடி ஆடித் தள்ளாடி
அடிவைத் தடிவைத் தென்மடியை
நாடி நாடி முன்னேறி
நடக்கும் மாடப் புறுவேவா
கூடிக் கூடி இருக்கவே
கொஞ்சிக் கொஞ்சிப் பேசவே
பாடிப் பாடி இங்கேவா
பச்சைக் கிளியே இங்கேவா.

தங்கக் கிண்ணச் சோறுநான்
தருவேன் கண்ணே இங்கேவா
பொங்கிச் சிறுசோ றுக்கவே
புதிய சிட்டி தருவேன்வா
அங்கும் இங்கும் செல்லாதே
அன்பே அழகே இங்கேவா
பொங்கும் அன்பில் திளைக்கவே
பொன்னே வைரப் பூவேவா.



அந்திப் பொழுது அகன்ற பின், காற்றுடி வரத் தன் கைப் பிள்ளை யுடன் உப்பரிகை செல்கிருள் தாய். வானத்திலே தோன்றிய நிலவைச் சுட்டிக் காட்டி குழந்தை ஏதோ குழறுகிறது. உடனே அன்னை, தன் குழந்தையோடு வந்து விளையாடுமாறு வான நில வை அழைக்கிருள். தன் செல்லக் குழந்தையுடன் சேர்வதால் நில வுக்கு மிகுந்த பயனுண்டென்று கற்பனைத் திறத்தோடு கூறுகிருள்.

## 7. வான நிலவே வாராயே

யாரும் இல்லா வானத்தே
அலையும் நிலவே ஓடிவா
ஊரும் உன்னைத் துணையாக
ஒன்று சேர்த்து விளையாடச்
சீரும் சிறப்பு மாய்வளர்ந்த
செல்லக் கண்ணும் அழைத்ததே
வாராய் வாராய் கீழிறங்கி
வான நிலவே வாராயே.

அஞ்சி யஞ்சிப் பகலெல்லாம்
யாங்கோ நீபோய் ஒளிகின்ருய்
அஞ்ச வேண்டாம் என்செல்வம்
அருகில் நீவந் திருந்தாலே
கொஞ்சிக் கொஞ்சி விளையாடிக்
கொள்ளை யின்பம் பெற்றிடலாம்
மஞ்சு வானம் விட்டிறங்கி
வாராய் நிலவே வாராயே!

தேய்ந்து தேய்ந்து மறைகின்ற
சிறிய நிலவே வாராய்நீ
பாய்ந்து வந்தென் கண்மணியின்
பக்கம் நீயும் இருந்தாலே
தேய்ந்து மறையா திருப்பாயே
தினமும் வளர்ந்து சிறப்பாயே
பாய்ந்து வாராய் கீழிறங்கி
வாராய் நிலவே வாராயே!

வீட்டு முற்றத்தில் வயதொத்த சின்னஞ்சிறு பெண்களெல்லாம் கூடி அம்மனை விளையாட்டு ஆடுகிருர்கள். தன் அருமை மகளும் அவ்வாறு விளையாடி மகிழ்வதைக் கண்டு களிக்க விரும்பிய அன்னை, அந்தச் சிறுமியரோடு சேர்ந்து விளையாடத் தன் செல்வத்தை அனுப்புகிருள்.



## 8. ஆடாய் அம்மானை

முத்து முத்தாய்க் காய்பொறுக்கி
　　முற்றஞ் சேர்ந்து பெண்களெலாம்
ஒத்தம் மனையே ஆடுகின்ருர்
　　உயிரோ வியமே நீயும்போ
எற்றுங் காயின் விசையோடே
　　இசையும் ஒத்து வருமாறே
நற்றென் பாங்கு பாடிநீ
　　நல்லாய் ஆடாய் அம்மானை.

கையின் சுழற்சி வேகத்தில்
　　காய்கள் பறந்து பறந்தோட
உய்யென் றெழுந்த காற்றினிலே
　　சுழலும் பூவின் வண்டேபோல்
மெய்யாய் அந்தக் காய்களின்பின்
　　விழிகள் தொடர்ந்து தொடர்ந்தோட
மையல் மகளே இசைபாடி
　　மகிழ்ந்தே ஆடாய் அம்மானை.

ஊறும் தேனின் திருவாயால்
　　உருக்கும் தமிழில் இசைபாடி
கூறு போட்ட காய்களையே
　　குதித்தெ ழும்பச் செய்வாயே.
ஏறும் காய்கள் தரைவந்தே
　　இறங்கா வண்ணம் பிடித்தெற்றித்
தேறும் வெற்றி கண்டேஎன்
　　செல்வி ஆடாய் அம்மானை.



ஆற்ருேரத்தில் சிறு பெண்கள் விளையாடுகின்ற காட்சி, காண் பவர் உள்ளத்துக் களி துள்ள வைக்கும் காட்சியாகும். ஓவிய மாகத் தன் மகள் நீராடும் காட்சி யைக் கண்டு மகிழும் தாய், அவளை ஊக்கப் படுத்துகிருள்.

## 9. அழகோவியமே நீராடு.

கோட்டுப் பூக்கள் மிதந்துவரக்
　　குதித்துப் பாயும் அலேயோடே
ஓட்டம் போடும் ஆற்றினிலே
　　ஒருக ரையில் போயிறங்கிக்
கூட்டுப் பெண்கள் சூழ்ந்திருக்கக்
　　குடைந்து குடைந்து புதுப்புனலில்
ஆட்டம் போட்டு விளையாடி
　　அழகோ வியமே நீராடு.

மேலே மலேயில் ஊற்றெடுத்து
　　மெல்லச் சோலே பலபுகுந்து
கோல வயல்கள் வழிபெருகிக்
　　குணவாய்க் கடலிற் போய்க்கலக்கும்
சேலும் கயலும் பாய்ந்தோடிச்
　　சேற்றைக் குழப்பும் ஆற்றினிலே
மேலும் குடைந்து குடைந்தாடு
　　மெல்லிய லன்பே நீராடு.

அன்புத் தோழி முகத்தின்மேல்
　　அள்ளி நீரைத் தெளித்தவளும்
தன்பங் குக்குத் தெளித்திடுமுன்
　　தலேயை நீரின் உள்ளிழுத்துப்
பின்பு வெளிப்பட் டெதிர்நின்று
　　பெரிதும் குறும்பாய்ச் சிரித்தபடி
அன்பு மகளே நீராடு
　　அழகின் செல்வி நீராடு.

**சோலை மரத்திலே ஆடும் கிளையிலே கயிற்றில் கட்டித் தொங்கும் ஊசற் பலகையிலே உட்கார்ந்து, சிற்றுடையும் தலைமுடியும் காற்றில் பறக்க ஒய்யாரமாகப் பறந்து பறந்து தன் மகள் ஆடும் காட்சியைக் காண விரும்பிய தாய் அவளை ஊசலாட அழைக்கிறாள்.**



## 10. ஊசல் ஆட வாராயே.

செடியும் கொடியும் பூவெல்லாம்
    தென்றல் காற்றில் மகிழ்ந்தாடும்
அடியின் றேனை வண்டெல்லாம்
    அருந்தி அருந்திப் பறந்தாடும்
இடியும் முகிலும் கண்டுமயில்
    இன்பத் தோகை விரித்தாடும்
ஒடியும் இடையாய் சோலையிலே
    ஊசலாட வாராயே.

கோலப் புறுக்கள் வட்டமிடும்
    குயில்கள் பாடிக் குதுகலிக்கும்
சோலைக் கிளிகள் பழமுழுதும்
    சுவைத்துப் பருப்பைத் தின்றிருக்கும்
சேலின் விழியே கருங்குழலும்
    தென்றல் காற்றில் அசைந்தாட
காலைத் தரையில் உதைத்தூசல்
    கண்ணே ஆட வாராயே.

தோயும் இன்பம் வாழ்வினிலே
    தோன்றித் தோன்றி மாறுதல்போல்
பாயும் ஊசல் முன்பின்னாய்ப்
    பறந்து சென்று மீண்டிடவே
சாயும் கதிரோன் உடலெங்கும்
    தங்க வண்ணம் பூசிடவே
வாயும் இன்பப் பண்பாட
    வாராய் ஆட வாராயே!



மணலிலே கிடந்து விளையாடுவதைச் சிறு பிள்ளைகள் பெரிதும் விரும்புவார்கள். சிறுமியர் மணலிலே வீடு கட்டி விளையாடுவது வழக்கம். அந்தச் சிறுமியரோடு தன் மகனும் விளையாடட்டும் என்று இறக்கி விட்டால், புரியாக் குழந்தையான அவன் அந்த வீடுகளைத் தன் சிறிய காலால் மிதித்து அழித்து விடுகிறான். அவ்வாறு செய்ய வேண்டாமென்று அன்னை அவனை வேண்டுகிறாள்.

## 11. சிதைக்க வேண்டாம் என்செல்வா.

தெருவின் மணலைக் குவித்தொருபால்
சின்னச் சின்ன வீடுகளை
உருவாக் கித்தாம் விளையாடி
உள்ளங் களிப்பார் சிறுமியரே.
அருமைக் கண்ணே மணல்வீட்டை
அழகு சிட்டுக் காலாலே
உருக்கு லைக்கச் செல்லாதே
உதைத்துச் சிதைக்கச் செல்லாதே.

குவித்த மணலால் சுவரெழுப்பிக்
குழிகள் தோண்டி அறைபலவும்
வகுத்து மணலைக் குறைத்தொருபால்
வாசல் வைத்து மகிழ்ந்திடுவார்
சிரித்துக் கொண்டே மணல்வீட்டைச்
சிதைத்து விட்டால் அப்பெண்கள்
வருத்தங் கொள்வார் என்செல்வா
வாராய் அங்கே செல்லாதே.

கட்டிக் கட்டி உருவாக்கக்
காலம் அதிகம் வேண்டுமடா
எட்டி உதைக்க ஒருநொடியே
இருந்தால் போதும் போதுமடா.
சுட்டித் தனத்தை விட்டென்றன்
சொல்லைக் கேளாய் என்செல்வா
சிட்டுக் காலால் மணல்வீட்டைச்
சிதைக்க வேண்டாம் என்செல்வா.

கையில் கிடைத்த தகரத்தையோ தட்டையோ எடுத்துக் கொண்டு பிள்ளை தப்படித்து விளையாடுகிறன். அவன் வயதுப் பிள்ளைகளும் உடன் கூடிவிடுகிருர்கள். அரசினரின் பறை யறைவிப்போர் போல அவர்களைக் கருதி அன்னை தன் மகனை வெற்றிப் பறைகொட்டும் தளபதியாகக் கற்பனை செய்து மகிழ்கிருள்.




## 12. சிரித்துச் சிரித்துப் பறைகொட்டே.

இன்ப வாழ்வே எனக்களிக்க
எழுந்த அன்பே செஞ்சுடரே
அன்பு மகனே உன்கையில்
அகப்பட் டிருக்கும் தட்டினிலே
உன்சிறு கையால் அடித்தடித்தே
ஓசை யெழுப்பிப் பறைகொட்டே
அன்பு விளங்க இன்பமுற
அடித்த டித்துப் பறைகொட்டே.

உன்றன் முகத்தைப் பார்த்தாலே
உள்ளக் கவலை பறந்தோடும்
உன்றன் குறும்புச் செயல்கண்டால்
உள்ளம் துள்ளி யெழுந்தாடும்
அன்பு மணியே வாழ்வினிலே
ஆசை வேண்டும் எனச்சொல்லி
சின்னக் கையால் பறைகொட்டே
சிரித்துச் சிரித்துப் பறைகொட்டே.

கூடி யுள்ள சிறுவரெல்லாம்
குதூக லித்துத் தமிழ்ப்பாட்டுப்
பாடித் தொடரப் பறைகொட்டிப்
படைந டத்தும் தளபதியே!
தேடிப் பெற்ற தெள்ளமுதே
சின்னஞ் சிறுகைப் பறைகொட்டே
ஆடிச் செல்லும் கண்மணியே
அடித்த டித்துப் பறைகொட்டே.



தளர் நடை பயிலத் தொடங்கிய தன் பிள்ளை ஒழுங்காக நடந்து பழக உதவியாக நடை வண்டி கொண்டுவந்து கொடுத்த அன்னை, அவன் வண்டி தள்ளும் அழகைக் கண்டு மகிழ்கிருள். விரைவில் தன் மகன் வண்டியின் துணையில்லாமலே நடந்து வரும் அழகைக் காணத் துடிக்கும் அவள் நடைவண்டியை வேகமாகத் தள்ளி விரைவாகப் பயில வேண்டுமென்று துடிக்கிருள்.

## 13. விரைந்து தள்ளு நடைவண்டி.

வளர்ந்து வருமென் கற்பகமே
வண்ணச் சுடரே ஓவியமே
தளர்ந்த நடையும் சீராகத்
தள்ளு வண்டி நடைவண்டி
விளைந்த அன்பால் உன் தந்தை
விலைக்கு வாங்கிக் கொடுவந்தார்.
அழுந்தத் தள்ளி நடைபயில்வாய்
அன்பே நன்கு நடைபயில்வாய்.

தவழ்ந்து வந்து மடியேறித்
தழைத்த இன்பப் பொன்மலரே
தளர்ந்த நடைநீ பயிலுங்கால்
தடுமா றிப்போய் வீழ்வதனைக்
கொழுந்தே என்றன் குலவிளக்கே
கொஞ்சங் கூடத் தாளேன்நான்
எழுந்து தள்ளு நடைவண்டி.
இனிது தள்ளு நடைவண்டி

ஆளை மயக்கும் சிரிப்புடையாய்
அள்ளிக் கொள்ளத் துடிக்கின்ற
பேழைச் செல்வம் போன்றவனே
பேரின் பத்தை வளர்ப்பவனே
காளை நடைநீ பயின்றிடவே
கையால் தள்ளு நடைவண்டி
வீழா திறுகப் பிடித்தபடி
விரைந்து தள்ளு நடைவண்டி.

அச்சிடுபவர், வெளியிடுபவர், ஆசிரியர் : நாரா நாச்சியப்பன், நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், 202, ஜானி ஜான் கான் தெரு, சென்னை-14. — 600014 — தொலை பேசி எண் : 82781